1282

# தமிழ் நாடு

# சட்டப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

VOL-9 APL-1989 NO:3

V2l1,31'N84
M89.9
132696.

வெளியீடு 14-9-1989 Issued 14-9-1989

எழும்பூர், சென்னை-600

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 12, 1989–தொகுதி 9–எண் 3

Wednesday, the 12th April, 1989–Volume 9–No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

## உள்ளடக்கம்

**12–4–1989**

பக்கங்கள்


1. வினாக்கள்—விடைகள்—

உடுகுறியிட்ட வினாக்கள் .. .. .. 537—563

2. தகவல் கோரல்—

(அ) தற்காலிக நீக்கம் செய்யப்பெற்ற உறுப்பினர்களை எதிர்க்கட்சித் தலைவர் அறையிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கை குறித்து .. 565—566

(ஆ) குமரி மாவட்டத்தில் காவல் துறை துணை ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள் அப்பதவிகளில் சேருவதற்குத் தடை .. .. 567—569

(இ) கேள்வி நேரம் முடிவுற்றவுடன் சில பொதுப் பிரச்சினைகளை எழுப்பப் பேரவைத் தலைவரின் முன் இசைவு பெறுதல்.. .. .. 569—570

3. உரிமைப் பிரச்சினைகள்—

எதிர்க்கட்சித் தலைவர் பதவி விலகல் கடிதம் தொடர்பாக முதலமைச்சர் மற்றும் சென்னை நகரக் காவல் துறை ஆணையர் மீது—பேரவைத் தலைவரின் தீர்ப்பு .. .. 571—577

4. கவன ஈர்ப்பு—

(அ) சிறுவாணி குடிநீரை "கோவை மெடிக்கல்ஸ்" நிறுவனத்திற்குத் தனிக் குழாய்மூலம் கொண்டு செல்லும் முயற்சியால் பீளமேடு பகுதி மக்கள் பாதிப்பு .. .. .. .. .. 577—580

(ஆ) மாதவரம் பால் பண்ணையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்க வேண்டியதன் அவசியம் .. .. .. .. .. 581—584

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 1989–90—விவாதமும்—வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம்
(ஆ) கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் } 584—686

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா | 584—585, 683—685 |
| திரு. பி. எச். பாண்டியன் | 586—595 |
| திருமதி பாப்பா உமாநாத் | 595—604 |
| திரு. இரா. மோகன் | 604—611 |
| திரு. மா. சுந்தரதாஸ் | 612—618 |
| *திரு. ஆர். சாமிநாதன் | 619—622 |
| *திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் | 622—629 |
| திரு. என். கணபதி | 629—634 |
| *திரு. அ. இராசேந்திரன் | 634—639 |
| திரு. அ. லெ. சுப்பிரமணியன் | 639—644 |
| திரு. பெ. சீனிவாசன் | 644—648 |
| திரு. எம். அப்துல் லத்தீப் | 648—659 |

6. ஒழுங்குப் பிரச்சினை—

பேரவை வளாகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிப்பு குறித்து .. .. .. .. 589, 611

7. அறிவிப்பு—

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகள் .. .. 660—662

8 அரசினர் தீர்மானம்—

விதி 32-ஐத் தளர்த்தல் .. .. — 687

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் . — 687

தமிழ்நா... 128696

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989 ஏப்ரல் 12, புதன்கிழமை.

பங்குனி 30, விபவ—திருவள்ளுவர் ஆண்டு 2020

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்."

தகுதி மிக்க நடுவுநிலைமை உடையவர், தகுதி மிக்க நடுவுநிலைமை இல்லாதவர் என்பது அவரவர்க்குப் பின் எஞ்சி நிற்கும் புகழாலும் பழியாலும் காணப்படும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

இரணியல் தாலுக்கா அமைத்தல்

66—(*வினா எண். 295) திரு. ஆ. பாலையா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்குளம் தாலுக்காவைப் பிரித்து இரணியல் தாலுக்கா அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே,
(அ) ஆம்.

(ஆ) அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தாலுக்காவைப் பிரிப்பதாகச் சொன்னதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இது எப்போது பிரிக்கப்படவிருக்கிறது ? இரண்டாகப் பிரிக்கப்படுகின்றபோது அவைகளுக்குத் திருவட்டாறு தாலுக்கா என்றும் இரணியல் தாலுக்கா என்றும் பெயர் வைக்கப்படுமா ? எப்போது இது அமலுக்கு வரும் ?

[1989 ஏப்ரல் 12

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** தலைவரவர்களே, சற்று விளக்கமாகவே பதில் சொல்கிறேன். பொதுவாக வட்டங்களின் பரப்பளவு, மக்கள் தொகை, நில வரி மற்றும் பிற்பட்டத் தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டும், அரசின் நிதிநிலையைக் கருத்திற் கொண்டும் புதிய வட்டங்கள் அமைக்கப்படுகின்றன. ஏற்கெனவே இப்படிப்பட்ட ஒரு கேள்விக்கு நான் பதில் சொல்லியதாக நினைவு. கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம் மற்றும் விளவங்கோடு ஆகிய இரு வட்டங்களைச் சீரமைத்துப் புதிய இரணியல் வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு 1985–86, 1986–87, 1987–88 ஆகிய ஆண்டுகளில் இரண்டாம் பகுதித் திட்டமாக ஆய்வு செய்யப்பட்டு, அரசின் நிதிநிலை காரணமாக இந்தச் செயற் குறிப்பு அரசால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. 1988–89 ஆம் ஆண்டும் இந்தக் கருத்துரு இரண்டாம் பகுதித் திட்டமாக ஆய்வு செய்யப்பட்டு நிதிப் பற்றாக்குறை காரணமாக அரசால் ஏற்கப்படவில்லை. மேற்கூறிய செயற் குறிப்பில் கல்குளம் வட்டத்திலிருந்து 12 கிராமங்களையும், விளவங்கோடு வட்டத்திலிருந்து 5 கிராமங்களையும் பிரித்து புதிய இரணியல் வட்டம் உருவாக்கக் கருதப்பட்டது. 1988–89 ஆம் ஆண்டு நிலவரப்படி புதிய இரணியல் வட்டத்தை ஏற்படுத்த தொடர் செலவினமாக ரூ. 2.31 இலட்சமும், தொடராச் செலவினமாக ரூ. 41.80 இலட்சமும் என்று கணக்கிடப்பட்டது. தற்போது கல்குளம் வட்டத்தைப் பிரிந்து புதிதாக ஏற்படுத்தப்படும் வட்டத்திற்குங்குளச்சலை வட்டத் தலைநகராக்க வேண்டுமென்ற கோரிக்கையும், இரணியலை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் அரசுக்குக் கிடைத்துள்ளன. அந்தக் கோரிக்கைகளின் மீது வருவாய் நிர்வாக ஆணையரின் கருத்து கோரப்பட்டது. அது கிடைக்கப்பெற்றதும் கோரிக்கைகள் ஆய்வு செய்யப்படும்.

தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் மற்றும் பதமநாபபுரம் ஆகிய இரு வருவாய்க் கோட்டங்கள் உள்ளன. நாகர்கோவில் வருவாய்க் கோட்டத்தின் கீழ் தோவாளை மற்றும் அகஸ்தீஸ்வரம் ஆகிய இரு வட்டங்கள் உள்ளன. பத்மநாபபுரம் வருவாய்க் கோட்டத்தில் கல்குளம் மற்றும் விளவங்கோடு ஆகிய இரு வட்டங்கள் உள்ளன.

**திரு. மா. சுந்தரதாஸ் :** தலைவரவர்களே, புதிதாக உருவாக்கப்படுகின்ற இந்தத் தாலுக்கா இந்த நிதியாண்டிலேயே உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிப் பரிசீலித்துச் சொல்வோம்; உடனடியாகச் சொல்ல முடியாது.

**திரு. எஸ். எஸ். தென்னரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்கா பிரிவினை என்பது தற்போது பிர்க்கா அளவில் பிரிக்கப்படுவதாகத் தெரிகிறது. அபபடிப் பிர்க்கா அளவில் பிரிக்காமல் கிராமங்கள்அளவில் பிரித்து, அந்தந்த தாலுக்காவிற்குச் சமீபத்தில் உள்ள கிராமங்களை அந்தந்தத் தாலுக்காவிலே சேர்த்துக்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1989 ஏப்ரல் 11]

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு உறுப்பினரின் கருத்துக்கள் ஆய்வு செய்யப்படும்.

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, மூலக்கேள்வியிலிருந்து சற்று மாறுபடுவதற்கு மன்னிக்கவும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக்கேள்வி போடும்படி தயவுசெய்து சொல்லிவிடாமல் பதில் சொல்லவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன் காமராசர் மாவட்டத்தில் உள்ள 6 முனிசிபாலிட்டிகளில் சிவகாசி ஒன்றுதான் தாலுக்காத் தலைநகராக இல்லாமல் இருக்கிறது. சிவகாசியைப பொறுத்தவரையில் மத்திய சர்க்காருக்குப், மாநில சர்க்காருக்கும் ஏராளமான வருமானம் தருகிற நகரமாகும். எனவே, அந்த நகரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தனித் தாலுக்கா அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாடகளாக இருந்து வருகிறது. அதனை அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிப்பதற்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே மாதிரியாக எங்களுடைய கோவில்பட்டியை ஒட்டியுள்ள கிராமங்களைப் பொறுத்தவரையில் மாவட்டம் வேறாகவும், தாலுக்கா வேறாகவுமாக அமைந்துள்ளன. மாவட்டங்கள் பிரிக்கப்பட்டதற்குப் பிறகுதான் இந்த நிலைமை ஏற்பட்டுளளது. கோவில்பட்டியை ஒட்டி ஒரு பர்லாங் தூரத்தில் உளள அந்தப் பகுதிகள் எல்லாம் சங்கரன்கோயில் வட்டமாக இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியிலிருக்கின்ற 10 கிராமங்களைக் கோவில்பட்டியோடு சேர்க்கவேண்டுமென்ற கோரிக்கையை நீண்ட நாட்களாகவே அந்தப் பகுதி மக்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படுமா ?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே அளித்த பதிலில் மாண்புமிகு உறுபபினர் திரு. அழகர்சாமி அவர்களுடைய கேளவிக்கான பதிலும் அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. ஆர். நடேசன் :** மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, கல்குளம் தாலுக்கா என்பது அப்பர் கோதையாறு முதல் குளச்சல் கடல் பக்கம் வரையில் மிக விரிவாக அமைந்து பெரிய தாலுக்காவாக அமைந்துள்ளது. அங்கே மலைவாசி மக்களும்

மலையோர மக்களும் நிறைய வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். தாழ்த்தப்பட்ட, வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட ஏழை மக்களும் நிறையப்பேர் வாழ்ந்து வருகிறார்கள. அவர்கள எல்லாம் இப்போது கல்குளம் தாலுக்காவிற்குச் செல்ல வேண்டுமென்றால் 60 கிலோ மீட்டர் தூரம் வரையில் வரவேண்டி இருகின்றது. எனவே, தயவு செய்து அதனை இரண்டாகப் பிரித்து திருவெட்டாறு தாலுக்கா என்றும், இரணியல் தாலுக்கா என்றும் அமைதது பொதுமக்களுக்கு வசதி செய்து தருவதற்கான உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கல்குளத்தைப் பற்றியும், விளவங்கோட்டைப் பற்றியும், இரணியல் பற்றியும், தக்கலை பற்றியும், பத்மநாபபுரம் பற்றியும் எனக்குத் தெரியும். நான் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன். ஏற்கெனவே அதற்குப பதில் சொல்லிவிட்டேன்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு புதிதாக எத்தனை தாலுக்காக்கள் உருவாக்கப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன். அத்துடன் தர்மபுரி மாவட்டத்தில் பாப்புரெட்டிபட்டியைத் தனித் தாலுக்காவாக ஆக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முல்லைவேந்தன் அவர்கள் இதற்குத் தடையின்றி தனிக் கேள்வி போடலாம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே. ஸ்ரீரங்கம் ஃபர்ஸ்ட் கிரேட் முனிசிபாலிட்டியாகும். சென்ற அரசு இருந்தபோதே இதனைத் தனித் தாலுக்காவாக ஆக்க வேண்டும் என்று முயற்சி செய்யப்பட்டது. சப்-ட்ரெஷரி கூட அங்கே வந்திருக்கிறது. அது மூன்று மாதங்களுக்கும் மேலாக பெண்டிங்கிலே இருக்கிறது. அது குறித்து அரசு முடிவு செய்யுமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தீட்சிதர் அவர்கள் ஒரு பெரிய தீர்க்கதரிசி. நான் ஏற்கெனவே அளித்த பதிலில் அவருக்கும் பதில் அடங்கி இருக்கிறது (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. நூர்முகமது.

திரு. செ. நூர்முகமது : இல்லை.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சருடைய பதிலைக் கேட்ட பிறகு சில பேர் கேள்வி கேட்கவே பயப்படுகிறார்கள். (சிரிப்பு).

திரு. ரெ. பிச்சைமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று அரசுக்கு நீண்ட நாட்களாகவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் செய்திகள் பற்றி அரசுக்குத் தெரியுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அப்படி இருந்தால் அது எப்போது நடைமுறைக்கு வரும் என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் சி. மனேரகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் அளவு கடந்த மரியாதை வைத்திருப்பவன் நான். எனவே, பயமுறுத்தலோடு கூடிய ஒரு அமைச்சனாக என்னை அருள்கூர்ந்து சித்தரிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு [சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கும் நான் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

(முற்பகல் 9-10)

### ஜோலார்பேட்டை அருகே ரயில்வே மேம்பாலம்

67—(*வினா எண். 140) திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம், நாட்ராம்பளளியிலிருந்து திருப்பத்தூர் வரை உள்ள நெடுஞ்சாலை குறுக்கே ஜோலார்பேட்டை அருகே ரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜோலார்பேட்டை அருகே அமைக்க நீண்ட நாட்களாக இந்தக் கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது. ஜோலார்பேட்டை ஜங்ஷனாக இருக்கின்ற காரணத்தினால் அநதப் பகுதியிலே மக்கள் அடிக்கடி வேலூர் போய் வந்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, அங்கே 'கேட்' போட்டு அடைக்கப்படுகிறது. அந்த 'கேட்' அடைச்கப்படுகின்ற காரணத்தினால் அந்தப் பகுதிகளில் இருந்து நோயாளிகள் வந்தால் கூட அவர்களை உடனடியாக மருத்துவ மனையில் கொண்டுபோய்ச் சேர்க்கமுடியாத நிலைமைகள் இருக்கின்றன. இதையெல்லாம் போக்குவதற்கு மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு கலந்து பேசி மேம்பாலம் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட இடங்களில் இந்த வேலைகள் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்று சொன்னால், அந்தப் பகுதியில் ரெயில் போக்குவரத்து குறைந்தபட்சம் Minimum traffic—one lakh trains vehicle unit என்கிற கணக்கின் அடிப்படையில் ஒரு இலட்சம் ரெயில் ஊர்தி அலகு குறைந்த பட்சம் இருக்கவேண்டும் என்ற விதிமுறைகளை ரெயில்வே இலாகாவில் வைத்திருக்கிறார்கள். அந்த அலகை எட்டாததனால்தான் இந்தப் பகுதியிலே மேம்பாலம் அல்லது சுரங்கப்பாதை கட்டுவது பற்றி ரெயில்வே இலாகா பரிசீலிக்கும். அதற்குக் குறைவான எண்ணிக்கை இருக்கின்ற காரணத்தினால்தான் அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. சுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மக்கள் கணக்கின் அடிப்படையிலே எடுத்துக் கொள்ளப்படவில்லை என்றாலும் இதிலே ஒன்றைக் குறிப்பாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு, அந்தப் பகுதியிலே இருக்கின்ற ரெயில்வே நிகழ்ச்சியிலே கலந்துகொள்வதற்காக வந்தார்கள். ஒரு மணி நேரம் 'கேட்' அடைக்கப்பட்ட காரணத்தினால் அந்தக் கூட்டம் முடிக்கப்பட்டு அதற்குப் பின்னாலே கூட அண்ணா திரும்பி வருகிற நிலைமைகூட ஏற்பட்டது. இதுபோன்ற நிலைமைகளைப் போக்குவதற்காகத்தான் அந்த மேம்பாலத்தை உடனடியாக இந்தத் திட்டத்திலேயாவது எடுத்துக் கட்டுவதற்கு அரசுக்கு உத்தேசம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் தடைப்படுவது உண்மையாக இருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட இடங்களிலே பாலம் அமைப்பது, சுரங்கப்பாதை அமைப்பது போன்ற பணிகளைச் செய்யவேண்டுமென்றால் ஏற்கெனவே தென் இந்திய ரெயில்வே விதிமுறைகளின்படி குறைந்தபட்சம் ரெயில்வே கணக்குப்படி ஒரு லட்சம் ரெயில் ஊர்தி அலகு என்கின்ற ஒரு கணக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே பார்ப்போமேயானால், அந்த அலகை எட்டாத காரணத்தினாலே ரெயில்வே இலாக்கா ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தாலும அந்தப் பாதையினுடைய முக்கியத்துவத்தைக் கருதி மாநில அரசின் சார்பில் மத்திய அரசிடத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளலாம்.





**திரு. சா. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில், தியாகராயநகருக்கும் மேற்கு மாம்பலத்திற்கும் இடையில் ரெயில்வே சுரங்கப்பாதை அமைக்கும் பணி இப்போது நின்று போய் உள்ளது. அந்தப் பணியைத் தொடங்கி விரைவுபடுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேள்வி கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்திற்குக் கடலூர் தலைநகரம் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அங்கே நீண்டகாலமாக, அந்த ரெயில்வே லைனுக்கு மேம்பாலம் அமைக்கப்படாத காரணத்தினால் பல்வேறு விதமான இடையூறுகள், தடைகள் ஏற்படுகின்றன. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேகூட நீண்டநெடுங்காலமாக இப்படிப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றி ரெயில்வே நிர்வாகத்திற்கும் மாநில அரசுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விருமபுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த மாவட்டத்தினுடைய தலைநகரில் அமைக்க வேண்டிய மேம்பாலத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது பற்றிய விவரக் குறிப்பு இல்லையென்றாலும், அரசு அதைப் பரிசீலிக்கும்.

**திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை-திண்டுக்கல் பாதையிலே உள்ள பொள்ளாச்சி ரெயில் பாதையில் உள்ள கேட்-இல் மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நாட்ராம்பள்ளி ரெயில்வே பாதை பற்றிய ஒரு கேள்வி, பொள்ளாச்சி ரெயில்வே கேட்டுக்கும் இதற்கும் சுமார் 250 மைல் தொலைவு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் தொடர்பு இல்லாத கேள்விகளைக் கேட்டால் நான் தொடர்ந்து அனுமதிக்கப் போவதில்லை. அருள்கூர்ந்து உறுப்பினர்கள் நாட்ராம்பள்ளியில் நின்று கேள்வி கேட்க வேண்டும்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், 1978–79 ஆம் ஆண்டில் மொரப்பூர் ரெயில்வே மேம்பாலம் கட்டுவது குறித்துத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டது, அரசுக்கு வந்துள்ளதா என அறிய விரும்புகிறேன்........(மணியடிக்கப் பெற்றது).

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகரத்தில் மேம்பாலம் கட்ட ..........(மணியடிக்கப் பெற்றது).

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மக்கள் வேகமாகச் சென்று தங்கள் பணிகளை ஆற்ற வேண்டிய வகையில் மேம்பாலங்கள் மேலும் கட்டப்படுவது அவசியமாக இருப்பதால் இந்த ஆண்டு நெடுஞ்சாலைத் துறை மூலமாக எத்தனை இடங்களில் மேம்பாலம் கட்ட இந்த அரசு முடிவு செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி கேட்கவும்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ரெயில்வே லெவல் கிராசிங் அமைக்க, மக்கள் தண்டவாளங்களைக் கடந்து செல்ல, உள்ளாட்சி மன்றங்களின் சார்பில் அதற்கான செலவை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று சொல்லியும் புதிய ரெயில்வே லெவல் கிராசிங் அமைக்க மத்திய அரசு அனுமதியளிக்க மறுப்பு தெரிவித்துள்ளதே. அப்படி என்றால் தஞ்சை மாவட்டத்தில் ஏதேனும் மறுப்பு தெரிவித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளது போல ரெயில் போக்குவரத்து எவ்வளவு இருக்கிறது என்ற அடிப்படையிலேதான் இதனை அமைப்பது குறித்து நிர்ணயம் செய்யப்படுகிறது. நிர்ணயம் செய்யப்பட்ட பிறகு இதனுடைய பணிகள் நடைபெறப் போதுமான நிதிவசதியை மாநில அரசு 50 சதவிகிதமும், ரெயில்வேத் துறை 50 சதவிகிதமும் என்ற அடிப்படையில்தான் இந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி கேட்பாரானால் தஞ்சாவூர் மாவட்டத்தைப் பற்றி விளக்கமாகச் சொல்ல முடியும்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரெயில்வே லெவல் கிராசிங் என்று சொல்லக்கூடிய அன்-மேன்ட் கேட்டில் ஆள் இல்லாத காரணத்தால் அந்த வழியாகப் பஸ்களை ஓட்ட அனுமதிப்பதில்லை.





அதனால் சில கிராமங்களுக்குள் பஸ்கள் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. அம்மாதிரி இடங்களில் இருக்கிற இப்படிப்பட்ட குறைகளைக் களைந்து பஸ் போக்குவரத்து தொடர இந்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் போக்குவரத்து தடை என்பது மட்டுமல்ல, எதிர்பாராமல் பயங்கரமான விபத்துக்கள் கூட சில நேரங்களில் நிகழ்ந்து விடுகின்றன. எனவே, நாம் ஆள் இல்லாத ரெயில்வே கேட்டுகளில் ஆள் நியமிக்க வேண்டுமென்ற கருத்தை ரெயில்வேத் துறையினருக்கு அரசின் சார்பில் வலியுறுத்தலாம்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ரெயில்வே பாதைகளுக்குக் குறுக்காக சுரங்கப்பாதை அல்லது மேம்பாலம் கட்ட ரெயில்வே நிர்வாகம் ஏதேனும் விதிமுறைகள், நிபந்தனைகள் வைத்திருக்கிறதா ? அவர்கள் எவ்வளவு செலவை மேற்கொள்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதுபற்றி விளக்கமாகக் குறிப்பிட்டேன். ரெயில்வே போக்குவரத்து என்கின்ற அடிப்படையில், ரெயில்வே வேலைகள் திட்டத்தில் சேர்க்கப்படுவதற்கு, குறிப்பிட்ட பாதையில் ரெயில்வே ஊர்தி அலகு குறைந்தபட்சம் ஓர் லட்சம் இருக்க வேண்டும். Minim m of traffic cne lakh train v:hicle unit என்கின்ற அடிப்படையில் தான் இந்தப் பணிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. செலவைப் பொறுத்தவரையில் மாநில அரசு 50 சதவிகிதமும், ரெயில்வே நிர்வாகம் 50 சதவிகிதமும் என்கின்ற அளவில் பொறுப்பேற்றுக்கொண்டு பணிகள் நடைபெறுகின்றன.

திரு. வே. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம், விருத்தாசலம் நகரில்.... (மணியடிக்கப்பெற்றது).

### கோவை மாநகராட்சிப் பள்ளிக்கூடக் கட்டிடங்கள்.

68—(*வினா எண். 158) திரு. கே. ரமணி : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரத்தில் மாநகராட்சியின்கீழ் உள்ள பள்ளிக்கூட கட்டிடங்கள் பழுதுபட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

[1989 ஏப்ரல் 12

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) எழாது.

(முற்பகல் 9-20)

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரத்தில் மாநகராட்சியின்கீழ் உள்ள பல பள்ளிக்கூடங்கள் சீர்குலைந்து, உடைந்து, ரிப்பேராக இருக்கும் நிலையில் எந்தவிதமான தகவலோ புகாரோ அரசுக்கு வரவில்லை என்று இங்கே கூறியிருக்கிறார்கள். ஆனால் இப்போது பள்ளிக்கூடக் கட்டிடங்கள் அந்த மாதிரி மோசமான நிலையில் இருக்கின்றன. நானே நேரடியாகப் பல ரெப்ரசென்டேஷன்களைக் கார்ப்பரேஷனுக்கு அனுப்பி இருக்கிறேன். அந்தப் பள்ளிக்கூடங்களை ரிப்பேர் செய்வதற்கான அதிகாரம் எங்கள் கையிலே இல்லை, அதை அரசுதான் தீர்மானிக்க வேண்டுமென்று பதில் சொல்லுகிறார்கள். அதுபற்றி அமைச்சரவர்கள் என்ன பதில் சொல்ல விரும்புகிறார்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவரவர்களே, கோவை மாநகராட்சியில் ஆரம்பக் கல்விக் கூடங்கள் 64-ம், உயர் தொடக்கப் பள்ளிகள் 14-ம், உயர்நிலைப் பள்ளிகள் 12-ம், மேல்நிலைப் பள்ளிகள் 9-ம், செவிடர்-ஊமை பள்ளி ஒன்றும், மொத்தம் 78 ஆரம்ப உயர் தொடக்கப் பள்ளிகளில் 68 பள்ளிகள் மாநகராட்சியின் சொந்தக் கட்டிடங்களிலும், மீதமுள்ள 10 பள்ளிகள் வாடகைக் கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றன. மற்ற பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், செவிடர்-ஊமை பள்ளி ஆகியவைகள் மாநகராட்சியின் சொந்தக் கட்டிடங்களிலே இயங்கி வருகின்றன. சொந்தக் கட்டிடங்களில் இயங்கும் மாநகராட்சிப் பள்ளிகளின் கட்டிடங்கள் அவ்வப்போது மாநகராட்சியால் மராமத்து செய்யப்படுகிறது. 1988–89 ஆம் ஆண்டில் பள்ளிக் கட்டிடங்களை மராமத்து செய்ய கோவை மாநகராட்சி செலவிட்டுள்ள தொகை 8,13,389 ரூபாய். மேலும் 1989–90 ஆம் ஆண்டில் பள்ளிக் கட்டிடங்களை மராமத்து செய்ய கோவை மாநகராட்சி ஒதுக்கியுள்ள தொகை 11,74,500 ரூபாய். இப்போது இருக்கின்ற விதிப்படி பள்ளிக் கட்டிடங்களைப் பராமரிக்கின்ற பொறுப்பு மாநகராட்சியிடம்தான் இருக்கிறது. எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று அவர்கள் மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போலத் தெரிவித்திருப்பார்களானால், அது தவறானது. அதை அவர்கள் திருத்திக்கொண்டு ஒதுக்கப்படுகிற நிதியைக் கொண்டு பள்ளிக் கட்டிடங்களைப் பராமரிக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



989 ஏப்ரல் 12]

திரு. கே. ரமணி : தலைவரவர்களே, 78 பள்ளிகளிலே 68 பள்ளிகள் மாநகராட்சியின் சொந்தக் கட்டிடங்களில் இயங்குகின்றன என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு அவர்கள் ஒதுக்கியிருக்கும்படியான, ரிப்பேர் செலவுக்கான பணம் 7 இலட்சம் ஆகும். அந்த 7 இலட்சம் ரூபாயை உபயோகப்படுத்தி ஒரு பள்ளியைக்கூட ரிப்பேர் பண்ண முடியாத அளவுக்கு டேமேஜ்டு கட்டிடங்கள் ஏராளமாக இருக்கின்றன. என் வீட்டுக்குப் பக்கத்தில் 6, 7 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட பெண்கள் பள்ளி ஒன்று கட்டிட வசதி போதாமல் பெரும் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் சீக்கிரமாக கோவை மாநகருக்கு விஜயம் செய்தால், அங்கே உடைந்து கிடக்கும் பள்ளிக் கட்டிடங்களை நான் காட்டத் தயாராக இருக்கிறேன். ஒன்று அந்த மாநகராட்சி அதைச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அரசு என்ன உதவி செய்யப்போகிறது என்பதைச் சொல்லி, அந்த வேலைகளை சீக்கிரம் செய்து முடித்து பள்ளிக்கூடங்கள் ஒழுங்காக நடக்கும் வகையில், அந்த மக்களுடைய கோரிக்கைகளை அமைச்சரவர்கள் நிறைவேற்றித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்த கருத்தைக் கருத்திலே கொண்டு, சட்டப் பேரவைத் தொடர் கூட்டம் முடிந்தவுடன், அவர் அழைப்பை ஏற்று, நான் கோவைக்குச் சென்று, அவரோடு எல்லாப் பள்ளிக்கூடங்களையும் சுற்றிப் பார்த்து, பழுதடைந்துள்ள கட்டிடங்களை உடனடியாகப் பராமரிக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இடையில், அவர்கள் இங்கே தந்த தகவல்களின் அடிப்படையில் மாநகராட்சிக்கு உரிய தகவல்கள் தந்து, விரைவாக பழுதடைந்த கட்டிடங்களைப் பராமரிக்க உத்தரவிடப்படும்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிற அறிவிப்புக்கு முதலில் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அமைச்சர் அவர்கள் கோவைக்கு வருகை தந்து 78 பள்ளிகளைப் பார்வையிடுவது என்றால் இன்னும் அவர்கள் பார்வையிட வேண்டிய பல முக்கியமான பிரச்சினைகளும் இருக்கின்றன. இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் இங்கே நிலைமையை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பழுதுபட்ட பள்ளிக்கட்டிடங்களை நேரடியாக நாங்கள் பார்வையிட்டு, பார்வையாளர்கள் புத்தகத்திலேகூட, 'இந்த அளவுக்குப் பழுதடைந்து மோசமான நிலையில் இருக்கிறது, எனவே பள்ளிக் கட்டிடத்தைப் பழுதுபார்க்க வேண்டும்' என்று குறிப்பு எழுதியும் அதுவும் மாநகராட்சியின் தனி அதிகாரியின் கவனத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதில் பரிதாபம் என்னவென்றால் பள்ளிக் கட்டிடங்கள் மட்டும் பழுதுபட்டிருக்கவில்லை, பள்ளிகளின் தளங்கள்கூட

உழுதுபோடப்பட்ட வயல்கள் போல இருக்கின்றன. அங்கெல்
லாம் உட்காருவதற்குக்கூட பெஞ்சுகள் இல்லை. நான் ஏதோ
மிகைப்படுத்திச் சொல்வதாக எண்ணக் கூடாது. மாண்புமிகு
அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்பு
வது—பெண் ஆசிரியைகள் இருக்கிற பள்ளிகளிலே கழிப்பிடங்
கள் கூட இல்லாமல் இருக்கிறது. அவர்களின் புகார்களே தனி
யாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. பல பள்ளிக்கூடங்களிலே
'காம்பவுண்டு வால்' இல்லாத காரணத்தால் வெளியே இருப்பவர்
கள் வந்து இருக்கிற இடத்தைக் கழிப்பிடமாகப் பயன்படுத்தும்
சூழ்நிலை இருக்கிறது.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களைப் போன்றவர்
களே வினா நேரத்தில் சொற்பொழிவாற்றுவது என்ன முறை?
அமைச்சர் அறைக்குப் போய் ஆரஅமர எல்லாவற்றையும்
எடுத்துச் சொல்லலாமே !

திரு. மு. இராமநாதன் : ஆகவே அமைச்சர் அவர்கள் இது
பற்றி உடனடியாக மாநகர நிர்வாகத்திற்குத் தகவல் அனுப்பி,
பள்ளிகளுக்குத் தேவைப்படும் சில இன்றியமையாத பழுது
பார்ப்புப் பணிகளை மேற்கொள்ள உத்திரவிட முன்வருவாரா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் பேசும்போது, பள்ளிகளைப் பார்வையிட்டு, பார்வையாளர்
புத்தகத்தில், உள்ள குறைபாடுகளையெல்லாம் குறித்து வைத்
திருப்பதாகச் சொன்னார்கள். அதுபற்றிய விவரம் என்னிடம்
இல்லை. அவர் தமது கடமையைச் சரியாகச் செய்கிற வகையில்,
எந்தெந்தப் பள்ளிக் கட்டிடங்கள் பழுதடைந்துள்ளன, என்
னென்னஅவசியமான தேவைகள், எங்கெங்கே கழிப்பிட
வசதிகள் இல்லை என்பதையெல்லாம் அவர் எனக்கு எழுதிக்
கொடுப்பாரானால், அதன்பேரில் உரிய நடவடிக்கை எடுக்கப்
படும்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நகராட்சிகளால் நடத்தப்படக்கூடிய பள்ளிக்
கட்டிடங்கள் பழுதடைந்த நிலையிலும்—பொதுச்சுகாதார வசதி
இல்லாத நிலையிலும்—பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் கழிப்
பறைகள் இல்லாத நிலையிலும் இருக்கின்றன. பொதுவாகவே
மாநிலம் முழுவதுமுள்ள பிரச்சினையான இதைப்பற்றி நன்கு
ஆலோசித்து, அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று
மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதோடு,
விபத்து ஏற்பட்டு குழந்தைகளுக்கெல்லாம் ஆபத்து ஏற்படு
வதற்கு முன்பாகவே, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா
என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையைச் சார்ந்த
பள்ளிக்கூடங்களில் பணியாற்றுகிற ஆசிரியர்கள்—அதாவது
மாநகராட்சிகளில் பணிபுரியக் கூடியவர்கள், நகராடசிகளில்
பணிபுரியக்கூடியவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் பணி
யாற்றுகின்ற ஆசிரியர்கள் எல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கப்
பட்டுவிட்டார்கள். மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும்,
ஊராட்சி ஒன்றியங்களுக்கும் இந்தப் பள்ளிக் கட்டிடங்களைப்
பராமரிக்கிற அந்தக் கடமை மட்டும்தான் இப்போது இருக்கிறது.
தொடர்ந்து, கடந்த காலத்திலிருந்து இந்தக் கட்டிடங்களைப்
பராமரிப்பதற்கு என்று அரசு மானியம் எதுவும் ஒதுக்கப்பட்
வில்லை. ஆகவே, ஆசிரியர்கள் எல்லாம் அரசு ஊழியர்களாக
ஆகிவிட்ட காரணத்தால், கட்டிடத்தை மட்டும் நாங்கள் ஏன்
பராமரிக்க வேண்டும் என்றும் அவர்கள் இருந்திருக்கலாம்.
மேலும் பெருவாரியான மாநகராட்சி, நகராட்சி மற்றும்
ஊராட்சி ஒன்றியங்களில் நிதிநிலைமை திருப்திகரமாக இல்லாத
காரணத்தாலும் பராமரிக்காமல் இருந்திருக்கலாம். இருந்
தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச்
சொன்ன கருத்தை ஏற்று, மாநிலம் முழுவதும் உள்ள விவரங்
களைச் சேகரித்து விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என்
பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, முன்பு கோவை நகராட்சியாகத்தான் இருந்தது.
அதற்குப் பின்னால் அது மாநகராட்சியாக மாறியபோது, சிங்கா
நல்லூர் நகராட்சியையும் கோவை மாநகராட்சியோடு இணைத்து
தற்போது ஒன்றாக இயங்கி வருகிறது. சிங்காநல்லூர் நகராட
சிக்குள் உள்ள பள்ளிகளும் சரி, கோவை நகராட்சிக்குள் உள்ள
பள்ளிகளும் சரி, அநேகமாக மோசமாகவே இருக்கின்றன
என்று ஏற்கெனவே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலும்
மிக முக்கியமான பிரச்சினை, பல பள்ளிகளுக்கு விளையாட்டு
மைதானங்களே இல்லை. சில பள்ளிகளுக்குப் பக்கத்தில் இருக்கிற
காலி இடங்களை மாணவர்கள் பயன்படுத்துகிற நிலை இருக்
கிறது. அப்படிப்பட்ட காலி இடங்களை—அரசுக்குச் சொந்த
மான இடத்தையும் தனியாருக்குச் சொந்தமான
இடத்தையும்—பள்ளிகளுக்கு விளையாட்டு மைதானத்திற்குக்
கொடுப்பதற்குத் தயாரென்று எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்.
எனவே, இந்த வகையில் அரசு விரைந்து நடவடிக்கை மேற்
கொண்டு, பள்ளிகளுக்குப் பக்கத்திலே இருக்கிற அத்தகைய
மைதானத்திற்குப் பயன்படும் நிலங்களை வாங்கி, பள்ளி
மைதானங்களாகப் பயன்படுத்த உத்தரவிடப்படுமா என்று
அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு
தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

[1989 ஏப்ரல் 12

(முற்பகல் 9-30)

திரு. டி. பொன்முடி : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழகம் முழுவதும் உள்ள பள்ளிக்கூடங்களில் கீழ்த்தரைகள் எல்லாம் பழுதுபட்டுக் கிடக்கின்றன. அந்தக் கீழ்த்தரை போடும்போது சில பள்ளிகளில் எல்லீஸ்பேட் என்று சொல்லப்படும் கான்கிரீட போட்டிருக்கிறார்கள். அந்தப் பள்ளிகளைப் பார்வையிடும் போது அவை செம்மையாக இருக்கிறது. எனவே இனிமேல் போடப்படும் பள்ளிகளின் கீழ்த்தரைகள் எல்லீஸ்பேட் கான்கிரீட் என்ற முறையில் தரை போடப்படுமா என்பதை அரசிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவரவர்களே, அந்த விவரம் எனக்குத் தெரியாது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கின்ற கேள்வியின் அடிப்படையில் துறையைக் கேட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரவி அருணன் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளிகள் பல இடங்களில் பழுதுபட்ட நிலையில் மிகவும் மோசமாக உள்ளன. அங்கு பயிலுகின்ற குழந்தைகளுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய சூழ்நிலையில் பள்ளிக்கூட கட்டிடங்கள் இருக்கின்றன. வரும் நிதி ஆண்டில் அவைகளைப் பராமரிக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் கேட்டு, பதிலைப் பெறலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 69 மற்றும் 70 மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

குறளமுது ஆசிரியர்கள், உதவியாளர்கள் ஊதியம்.

71—(*வினா எண். 265) திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சத்துணவுக் கூடங்களில் பணிபுரியும் குறளமுது ஆசிரியர்கள், உதவியாளர்களின் ஊதியம் எவ்வளவு ?

(ஆ) இதனை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?



1989 ஏப்ரல் 12]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : (அ) குறளமுது ஆசிரியர்கள் என்ற பணியிடம் எதுவும் தனியாக தோற்றுவிக்கப் படவில்லை. சத்துணவு மைய அமைப்பாளர்களே இப்பணியினை செய்கிறார்கள். சத்துணவு மைய அமைப்பாளர்களின் மாத ஊதியம் ரூ. 170 மற்றும் ரூ. 10 (இடைக்கால நிவாரணம்) அவர்களுடைய உதவியாளர்கள் கீழ்க்கண்டவாறு மதிப்பு ஊதியம் பெறுகின்றார்கள். சமையலர் மாதம் ஒன்றுக்கு ரூ. 70 மற்றும் இடைக்கால நிவாரணம் ரூ. 5, உதவியாளர் மாதம் ஒன்றுக்கு ரூ. 35 மற்றும் இடைக்கால நிவாரணம் ரூ. 5.

(ஆ) சத்துணவு மைய அமைப்பாளர்கள் தமிழ்நாடு அரசு ஐந்தாவது ஊதியக் குழுவிற்கு ஊதியம் அதிகரிக்க வேண்டி கோரிக்கைகள் அளித்துள்ளார்கள் என்று தெரிய வருகின்றது. அவர்களுடைய ஊதியம் அதிகரிக்கும் கோரிக்கை சம்பந்தமான ஊதியக் குழுவின் அறிக்கை வந்த பிறகு முடிவு எடுக்கப்படும்.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர்களுக்கு வழங்கப்படுகிற சம்பளம் குறைவாக இருக்கிற காரணத்தால் அவர்கள் வேலையை ஒழுங்காகச் செய்யவில்லை என்று மக்கள் கூறுகிறார்கள். எனவே அவர்களுக்கு, அவர்களுடைய தொழிலுக்கு ஏற்ப ஊதியம் உயர்த்தித் தரப்படுமா ? மேலும் அவர்கள் வேலை செய்கின்ற நேரம் என்ன என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஐந்தாவது ஊதியக் குழுவின் முன்பாக தங்களுக்கு சம்பளம் உயர்த்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஐந்தாவது ஊதியக் குழுவின் அறிக்கை தமிழக அரசுக்கு கிடைக்கப்பெற்றதற்குப் பிறகு, அவர்களுடைய ஊதிய உயர்வு பற்றி அரசு பரிசீலனை செய்யும். இப்போது அவர்களின் பணி செய்யும் நேரம் 4 மணி நேரம் மட்டுமே.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு தலைவரவர்களே, அவர்களுடைய பணிகளில் அவர்கள் பெறவேண்டிய சலுகைகள் அனைத்தும், அதாவது அரசு ஊழியர்களுக்கு அளிக்கின்ற சலுகைகள் அனைத்தும், அவர்களுக்கும் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுவரை அந்தப் பணியாளர்கள் தற்காலிக பகுதி நேர பணியாளர்களாகத்தான் அந்தப் பணியில் அமர்த்தப்பட்டு இருந்தார்கள். கழக அரசு அமைந்ததற்குப் பிறகுதான் அவர்களை நிரந்தரப் பகுதிநேர பணியாளர்களாக இந்த அரசு அங்கீகரித்து இருக்கிறது. எனவே அவர்கள் பகுதி நேரப் பணியாளர்கள் என்ற அளவில் அரசு ஊழியர்களின் மற்ற சலுகைகளைப் பெறுவதற்குத் தகுதி இல்லை.

[1989 ஏப்ரல் 12

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, பள்ளி களில் பணி புரியும் சத்துணவு அமைப்பாளர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்று இருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். ஆனால் அப்படி அமர்த்தப்படும் அமைப்பாளர்கள் மாத ஊதிய மாக ரூ. 175 பெறுகிறார்கள். ஆனால் பால்வாடியில் பணி புரியும் சத்துணவு அமைப்பாளர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்று இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு 200 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஏன் இந்த வித்தியாசம்? அதைப்போலவே பால்வாடியில் பணிபுரியும் இரண்டு உதவியாளர்களின் ஊதியம் ரூ. 70 ஆக வழங்கப்படுகிறது. ஆனால் பள்ளிகளில் பணியாற்றும் ஓர் உதவி யாளருக்கு ரூ. 70-ம் இன்னொருவருக்கு ரூ. 35-ம் வழங்கப்படு கிறது. ஏன் இந்த வித்தியாசம்? அரசு அதை சரி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுப் பணியாளர்களை நியமிக்கின்ற நேரத்தில் முதலில் அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப் பித்தது. பிறகு மீண்டும் என்ன காரணத்தாலோ அந்த உத்தரவு மீண்டும் பெறப்பட்டு, பத்தாம் வகுப்பு படித்திருந்தால் போதும் என்கின்ற அளவிற்கு அரசு ஆணை திருத்தப்பட்டது. பத்தாம் வகுப்புகூட படிக்காத சிலர், இன்று சத்துணவுக் கூடத்திலே பொறுப்பிலே இருக்கிறார்கள். எனவே, அரசு இவர்களை யெல்லாம் பரிசீலித்து, சத்துணவுப் பணியாளர்களுக்குக் கல்வித் தகுதி நிச்சயமாக நிர்ணயம் செய்ய இருக்கிறது.

குழந்தைகள் நல மையத்தின் பணியாற்றுகிற 'குழந்தைகள் நல அமைப்பாளர்'களுக்குச் சத்துணவுப் பணியாளர்களைக் காட்டிலும் கூடுதல் பணி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சத்துணவுப் பணியாளர்கள் காலை 10 மணியிலிருந்து மதியம் 2 மணிவரையில் தான் அவர்களுக்கு அங்கே வேலைக்கான வாய்ப்பு உண்டு. ஆனால் குழந்தைகள் நல அமைப்பாளர்கள் அந்த மையத்தில்—அது ஒரு நர்சரி பள்ளியைப் போல இன்றைக்குச் செயல்பட்டுக் கொண் டிருக்கிற காரணத்தினால், 9 மணிக்கு அந்தக் குழந்தைகள் நல அமைப்பாளர்கள் அந்த மையத்திற்கு வந்து மாலை 4 மணிவரை அந்த மையத்திலே அவர்கள் பணியாற்ற வேண்டியிருப்பதன் காரணமாகத்தான ஊதியத்தில் வித்தியாசம் இருக்கிறது.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது சத்துணவு மையங்களுக்கு டேபிள் கள் அரசிடமிருந்து வரப்பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் அந்த டேபிள்கள் இன்றைக்கு இறக்கி வைக்கப் பட்டிருக்கின்றன. அந்த டேபிள்கள் முழுமையாகக் கள்ளியம் பலகையினால் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு டேபிள்கூட திறக்கவோ மூடவோ வருவதில்லை. குறிப்பாக, இப்பொழுது



1989 ஏப்ரல் 12]

கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்திலே ஒரு லாரியிலே கொண்டு வந்து இறக்கியிருக்கிறார்கள். மிகமிக மோசமான நிலைமையிலே அந்த டேபிள்கள் இருக்கின்றன. இது கள்ளியம் பலகையினால் செய்யப்படக்கூடிய டேபிள்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இதை மாற்றியமைக்க அரசிடம் ஏதாவது யோசனைகள் இருக் கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, Operation Black Board என்ற திட்டத்தின் படி, துவக்கப் பள்ளிகளுக்கு, நடுத்தரப் பள்ளிகளுக்கு வழங்கப் படுகிற திட்டத்தின் அடிப்படையில் அரசுத் துறையோடு சார் புடைய துறைகளிலேயிருந்துதான் இவைகளெல்லாம் வாங்கப்படு வதாக நான் அறிகிறேன். அவைகளிலே எந்தக் குற்றங்குறைகள் இருந்தாலும், அது விசாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ந. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சத்துணவு மைய அமைப்பாளர்களில் பட்டப் படிப்பு படித்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர் களுடைய கல்வித் தகுதிக்கேற்றவாறு அந்தத் துறையிலுள்ள காலியிடங்கள நிரப்பப்படும்பொழுது அந்தத் துறையிலே அவர் களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பட்டதாரிகள் பணிபுரிகின்ற மையங்களில் அவர்கள் கல்விக்கேற்ப இடங்கள் அங்கே எதுவு மில்லை. என்வே, அவர்கள் இதிலே பணியாற்றிக் கொண்டிருந் தாலும்கூட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் அவர்களுக்குத் தகுந்த வேலைக்கான உத்தரவு வருமேயானால் அது பரிசீலிக்கப் படுமேயல்லாமல், சத்துணவு மையங்களில் பட்டதாரிகளைத் தற்போது பணிகளில் அமர்த்துவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சத்துணவுக் கூடங்களிலே உணவு அருந்தும் பிள்ளைகளை எடை போட்டுப் பார்க்கும் பணி மிக முக்கியமானதாக இருந்தும், சம்பந்தப்பட்ட மருத்துவர்கள் வராமல், அமைப்பாளர்கள் எழுதிவைப்பதிலே கையொப்பம் இடுகிறார்கள் என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அந்தக் குறை களையப்படுமா என்று தெரிந்து கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு தலைவரவர்களே, அப்படிப்பட்ட குறைபாடு எதுவும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. மாண்புமிகு உறுப் பினரவர்கள் அப்படி ஏதாவது மையத்திலே குறைபாடு நடப்ப தாகக் கருதுவாரேயானால் அதைப்பற்றிய புகார்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

திரு. ஏ. சி. தயாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால அரசு சத்துணவுக் கூடங்களில் பணி புரிபவர்களைக் கட்சியின் அடிப்படையில் நியமித்தது. அதை மாற்றி, தகுதி அடிப்படையிலே நியமிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட புகார் எதுவும் அரசின் கவனத்திற்கு இதுவரை வரவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள், அப்படி ஏதாவது தனிப்பட்ட முறையிலே புகார் இருக்குமேயானால், அரசின் கவனத்திற்கு அதைக் கொண்டு வரலாம்.

(முற்பகல் 9-40)

திரு. சோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்கள் பகுதி நேர ஊழியர்களாக நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு மாத ஊதியம் 175 ரூபாய் வழங்கப்படுகிறது. அதை உயர்த்துவது சம்பந்தமாக பின்னால் பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிற காரணத்தால் கேட்கிறேன். இப்படி குறைந்த சம்பளம் அளிக்கக்கூடிய அந்த சத்துணவு ஊழியர்களுக்கு, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் இருக்கிற சத்துணவு ஊழியர்களுக்கு கோடை விடுமுறை காலங்களில் ஊதியம் இல்லையென்று இப்போது அறிவிக்கப்படுகிறது. அவர்கள் பகுதி நேர ஊழியர்களாக இருந்து, இப்போது நிரந்தர பகுதி நேர ஊழியர்களாக இந்த அரசால் மாற்றப்பட்டு இருக்கிற காரணத்தால் இந்த ஆண்டு கோடை விடுமுறை காலங்களில் அவர்களுக்கு சம்பளப் பிடித்தம் இல்லாமல், சம்பளம் இல்லையென்று மறுக்காமல், சம்பளம் கொடுக்க அரசு முன்வருமா? இப்போது ஏப்ரல் மாதம் வந்து விட்ட காரணத்தால், கோடை விடுமுறை தேதியிலிருந்து அவர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டாமென்று கல்வித்துறை அதிகாரிகள் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் நிரந்தர பகுதி நேர ஊழியர்களாக மாற்றப்பட்டு இருக்கிற காரணத்தால், அவர்களுக்கு இந்த ஆண்டு கோடை விடுமுறை காலங்களில் அந்த சத்துணவு ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கோடை விடுமுறையில் அவர்களுக்கு சம்பளம் வழங்கவேண்டுமென்ற கோரிக்கை இதுவரையில் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை. அப்படி கோரிக்கை வருமானால், அரசின் நிதிநிலையைப் பொறுத்து அதைப் பரிசீலிப்பதற்கு இந்த அரசு முன்வரும்.



திரு. ஆர். எட்டியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதிலும் இருக்கிற சத்துணவுக் கூடங்களில் சத்துணவு செய்கிற பாத்திரங்கள் மிகவும் பழுதுபட்டுள்ளன. இப்போது புதியதாக பாத்திரங்கள் தமிழகம் முழுவதிலும் இருக்கிற கூடங்களுக்கு வாங்குவதற்கு அரசிடம் குறிப்பு ஏதேனும் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைப்பற்றிய குறிப்பு அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய் அதற்காக செலவாகும் என்று சமூகநலத் துறையின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. நிதி நிலையை கருத்திற்கொண்டு, அரசே இந்த முழுத் தொகையை ஏற்றுக் கொள்ளாமல், ஆங்காங்கு இருக்கக்கூடிய தொண்டு நிறுவனங்களை அணுகி, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய செல்வந்தர்களை அணுகி அந்த மையத்திற்கு தேவையான பாத்திரங்கள் வாங்குவதற்கான தொகையை நன்கொடையாக வசூல் செய்யலாம் என்று அரசு முடிவெடுத்திருக்கிறது. இந்த முடிவு சம்பந்தப்பட்ட இலாக்காக்களுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

## திருப்பத்தூர் அரசு மருத்துவமனை

72— (*வினா எண். 132) திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் மின் சாதனம், ஃபேன், லைட், ஆகியவை இயங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் மின் சாதனம், ஃபேன், லைட் போன்றவைகள் முதலில் இயங்காமல் இருந்தன. தற்போது சரி செய்யப்பட்டு பொதுவாக நல்ல முறையில் செயல்படுகிறது.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனையில் 156 படுக்கைகள் உள்ளன. ஏறக்குறைய ஒரு நாளைக்கு 2,500 பேர்கள் மருத்துவம் செய்து கொள்வதற்கு வருகிறார்கள். இடையில், அங்கே போய்ப் பார்க்கிற நேரத்தில், அந்தப் பகுதியில் மின்சாரம் இருப்பதில்லை.

[1989 ஏப்ரல்

அமைச்சர் அவர்கள் மின்சாரம் உண்டு என்று சொல்கிறார்கள். நான் இரண்டு நாட்களுக்கு முன்னால் கூட அங்கே சென்றிருந் தேன். நிச்சயமாக அந்தப் பகுதியில் மின்சாரம் இல்லை. அதுவும் செவிலியர் இருக்கிற பகுதியில் கூட மின்சாரம் இல்லாமல் அவர்கள் தொல்லைகள் அனுபவிக்கிற நிலைமைகள் இருக்கின்றன. இதை உடனடியாக சரி செய்து அங்கே மருத்துவம் செய்து கொள்கிறவர்களுக்கு மின்சாதனம், ஃபேன், லைட் போன்ற வசதிகளை செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல் கிற குறைபாடுகள் உண்மையாக இருக்குமானால் நிச்சயமாக அதை தீர்த்து வைப்பதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அங்கே இருக்கிற மருத்துவர்கள் நீண்ட நாட்களாக அங்கே யிருந்து தனியாக மருத்துவம் செய்கிற காரணத்தால் அந்த மருத்துவமனைக்கு வருகிற நோயாளிகளை அவர்கள் சரிவர கவனிப்பதில்லை. அந்த கவனக் குறைவின் காரணமாகத்தான் இதுபோன்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. அந்த நிலைமை களைப் போக்குவதற்காக அமைச்சர் அவர்கள் கூட திருப்பத் தூருக்கு வரவேண்டுமென்று அழைத்து இருக்கிறோம். அவர் களும் தேதி கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலைமைகளை அவரே நேரில் கண்டறிந்து உடனடியாக நோயாளிகளுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுப்பதற்கு அரசு உடனடி யாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரெ. பிச்சைமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மருத்துவமனைக் கட்டிடத்தில் ஒயரிங் செய்யப் பட்டு, தற்போது அவைகள் எல்லாம் ஷார்ட்டேஜ் ஆகின்ற அளவிற்கு பழுது அடைந்திருப்பது, அரசின் கவனத்திற்கு வந் திருக்கிறதா ? அதை மாற்றுவதற்கு . . (மணியடிக்கப்பட்டது).

திரு. கே. பிச்சாண்டி : தலைவர் அவர்களே, 'திருவண்ணா மலையில் உள்ள அரசு மருத்துவமனையில் போதிய தண்ணீர் வசதி இல்லை. மருத்துவ மனைக்கு அருகே உள்ள மெயின் பைப் லைனிலிருந்து குழாய் இணைப்புக் கொடுக்கவேண்டி, மருத்துவ அதிகாரி பலமுறை மனுச் செய்தும் கொடுக்கப்படாமல். . . . (மணியடிக்கப்பட்டது).



1989 ஏப்ரல் 12]

திரு. எல். மூக்கையா : தலைவர் அவர்களே, கிராமப் பகுதியில் உள்ள அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவ அதிகாரிகள் அங்கே தங்கிப் பணி புரியாத காரணத்தால், இரவு நேரங்களில் ஆபத்தான நிலையில் நோயாளிகள் அந்தப் பகுதிக்கு வருகின்ற நேரத்தில், மருத்துவ அதிகாரிகள் அந்த மருத்துவமனையில் இல்லாத காலங்களில் பல உயிர்ச் சேதங்கள் எல்லாம் ஏற்படுகின்ற அவல நிலையிருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் பண்ணைக்காடு மருத்துவமனையில் நிரந்தரமாக அங்கே மருத்துவ அதிகாரி தங்கியிருக்காத காரணத் தால், மலைப்பகுதியில் இருக்கிற கிராமப்புறத்து மக்கள் நோயா ளிகளை இரவு நேரங்களில் காடுகள் வழியாக தூக்கிக் கொண்டு அந்த மருத்துவமனைக்கு வருகின்ற நேரத்தில், அந்த மருத்துவ அதிகாரிகள் அங்கேயில்லாத காரணத்தால், பல உயிர்ச்சேதங் கள் ஏற்படுகின்றன. எனவே இப்படிப்பட்ட கிராமப் புறங் களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் மருத்துவ அதிகாரிகள் இரவில் தங்கியிருந்து வேலை பார்க்கவேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தங்கியிருந்துதான் அவர்கள் மருத்துவம் பார்க்கவேண்டும் என்று ஏற்கனவே அரசு ஆணையிருக்கிறது. அவைகள் சரிவர செயல்படுத்தப்படும்.

திரு. வி. துரைராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவும் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு உட்பட்ட கேள்விதான். பெரும்பான்மையான வட ஆர்க்காடு மாவட் டத்தில் இருக்கிற மருத்துவ மனைகளில் எல்லாம் 'ரெசிடென் சியல் மெடிக்கல்ஆபிசர்ஸ்' தங்குவதற்கு வசதி இல்லாததால், அவர்கள் இரவில் தங்குகின்ற சூழ்நிலை இல்லை. ஆகவே, 'ரெசி டென்சியல் மெடிக்கல் ஆபிசர்ஸ்' தங்குவதற்கு தனி குவார்ட்டர்சும், அந்த மருத்துவமனையில் பணிபுரிகிற ஸ்டாப் நர்ஸ்கள் தங்குவதற்கு குவார்ட்டர்சும், அதற்குப் பாதுகாப்பாக அந்த மருத்துவமனையைச் சுற்றி காம்பவுண்டையும் கட்டி, அதற்கு பாதுகாப்பு அளிக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, அரசின் நிதிநிலையைக் கணக்கில் கொண்டு அவ்வப்போது இதுபோன்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. தம்புசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனைக் கட்டிடங்களினுடைய பராமரிப்பு பொதுப்பணித் துறையிடம் இருப்பதால், அவைப் பராமரிக்கப்படாமல் மிகவும் சீர்கேடான நிலையில் இருக்கின்றன. எனவே இந்த நிலையை மாற்றி, நேரடியாக மருத்துவத்துறை மூலம் இந்தக் கட்டிடங்கள் பராமரிக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

[1989 ஏப்ரல் 12

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு மருத்துவமனையிலும் பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்கு மிகச் சிறிய வேலைகளைச் செய்வதற்கான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. மிகப் பெரிய வேலைகளை மட்டும் செய்வதற்கு அவர்கள் பொதுப்பணித் துறையை கலந்து ஆலோசித்து செய்யவேண்டியிருக்கிறது. அந்த முறையே அனைத்துத் துறைகளிலும் நடக்கின்ற காரணத்தால், மருத்துவத் துறையிலும் இதுவே நீடிக்கும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். அப்துல் லத்திப் :** தலைவர் அவர்களே, பொதுவாக எல்லா மருத்துவமனைகளிலும் விளக்கு எரிவதில்லை, பேன்கள் ஓடுவதில்லை என்பதோடு அறுவைச் சிகிச்சை செய்யப்படும் போது கூட விளக்கு எரியாத ஒரு நிலை பல மருத்துவமனைகளிலே ஏற்படுகின்றன. எனவே குறிப்பாக ஒரு மருத்துவமனையை மட்டும், சுட்டிக்காட்டப்படுகிற அந்த மருத்துவமனையை மட்டும் எடுத்துக்கொள்ளாமல், ஒரு 'காம்ப்ரெஹென்சிவ் சர்வே' நடத்தி, எல்லா மருத்துவமனைகளிலும் இந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** தலைவர் அவர்களே, பொதுவாக அரசாங்கக் கட்டிடங்களை பழுதுபார்க்கின்ற பொறுப்பு பொதுப்பணித்துறைக்கு விடப்பட்டிருக்கிறது. அரசாங்கக் கட்டிடங்களைப் பழுது பார்ப்பதில் அவர்கள் அவ்வளவு ஆர்வத்தைக் காட்டுவதில்லை. அதற்காக ஒதுக்குகின்ற பணங்களைக் கூட அதிகமாக அந்த வருடத்திலே செலவிடுவதாக கணக்கில் இல்லை. இதில் ஒரு கோ-ஆர்டினேசன் இல்லாமல் இருக்கிறது. எனவே தற்போது பொதுப்பணித்துறையில் உள்ள அந்தக் கட்டிடங்களை பழுதுபார்ப்பதற்கு அந்தந்த இலாக்காவிற்கே பொறுப்பு கொடுப்பதிலே என்ன சங்கடம் இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** தலைவர் அவர்களே, கொள்கை ரீதியாக எடுக்கவேண்டிய முடிவாகும். ஏன் என்றால், அனைத்துத் துறைகளில் உள்ள கட்டிடங்களைப் பழுது பார்க்கவேண்டும் என்பதற்காகத்தான் பொதுப்பணித்துறைய கொண்டு வரப்பட்டிருக்கிறது. பொதுப்பணித்துறை ஒரு ஆன்சிலரி ஏஜென்சியாக செயல்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தால், அது தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 12]

(முற்பகல் 9-50)

**திரு. பொ. முருகேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு ''Point of order வரும். உங்கள் இருக்கை திரு. முல்லைவேந்தனுக்கு அந்தப் பக்கம் தானே இருக்கவேண்டும்? சரியாகப் பாருங்கள். இடம் மாறி உட்காரா தீர்கள்.

**திரு. பொ. முருகேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்கவேண்டும். தமிழகம் பூராவும் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற பெயரில் தாய் சேய் நல விடுதிகள் என்று கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்துக் கட்டி இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் 2 ஒன்றியங்களிலே 14 மையங்கள் இருக்கின்றன. ஒன்றுகூட செயல்படவில்லை. அதிலே உள்ள பொருட்கள் எல்லாம் களவாடப்பட்டிருக்கின்றன .. (மணியடிக்கப்பெற்றது.)

**திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவ நிலையங்களில் ஏற்கனவே அரசாங்கத்தால் வழங்கப்பட்ட எக்ஸ்-ரே பிளான்ட் போன்ற மிஷின்கள் எல்லாம் பல இடங்களில் பழுதடைந்து இருக்கின்றன. இதை உடனடியாக சரி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு நான் எல்லை தாண்டக் கூடாது என்று சபைத் தலைவர் உத்தரவிட்ட காரணத்தினால் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. ஆகவே பல இடங்களில் மருத்துவமனைகளிலே மருத்துவர்கள் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அரசாங்கத்தில் நியமிக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். அது எவ்வளவு நாட்களாகும் என்பதை அறிய விரும்புகிறேன். தயவு செய்து எல்லா மருத்துவமனைகளிலும் மருத்துவர்களை நியமிக்க இந்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய மானியக் கோரிக்கையின் அறிக்கையிலே அதுபற்றி விளக்கமாக குறிப்பிட்டிருக்கிறேன். ஏறத்தாழ 1000 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுவிட்டார்கள். மேலும் 300 இடங்கள் இருக்கின்றன. அவைகளையும் நிரப்புவதற்கு தமிழ்நாடு தேர்வாணைக் குழு ஒரு பட்டியலைக் கொடுத்திருக்கிறது. ஆனால் அதிலே நியமிப்பதிலே சட்டச் சிக்கல் இருந்து, அந்த வழக்கு வழக்காடு மன்றத்திலிருக்கின்ற காரணத்தால், அதை உடனடியாகச் செய்ய முடியவில்லை. நிச்சயமாகக் கூடிய விரைவில் உறுப்பினரின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, அந்த இடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்திலே இறந்துவிட்டவர்களின் பிரேதப் பரிசோதனை என்ற பெயரில் மிகவும் காலதாமதப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் அந்த உடலைத் தருகிறார்கள். அதைத் துரிதப்படுத்தி பிரேதத்தைத் துரிதமாக வழங்குவதற்கு அரசுக்கு ஏதேனும் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிரேதப் பரிசோதனைக்கான இடங்கள் ஒரு தலைமை மருத்துவமனையில் மட்டுமே இருக்கின்றன. ஆகவே இதிலே காலதாமதம் ஏற்படுவது இயற்கையாகவே இருக்கிறது. இந்த பிரேதப் பரிசோதனைக்கான இடங்கள் அதிகரிக்கப்படுமேயானால், இந்தக் குறை நிவர்த்தி செய்யப்படும். நாளடைவில் அரசினுடைய நிதிநிலையைக் கணக்கிலே கொண்டு, அவைகள் உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## புற்று நோயைக் குணப்படுத்துதல்.

73—(*வினா எண். 232) திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள அகில உலக நவீன மருத்துவ ஆராய்ச்சி மையம் சித்த மருத்துவ முறையில் புற்றுநோயை குணப்படுத்துவதற்கான புதிய மருந்து, மாத்திரைகளை கண்டு பிடித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

திரு. அ. லே. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் நீதிபதி சித்த மருத்துவ நிபுணர் பலராமையா அவர்கள் இந்த புற்று நோயைக் குணப்படுத்துவதற்காக ஒரு மருந்தைக் கண்டுபிடித்து, அதைப் பரிசோதனை மூலமாக பத்திரிகைகளுக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். அது அரசுக்குத் தெரியுமா ? எனவே அவரை அழைத்து இப்படிப்பட்ட அதிசய மருந்தை அல்லது மக்களைக் காக்கின்ற அந்த மருந்துகளைப் பற்றி அறிய விரும்புமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இந்த இந்திய மருத்துவ முறைகளைப் பற்றி ஆராய்வதற்கு ஒரு ஆராய்ச்சி மையம் இருக்கின்றது. அவர்களுடைய பார்வைக்கு இது கொண்டுவரப்படுமேயானால், இது குறித்து மேலும் எடுக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டானிடா திட்டத்தின் கீழ் தொழுநோய் ஒழிப்பு பணிகளுக்காக மத்திய அரசு சேலம் மாவட்டத்தையும், தென் ஆற்காடு மாவட்டத்தையும் சேர்த்து செய்ததில் சேலம் மாவட்டத்துப்பணி முடிவடைந்துவிட்டது. தென்னாற்காடு மாவட்டத்தில் அந்தப் பணிகளை தொடங்க கால தாமதம் செய்யப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் இந்த ஆண்டு அது துவங்குவதற்கான ஆரம்ப பணிகள் துவக்கப்பட்டு விட்டன என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, மருத்துவமானியத்தில் பேசும்போது இந்தியாவிலுள்ள வைத்திய முறைகளைப் பற்றி பிரத்தியேகமான கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை நான் சுட்டிக்காட்டினேன். அவர்கள் நோய்களை ஆராய்ச்சி செய்து சில புதிய மருந்துகளைக் கண்டு பிடிக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய ஆதரவும், உதவியும் விஞ்ஞான முறையிலான ஆலோசனைகளும் கிடைக்காமல் அவைகள் பின் தங்கிவிடுகின்றன. அதிலே அவர்கள் குறிப்பிடும்படியான சில வியாதிகளுக்கு சில மருந்துகளைக் கொடுக்கிறார்கள். அதனால் பலன் கிடைக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். நான் நேரிலேயே பார்த்திருக்கிறேன். அடையார் புற்று நோய் ஆஸ்பத்திரியில் ஒரு நோயாளி 6 மாத காலத்திற்கு மேல் புற்று நோய்க்கு சிகிச்சை பெற்று ஓரளவுக்கு குணமாகி வந்ததற்குப் பிறகு ஆயுர்வேத வைத்தியத்தினுடைய ஒரு மருந்து இன்றைக்கு கடைகளில் விற்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து சாப்பிடச் சொல்லி டாக்டர்களே அவர்களுக்கு ஆலோசனை கூறி சாப்பிட்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் நம்முடைய உள்நாட்டு வைத்திய முறைகளுக்கு உதவும் வகையில் பிரத்தியேக கவனம் செலுத்தப்பட, அந்த ஆராய்ச்சி நிலையமோ எந்த ஸ்தாபனமோ தமக்குத் தெரியவில்லை. அதற்கு ஆலோசனை கூறி அந்த அந்தத் துறைகளில் உள்ள 3, 4 வைத்தியர்களுக்கும் எடுத்துச் சொல்லி அதற்கு தகுந்த நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

[1989 ஏப்ரல் 12

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :**
மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய
ஆலோசனையை கருத்தில் கொண்டு இந்த அரசு நிச்சயமாக
செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. அண்ணாதுரை :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றைக்குக் கிராமங்களில் புற்று நோய் அதிகமாக
இருக்கிறது. இந்த நோய்களைப் பற்றி ஆரம்ப நிலையில் தெரிய
வாய்ப்பில்லாமல் முற்றிய நிலையில் தெரிந்துகொள்வதால்
சிகிச்சை பயனற்றுப் போகிறது. எனவே கிராமமக்கள்
இந்த நோய்களின் அறிகுறிகளை ஆரம்ப நிலையிலேயே
தெரிந்து கொள்ளும் வகையில் அரசின் சார்பிலே
ஏதாவது பிரச்சாரம் செய்யத் திட்டம் உள்ளதா என்று அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :**
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக செய்
கிற பிரச்சாரங்கள்தானே தவிர இது குறித்து தனிப்பட்ட
பிரச்சாரங்கள் எதற்கும் வாய்ப்பில்லை என்பதை இங்கே அறி
விக்க விரும்புகிறேன்.

**திரு. அன்பில் பொய்யாமொழி :** தலைவர் அவர்களே,
திருச்சியில் சித்த மருத்துவ மனைக்காகத் தனி பிரிவு ஒன்று
ஆரம்பிக்கப்பட்டது. அது முதலில் லால்குடியில் ஆரம்பிக்கப்
பட்டது. பிறகு திருச்சி மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு, அந்த
மருத்துவர் இன்று அகில இந்திய அளவிலே புகழ் பெற்றுவிட்டார்.
ஆனால் அந்த மருத்துவமனையில் அந்தப் பிரிவு இயங்காமல்
இருப்பது நம்முடைய அரசுக்குத் தெரியுமா என்று அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :**
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து
தனியாக வினா எழுப்புமாறு கேட்டுச் கொள்கிறேன்.

**திரு. எஸ். குணசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கல் லூரியோடு இணைந்திருக்கும் மருத்துவமனை
களுக்குத்தான் புற்றுநோய்க்கான சிகிச்சை அளிக்கும் வசதி
இருக்கிறது. இதனால் மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளா
கிறார்கள். ஆகையினால் மாவட்ட மருத்துவ மனைகளி
லும் புற்றுநோய்க்கான சிகிச்சை அளிக்க வேண்டுமாய் இந்த
அரசைக் கவனிக்கிறேன். (சிரிப்பு) இந்த அரசைக் கேட்டுக் கொள்
கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது நீங்களும்
கவனியுங்கள். (சிரிப்பு).



1989 ஏப்ரல் 12]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :**
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின்
நிதியை கணக்கில் கொண்டு இதுபோன்ற விரிவாக்கப் பணி
களை அரசு மேற்கொளளும்.

**டாக்டர் சி. ரா. மாசிலாமணி :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இன்றைக்கு புற்றுநோய் சிகிச்சையில் மிக
முக்கியமான சிகிச்சையாகக் கருதப்படுவது கதிரியக்க சிகிச்சை
தான். அப்படிப்பட்ட வசதிகள் சென்னை பொது மருத்துவமனை
யிலோ அடையார் மருத்துவமனையிலோ தான் கிடைக்கிறது.
அதற்காக மாவட்டங்களிலிருந்து வந்த நோயாளிகள் மாதக்
கணக்கில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே மாவட்ட
அளவில், மாவட்ட தலைமை பொது மருத்துவ மனையில் இப்படிப்
படிப்பட்ட கதிர் இயக்க சிகிச்சைப் பிரிவு அமைக்க அரசாங்கம்
உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :**
பேரவைத் தலைவர் அவர்களே, எனது முந்தைய பதிலி
லேயே இந்தக் கேள்விக்கான பதிலும் அடங்கியிருக்கிறது என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

**திரு. ஏ. கோவிந்தராஜன் :** தலைவர் அவர்களே, இந்த
புற்றுநோய் மிகக் கொடிய வியாதி என்று சொல்லப்படுகிறது.
அது உண்மைதான். அது மட்டுமல்ல. இன்னொரு கருத்தும்
இதை குணப்படுத்தவே முடியாது என்ற கருத்தும் நிலவுகிறது.
பல்வேறு நாடுகளில் இதை குணப்படுத்துவதற்காக பல நிபுணர்
கள் சில விஞ்ஞான அடிப்படையில் கண்டுபிடித்திருப்பதாக கூறு
கிறார்கள். இங்கே கூட நவீன மருத்துவ ஆராய்ச்சி மையத்
திற்கு தெரியுமா என்ற கேளவி இந்த முறையிலே வந்திருக்
கிறது. இப்படிப்பட்ட கொடிய வியாதியை ஓரளவிற்காவது
குணப்படுத்துவதற்கு, தற்காலிகமாக அவர்களை வாழ வைப்ப
தற்கு நம்முடைய மாநில மருத்துவமனைகளில் எந்தெந்தவித
மான சிகிச்சைகள் கொடுக்கப்படுகின்றன? அதற்கான சாத்
னங்கள் எல்லாம் இருக்கின்றன? அடையாறு மருத்துவமனை
யைத் தவிர. நம்முடைய மாநில அரசுக்குச் சொந்தமான
மருத்துவமனைகளில் எந்தெந்த வகையில் சிகிச்சைகள் அளிக்கப்
படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :**
தலைவர் அவர்களே, இந்திய மருத்துவத் துறையிலே இது குறித்து
ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அது ஆராய்ச்சி அள
விலே இருக்கிறது. தூதுவளை என்ற மூலிகையிலிருந்து அதிலே
அடங்கியுள்ள சிராக்ஸ், இனைக்கோ, ஆல்கலாய்ட் என்ற
ரசாயனப் பொருள் பிரித்து எடுக்கப்பட்டு, அதன் மூலமாக்

இதற்கான சிகிச்சை முறைகள் எல்லாம், இந்த ஆராய்ச்சி அளவிலே இருக்கிறது. அது இன்னும் முழுமை பெறவில்லை என்ற காரணத்தினால் அதை அறிவிக்க முடியவில்லை. கூடிய விரைவில் அது முடிவு பெற்றவுடன், முழுமையான மருந்துகள் மற்ற இடங்களுக்கும் அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, புற்று நோய் சிகிச்சையில் இன்றைக்குப் புகழ் பெற்று விளங்கும் அடையாறு மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர் சாந்தா அவர்களை மாதத்தில் ஒரு சில நாட்கள் மாவட்ட. தலைநகர் மருத்துவமனைகளுக்குச் சென்று அங்கு வருகின்ற நோயாளிகளை பரிசோதித்து அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கான உத்திரவை அரசாங்கம் பிறப்பிக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, புற்றுநோயில் பல வகை இருக்கின்றன. எந்த வகையான புற்றுநோய் என்பதை காண்பதற்கே சில காலம் ஆகும். அதற்கான ஆய்வுகள் நடைபெற வேண்டும். சிகிச்சைகள் பல வகைப்பட்டன. அதிலே அடையாறு புற்றுநோய் மருத்துவமனையிலே தரப்படுகின்ற வகையான சிகிச்சை தருவதற்கு, அங்கே வருகின்ற நோயாளிகளுக்கே முழு கவனம் செலுத்த வேண்டிய நிலைமை தான் அந்த இயக்குநருக்கு இருக்க முடியும். இந்த தொடக்க நிலையிலே ஆய்வு நடத்தக் கூடிய பல்வேறு கட்டத்திலே இருக்கின்ற காரணத்தால் அப்படி அந்தத் துறையிலே தனியார் மருத்துவமனையிலே, அமைப்பிலே இருக்கின்ற ஒருவரை மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்புவது என்பது இயலாத காரியம். புற்றுநோய்க்கு கோபால்ட் தெராபி போன்ற அந்த சிகிச்சைகளை வழங்குவது என்பது மிகக் கடுமையான ப்ராஸஸாக இருக்கின்ற காரணத்தால், எல்லா மருத்துவமனையிலும் அதை ஏற்பாடு செய்வதற்கான வசதியும் நமக்கு கிடையாது. எளிய வாய்ப்பும் அல்ல. அந்த மருத்துவ முறையில் மருந்துகள் மூலமாக சிகிச்சை செய்ய வேண்டும் என்ற முறையில் பல ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. அந்த ஆய்வுகள் விரைவில் பலன் தரக்கூடுமானால், அந்த முறை பயன்படுத்தப்படும்.

**டாக்டர் க. காஞ்சனா :** தலைவர் அவர்களே, புற்று நோய் வகையில், பெண்களுக்கு அதிகமாக வருகின்ற புற்றுநோய் கர்ப்பப்பை புற்றுநோய். அதனுடைய ஆரம்ப நிலையை கண்டு கொள்வதும் சுலபம். ஆனால் தாலுக்கா மருத்துவமனைகளிலும், மாவட்ட தலைமை மருத்துவமனையிலும் இதற்கான வசதிகள் தற்சமயம் இல்லை. (Cancer in Situ) கேன்ஸர் இன் ஸிட்டூ என்று சொல்லக் கூடிய அந்த ஆரம்ப நிலையை அறிந்து கொள்வதற்கு அதிகப்படியான செலவு எதுவும் ஆகாது. சாதாரணமாக ஒரு ஸ்வாப் எடுத்துக் கொள்கின்ற நிலையிலும், ஒரு சிறிய பையாப்சி எடுத்துக் கொள்கின்ற நிலையிலும், ஒரு மைக்ராஸ்கோப் அடிப்படையிலே வைத்துக் பார்த்தாலும் கூட, இந்த கேன்ஸர் செல்கள் இனம் கண்டு கொள்ளக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே அத்தகைய கேன்ஸர் இன் ஸிட்டூ கிளினிக்குகளை, தாலுக்கா மருத்துவமனையிலும், தலைமை மாவட்ட மருத்துவமனையிலும் ஏற்பாடு செய்து கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டாக்டராக இருப்பதோடு மட்டுமின்றி அவர்களே பெண் டாக்டராக இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் கொடுத்திருக்கின்ற இந்த அரிய கருத்தினை நிச்சயமாக பரிசீலித்து நிதிநிலையினை ஒட்டி ஆவனசெய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. தகவல் கோரல்

**(அ) தற்காலிக நீக்கம் செய்யப்பெற்ற உறுப்பினர்களை எதிர்க்கட்சித் தலைவர் அறையிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கை குறித்து.**

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிக்க சபாநாயகர் அவர்களே, இந்த வளாகத்திலே எதிர்க் கட்சி தலைவர் அறையிலே உட்கார்ந்து இருககின்றவர்களைக் கூட நீங்கள் வெளியேற வேண்டும் என்று சொன்னதாக டெப்புடி செக்கரட்டரியும், அண்டர் செக்கரட்டரியும், சார்ஜண்டும் கூறுகிறார்களாம். அவையிலிருந்துதான் முன்னவருடைய தீர்மானத்தின் படி அவர்கள் வெளியேற்றப்பட்டார்களே தவிர எதிர்க் கட்சி தலைவருடைய அறையிலிருந்து கூடவா வெளியேற்றப்பட்டார்கள்? எனவே, அந்த உரிமை அவர்களுக்கு மறுக்கப் படலாமா என்பதை சபாநாயகர் மூலம் இங்கே வினாவாக எழுப்பி, அந்த உரிமை அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய மதிப்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் விதிகளை நன்றாகப் படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். நீங்கள் இதையே அவர்கள் வெளியேறும்போது சொல்லியிருக்கலாம். சபாநாயகர் சொன்னவுடனே நீங்கள் வெளியேறிவிட்டுத் திரும்ப வாருங்கள் என்று சொன்னால் கூடக் கவனிக்கலாம். ஒரு முறை,

பல முறை நான் எச்சரித்தும் சொல்வதைக் கேட்காமல் திருப்பித் திருப்பிச் செய்கின்றபோது, பேரவைத் தலைவர் அவருக்குரிய சட்ட விதிகளின்படி நடக்க வேண்டியிருக்கிறது.

ஒரு முறை, சட்டப் பேரவை உறுப்பினர்கள் பேரவைத் தலைவருடைய ஆணையின்படி வெளியேற்றப்பட்டால் அவர்கள் பேரவை எல்லைக்குள்ளேயே வரக்கூடாது என்பதுதான் விதி என்பதை திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு நான் வற்புறுத்த விரும்புகிறேன். அதையும் மீறி அவர்கள் வருவது என்பது மீண்டும், மீண்டும் மரபுகளையும், விதிகளையும புறக்கணிக்கிறார்கள் அல்லது மீண்டும், மீண்டும் தொல்லை தருவதற்கு முயற்சி செய் கிறார்கள் என்று ஆகுமே தவிர, அது எந்தவகையான அதிகார வரம்புக்குள்ளும் வராது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, நான் (குறுக்கீடு) விதியைத் தான் சுட்டிக் காட்டுகிறேன். 'Precinctes' என்று சொன்னால், 'பேரவை எல்லை' என்று பொருள் என்பதை நம்முடைய திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

திரு. குமரி அனந்தன் : நான் விதி..............

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த விதியை மீறி இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அறையிலே சில உறுப்பினர் கள், வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள், வந்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, அந்த விதியின்படி அவர்களை வெளியேற்ற வேண்டாம். அந்த விதியை நினைவு படுத்தி நாளைக்கு வேண்டு மானால் வராமல இருக்கட்டும், இப்போது வெளியேற்ற வேண் டாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய இசைவு பெற்ற வகையில், ஒரே ஒருவருக்கு மட்டும் இன்றைக்கு இசைவு தரப்பட்டிருக்கிறது. உறுப்பினர்களுக்கு மற்றொன்றை நான் நினைவூட்ட விரும்புகிறேன். சில நேரங்களில் இசைவு பெற்று இங்கே சில பிரச்சினைகளை எழுப்புபவர்கள். அதை ஒரு நீண்ட சொற்பொழிவாக, ஒரு பெரிய உரையாக ஆற்றி, எநத வகை யான விதியின் அடிப்படையிலும் தொடர்ந்து பேச முடியாத சூழ்நிலையை உருவாக்கிவிடுவதை நான் உங்களுடைய கவனத் திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எனவே, இனிமேல் என் னிடத்தில் இசைவு பெறுபவர்கள் மிகச் சுருக்கமாக தங்களுடைய செய்தியை எடுத்துச் சொன்னால் மட்டும்தான் அந்த இசைவுக் கான ஆணையை நான் பிறப்பிக்கமுடியும். இல்லையேல் அதை முற்றாக மறுப்பதைத் தவிர வேறு வழியே இருக்காது என்று சுட்டிக்காட்டி, இன்று இசைவு பெற்ற ஒரே ஒரு உறுப்பினர் திரு. மா. சுந்தரதாஸ்.



## 2. தகவல் கோரல்

(ஆ) குமரி மாவட்டத்தில் காவல் துறை ஆய்வாளர்களாக நியமிக்கப் பட்டவர்கள் அப்பதவிகளில் சேருவதற்குத் தடை.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய குமரி மாவட்டத்திலே 21 புதிய சப் இன்ஸ்பெக்டர் கள் நியமனம் செய்யப்பட்டிருந்தார்கள். அவர்கள் கடந்த ஆட்சி யிலே தேர்வு பெற்று, போலீஸ் கல்லூரியிலே படித்து, ஆறு மாதம் புரொபேஷனராக அங்கு பணியாற்றினார்கள். எங்களுடைய மாவட்டத்திலே நேரடியாக சப்இன்ஸ்பெக்டர்களை 10 ஆண்டுக் காலமாக நியமனம் செய்யாத காரணத்தால் சட்டம், ஒழுங்கு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த 21 சப் இன்ஸ் பெக்டர்களையும், 4ஆம் தேதி ஒவ்வொரு காவல்நிலையத்திற்குச் செல்ல வேண்டும் என எஸ்.பி. அவர்கள் தெரிவித்ததாக பத்திரி கை வாயிலாகப் படித்தேன். ஆனால் 4ஆம் தேதி அன்று மறு உத்தரவு வரும் வரை அவர்களை அந்த ஸ்டேஷனிலே ஜாயின் செய்யக் கூடாது என்று ஒரு ஆணை வந்ததாகச் சொல்கிறார்கள். அது அரசுக்குத் தெரிந்து வந்ததோ; மாண்புமிகு முதல்வருக்குத் தெரிந்து வந்ததோ, தெரியாமல் வந்ததோ, தெரியவில்லை. இதில் அரசியல் இருப்பதாகக் கூட அவர்கள் சந்தேகப்படுகிறார்கள். அரசியல் இருக்கும் என்று நான் சொல்லத் தயாராக இல்லை. ஆனால் மக்களிடையிலே ஒரு பீதி, முந்தைய அரசு எடுத்த காரணத்தால் இந்த அரசு வேலை கொடுக்காதோ என்று சொல்கின்ற வகையிலே அச்சப் படுகிறார்கள். ஆகவே, 4-ஆம் தேதி அவர்கள் ஜாயின் செய்ய வேண்டுமென சொன்ன அந்தந்தக் காவல்நிலையங்களிலே சேர் வதற்கான ஆணையை அரசு பிறப்பிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு முதல்வரிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது குறித்து நேற்றைய தினமே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் என்னிடத்திலே ஒரு குறிப்பைக் கொடுத் தார்கள். நாம் உடனடியாக இந்த அவையிலே அது குறித்து பிரச்சினை எழுப்பினால் விவரமாகப் பதில் அளிக்க இயலாது. எனவே மறுநாள், இன்றைக்கு அந்தப் பிரச்சினையை எழுப்புமாறு கேட்டுக்கொண்டேன். அவ்வாறு தங்களுடைய அனுமதியைப் பெற்று அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். தற்போது ஒரு விவரமான விளக்கத்தைத் தரக் கடமைப் பட்டிருக்கிறேன்.

1974 ஆம் ஆண்டுக்கு முன்னால் சப்-இன்ஸ்பெக்டர்; ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர் பதவிகளுக்குத் தேர்வு செய்யப்படுவது காவல் துறையினால் நடைபெற்று வந்தது. கழக ஆட்சி பொறுப் பேற்றுக் கொண்டு நடைபெற்ற போது, 1974 ஆம் ஆண்டு இந்தப் பொறுப்பு சர்வீஸ் கமிஷனிடம், தேர்வாணையத்திடம் விடப் பட்டது. அந்த அடிப்படையில் சர்வீஸ் கமிஷன் மூலமாக

1976 ஆம் ஆண்டும், 1979 ஆம் ஆண்டும் சப்-இன்ஸ்பெக்டர் களும், ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார் கள். அதற்குப் பிறகு கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அந்தப் பொறுப்பு, அதாவது சப்-இன்ஸ்பெக்டர்களையும், ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்களையும் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மீண்டும் காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. 1979 இல் இந்தப் பொறுப்பு காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகு ஒரு ஐந்தாண்டுக் காலம், அதாவது 1984—ஆம் ஆண்டு வரை சப்-இன்ஸ்பெக்டர் தேர்வே நடக்கவில்லை. அது உங்களுக்குத் தெரியும். அதனால் ஏராளமான சப்-இன்ஸ்பெக்டர்கள் பதவி கள் நிரப்பப்படாமல் இருந்து அந்தப் பதவிகளில், ஏற்கெனவே பணியிலே இருந்த தலைமைக் காவலர்களை ஹெட் கான்ஸ் டபிள்களை சீனியாரிட்டி அடிப்படையில் சப் இன்ஸ்பெக்டர் களாகப் பணியாற்றப் பணிக்கப்பட்டது. தேர்வு நடைபெறாத காரணத்தால், காலியாக இருந்த சப்-இன்ஸ்பெக்டர்கள் இடங் களை நிரப்ப, ஹெட்-கான்ஸ்டபிள்களை சீனியாரிட்டி அடிப்படை யிலே சப்-இன்ஸ்பெக்டர்களாகப் பணியாற்றப் பணிக்கப் பட் டது. அவர்கள் அப்படி சப்-இன்ஸ்பெக்டர்களாகப் பணியாற் றியபோதும், அவர்களுக்கு அந்தத் தலைமைக் காவலர்களுக் குரிய ஊதியம் தான் தரப்பட்டது. காவல்துறை விதிப்படி சப்-இன்ஸ்பெக்டர்கள் பதவிகள் 70 சதவிகிதம் நேரடியாகத் தேர்ந்தெடுககப்படுவதன் மூலமும், 30 சதவிகிதம் தலைமைக் காவலர்களுக்கு தேர்வு நடத்தி பதவி உயர்வு அளிப்பதன் மூலமும் நிரப்பப்பட வேண்டும். இந்த 70 சதவிகித முறைப்படி சப் இன்ஸ்பெக்டர் தேர்வு நடைபெறாத காரணத்தால் அந்தப் பதவிகளுக்கும் தலைமைக் காவலர்கள் சீனியாரிட்டி அடிப்படை யில் நியமிக்கப்பட்டார்கள்.

(முற்பகல் 10-10).

1984 ஆம் ஆண்டு தான் சப்-இன்ஸ்க்டெர் தேர்வு நடைபெறு வதற்கான ஆரம்ப வேலைகளே நடைபெற்றன. அப்போது நம் மாநிலத்தில் சப்-இன்பெக்டர்கள் பதவியின் மொத்த எண் ணிக்கை 2,530 ஆகும். இதில் 70 சதவிகிதம் நேரடியாக நிய மனம் செய்யப்பட வேண்டும். அதாவது 1771 பதவிகள் நேரடித் தேர்வு மூலம் நியமனம் செய்யப்பட்டிருக்க வேண்டும். இதில் 1,238 பதவிகள் நிரப்பப்படாமல் தலைமைக் காவலர்கள் பதவி உயர்வு பெற்று சப்-இன்ஸ்பெக்டர்களாகப் பணியாற்றிப் வந்தார்கள்.

1,238 பேர்களைத தேர்வு செய்து பயிற்சி அளிக்காத காரணத் தால் 640 பேர்கள் மட்டுமே சப்-இன்ஸ்பெக்டர் பதவிக்கு தேர்ந் தெடுக்கப்பட்டார்கள். மருத்துவக் தேர்வு நடைபெற்ற பிறகு அதிலும் 615 பேர்கள் மட்டுமே பணி நியமனம் செய்யப்பட்டார் கள்.



இவர்கள் 28—9—1987இல் அடிப்படை பயிற்சியைத் துவக்கி 27—9—1988 இல் அதனை முடித்து ஆறு மாத நடைமுறைப் பயிற்சியை முடித்து விட்டு 6—4—1989 முதல் காவல் நிலையங் களில் சுயமான பொறுப்பு ஏற்றுக்கொள்ள இருந்தார்கள். இன்டிபென்டெண்ட் சார்ஜ் ஏற்றுக்கொள்ள இருந்தார்கள். இதற்கிடையே அந்தக் காலியிடங்களில் இது வரை சீனியா ரிடி காரணமாக பதவி உயர்வு பெற்று பணியாற்றிக் கொண்டிருந் தவர்கள் ஹெட் கான்ஸ்டபிள்ஸ் தங்களுக்கு மீண்டும் பதவி இறக் கம் வரப்போவது குறித்து கவலை தெரிவித்து அரசுக்கு முறை யீடு செய்து கொண்ட தகவல் கிடைத்தது எனவே 6ஆம் தேதி அன்று புதிதாக சுயபொறுப்பு ஏற்கவிருந்த சப்-இன்ஸ் பெக்டர்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டார்கள் அவ் வாறு நிறுத்தி வைக்கப்பட்டவர்கள்தான் குமரி மாவட்டத்தில் 21 பேர், மற்ற மாவட்டங்களில் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கி றார்கள்

இப்போது ஆராய்ந்ததில் தலைமைக் காவலர்களின் பதவி இறக்கம் தவிர்க்க முடியாதது என்பதோடு, அவர்களுடைய ஊதி யம் எந்தவிதத்திலும் பாதிக்கப்படாது என்பதால் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதைத் தளர்த்தி புதிய சப்-இன்ஸ்பெக்டர்கள் மீண்டும் பொறுப்பேற்க அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்கள். பதவி இறக்கம் செய்யப்படும் தலைமைக் காவலர்களுக்கும் ஏற் கெனவே தனிப்பிரிவில் காலியாக உள்ள 150-க்கு மேற்பட்ட சப்-இன்ஸ்பெக்டர் பதவி காலி இடங்களில் வாய்ப்புத் தர இயலுமா என்பது குறித்தும் அரசு பரிசீலித்து வருகின்றது. எனவே இதிலே மேற்கொண்டு எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

## (இ) கேள்வி நேரம் முடிவுற்றவுடன் சில பொதுப் பிரச்சினைகளை எழுப்ப பேரவைத் தலைவரின் முன் இசைவு பெறுதல்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஜீரோ ஹவர் என்பது நம்முடைய விதி யிலே இடம் பெறாத ஒன்றாக இருந்தாலும் அது மரபு வழி வந்தது என்ற அடிப்படையிலே இந்த அவையிலே அது கூறப் பட்டு வருகிறது தாங்கள் புதிதாக ஒரு மரபை ஏற்படுத்தி யிருக்கிறீர்கள். உங்களுடைய அறையிலே (குறுக்கீடு) If you want, I can give you an explanation. But, I will take more time. If the Hon. Speaker allows me, it is all right and I will give the explanation.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவரை வைத்துக் கொண்டு நீங்கள் இரண்டு பேரும் நேருக்கு நேர் பேசக் கூடாது என்பது ஒரு விதி

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I seek a clarification from the chair.

தாங்கள் ஒரு புது மரபைக் கடைபிடிக்கிறீர்கள். தங்களிடத் திலே முன்னாலே முன் அனுமதி பெற வேண்டுமாயின் இந்த அவை யின் நடவடிக்கைகள் தொடங்கப்பெறுவதற்கு முன்பாகத் தாங்கள் அறையில் இருக்கும்போது ஏறக்குறைய 8-50 மணித் துளிக்குள் தங்களிடத்தில் வந்து விவரங்களைச் சொல்லி அனுமதி பெற வேண்டும். ஆனால் அதே நேரத்தில் அவை தொடங்கிய பிறகு கேள்வி நேரம் நடந்து கொண்டிருக்கும்போது ஒரு மணி நேரத்திற்குள்ளாக ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை நமக்கு ஏற்படலாம், நாட்டுக்குத் தொடர்பான ஒரு பிரச்சினை அதைத் தங்களிடத்திலே வந்து தாங்கள் தங்கள் இருக்கையில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது எங்களால் சொல்ல முடியாது. அப்படிச் சொல்லி அனுமதி பெற்று; தங்கள் அனுமதியை வாங்க வேண்டும் என்று சொன்னால் நீங்கள் கேள்வி நேரத்தில் உறுப் பினர்களை அழைத்துக் கொண்டு இருக்கும் போது நாங்கள் உங்களை இடைமறித்து வந்து உங்களிடம் விவரங்களைச் சொல்ல முடியாது. எனவே புது நடைமுறையைத் தாங்கள் கடைபிடித்துக் கொண்டிருப்பதால் தாங்கள் சொன்னால் நாங்கள் ஏற்றுக்கொள் கிறோம் -அதிலே சிலநடைமுறைசிக்கல்கள் இருக்கின்றன என் பதையும் தங்களுக்குத்தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைக்கு முன் தினம் தங்களுடைய அனுமதியைப் பெறு வதற்காக நான் வந்தேன். 4 பேருக்கு அனுமதி கொடுத்தீர் களோ என்னவோ, எனக்குத் தெரியாது. நான் உங்களிடத்தில் பத்திரிகையைக் காட்டி இப்படி வந்திருக்கிறது அந்தப் பிரச் சினையை எழுப்ப வேண்டும் என்று தங்களுடைய கவனத்திற்குப் பிரச்சினை ஒன்றைச் கொண்டு வந்தேன் 3 பேருக்கு அனு மதி அளித்தீர்கள் என்னைத் தாங்கள் கூப்பிடவில்லை. எந்த அடிப்படையில் தாங்கள் கூப்பிடுகிறீர்கள் என்பதை நீங்கள் உங்களுடைய ''டிஸ்கிரிஷன் பவர் யூஸ்'' செய்வதை நான் ''கொஸ்டீன்'' செய்யவில்லை ஆனால் அப்படி எந்த அடிப் படையில் தாங்கள் அழைக்கிறீர்கள் என்ற விவரங்களாவது எங்களுக்குத் தெரிய வேண்டும்.

அப்படித் தெரிந்தால் நாங்கள் இந்த மாதிரியான பிரச்சினை களையெல்லாம் எழுப்பாமலேயே உட்கார்ந்து விடுவோம் எண் ணிக்கையில் அடிப்படையிலா அல்லது நீங்கள் கணித்து வைத்திருக் கிற முக்கியத்துவத்தின் அடிப்படையிலா? அப்படி முக்கியத்துவம் என்றால் எந்த அடிப்படையில் நீங்கள் செய்கிறீர்கள் என்பதை எல்லாம் நாங்கள் தெரிந்துகொண்டால், இந்தமாதிரி பிரச்சினை களையெல்லாம் எழுப்பாமலேயே இருந்து விடுவோம். நேற்று உங்களிடத்திலே அனுமதி கேட்டும் என்னை தாங்கள் அழைக்கவே யில்லை. அப்படி அனுமதி கேட்டுத்தான் செய்யவேண்டுமென்று சொன்னால் அது நடைமுறை சாத்தியமானதல்ல. இது குறித்து தங்களுடைய கருத்து என்ன என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 12 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் இது பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்கப் படும்.





### 3. உரிமைப் பிரச்சினைகள்.

**எதிர்க்கட்சித்தலைவர் பதவி விலகல் கடிதம் தொடர்பாக முதலமைச்சர் மற்றும் சென்னை நகரக் காவல்துறை ஆணையர் மீது—பேரவைத் தலைவரின் தீர்ப்பு**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கெனவே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் பேரவைத் தலைவருக்கு எழுதிய பதவி விலகல் கடிதத்தின் தொடர்பாக இரண்டு உரிமை மீறல் பிரச்சினைகள் தரப்பட்டிருந்தன. அவற்றின் மீது இப்போது என்னுடைய தீர்ப்பை இங்கே அவைக்கு வைக் கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தை அதிகார வரம்பு மீறி எடுத்த தாகவும், அதை வெளியிட்டதாகவும் நகரக் காவல் துறை ஆணை யர் மீதும், அத்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு முதல் அமைச்சர் மீதும் உரிமை மீறல் பிரச்சினைக்குப் பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அறிவிப்புக் கொடுத்தார்கள்.

28-3-1989 அன்று அந்தப் பிரச்சினை குறித்து அவையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இந்தக் கடிதத்தை முறையற்ற முறையிலே எடுத்து, முறை யற்ற முறையிலே பிரசுரித்து, முறையற்ற முறையிலே உங்களுக்கு வருமாறு செய்து, அவை உரிமை மீறலைச் செய்திருப்பது இந்த போலீஸ் இலாகா என்றும், அந்தப் போலீஸ் இலாகாவை நிர்வ கித்து வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த உரிமையை மீறியிருக்கிறார்கள் என்றும் கூறினார். மேலும், சபாநாயகர் அவர்களுக்கு அதிகாரிகள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய ஆலோசகர் வீட்டிற்குச் சோதனையிடச் செல் கிறோம் என்ற தகவல் சொல்லப்பட்டதா என்றும், அவைத் தலைவருடைய பெயரிடப்பட்டிருந்த காரணத்தால் அவைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து .அவர் அனுமதியைக் கேட்டிருக்கலாம் என்றும் கூறினார்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. திரு நாவுக்கரசு அவர்கள், ''பேரவை உறுப்பினருடைய கடிதம் கிழிக் கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் பேரவை உறுப்பினருடைய உரிமை காவல் துறையினரால் மீறப்பட்டிருக்கிறது. அதுவும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் அவருடைய உரிமை மீறப்பட்டிருக்கிறது. சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தைக் கிழித்த காரணத்தினால் சபையினுடைய உரிமை மீறப்பட்டிருக்கிறது. அது சபாநாயகருக்கு முகவரி இட்டு எழுதப்பட்ட கடிதம் என் பதால் சபாநாயகருடைய உரிமையும் காவல் துறையினரால் மீறப் பட்டிருக்கிறது. எழுதப்பட்ட கடிதத்தைக் காவல் துறையினர் சட்டத்திற்குப் புறம்பாக எடுத்துச் சென்று அதைக் கிழித்து அந்தக் கடிதத்தைப் பேரவைத் தலைவருக்கு அனுப்பியிருக்கி

றார்கள். காவல் துறையினுடைய இந்தக் காரியங்களுக்கு தார்
மீக ரீதியாக மாண்புமிகு முதலமைச்சர் பொறுப்பேற்க
வேண்டியவர்களாகிறார்கள்'' என்றும் கூறினார்.

மாண்புமிகு முதலமைச்சர் விளக்கம் அளித்தபோது, காவல்
துறையினர் நீதிமன்றத்திலே ஒப்படைத்திருக்கின்ற அங்கு எடுக்
கப்பட்ட அந்த ஆவணங்கள், ஆதாரக் கடிதங்கள் எதிலும்,
கவரில் சபாநாயகர் பெயர் இல்லை என்று திட்டவட்டமாகக்
காவல் துறையின் ஆணையர் தெரிவித்துள்ளார் என்றும், அது
முத்திரையிடப்பட்டதல்ல; ''பின்'' போடப்பட்டதுதான் என்
றும் சபாநாயகர் பெயர் இல்லை என்றும், மேலும் காவல் துறை
எடுத்த கடிதம் வேறு, அவைத் தலைவருக்கு வந்து சேர்ந்த
கடிதம் வேறு என்றும் காவல் துறையினர் நீதி மன்றத்திலே
தந்திருப்பதாகச் சொல்வது ''ஜெராக்ஸ் காபி'' என்றும்
விளக்கியிருப்பதாகக் கூறி இதில் உரிமைப் பிரச்சினைக்கு இட
மில்லை என்றும் கூறியுள்ளார்கள்.

இந்த உரிமைப் பிரச்சினையை எழுப்பிய உறுப்பினர்கள்,
பேரவைத் தலைவர் இதில் எடுத்த நடவடிக்கை குறித்து விமர்
சித்தும் பேசினார்கள். அவை உறுப்பினர் ஒருவர் அனுப்பும்
பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக் கொள்வதா, வேண்டாமா
என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் அரசியல் சட்டப்படி
யும், அவை விதிமுறைகளின்படியும் பொருத்தமானதாகக் கருதும்
விசாரணை செய்து பரிசீலித்து முடிவு எடுக்கிறார்கள். அவர்
எவ்விதமான விசாரணை நடத்தினார் என்று வாதம் எழுப்ப
இந்த அவையில் யாருக்கும் உரிமை இருப்பதாக நான் ஏற்றுக்
கொள்ள முடியாது. பதவி விலகலை ஏற்றுக்கொண்டால் அதை
அவைக்குத் தெரிவிப்பதுதான் என்னுடைய கடமை.

விரும்பியோ அல்லது விரும்பாமலோ பேரவைத் தலைவர்
அவர்களுடைய செயல் இதில் இழுக்கப்பட்டுள்ளபடியால், நான்
விளக்கம் அளிப்பது கடமை என்று எண்ணுகிறேன். 18-3-1989
அன்று மாலை நான் ஒரு நிகழ்ச்சிக்குப் புறப்படக் காரில் ஏறிய
போது என்னிடம் ஒருவர் ஒரு கடிதத்தைத் தந்தார். அதில்
பேரவைத் தலைவர் விலாசமிட்டு செல்வி ஜெயலலிதா பெயரும்
அந்த உறையில் அச்சிடப்பட்டிருந்தது. நான் ஏற்கெனவே அவர்
கள் கட்சியின் பெயர் மாற்றம் குறித்து அவர்களிடமிருந்து விளக்
கங்கள் கோரியிருந்தேன். அது தொடர்பான கடிதம் என்று
நினைத்து வாங்கிக்கொண்டு காரில் புறப்பட்டேன். சில நொடி
களில் அதைப் பார்க்கும்போது செல்வி ஜெயலலிதா தம் கைப்
பட எழுதிக் கையொப்பமிட்ட பதவி விலகல் கடிதமாக அது
இருந்தது. நான் ஆச்சரியமுற்று காரை நிறுத்தச் சொல்லி, வீட்
டினுள் நுழைந்து பின்னர் தொலைபேசி மூலம் உறுப்பினரைத்
தொடர்பு கொள்ள முயன்றேன். முடியவில்லை. முதலமைச்
சரையும் தொடர்பு கொள்ள முயன்றேன். அவர் ஒரு திரைப்
படத்தின் 100-ஆவது நாள் விழாவில் பங்குபெறுவதற்காகப் புறப்





பட்டுவிட்டதாகவும் வெளியில் கிளம்பி விட்டதாகவும் சொல்
லப்பட்டது. அவரிடம் அவசரமாகப் பேசவேண்டும் என்றும்
எப்படியாவது தெரிவியுங்கள், நானும் பாம்குரோவ் விடுதியில்
ஒரு நிகழ்ச்சிக்குப் போகிறேன் என்று சொல்லிவிட்டுப் புறப்
பட்டேன். நிகழ்ச்சிக்கு நேரமாகிவிட்டதாலும் நான்தான்
தலைமை தாங்க வேண்டியிருந்ததாலும் விரைந்து சென்று விட்
டேன். நிகழ்ச்சியின் இடையில் முதலமைச்சர் நியு உட்லண்ட்ஸ்
விடுதியில் இருப்பதாகவும் திரைப்பட விழா சிறிது நீடிக்கும்
என்றும் அங்கு தன்னைத் தொடர்பு கொள்ளலாம் என்றும்
காவல் துறை மூலம் செய்தி தெரிவித்தார். எனக்கும்
அந்த விழாவில் கலந்துகொள்வதற்கான அழைப்பு இருந்
ததால், நான் உடனே முதல் அமைச்சர் கலந்துகொண்ட விழா
விற்குச் சென்று இந்தக் கடிதம் பற்றிக் கூறினேன். அவர்கள்
செல்வி ஜெயலலிதாவைக் கேட்டீர்களா என்றார். தொலைபேசி
யில் தொடர்பு கொண்டேன்; முடியவில்லை என்றேன். அதற்கு
முதலமைச்சர் அவர்கள் இதில் அவசரப்பட வேண்டாம், தொலை
பேசி மூலமோ வேறு வகையிலோ விதிப்படி விசாரித்து முடிவு
செய்யுங்கள் என்றார். பின் நான் இல்லத்திற்கு வந்த பின்
இரவில் சில நிருபர்கள் என்னிடம் இதுபற்றிக் கேட்டார்கள்.
நான் ''அவர் கைப்பட எழுதிக் கையெழுத்திட்ட கடிதம் வந்தது
உண்மைதான் என்றும், அதை அவர்தான் எழுதியுள்ளார்
(Genuineness of the letter) என்றும், மேற்கொண்டு நடவடிக்கை
எடுக்கப் பேரவைச் செயலாளருக்கு அனுப்பியுள்ளேன் என்றும்
தெரிவித்தேன்.

(முற்பகல் 10-20)

மறுநாள், செல்வி ஜெயலலிதா அவர்களுக்குத் தாங்கள்
இந்தக் கடிதத்தைத் தாங்கள் விருப்பப்படிதான் எழுதினீர்களா
என்று விளக்கம் கோரி ஒரு கடிதம் அனுப்பினேன். அதை என்னு
டைய தனிச் செயலாளரும் (பிரைவேட் செக்ரட்டரி) பேரவை
யின் மற்றொரு பொறுப்புள்ள அதிகாரியும் (டெபுடி செக்ரட்டரி)
நேரில் எடுத்துச் சென்றனர். அவர்களைச் செல்வி ஜெயலலிதா
இல்லத்தில் சுமார் 30 மணித் துளிகள் தாமதிக்க வைத்து பின்
செல்வி ஜெயலலிதா அவர்கள் இந்தக் கடிதத்தை ஏற்றுக்கொள்ள
மறுக்கிறார்கள் என்று கூறி அனுப்பிவிட்டார்கள். இதற்கிடை
யில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. திருநாவுக்கரசு அவர்களும்
திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களும் என்
னைச் சந்தித்து பத்திரிகையில் வந்த செய்திக்கு செல்வி ஜெய
லலிதா அனுப்பிய மறுப்புக் கடிதத்தை என்னிடம் தந்தார்கள்.
அன்று மாலை நான் அவர்களிடம் நான் அனுப்பிய கடிதத்தை
செல்வி ஜெயலலிதா ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார் என்
றும், அந்தக் கடிதத்துக்கு பதில் அனுப்பினால்தான் மேற்கொண்டு
நடவடிக்கை எடுக்க இயலும் என்றும் பேரவைத் தலைவர் அனுப்
பிய கடிதத்தை அவை உறுப்பினர் ஒருவர் வாங்க மறுப்பது
அவைத் தலைவரை அவமதித்ததாகும் என்றும் அது அவை
உரிமை மீறிய செயல் என்றும் சொன்னபோது, அவர்கள் செல்வி

ஜெயலலிதா கடிதத்தில் என்ன உள்ளது என்று தெரியாமல் வாங்க மறுத்திருக்கலாம் என்று சொல்லி, பின் அவர்களே வந்து அக்கடிதத்தை வாங்கிச் சென்று அதற்குண்டான பதிலை அவர்களிடம் பெற்று என்னிடம் அளித்தார்கள். அதை ஆராய்ந்த பின் நான், செல்வி ஜெயலலிதாவின் பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்று அறிவித்தேன்.

என்னிடம் கடிதத்தைக் கொடுத்தவர் யார்? எப்படி என்னிடம் கொடுத்தார்கள், யார் அனுப்பியது என்ற விளக்கத்தினை நான் விளக்க வேண்டிய தேவையுமில்லை; அது என் பொறுப்பும் இல்லை.

I am not answerable to anybody in this connection. Moreover, this is my office routine.

அடுத்து, உரிமைப் பிரச்சினையில் சொல்லப்பட்டுள்ளது, செல்வி ஜெயலலிதா பேரவைத் தலைவருக்கு எழுதிய கடிதத்தைக் காவல் துறையினர் கைப்பற்றி அதை வெளியிட்டதும், பேரவைத் தலைவருக்கு அனுப்பியதும்தான். அங்கு எடுக்கப்பட்ட கடிதம் தான்பேரவைத் தலைவருக்கு அனுப்பப்பட்டது என்பதற்கு எந்த வித ஆதாரமும் காட்டப்படவில்லை. மாறாக, காவல் துறையினர் தாம் அங்கு எடுத்த ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகக் கூறியுள்ளனர்.

மேலும், உறுப்பினர்கள் அளித்த விளக்கத்திலிருந்து காவல் துறையினர் எடுத்ததாகச் சொல்லும் கடிதம் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இல்லத்திலிருந்து எடுக்கப்படவில்லை. வேறு ஒரு நபர் இல்லத்திலிருந்து குற்றவியல் சட்டப்படி விசாரணை நடத்தும்போது எடுக்கப்பட்டு நீதிமன்றத்தில் அளிக்கப்பட்டுள்ளது.

ஒரு செயல், அவை உறுப்பினர் இவ்வவை அலுவல் குறித்து ஆற்றும் பணிக்கு இடையூறோ அல்லது குந்தகமோ விளைவித்தால்தான் அது அவை உரிமை மீறிய செயலாகும்.

பேரவைத் தலைவர் அவர்களுக்கு முகவரியிட்டு எந்த அவை உறுப்பினர் கடிதம் அனுப்பினாரோ அந்த உறுப்பினர் இல்லத்திலிருந்து எடுக்காமல் வேறு நபர் ஒருவர் வீட்டிலிருந்து காவல் துறையினர் குற்றப் புலனாய்வின்போது எடுத்தால் அதுவும் உரிமை மீறிய பிரச்சினையில் அடங்கும் என்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. ஏனென்றால், இது எந்த வகையிலும் உறுப்பினர் இவ் அவையில் ஆற்றும் பணிக்கு இடையூறாக அமையவில்லை. மேலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரின் ஆலோசகர் வீட்டுக்குச் சோதனையிடச் சென்றபோது போலீசாரால் சொல்லப்பட்டு அவர் அனுமதி கேட்கப்பட்டதா என்று கேட்டிருக்கிறார். பொதுவாக, எதிர்க் கட்சித் தலைவராக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும்





குற்றவியல் சட்ட வழக்குகள் தொடர்பாகப் போலீசார் எடுக்கும் நடவடிக்கைகளுக்குப் பேரவைத் தலைவரிடம் அனுமதி பெறத் தேவையில்லை. அதுமட்டுமின்றி, குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்ட திரு. நடராசன் அரசு அதிகாரியே தவிர எதிர்க் கட்சித் தலைவரின் ஆலோசகரோ அல்லது அதிகாரப்பூர்வமான நேர்முக உதவியாளரோ அல்ல. இதற்கு ஒரு முன்மாதிரி சொல்ல வேண்டுமானால் கடந்த காலத்தில் பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்ட வழக்கில் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்களுடைய தனிச் செயலாளர் (P.A.) திரு. சண்முகநாதன் வீட்டில் சோதனை போட்டும் அவரைக் கைது செய்தும் நடவடிக்கை எடுத்தபோது, அன்றிருந்த சபாநாயகரிடம் போலீசார் அனுமதி கேட்டதாக எந்த முன்மாதிரியும் இல்லை.

அடுத்து, உறுப்பினர்கள் எழுதும் கடிதங்களைத் தணிக்கை செய்வதும், தொலைபேசியை ஒட்டுக் கேட்பதும், அறைகளை சோதனை இடுவதும் எவ்விதம் உரிமைப் பிரச்சினையில் வரும் என்று ஆராய்ந்தேன். அதில் சிலவற்றைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

உறுப்பினர்கள் எழுதும் கடிதங்களைக் காவல் துறையினர் தணிக்கை செய்வது உரிமை மீறல் பிரச்சினை என்று இவ்வவையில் 1954 ஆம் ஆண்டு ஒரு பிரச்சினை எழுந்தபோது பேரவைத் தலைவர் அவர்கள் இது குறித்து ஆஸ்திரேலியா பாராளுமன்றத்தில் அளிக்கப்பட்ட கீழ்க்கண்ட தீர்ப்பைச் சுட்டிக் காட்டினார்:

> "that the opening by the Censors of the letters addressed to the Members of the House is not a breach of any existing privilege of the House......."

பேரவை உறுப்பினர்கள் தொலைபேசியை ஒட்டுக் கேட்பது, ( Tapping ) அவை உரிமை மீறிய பிரச்சினையில் அடங்காது என்று இந்தியப் பாராளுமன்றத்திலும் மற்றச் சட்டமன்றங்களிலும் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. திரு. பிராஜ் ராஜ் சிங் என்னும் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் தமது தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படுவதாக ஐயுறுவது குறித்து 1960ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாள் நாடாளுமன்ற மக்களவையில் உரிமை மீறல் பிரச்சினை ஒன்று கொண்டுவந்தபோது, அன்றைய நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் கீழ்க்கண்ட தீர்ப்பை வழங்கினார் :

"Hon. Members are aware that it has been said repeatedly, both in England and here, that except in the discharge of their duties for which they have some privileges here, Members ought not to claim any special privilege outside which an ordinary citizen does not have. If the same thing had happened with respect to any ordinary citizen,

it could not be brought up here as a breach of privilege : these things may be taken up with the Government in other ways. Therefore, I refuse to give my consent....."

It has also been held in the House of Commons that alleged searching of rooms in the House of Commons for hidden microphone is not a breach of privilege.

(H.C. Dec. 1958)

In Uttar Pradesh in 1960, it was held that there was no *prima facie* case of breach of privilege in the alleged searching of rooms of a member in the Legislators' Hostel as it did not come within the precincts of the House.

மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள், உறுப்பினர்கள் பேரவைத் தலைவருக்கு எழுதும் கடிதங்கள் "Privileged documents" அவைகளைக் காவல் துறையினருக்கு அளிப்பதில்லை என்று கூறி மேற்கோள் காட்டினார். அந்தக் கடிதங்கள் எப்போது "Privileged documents" ஆகின்றன? அது பேரவைத் தலைவருக்குக் கிடைத்தபின் அல்லது அது அவை உறுப்பினரிடம் இருக்கும்போதுதான். மற்ற வகையில் அது வேறு நபர் வசம் இருக்கும்போது "Privileged document" ஆகாது.

" குற்றவியல் " சட்டத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ள அவை உரிமை எந்த வகையிலும் பயன்படாது.

மேலும், செல்வி ஜெயலலிதா அவர்களின் பதவி விலகல் கடிதம் முறைப்படியும் விதிமுறைகளின்படியும் ஆராயப்பட்டு, பதவி விலகல் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று அறிவித்த பிறகும் அவர்களே சட்டமன்றப் பேரவைக்கு வந்து கலந்து கொண்ட பிறகும், மேற்சொன்ன விளக்கத்தின் அடிப்படையிலும் முன் உதாரணங்களையும் வைத்துப் பார்க்கும்போது இதில் உரிமைப் பிரச்சினை ஏதுமில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்ப்புக் குறித்து எந்தச் சொல்லும் இடம் பெறக்கூடாது.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, தீர்ப்பிலே..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்பு பற்றிய விமர்சனத்திற்கு இடம் இல்லை. எனவே, தாங்கள் அமருமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) இதை நான் அனுமதிக்கமாட்டேன். தீர்ப்பைப்பற்றி விமர்சிப்பதற்கு இடம் இல்லை. அப்படி எப்போதும் கிடையாது. அடுத்து வேறு ஏதாவது செய்திகள் இருந்தால் சொல்லுங்கள் (குறுக்கீடு) வினாக்களுக்கு விடை சொல்வது மாதிரித் தீர்ப்புக் குறித்து விளக்கம் சொல்ல வேண்டிய தேவையில்லை. அது பேரவைத் தலைவருடைய வேலையும் இல்லை. நீங்கள் உட்காரலாம். (குறுக்கீடு) திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசுகிற பேச்சு எதுவும் பதிவாகாது என்று நான் அறிவிக்க வேண்டி இருக்கும். (குறுக்கீடு) நீங்கள் அறிவிக்கலாம். அதைப்பற்றி ஒன்றும் இல்லை.





(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர்.)

## 4. கவன ஈர்ப்பு

(அ) சிறுவாணி குடிநீரை "கோவை மெடிக்கல்ஸ்" நிறுவனத்திற்கு தனிக் குழாய் மூலம் கொண்டு செல்லும் முயற்சியால் பீளமேடு பகுதி மக்கள் பாதிப்பு.

*திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாநகர எல்லைக்கு அருகாமையில் என். ஆர். ஐ. திட்டத்தின் கீழ் தொடங்க இருக்கும் "கோவை மெடிக் கல்ஸ்" என்ற நிறுவனத்திற்கு, சிறுவாணி குடிநீரை தனி மெயின் குழாய் மூலம் கொண்டு செல்ல குடிநீர் வடிகால் வாரியம் அனுமதி அளித்திருப்பதன் காரணமாக, பீளமேடு பகுதியில் வசிக்கும் சுமார் ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் சிறு வாணி குடிநீர் கிடைக்க வழியின்றி அல்லல்படும் நிலை குறித்த" அவசரம் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சிப் பகுதிக்கு......

(முற்பகல் 10-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன். அறிக்கை முழுவதையும் படிக்க வேண்டிய தேவையேயில்லை. அறிக்கை அவையில் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் மட்டும் போதுமானது. அவையின் நேரமும் மிச்சமாகும், உங்களுக்குத் தொண்டையும் மிச்சமாகும். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொண்டை நன்றாகத்தான் இருக்கிறது. பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

[திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்] [1989 ஏப்ரல் 12

அறிக்கை

கோவை மாநகராட்சிப் பகுதிக்கு சிறுவாணி குடிநீர்த் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கப்படுகிறது. கோவை மாநகராட்சி எல்லைக்குள் சேர்ந்த சிங்காநல்லூர் பகுதிகளான கிருஷ்ண ராயபுரம், பீளமேடு, சௌரிப்பாளையம் மற்றும் உதம்பாளையம், சிங்காநல்லூர், மஞ்சுநாதபுரம் ஆகிய பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் மூலம் குடிநீர் வழங்கப் படுகிறது. கோவையைச் சுற்றியுள்ள குறிச்சி, குனியமுத்தூர் மற்றும் சூலூர் ஆகியவைகளும் இத்திட்டத்தினால் பயன்பெறு கின்றன. மேலும் மருதமலை, பாரதியார் பல்கலைக் கழகம், போதனூர் ரயில் நிலையம், வேளாண்மைப் பல்கலைக் கழகம், சூலூர் விமானப்படை நிலையம் மற்றும் கூட்டுறவு பால் உற்பத்தி பண்ணை ஆகியவைகளும், இத்திட்டத்தினால் தற் போது பயன்பெறுகின்றன. 20—8—1984 நாளிட்ட 179 எண் உள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் ஆணையில், சிறுவாணி திட்டத்தினால் பயன்பெறும் நிறுவனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கக் கூடாது என்று உத்திரவிடப்பட்டுள்ளது.

கோவை மெடிக்கல் சென்டர் என்ற நிறுவனம் வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களினால் நடத்தப்படும் நிறுவனம் என்றும், அதற்குக் குறைந்தது நாள் ஒன்றுக்கு 3 இலட்சம் லிட்டர் குடி நீராவது வழங்க வேண்டுமென்றும் அரசை கோரியது. இதனை ஒரு சிறப்பு இனமாகக் கருதி நாளொன்றுக்கு 3 இலட் சம் லிட்டர் குடிநீரை சிறுவாணி திட்டத்தின் கீழ் வழங்க, 7—3—1988 நாளிட்ட 181 எண். உள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் ஆணையில் கோவை மாநக ராட்சி ஆணையருக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. இவ்விதம் வழங்கப்படும் குடிநீர் சாதாரண காலங்களில் தரப் படும் என்றும், சிறுவாணி திட்டத்தின் கீழ் இருக்கும் நீரின் அளவிற்கு ஏற்ப இது குறைக்கப்படுமென்ற நிபந்தனை விதிக்கப் பட்டுள்ளது. குடிநீருக்கான கட்டணம், குழாய்களை விஸ்தரிப் பதற்கான செலவுத் தொகையை கோவை மெடிக்கல் சென்டரே ஏற்க வேண்டும் என்றும், குழாய்களை விஸ்தரிப்பதற்கான பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற் கொள்ளப்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. கோவை மெடிக்கல் சென்டருக்கு குடிநீர் வழங்குவதற்கான பணிகள் 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தொடங்கப் பட்டது. இப்பணிகள் இன்னும் முடிவுறவில்லை. எனவே, இந்த நிறுவனத்திற்கு இன்னும் குடிநீர் வழங்கப்படவில்லை.

கோவை மெடிக்கல் சென்டர் அமைந்துள்ள இடம் கோவை மாநகராட்சியின் எல்லைக்கு வெளியில் உள்ளது. இந்த நிறு வனம் அமைந்துள்ள காளப்பட்டி பேரூராட்சிக்கு உலக வங்கி நிதி உதவியுடன் நிறைவேற்றப்படும் குடிநீர் திட்டத்தின் கீழ்



1989 ஏப்ரல் 12] [திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்]

குடிநீர் வசதி செய்து தரப்படும். உலகவங்கி திட்டத்திற்கான பணிகள் நடந்து வருகின்றன. இத்திட்டம் முடிவடைவதற் கான இலக்கு 1991 ஆம் ஆண்டு.

கோவை மாநகராட்சி, தற்போது எல்லா பகுதிகளுக்கும் நாள்தோறும் குடிநீர் விநியோகிக்கிறது. பீளமேடு பகுதிக்கு நாளொன்றுக்கு 3 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப் பட்டு வருகிறது. கோவை வளர்ந்துவரும் மாநகரமாகும். நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்குப் பின் குடிநீரின் தேவை உயரும்.

1988 ஆம் ஆண்டில், சிறுவாணி நீர்த்தேக்கத்தில் உள்ள நீரின் அளவு குறைவாக இருந்ததால் மார்ச் மாதம் முதல் ஆகஸ்டு மாதம் வரை ஒருநாள் விட்டு ஒருநாள் மட்டுமே குடிநீர் வழங்கப்பட்டது.

கோவை மாநகராட்சிப் பகுதி மற்றும் தற்போது சிறுவாணி திட்டத்தினால் பயன்பெறும் பகுதிகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவைகளின் தேவையைப் பூர்த்தி செய்வது பாதிக்குமா என்ற நோக்கத்துடன், கோவை மெடிக்கல் சென்டர் நிறுவனத் திற்கு நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கும் ஆணையை, அரசு பரிசீலனை செய்யும்.

திரு. மு. இராமநாதன் : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீளமேடு மேல்நிலைத் தொட்டி அந்தப் பகுதியிலே இருக்கின்றவர்கள் சுமார் $1\frac{1}{2}$ இலட்சம் மக்கள் என்றாலும், 2 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் குடிநீர் வசதி பெறத்தக்க வகையிலே அது போதுமானதாக இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையிலே இருக்கின்ற குறிப்பின்படி 45 லட்சம் லிட்டர் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு தேவை என்று இருக்கிறது. ஆனால், கடந்த ஓராண்டுக்காலமாக அந்த ரிசர்வ்வாயரிலே ஒரு வேளைக்கு 10 லட்சம் லிட்லிருக்கு மேல் அதிலே தண்ணீர் தேக்கி வைக்கப் பட வாய்ப்பில்லை. காரணம், சிறுவாணியிலே இருக்கின்ற பற்றாக்குறைதான். ஆகவே இப்போது இருக்கின்ற சூழ் நிலையிலே, 15 லட்சம் லிட்டர் கெபாசிடி அந்தத் தொட்டிக்கு இருந்தபோதிலும், 10 லட்சம் லிட்டர்தான் ஸ்டோரேஜ் செய்யப்படுகிறது. இதில் சுமார் 6 கிலோ மீட்டர் தூரத்திற்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : உங்களுடைய வினா கிட்டத்தட்ட 5 கிலோ மீட்டர் வந்துவிட்டது. (சிரிப்பு).

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகவே சொல்கிறேன். ஆகவே, இந்தப் பற்றாக்குறை காரணமாகத்தான் 2 மணி நேரம்கூட தண்ணீர் பிடிக்கமுடியாமல் சில மேட்டுப் பகுதியிலே 2 குடம் தண்ணீர்கூட கிடைக்காமல் கஷ்டப்படக்கூடிய நிலைமை அந்த பகுதியிலே

[திரு மு. இராமநாதன்] [1989 ஏப்ரல் 12

இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் இந்தப் புதிய என்.ஆர்.ஐ. திட்டத்தின் கீழ் 6 கிலோ மீட்டர் தூரத்திற்கு 8 இன்ச் பைப் போட்டு தண்ணீர் கொண்டு போவதால் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இரண்டையும் அமைச்சர் அவர்கள் கவனத்திலெடுத்துக் கொண்டு, பாதிக்கப்படக்கூடிய பீளமேடு பகுதி மக்களுக்கு நிறைவாக தண்ணீர் கொடுக்க வாய்ப்பு ஏற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7—3—1988-ல் அரசாங்க ஜி.ஓ.நெ. 181-ன் கீழ், இந்த அனுமதி வழங்கப்பட்டது. இந்த சிறுவாணி குடிநீர் திட்டத்தின் கீழ், அவையிலே வைக்கப்பட்டிருக்கின்ற விவர அறிக்கையின்படி, ஒரு நாள் 45 லட்சம் லிட்டர் தண்ணீர் தேவை. ஆனால் நமக்கு கிடைப்பதோ 15 லட்சம் லிட்டர் தண்ணீர்தான். இதில் என்.ஆர்.ஐ. திட்டத்தின் கீழ் தொடங்க இருக்கும் கோவை மெடிக்கல் சென்டருக்கு ஒரு நாளைக்கு 3 லட்சம் லிட்டர் தண்ணீரை வழங்கி உத்தரவு இட்டிருந்தார்கள். இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரு. இராமநாதன் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தபோது, உடனடியாக இடைக்காலத் தடை விதித்து இப்போது அந்தப் பணி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்து, பிறகு இறுதியாக முடிவெடுக்கும்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20—8—1984-ல் கூடுதலாக இனிமேல் சிறுவாணியிலிருந்து எந்த நிறுவனத்திற்கும் தண்ணீர் கொடுக்க வாய்ப்பு இல்லை என்று அரசு உத்தரவு போட்டிருந்தும் 7—3—1978 அன்று 181 ஆம் எண். அரசு ஆணையை அமைச்சர் கூறியதால் பிறப்பித்திருக்கிறார்கள். இரண்டும் பாதிக்காத வகையில் பக்கத்திலே World Bank Scheme என்கின்ற உலக வங்கி திட்டத்தின் உதவியின் அடிப்படையில் அத்திக்கடவு ஆஸ்பத்திரிக்கும், அதுபோல சிறுவாணியிலிருந்து பீளமேட்டுக்கும் தண்ணீர் கொடுப்பதற்கு அரசு ஆய்வு செய்து உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலில் இதைத்தான் சொன்னேன். இவைகளை ஆய்வு செய்து இந்தச் சிறுவாணி ஆற்றிலிருந்து கிடைக்கின்ற தண்ணீரை உபயோகப்படுத்துகின்ற வகையில் யாருக்கும் பாதகம் இல்லாத வகையில் அந்த மருத்துவமனைக்கு உலக வங்கி திட்டத்தின்கீழ் அந்த நீரை வழங்கலாமா என்பதைப் பற்றியும் அரசு ஆய்வு செய்து இறுதியாக முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 12]

**(ஆ) மாதவரம் பால்பண்ணையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்க வேண்டியதின் அவசியம்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சோ. அழகர்சாமி, ஜி. பழனிச்சாமி, ரெ. பிச்சைமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

* திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''1980 ஆம் ஆண்டு மாதவரம் பால்பண்ணையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 1,412 தொழிலாளர்களில், 480 பேர்களுக்கு மட்டுமே மீண்டும் வேலை கொடுப்பதாக அறிவித்ததின் காரணமாக, மற்ற வேலை நீக்கம் செய்யப்பெற்ற தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

1980 ஆம் வருடம் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் 1,070 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதாகவும், அவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட வேண்டுமெனவும் தொழிலாளர் சங்கம் விடுத்த கோரிக்கை அரசால் தொழிலாளர்களின் தீர்ப்பாயத்திற்கு அனுப்பப்பட்டது. தொழிலாளர் சங்கமே வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் 1,070 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, 1,412 என்று அல்ல. அதில் கீழ்க்கண்ட வகையைச் சார்ந்த ஊழியர்களும் அடங்குவர்

| | |
|---|---|
| 1. ஏற்கனவே ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இறுதி ஆணை பிறப்பிக்கப்படும் முன் நீதிமன்றம் சென்று தடை உத்தரவு பெற்றவர்கள் .. | 14 |
| 2. பாலகங்களில் பணிபுரிந்தவர்கள் பாலகங்களை மூடிவிட்டுத் தாமாகவே பணியிலிருந்து நின்றுவிட்டார்கள். அதன் காரணமாக ஒழுங்கு நடவடிக்கை எடுத்து ஏற்கனவே பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் .. .. .. | 179 |

[திரு. கே. என். நேரு] [1989 ஏப்ரல் 12

3. முறைப்படியான தொழிலாளர்கள் அல்லாமல் பகுதிநேர ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வந்தவர்கள் ஒப்பந்தத்தை மீறிப் பணியிலிருந்து நின்றுவிட்டதால் மீண்டும் பணியில் சேரத் தகுதியற்றவர்கள் .. .. .. .. 302

4. நிர்வாக ஆவணங்களில் பெயர்களே இல்லாததால் நீதிமன்றத்திற்குச் சங்கத்தினரால் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில் உள்ளவர்கள் .. .. .. 82

5. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, உடனே வேலைக்குத் திரும்பிப் பணிபுரிபவர்கள் .. .. 4

மேற்கண்ட சூழ்நிலையில் எஞ்சிய 489 நபர்கள் தவிர வேறு எந்த நபர்களையும் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள இயலாது.

இதுபற்றி அரசின் 24—2—1989 நாளும், 71 எண்ணும் கொண்ட கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை அஞ்சலில் மேற்கண்ட 489 பேர்களை உடன் பணிக்கு எடுத்துக்கொள்ளுமாறு இணையத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து இணையம், குறிப்பிட்ட 489 பேர்களையும் உடன் பணியில் சேருமாறு அறிவுறுத்தியது. இதுவரை 138 பேர் பணியில் சேர்ந்துள்ளார்கள். எஞ்சியோர் விரைவில் சேருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை நிறுத்தத்தில் பங்கு பெற்ற 1,112 பேர்களுடைய நிலை குறித்து அரசினுடைய தீர்ப்பாயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதுவரை அந்தக் கோர்ட்டில் எந்த முடிவும் சொல்லப்படவில்லையாதலால் அது பெண்டிங்கில் இருக்கிறது. வேலை நீக்கம் செய்யப்பட்டது சரிதானா, அவர்களுக்கு என்னென்ன நிவாரணம் கொடுக்க வேண்டும் என்பதையெல்லாம் அந்த கோர்ட்டு தான் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. முந்திய அரசு தொழிற்சங்கம் பெடரேசன் இவர்களுடன் எல்லாம் பேச்சுவார்த்தை நடத்தி, 823 பேர் வேலை பெற தகுதியுடையவர்கள் என்று சொல்லியிருக்கிறது. அதுபோல 1980 ஆம் ஆண்டு ஸ்ட்ரைக்கில் ஈடுபட்ட பால்பண்ணைத் தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கப்படும் என்று அமைச்சர் சொல்லியிருப்பதற்கு



1989 ஏப்ரல் 12] [திரு. சோ. அழகர்சாமி]

நன்றி. அப்படி இருக்க தொழிற்சங்க உரிமையை மறுப்பது எந்த வகையில் நியாயம்? அந்தத் தொழிலாளர்களுடைய முந்தைய சர்வீசை மறுப்பது, புதிய தொழிலாளியாக சேர்ப்பது என்பதெல்லாம் எந்த வகையில் நியாயம்? பணியில் ஆஜராகும் நாளிலிருந்து புதிதாக பணியில் நியமனம் பெற்றதாக ஒத்துக்கொள்கிறோம் என்கிற வகையில் நிபந்தனை விதித்து அவர்களிடம் கையெழுத்து வாங்கப்பெற்றுள்ளது. அதுபோல பின் ஊதிய சலுகைகள் எதையும் கோரமாட்டோம் என்று கையெழுத்து வாங்கி பிறகுதான் வேலை கொடுத்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக, அவர்களுடைய பழைய சர்விசையும் சேர்க்கும் வகையில், அனைவருக்கும் வேலை கொடுக்கும் வகையில், பால்வளத்துறை தொழிலாளர் சங்கத்தோடு மறுபடியும் பேசி சுமுகமாக தீர்வு கண்டு எல்லோருக்கும் நியாயம் வழங்க இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட உடன், 8 ஆண்டுகளுக்கு முன்பு பணியிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட அந்தத் தொழிலாளர்களை உடனடியாக வேலையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததால் உடனடியாக அவர்கள் வேலையில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதிலும் 489 தொழிலாளர்களை மட்டும் வேலையில் எடுத்துக் கொள்ள இயலும் என்று அறிவித்ததன் அடிப்படையில் இன்றைக்கு 300 பால்வள தொழிலாளர்கள் வேலையில் சேர்ந்திருக்கிறார்கள். மொத்தம் 1,412 பேர் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அறிக்கையிலே மொத்தம் 1,070 பேர் தான் என்று இருக்கிறது. அதிலே இன்னின்னார் தான் வேலையில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவலைக் கொண்டு அவர்களுக்கு எந்த இழப்பும் ஏற்படாமல் பரிசீலனை செய்து அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

**திரு. ஜி. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பணிநீக்கம் செய்யப்பட்ட அந்தத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருந்த காலத்தில் பலர் இறந்திருக்கிறார்கள். எனவே, இறந்தவர்களுடைய உறவினர்களை பணியில் எடுத்துக்கொள்ள ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அவர்களுக்கு உரிய நியமனம் அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பணிநீக்கம் செய்யப்பட்ட நாளிலிருந்து இதுவரை, தகவல் வந்தவரையில், 9 பேர் இறந்துள்ள

தாகத் தகவல் வந்துள்ளது. அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு நிச்சயமாக வேலை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 1989—90—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 22,38,34,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவில் கிரிமினல் வழக்குகளைக் குறிப்பிட்ட காலத் திற்குள் முடிக்க வேண்டுமென்ற சட்ட உத்திரவாதம் செய்ய வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 22,38,34,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலு முள்ள நீதிபதிகளுக்கான காலியிடங்களை நிரப்புவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 22,38,34,000இல் ரூ. 100 குறைக்க வேணடும்''

கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்சண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண்.—சிறைச்சாலைகள் 14 என்ற தலைப்பின்கீழ் ரூ. 14,62,60,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, சிறைச்சாலைகளில் உணவுத் தரத்தை உயர்த்துவதுடன்



இருவேளை காலையும் மாலையும் தேநீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்வது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,62,60,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. ரெ. பிச்சைமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டத்தில் உள்ள சிறைச்சாலையை அபிவிருத்தி செய்து கைதிகளுக்கு வழங்கப்பட வேண்டிய வசதிகள் குறித்து விவாதிக்க நான் கீழ்க்சண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,62,60,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,62,60,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீதி நிர்வாகம் சிறைச்சாலைகள் பற்றிய மானியக் குறிப்புகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டி ருக்கின்றன. நமது மாண்புமிகு உறுப்பினர்கள் அவைகளை எல்லாம் ஆழமாகப் படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் கருத்துக்களைச் சொன்ன பிறகு, தேவைப்பட்டால் என்னுடைய பதிலுரையில் விளக்கங்களைச் சொல்வதாகக் கூறி, இந்த மானியக் குறிப்புகளைச் சட்டமன்றப் பதிவேட்டிலே பதிந்து* கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப் பினர்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து இந்த விவாதத் தின்மீது பேச இருப்பவர்களுக்கு ஓர் அறிவிப்பு. காலத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அவரவர்கள் பேரவைத் தலைவரி

* பக்கங்கள் 152 முதல் 251 முடிய இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.

அனுமதித்த நேரத்திற்குள் முடிக்க வேண்டுமென்று அனைவருக்கும் கவனமூட்ட விரும்புகிறேன். எனவே முன் வரிசையில் இருக்கிறவர்கள் சிறப்புச் சலுகைகள் பெறுகிறார்கள் என்ற முறையை ஏற்றுக்கொண்டு 20 மணித்துளிகள் மட்டும் பேச வேண்டுமென்று அனுமதிக்கப்படுகிறது. அடுத்து, மற்ற உறுப்பினர்கள் 10 மணித்துளிகளில் உரையை முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது 8, 9வது மணித்துளியில், மணி அடித்தவுடன் அவர்கள் முடிப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அப்படி முடிக்காவிட்டால், நானே முடித்து வைத்து, அடுத்தவருக்கு அழைப்புத் தந்துவிடுவேன் என்பதை மிகவும் பொறுப்போடு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறி, முதலில் திரு. பி. எச். பாண்டியன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீதி நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கைகளின்கீழ் என்னுடைய கருத்துக்களை வெளியிட வாய்ப்பு அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீதி ஏழை எளிய மக்களுக்கு எளிதாகக் கிடைக்க வேண்டும். நீதி ஏழை எளிய மக்களுக்கு வேகமாகப் போய்ச் சேர வேண்டும். நீதி ஏழை எளிய மக்களுக்கு குறைந்த செலவில் கிடைக்க வேண்டும்—இவைகள்தான் நம்முடைய நீதி நிர்வாகத்தின் கொள்கைகளாகும். இருந்தாலும் காலதாமதமாகிறது. இருந்தாலும் அதிகச் செலவாகிறது இருந்தாலும் அதிக தூரம் போய் நீதியைப் பெற வேண்டிய கட்டாயத்தில் நாம் இருந்துகொண்டிருக்கிறோம். கிராமத்திலிருந்து உயர் நீதி மன்றத்திற்கு வர வேண்டுமென்றால், சென்னைக்கு வர வேண்டும். தமிழ்நாட்டிலிருந்து உச்ச நீதி மன்றத்திற்குப்போக வேண்டுமென்றால், டெல்லிக்குப் போக வேண்டும்.

இந்த இரண்டு கோரிக்கைகளையும் பல ஆண்டுககாலமாக, தமிழக மக்கள் நம்முடைய அரசின்முன் வைத்து காத்துக்கொண்டிருக்கிறார்கள். மதுரையிலே ஒரு உயர்நீதி மன்றக் கிளை அமைக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து, அதற்கான இடங்களையெல்லாம் தேர்வு செய்யப்படக்கூடிய அளவுக்கு வேகமாகப் பணி செய்தார்கள். ஆனாலும், இன்னமும் கிளை அங்கே அமையவில்லை, டெல்லி உச்சநீதிமன்றத்தின் கிளையொன்றை தமிழகத்தில் அமைப்பதற்காக ஜஸ்வந்த் சிங் கமிஷன் அமைத்து அவரும் இங்கே வந்து மாவட்டங்களையெல்லாம் சுற்றிப்பார்த்து விட்டுப் போனார் என்று நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பில் வெளியிட்டிருப்பதைப் போல், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அப்படியும் தமிழகத்தில் உச்சநீதிமன்றத்தின் கிளை அமைக்கப்படுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. இதற்காக அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும். உயர்நீதிமன்றக் கிளை மதுரையிலே அமைக்கப்படுவதற்கும், உச்சநீதிமன்றத்தின் கிளை தமிழகத்தில் அமைக்கப்படுவதற்கும், அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும். எத்தனையோ முறை, எதெதற்காகவோ திருத்திய அரசியல் சட்டத்தை, இந்தக் காரியங்



களுக்காக வேகமாகத் திருத்துவதற்கு நம்முடைய அரசு மத்திய அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கே உங்கள் முன்னால் முதலில் வைக்கிறேன்.

அடுத்து, நம்முடைய அரசின் கொள்கை, தமிழ்மொழிக்கு முக்கியத்துவம் அளிப்பது; தமிழ் தெரிந்த உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி இந்த மாநிலத்தில் இருக்க வேண்டும். இதுதான் முந்தைய அரசின் கொள்கையாகும். இதைத்தான் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களும் வெளிப்படுத்தினார். ஆனால் மத்திய அரசாங்கம் அந்த நியாயக் கொள்கையில் இன்னும் தன்னுடைய நிலையிலிருந்து மாறுபடவில்லை. ஆகவே, நம்முடைய தமிழ் மாநிலத்தில் தமிழ் தெரிந்த ஒரு தலைமை நீதிபதியை—இங்கேயே உள்ள ஒரு நீதிபதியை—தலைமை நீதிபதியாக நியமிக்க வேண்டும் என்பதுதான் என் வேண்டுகோளும், கோரிக்கையுமாகும்.

பல்வேறு மாநிலங்களின், அந்தந்த மாநில நீதிபதிகளை தலைமை நீதிபதிகளாக நியமிக்கப்பட்டு—கன்பார்ம் பண்ணி —பிறகு அங்கே கொஞ்சகாலம் பணியாற்றிய பிறகுதான் அவர்களைப் பல இடங்களுக்கு மாற்றியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய தமிழகத்தில் மட்டுமே, தமிழ் மாநிலத்தில் உள்ள ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியை இதுவரை தலைமை நீதிபதியாக கன்பார்ம் பண்ணி, நியமித்து, வேறு மாநிலத்திற்கு அனுப்பவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னும் சொல்லப்போனால், மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கத்தைப் பார்த்து அரசியல் சட்டத்தை மீறிவிட்டீர்கள் என்று பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சொல்கிறது. ஆனால் இங்கே தமிழகத்தில் உள்ள உயர்நீதிமன்றத்திற்கு, ஒரு தலைமை நீதிபதி நியமிக்கப்படாமல் 14 நாட்கள்—அபிஷியேட்டிங் சீப் ஜஸ்டிஸ் கூட நியமிக்கப்படாமல்——தற்போது பஞ்சாபில் தலைமை நீதிபதியாக இருக்கிற ஜஸ்டிஸ் ராமசாமி அவர்கள் இங்கே ஒரே ஒரு நாள் மட்டும் தலைமை நீதிபதி பொறுப்பில் நியமிக்கப்பட்டார். தமிழகத்தில் 14 நாட்கள் தலைமை நீதிபதி இல்லாமல் இருந்தது என்பதை நான் இங்கே சொல்லியாக வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : ஒருவேளை மத்திய சர்க்கார் —ஏக் தின் கா சுல்தான் ஆக்கவேண்டும் என்று விரும்பியிருக்குமோ என்னவோ ? (சிரிப்பு).

திரு. பி. எச். பாண்டியன் : 14 நாட்களுக்கு இங்கே தமிழகத்தின் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி இல்லாமல் அவருடைய மாநிலத்திற்கே போய்விட்டார். அதை மத்திய அரசு கருத்தில் கொண்டு உடனே நியமிக்கவில்லை. நம்முடைய

அரசியல் சட்டத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? There shall be a Chief Justice. அதற்கு இடைவெளி இருக்கக் கூடாது. இந்த இடைவெளிக்கு மத்திய அரசாங்கம்தான் பொறுப்பு என்று நான் அதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று தலைமை நீதிபதி பொறுப்பாகவே ஓராண்டுக் காலம் சில நீதிபதிகளை நியமித்துவிடுகிறார்கள்—ஓராண்டுக்கு பொறுப்பு. ஜஸ்டிஸ் இராமசாமிக்கு ஒரு நாளைக்குப் பொறுப்பு. ஓராண்டுக்குப் பொறுப்பு எத்தனைபேருக்கு? அவர்களுடைய தேவைக்கு ஏற்றாற்போல், எண்ணத்திற்கு ஏற்றாற்போல் மத்திய அரசு செயல்படுகிறது என்பதை நான் இங்கே சொல்லியாக வேண்டும். ஆகவே அத்தகைய நியமனக் கொள்கையை நீங்கள் எதிர்க்க வேண்டுமென்று நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

இன்று காலை நம்முடைய மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் ஒரு தீர்ப்பை வழங்கியபோது "டேப்" பற்றி சொன்னார்கள். நான் அதை முதல்நாளே பேச வேண்டும் என்று எடுத்துக்கொண்டு வந்தேன்—25-ம் தேதியே நான் பேச விரும்பினேன். நம் நாட்டிலே யாருக்கும் "Right of privacy" கிடையாது எந்தச் சட்டத்திலும் அந்த உரிமை வழங்கப்படவில்லை. There is no right of privacy யாருக்கும் கிடையாது. ஆனால் 1971ம் ஆண்டு லா கமிஷன் ஆஃப் இந்தியா 42—வது ரிப்போர்ட் இந்தியன் பீனல் கோட் 1971-ல ஒரு பரிந்துரை அளித்தது. அதாவது இன்றைக்கும் இ.பி.கோ.வில் 490, 492 இடம் காலியாகவே இருக்கிறது. வேறு பொருள் அங்கே கிடையாது. 490-ல் 1971 ஆம் ஆண்டு இப்படி பரிந்துரை செய்திருக்கிறார்கள். "Offences against privacy : Use of artificial listening or recording apparatus :

Whoever, knowing that any artificial listening or recording apparatus has been introduced in any premises, without the knowledge or consent of the person in possession of the premises, uses such apparatus for the purpose of recording any conversation shall be punishable with imprisonment of either discription for a term which may extend to six months or with fine or both". 1971-ல் இதை லா கமிஷன் பரிந்துரை செய்தது. பாராளுமன்றம் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே நம்முடைய நாட்டில் இது குற்றமாகக் கருதப்படவில்லை என்பதை இன்றைக்கு இந்த அவைக்கு தெளிவுபடுத்துவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதைப் போலவே தான் டேப் செய்யப்பட்ட எந்த விவகாரங்களை வெளியிட்டாலும் அதற்கு ஓராண்டு தண்டனை— அதுவும் ஏற்கப் படவில்லை. ஆகவே இதற்கு விளக்கத்தையும், நேரத்தையும் வெளியிடுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது.



6. ஒழுங்குப் பிரச்சினை :

பேரவை வளாகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிப்பு குறித்து.

திரு. பொன். விஜயராகவன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர், மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இன்று எல்லா நாட்களை விடவும் நம்முடைய சட்டமன்றத்தில் பாதுகாப்பு மிக அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்பதோடு மட்டுமல்லாமல், பார்வையாளர் கூடங்களை நான் பார்க்கிறேன், அங்கு யாரும் அனுமதிக்கப்படவில்லை. இதற்கு ஏதாவது விசேஷமான காரணம் உண்டா என்பதை துணைத் தலைவரவர்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் மிக அதிகமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, காவல் துறையைச் சேர்ந்த ஏராளமான நபர்கள் இந்த சட்டமன்ற வளாகத்திற்குள் இருக்கிறார்களே, இதற்கும் ஏதாவது அடிப்படைக் காரணம் உண்டா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விசேஷ காரணம் எதுவும் இல்லை. பாதுகாப்பு தேவைப்படுகிற சூழ்நிலை அதிகாரிகளுக்குத் தெரிந்திருப்பதால் அதிகமான பாதுகாப்பு இருக்கிறது.

திரு. பொன். விஜயராகவன் : துணைத் தலைவரவர்களே, இது தங்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட இடம். இங்கு காவல் துறை அதிகாரிகளோ, மற்றவர்களோ வருகின்ற இடமல்ல. தங்களுக்குத்தான் தெரிந்திருக்கவேண்டும். தாங்கள்தான் அதைச் செய்ய வேண்டுமேயல்லாமல், இதை காவல் துறையினருடைய கைகளிலே கொடுப்பதற்கு எந்தவிதமான மர்மமும் கிடையாது. ஆகவே இது என்ன என்பதைப்பற்றி அவைக்கு நீங்கள் தெரிவிக்க வேண்டிய கடமை இருக்கின்ற காரணத்தாலே தான், அதை நான் கேட்கிறேன். தயவுசெய்து, காவல் துறையின் அதிகாரிகளுக்குத் தெரிந்திருந்த காரணத்தால் என்று சொல்வது அவ்வளவு சரியாக இருக்காது என்பதை நான் எடுத்துச்சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சில விஷயங்களைச் சொல்ல முடியாத சூழ்நிலை.

5. மானியக் கோரிக்கைகள், 1989—90—விவாதமும் வாக்கெடுப்பும் —தொடர்ச்சி.

திரு. பி. எச். பாண்டியன் : இந்த நேரத்தைக் கழித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நாம் கொண்டுவரக்கூடிய மசோதாக்கள், இங்கே நிறைவேற்ற கூடிய சட்டங்கள் சட்டத் துறைநால் எழுதப்பட்டு பரிந்துரைக் கப்பட்டு, இங்கே வந்து நிறைவேற்றப்பட்டு, அமல்படுத்தப்படுகிறது. ஆனால் சில சட்டங்கள் இங்கே நிறைவேற்றப்பட்ட பிறகு

[திரு. பி. எச். பாண்டியன்] [1989 ஏப்ரல் 12

ஐந்தாண்டுக் காலம், ஏழு ஆண்டுக் காலம் ஆகிதான் அது
இந்த அரசியல் சட்டத்திற்கு உட்பட்டதா என்று தீர்ப்பு வரு
கிறது. உதாரணத்திற்கு கட்சித் தாவல் தடைச் சட்ட
தின் கீழ் ஒரு சட்டம் நிறைவேற்றினார்களே,—அது நிறைவேற்று
பட்டு ஐந்தாண்டுக் காலம் ஆகிறது—அது அரசியல் சட்டத்திற்கு
உட்பட்டதுதானா என்று உச்ச நீதிமன்றம் இதுவரை சொல்ல
வில்லை. ஆனால் நாம் எல்லோரையும் பயமுறுத்திக் கொண்டி
ருக்கிறோம். இன்னும் அது தீர்ப்பு சொல்லவில்லை. உச்ச
நீதிமன்றத்தில் பல்வேறு பிரச்சினைகள் போன பிறகும் அது
தீர்ப்பு சொல்லவில்லை. ஆகவே சட்ட அமைச்சரவர்களும்,
அரசும் இத்தனை மாதங்களுக்குள் அல்லது ஓராண்டுக்குள்
ளாவது, நிறைவேற்றப்படுகின்ற சட்டங்கள், அரசியல் சட்டத்
திற்கு உட்பட்டதா என்று நீதிமன்றங்கள் ஆராய்ந்து தீர்ப்புச்
சொல்வதற்கு உங்களுடைய அரசாங்க வழக்கறிஞர்களை நீங்கள்
கேட்டுக்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்
கிறேன். வேகமாகச் சட்டங்களைச் சில நேரங்களில்
நிறை வேற்றுகின்ற காரணத்தினால்தான் அதிகம்
குறைபட்டுக்கொள்கிறார்கள். சென்றவாரம் பத்திரிகையிலே
பார்த்தேன். நம்முடைய தலைமை நீதிபதி (பொறுப்பு) என்ன
சொல்லியிருக்கின்றார் தெரியுமா? Clumsy legislations are
passed in the legislature. ஆகவே, அப்படிப்பட்ட குற்றச்
சாட்டுக்கு ஆளாகி விடக்கூடாது. Clumsy Legislation ஆக
இருக்கக் கூடாது. ஆகவே, நீங்களும், கொஞ்சம் சட்ட இலாக்
காவும் நன்றாகப் படித்துப் பார்த்து, இங்கேயும் எல்லோருக்கும்
வாய்ப்பு கொடுத்து அப்படிச் சட்டங்களை நிறைவேற்ற வேண்டு
மென்றும், இத்தனை மாதங்கள், ஓராண்டு காலத்திற்குள்
அரசியல் சட்டத்திற்கு உட்பட்டதா என்பதை நீதிமன்றம் தீர்ப்
பளிப்பதற்கு உங்களுடைய வழக்கறிஞர்களைக் கேட்டுக்கொள்ள
வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, மாவட்ட நீதிபதி தேர்வு. இதை நான் இங்கே
சொல்வதற்குக் காரணம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்
கள் உயிரோடிருந்த காலத்தில்ஆறு மாவட்ட நீதிபதிகளை நியமித்
தார்கள். ஆனால் அரசாங்கம்தான் மாவட்ட நீதிபதிகளினுடைய
விண்ணப்பங்களைக் கோருகிறது. இது அரசாங்க நியமனம்.
அரசாங்கம் அந்த விண்ணப்பங்களைப் பெற்று, உயர்நீதிமன்றத்
திற்குக் கொடுத்தது. உயர்நீதிமன்றத்தில் விண்ணப்பதாரர்
களை அழைத்து, நேர் முகக் காணல் முடிந்து, 18 பேர்களை
இங்கே அனுப்பினார்கள். இதை நான் எதற்காகச் சொல்கிறேன்
என்றால், எந்தக் குறை நடந்திருந்தாலும் நாம் உடனே முதல
மைச்சரைத்தான் சொல்கிறோம். இதை நான் எதற்காகச் சொல்
கிறேன் என்றால், என்னென்ன விவகாரங்கள் நடைபெற்றி
ருக்கின்றன என்பதை ஒரு உதாரணமாக நீங்கள் தெரிந்துகொள்ள
வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். 18 பேரை இங்கே
அனுப்புகிறார்கள். நான்கூட முதலமைச்சரிடத்தில் சொன்னேன்.



1989 ஏப்ரல் 12] [திரு. பி. எச். பாண்டியன்]

இந்த 18இல் 6-ஐ எடுப்பது உங்களுடைய உரிமை என்று சொன்னேன். அவர் என்னிடத்தில் என்ன சொன்னார் தெரியுமா? உயர்நீதிமன்றத்திலிருந்து முதல் 6-ஐ எடுக்க வேண்டுமென்று எனக்குக் குறிப்பு எழுதியிருக்கின்றார்கள், ஆதை மீற முடியாது என்று, அப்படி மீறாமல் 6-ஐயும் நியமித்தார்கள். ஆகவே, இப்படித்தான் ஒவ்வொருவரும் செய்யக்கூடிய தவறுக்கு அவர்மீது சில நேரங்களில் குற்றங்கள் வந்து விடுகின்றன என்பதை எடுத்துச் சொல்வதற்காக நான் இதைத் சொன்னேன். ஆகவே, இனிமேல் அரசு அதுபோன்ற பரிந்துரைகளைப பெறும்பொழுது நேரிடையாக அமர்ந்து பேசுவதுதான் நல்லது என்பதை அரசாங்கத்திற்கு நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு ஜீவாதார உரிமைகள் உங்களுக்கும் உண்டு, எல்லோருக்கும் உண்டு, எனக்கும் உண்டு. சிறைச்சாலையில் இருக்கக் கூடியவர்களுக்கும் ஜீவாதார உரிமை உண்டு. இதை நான் சொல்லவில்லை. உச்ச நீதிமன்ற அரசியல் சட்ட பெஞ்ச் சொல்லியிருக்கிறது. துனில் பத்ரா கேஸ் என்ன தெரியுமா? அந்தச் சிறைச்சாலையில் இருக்கக் கூடியவர்களுக்கு ஜீவாதார உரிமைகள் முழுமையாக உண்டு.

நம்முடைய சட்டப் பேரவை தேர்தல் நடைபெறுவதற்கு முன்பு நான் திருச்சி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செல்லும் பொழுது, சபாநாயகராகப் போகும்பொழுது, மாவட்ட ஆட்சித் தலைவரை அழைத்து ஒரு கடிதத்தைக் கொடுத்தேன். திருச்சி சிறைச்சாலையிலே இருக்கக் கூடியவர்களுக்கெல்லாம் வாக்குரிமையை வழங்குங்கள், அவர்களுக்கு ஜீவாதார உரிமை இருக்கிறது. அவர்களுக்கு வாக்குரிமை அளிக்கக்கூடிய ஒரு அதிகாரம் உண்டு, அதாவது விசாரணைக் கைதிகள் பலபேர் உள்ளே இருப்பார்கள். இவர்களுக்கெல்லாம் தேர்தல் நேரத்தில் வாக்குரிமை இல்லாமல் போய் விடக் கூடாது என்று சொன்னேன். இன்னொன்று, இன்றைக்கு இருக்கக் கூடிய அரசியல் சூழ்நிலையிலேயெல்லாம் தேர்தல் நேரங்களில் பாதுகாப்புக்காக, முன் எச்சரிக்கையாகக் கூட ஒரு மாவட்டத்தில் இரண்டாயிரம் மூன்றாயிரம் நபர்களைக் கூட கைது செய்வார்கள். இனிமேல் வரக்கூடிய காலங்களில் அவர்களுடைய உரிமை போய் விடக் கூடாது. வாக்குரிமை போய்விடக் கூடாது, ஆகவே, சிறைச்சாலைகளிலே சட்டத்திற்கு உட்பட்டு, அதாவது இரண்டாண்டுக்காலம் தாண்டி அதிகமாகத் தண்டனை பெற்றால்தான் உரிமை போகிறது. ஓராண்டுக்காலம், ஆறு மாதகாலம், விசாரணைக் கைதிகள் இவர்களுக்கெல்லாம் இந்த உரிமை வழங்கப்படுவதற்குத் தேர்தல் கமிஷனோடு பேசி நடவடிக்கையெடுங்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, C. R. P. C. Section 433A. மத்திய அரசாங்கம் புதிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, ஒரு ஆயுள் தண்டனைக் கைதி 14 ஆண்டுகள் கட்டாயம் சிறையில் இருக்க

[திரு. பி. எச். பாண்டியன்] [1989 ஏப்ரல் 12

(முற்பகல் 11-00)

வேண்டுமென்று இந்தச் சட்டம் வந்தது. 433 (ஏ), இதையும் அரசியல் சட்ட சுப்ரீம் கோர்ட் பெஞ்ச், 14 ஆண்டுக்காலம் இருக்க வேண்டுமென்று சொல்லி விட்டது. அதற்கு முன்னால் நீங்கள் நினைத்தால் வெளியே விடக்கூடாது என்று சொன்னது. நேறறைய தினம், அதற்கு முன்னால் அவர்களை எப்படி வெளியே கொண்டு வரலாம் என்பதைப் பற்றி ஆராய்ந்து பார்க் கும்பொழுதுதான், இப்பொழுது சட்ட அமைச்சரிடத்தில் பேசி னேன். நம்முடைய இ.பி.கோ. 71 அல்லது 72 என்று எண்ணுகிறேன். சரியாக நினைவு இல்லை. அதிலே கடவுள் தண்டனை என்றால் not more than fourteen years என்றுதான் எழுதப்பட்டிருக்கிறது.

இன்னொன்று மாநில அரசாங்கம் நினைத்தால் அரசியல் சட்டப் பிரிவு 161ன்படி யாரையும், எப்போதும் மன்னித்து வெளியேவிடலாம். இதையும் விடக்கூடாது என்று அந்தத் தீர்ப்பிலே சொல்வதைப் போல் சொல்லியிருக்கிறார்கள். அதாவது Parliamentary intent நீதிபதிகள் சொன்னது. பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது 437-ஏ. பாராளுமன்றம் 14 ஆண்டுகள் இவர்கள் சிறையில் இருக்கவேண்டுமென்று சொல்லி யிருக்கிறது. ஆகவே அதை மீறி 161-ன் கீழ் மாநில கவர்னர் யாரையும் வெளியே சீக்கிரம் விடுதலை செய்ய முடியாது என்று துணிவோடு சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு தீர்ப்புகளில் அர சியல் சட்டம்தான் சுப்ரீம் என்று தீர்ப்பு கொடுத்த அதே நீதிபதி களுடைய தீர்ப்பை எடுத்து வைத்துக்கொண்டு, கான்ஸ்டிடியூ ஷனிற்கு கீழே வரக்கூடிய அந்தச் சட்டமானாலும் நாம் அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் இந்த 161ஐ வைத்து இன்றைக்குச் சிறையில் வாடக்கூடிய ஆயுள் கைதிகளை விடுதலை செய்யுங்கள் என்று நான் உங்களுக்கு ஆலோசனையாகச் சொல் கிறேன். அவர்கள் உங்களை வாழ்த்துவார்கள். சமுதாய சூழ்நிலையினால், சமுதாய சீர்கேட்டினால் சிறைக்குச் சென்ற வர்கள்தான் அவர்கள். அங்கே யாரும் பணக்காரர்கள் ஆயுள் கைதிகளாக கிடையாது. ஏழைகள், வாய்த் தகராறு. வரப்புத் தகராறு. சாதாரணமாக அறியாதவர்கள்தான் சிறையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். அதை உடனே நீங்கள் செய்யுங்கள். 161ஐ எடுத்து எல்லோரையும் பார்த்து 5 ஆண்டுகள் இருந்தவர் கள், 6 ஆண்டுகள் இருந்தவர்களை விடுதலை செய்யுங்கள்.

ஒரு எம். எல். ஏ. தவறு செய்தால் இங்கே சட்டமன்றத்திலே பார்த்தேன். என்ன சலுகை, என்ன பேச்சு, உரிமை? அவர்களை போலீஸ் தொடக்கூடாது. அவர்களை போலீஸ் சோதனை போடக்கூடாது. எம்.எல்.ஏ. They are above the I.P.C. எதிர்கட்சித் கட்சித் தலைவர் above all law ஆக அப்படி மக்கள் மத்தியில் வந்து விடக்கூடாது. நீங்கள் ஒரு நியாயமான தீர்ப்பின் அடிப்படையில் இந்த வழியை பின்பற்ற வேண்டுமென்று நான் முதலில் கேட்டுக்கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 12] [திரு. பி. எச். பாண்டியன்]

இதெல்லாம் இன்றைக்கு உடனுக்குடன் தீர்வு கிடைக்காத காரணத்தால்தான், உடனுக்குடன் நீதி கிடைக்காத காரணத் தினால்தான், இன்றைக்கு மனிதர்களே, சமுதாயத்தில் இருக்கக் கூடியவர்கள, சமுதாயத்தில் அவர்களே உடனுக்குடன் நீதி வழங்கிவிடுகிறார்கள். Readymade Justice போலீஸ் காலதாமத மாகும், நீதிமன்றத்திற்குப் போனால் காலதாமதம் ஆகும். அர சாங்கத்திலே செல்வாக்கு கிடையாது. உடனே பதிலுக்குப் பதில் அது Readymade Justice ஒரு கொலை செய்து ஜாமீனில் வெளியே வந்தால் அவன் நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டிலே நிற்ப தற்குள் அவனைக் கொன்று விடுகிறார்கள். இப்படிப் பல்வேறு வழக்குகளைப் பார்த்திருக்கிறேன். ஆகவேதான் சொல்கிறேன். இந்த முறையை கொஞ்சம் சீர்படுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே கூட சிறையில் A class prisoners-களுக்கு செய்தித்தாள்கள் உண்டு. B class Pisione -களுக்கு செய்தித் தாள் கிடையாது. சிறையில் கூட சட்டத்தின் முன்னால் எல்லோரும் சமம் என்று சொல்லக் கூடாதா? ஏன் அவர்கள் படிக்கக் கூடாது? அந்தப் பத்திரிகையெல்லாம் அவர்கள் படித்தால்தான் அவர்கள் தங்களைத் திருத்திக் கொள்கிற அள விற்கு நிலைமைகள் உருவாகும். (மணியடிக்கப்பெற்றது.) அதை கணித்துக்கொள்ளுங்கள். ஆகவே அப்படி அதைச் செய்ய வேண் டும்.

சிறையில் இருப்பவர்களில் அவர்களுக்குள் பாகுபாடு பார்க்கக் கூடாது என்று தெரிவித்து கொள்கிறேன். இதுமட்டுமல்ல இன் றைக்கு ரெவியூ பெட்டிஷன் கூட நீங்கள் போடலாம். 433 ஏ ரெவியூ பெட்டிஷன் நேராகவே கொண்டுபோய் உச்ச நீதிமன்றத் தில் நீங்கள் போடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து இன்றைக்கு இருக்கக்கூடிய இன்னொரு விஞ்ஞானம். ஒன்று குற்றவாளிகளைத் திருத்துவது. சமுதாயத்தில் வெளியே இருப்பவர்கள் எல்லாம் குற்றவாளிகள் அல்ல என்று எண்ணிவிடக் கூடாது. பிடிபடாத குற்றவாளிகள் வெளியே, பிடிபட்ட குற் வாளிகள் தான் உள்ளே என்பதை யாரும் மறந்து விடக் கூடாது. பிடிபடாத குற்றவாளிகள் வெளியே, சட்டத்தை ஏமாற்றியவர் கள். பணத்தை செலவழித்தவர்கள் வெளியே, ஏழை எளியவர் கள் மட்டும் தான் சிறைக்கு உள்ளே என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

அடுத்து Victimology விஞ்ஞானம் அதாவது, நீங்கள்யாரை யும் ஒரு கொலை செய்து விட்டால், சிறையில் போடுகிறீர்கள், தண்டனை வழங்குகிறீர்கள். அந்த இறந்த குடும்பம் என்னவாகி றது? இறந்த குடும்பத்தை யாரும் பார்ப்பதே கிடையாது. இன்றைக்கும் சிறையில் இருப்பதைச் சிந்தித்துக் கொண்டிருக் கிறோம். ஆகவே அவர்களுக்கென்று ஒரு தனி நிதியை ஒதுக்குங்கள். இதற்காக ஐக்கிய நாட்டுச் சபையிலே தீர்மானத் தை 2 ஆண்டுகாலத்திற்கு முன்பு நிறைவேற்றியிருக்கிறார் கள். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி செய்யவேண்டும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு நிமிடம். குற்றவாளிகளுக்கு நிவாரணம் அளிக்க அரசு முன்வந்தால், அந்தக் குற்றங்களை ஊக்குவிப்பது போல ஆகிவிடாதா?

திரு. பி. எச். பாண்டியன் : நான் அதைத் தான் சொன்னேன். சிறையில் இருப்பவர்கள் எல்லோரும் குற்றவாளிகள் என்று சொல்ல முடியாது. பெரிய வக்கீலை வைக்க முடியாத சில நபர்கள் உள்ளே இருக்கிறார்கள். இதை மறந்துவிடக் கூடாது.

இன்னொன்று சொல்கிறேன். இதே சட்டமன்றத்திலே, நான் சபாநாயகராக இருந்தபோது ஒரு முறை, 15 நாட்கள் ஒரு குற்றத்திற்காக ஒரு தவறுக்காக அவையின் ஒப்புதலோடு தண்டனை வழங்கும்போது, உரிமை போய்விட்டது, உரிமை போய்விட்டது என்று எல்லோரும் கூக்குரலிட்டார்கள். பத்திரிகைகள் எல்லாம் தலையங்கங்கள் எழுதின. அதையும் மறந்துவிடக்கூடாது.

இன்றைக்கு 1985ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட ஆயுள் குற்றவாளிகளின் அப்பீல்கள்தான் எடுக்கப்படுகின்றன உயர்நீதிமன்றத்தில். நீதிபதிகளின் இடங்களை நிரப்பாத காரணத்தால், ஒருவன் 5 ஆண்டுக்காலம் சிறையில் இருக்கிறான. நாளை விடுதலையானால், அந்த 5 ஆண்டுக்காலம் சிறையில் இருந்ததற்கு யார் பொறுப்பு? நான் 15 நாட்கள் ஒருவரை சிறையில் அடைத்தால் எவ்வளவு கூக்குரல்? எவ்வளவு போராட்டம், எவ்வளவு தலையங்கம்? ஏழை எளியவர்களுக்கு தலையங்கம் கிடையாது. அது அவனுடைய தலையெழுத்து. ஆகவே, 5 ஆண்டுக்காலம், 1985ம் ஆண்டு அப்பீல் செய்யப்பட்ட வழக்குகள் தான் இன்றைக்கு எடுக்கப்படுகின்றன. விடுதலையானவர்களுக்கு யார் பொறுப்பு ? இந்த 5 ஆண்டுக் காலம் அவன் சிறையில் சட்டத்திற்கு முரண்பட்டு உள்ளே இருந்ததற்கு யார் பொறுப்பு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : சட்டத்திற்குப் புறம்பு என்று சொல்ல முடியாது. ஏன் என்றால், கீழ்க் கோர்ட்டில் அவனுக்கு தண்டனையாகியிருக்கிறது. தண்டனை என்றால் சட்டப்படியான தண்டனை. அந்த சட்டப்படியான தண்டனை சரியில்லை என்று மேலே அப்பீலுக்குப் போகிறார்கள். எனவே இது சட்டப்படி அல்லாத தீர்ப்பு, தண்டனை என்று சொல்ல முடியாது. சட்டத்தின்படியான தீர்ப்பு. அந்தச் சட்டத்தின்படியான தீர்ப்பின்மேலே அப்பீல்.

திரு. பி. எச். பாண்டியன் : உயர்நீதிமன்றமோ, அல்லது உச்ச நீதிமன்றமோ, குற்றவாளி அல்ல என்று விடுதலை செய்யும்போது, 5 ஆண்டுக்காலம் சிறையில் இருந்ததற்கு அரசாங்கம் பொறுப்பு ஏற்கப்போகிறதா ? கிடையாது. காரணம் அவனுக்கு அரசியல் கட்சி கிடையாது. சிறையில் இருக்கிறான்.



பத்திரிகை கிடையாது. இதைப் புரிந்துகொள்ளுங்கள். ஜீவாதார உரிமைகளை யாருக்கும் மறுக்கக் கூடாது. வெள்ளையாக இருந்தாலும் ஒரே ஜீவாதார உரிமைதான். கறுப்பாக இருந்தாலும் ஒரே ஜீவாதார உரிமைதான் என்பதை மறந்துவிடாதீர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்ட அமைச்சர் அவர்கள், உடனே இன்றைக்கே நடவடிக்கை எடுங்கள். ஆயுள் கைதிகளை 10 ஆண்டுக்காலம், 12 ஆண்டுக்காலம் என்ற சிறையில் இருந்தவர்களை, நம்முடைய அரசியல் சட்டத்தின் 161வது பிரிவின்படி இன்றைக்கே இந்த அவையில் நீங்கள் அறிவியுங்கள். அவர்களை விடுதலை செய்யுங்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீதியை சீக்கிரமாகக் கொடுப்பதற்கு காலியாக உள்ள இடங்களை உடனே நிரப்புங்கள். டெல்லி உச்ச நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பின் அடிப்படையில்தான் இந்த நீதிபதிகளே, காலியாக உள்ள இடங்களை நிரப்பியிருக்கிறார்கள். அதற்கும் நீதிமன்றம்தான் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. நீதி வழங்கிய பிறகு இன்றைக்கு மத்திய அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. ஆகவே காலியாக உள்ள இடங்களை உடனே நிரப்புங்கள்.

நம்முடைய அரசியல் சட்டத்தில் 'சாங்ஷன்டு ஸ்ட்ரெங்த்' என்றுதான் இருக்கிறது. 'சாங்ஷன்டு ஸ்ட்ரெங்த்' இல்லாவிட்டால் அதற்கு மத்திய அரசாங்கம்தான் பொறுப்பு. மத்திய அரசாங்கம் அரசியல் சட்டத்தை மீறிவிட்டது என்பதுதான் என்னுடைய கருத்து. இங்கே 5 இடங்கள் காலி என்றால், அவர்கள் அதை நிரப்பியிருக்க வேண்டும். காரணம், மாநிலங்களுக்கு வரும்போது அமைச்சர்கள் என்ன சொல்கிறார்கள், மாநில அரசாங்கம் அரசியல் சட்டத்தை மீறிவிட்டது என்று சொல்கிறார்கள். எனவே இந்த இரண்டு விவகாரங்கள், ஒன்று ஓ. சி. ஜே. இன்னொன்று 'சாங்ஷன்டு ஸ்ட்ரெங்த்'' இவைகள் அரசியல் சட்டத்திலே எழுதப்பட்ட எழுத்து. ஆகவே அந்த இடங்கள் நிரப்பப்படவேண்டும் என்று கூறி இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த மானியங்களின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய உச்ச நீதிமன்றத்தின் ஒரு பிரிவை சென்னையிலும், உயர்நீதிமன்றத்தின் ஒரு பிரிவை மதுரையிலும் அமைப்பதாக பல ஆண்டுக்காலமாக வாக்குறுதிகள் தரப்பட்டிருக்கின்றன.

1972-ஆம் ஆண்டிலே ஜஸ்வந்த் சிங் அவர்களுடைய குழு வந்து பரிசீலனை செய்ததாகவும், நம்முடைய அமைச்சர் அவர்கள் கொடுத்த குறிப்பிலே இருந்தபோதிலும் கூட, அது இன்னும்

குழப்ப நிலையிலேதான் இருக்கிறது. எனவே அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, விளக்கமாக இதைப்பற்றிச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

அடுத்து நம்முடைய தீண்டாமை தொடர்பான நீதிமன்றங்களை மாவட்டத்திற்கு ஒன்று அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாவட்டத்திற்கு என்று எப்படியும் ஒரு நீதிமன்றமும், 2 சார்பு நீதிமன்றங்களையும் அமைக்கவேண்டும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நீதிமன்றங்களில் வழக்குகள் பல்லாயிரக் கணக்கில் தேங்கிக் கிடக்கின்றன. வழக்கு கொடுத்த மக்கள் அலைச்சலோடு பல விரயமும், மனச் சோர்வும் அடைந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்டி, தேவையான நீதிபதிகளை கராராக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நீதி நிர்வாகத் துறையில் பெண்கள் மிக மிக குறைவு. உண்மையிலேயே அரசு வழக்கறிஞர்கள், பப்ளிக் பிராசிகியூட்டர்கள், மேஜிஸ்ட்ரேட்டுகள், நீதிபதிகள் போன்ற பதவிகளுக்குப் பெண்கள் அபூர்வமாக ஒன்றிரண்டு என்று இருப்பதை மாற்றி ஓரளவு அதிகமாக நீங்கள் நியமிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். அரசு அறிவித்திருப்பது !போல் இதிலும் 30 சதவீதம் அமலுக்குக் கொண்டுவரப்படுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

உச்ச நீதிமன்ற நீதிபதியாகட்டும். உயர்நீதிமன்ற நீதிபதியாகட்டும், கீழ்மட்ட நீதிபதிகளின் கஷ்டத்தைப் புரிந்துகொள்ளவில்லை என்று நான் கருதுகிறேன். குடும்பக்கட்டுப்பாட்டில் கோட்டா நிர்ணயித்திருப்பது போன்று ஒரு மாதத்தில் இத்தனை வழக்குகள் முடிக்கவேண்டும் என்று உத்தரவிடுவதால் அவசரக் கோலத்தில் தீர்ப்புகள் வழங்கப்படுவதால் நீதி பாதிக்கப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு முன்சீப்பிற்கு 300 வழக்குகள் என்று கூட இருக்கலாம். ஆனால் இன்றைக்கு 1,000, 2,000 என்ற அளவில் இருப்பதால் சமாளிக்கமுடியவில்லை.

இதிலே ஒரு விசித்திரம் என்னவென்றால், கொடைக்கானலில் ஒரு தாசில்தாருக்கு நீதிபதி அதிகாரம் வழங்கப்பட்டு, அவரும் இன்றைக்கு வழக்கை நடத்திக் கொண்டு இருக்கிறார் என்பதை உங்கள் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்னொன்று கோர்ட் சம்பந்தமாகச் சொல்லும்போது, பொதுமக்களுக்கு சமுதாய நலன்களுக்கான நடவடிக்கைகள் மீது உயர்நீதிமன்றத்தில் ஸ்டே வாங்கப்படுகிறது. இதைத் தருகின்ற நீதிபதி வழக்குகளின் தன்மைகளைப் பாராமல், அதனுடைய



சமூக நலனைக் கூட பாராமல் தந்துவிடுகிறார்கள். ஆனால் அந்த ஸ்டே எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்பதைப் பற்றி ஒரு வரையறை இல்லாமல் இருக்கிறது. நமது வழக்கறிஞர், பி.பிஸ், ஏ.பி.பிஸ். இதுபற்றிக் கவலைப்படுவதாகவும் இல்லை. ஸ்டேயை உடைக்க நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. இதற்கு பல உதாரணங்களை என்னால் கூற முடியும்.

அடுத்தபடியாக நம்முடைய நீதிபதிகளின் ஊதியம் என்பது மிக மிகக் குறைவு. குறைந்தபட்சம் காவல்துறை அதிகாரிகளுக்கு இருக்கக்கூடிய வசதிகள் கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்களுக்கு வீடுகள் இல்லை, பெயரளவிற்கு இங்குமங்கும் ஒன்றிரண்டு இருப்பதைப் பற்றியும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன் ஆனால் தூரப் பகுதியில் அவர்களுக்கு வீட்டுவசதி இருந்தால், அவர்களுக்கு வாகன வசதி தரப்படுவதில்லை. மாவட்ட நீதிபதிகளுக்கு கார் கொடுப்பது போன்று. சார்புநீதிபதிகளுக்கும் தர வேண்டும். மாஜிஸ்ட்ரேட், முன்சீப்புகளுக்கு கார் தராவிட்டாலும், ஒரு ஸ்கூட்டராவது தரப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை அவர்கள் இடம் மாற்றப்படும்போது அவர்களுடைய பிள்ளைகள் படிக்க உத்தரவாதம் செய்யப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதிமன்றத்தைப் பற்றிச். சொல்லும்போது தீர்ப்பு வழங்குவதில் பணக்காரர்கள் தீர்ப்பில் வெற்றி பெறுவதும், ஏழைகள் இன்றைக்கு தீர்ப்பில் தோல்வியடைவதும் செய்த குற்றத்தின் அடிப்படையில் அல்ல. பணம் யார் அதிகமாகத் தருகிறார்களோ- நான் எல்லா நீதிபதிகளையும் சொல்லவில்லை.—அமைச்சர் கேட்டால் நான் பல நீதிபதிகளை யார் என்றுகூட சுட்டிக்காட்ட முடியும். அந்த முறைகளை மாற்றும் நோக்கத்துடன் ஒரு ஏற்பாட்டை நிச்சயமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினர், பெயரை இங்கே சொல்லவேண்டாம். தனியாகக் கொடுங்கள். நான் தலைமை நீதிபதியோடு கலந்து பேசிய போது சொல்கிறார்கள் அப்படி குற்றச்சாட்டுகள் வரு கின்றன என்று. குற்றச்சாட்டுகள் வந்த பிறகு விசாரிக்கச் சொல்லும்போது குற்றச்சாட்டுகளைக் கொடுத்தவர்களே, இதிலே சில வேளைகளில் நம்முடைய திரு. பி. எச். பாண்டியன் போன்ற பிரபல வக்கீல்கள் கூட இருக்கலாம். அவரை நான் குற்றச் சாட்டாகச் சொல்லவில்லை. அவர் என்ன கருதுகிறார் என்று சொன்னால், குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு விடு மானால், நம்முடைய பிழைப்பு என்னவாகும், வருகிற நீதிபதிகள் எல்லாம் அதை எப்படி நடத்துவார்கள் என்று அச்சப்படுவதால், அந்தக் குறிப்பை ரகசியமாக—நான் கூட, படிக்கவேண்டாம் அந்தக் குறிப்பை ஒரு கவரில் போட்டுக்

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1989 ஏப்ரல் 12

கொடுத்தால் ரிஜிஸ்ட்ரார் மூலமாக உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பி நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத்: அது மட்டுமல்ல, ப்யூன் மூலமாகத்தான் வாங்குகிறார்கள். அதனால்தான் நீதிதேவதையின் கண்கள் மூடப்பட்டு இருக்கின்றதோ—அதற்கு வேறு அர்த்தம் இருந்தாலும், இந்தப் பணம் கொடுப்பதைப் பார்க்க வேண்டாம் என்றுதான் நீதி தேவதையின் கண்கள்கூட மூடப்பட்டிருக்கின்றதோ என்று எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது.

அதே மாதிரி தொழிலாளர் நீதிமன்றங்கள் இன்றைக்கு இருக்கின்றன. இந்த நீதிபதிகளின் ஸ்தானங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை. சென்னை, கோவை, மதுரையில் மட்டும் தான் இதற்கான நீதிமன்றங்கள் இருக்கின்றன. இதர மாவட்டங்களில், முகாம்கள் தான் செய்கிறார்கள். இந்த முகாம்களில் வழக்கு விசாரணை பெயரளவிலே தான் நடைபெறுகிறது. அதனால் அவர்களுக்கு இடம்கூட பல மாவட்டங்களில் கிடைக்காமல் உள்ளது. பல்லாயிரக்கணக்கான வழக்குகள் பைசல் ஆகவில்லை. உடனடியாக சேலம், திருச்சி, நெல்லையில் தொழிலாளர் நீதிமன்றங்கள் துவங்கப்படவேண்டும். தற்போது நீதிமன்றம் செயல்படும் நிலையில், பலவிடங்களில் நீதிமன்றங்களின் எண்ணிக்கையை உயர்த்தவேண்டும். தொழிலாளி சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரித்து முடிக்க கால அவகாசம் நிர்ணயிக்கப்பட்டாலும் துஅ நடைமுறைப் படுத்தப்படவில்லை. வழக்குகள் முறையாக விசாரிக்கப்பட்டு முடிப்பதை உத்தரவாதப்படுத்துவதையும், நீதிமன்றங்களில் நீதிபதிகளின் பொறுப்பற்ற செயல்களைப்பற்றி தொழில் சங்கங்கள் புகார் செய்திருப்பதையும், கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடுகூட அடுத்து நான் வருவது, நேரம் காலம் அவகாசம் இல்லாததால் பெண்கள் தொடர்பான சில சட்டங்களைப் பற்றி மட்டும் நான் கூற விரும்புகிறேன். குடும்ப கோர்ட் என்று இப்போது புதிதாக அமைக்கப்பட்டிருக்கிறது. நீண்ட நாள் கோரிக்கை. 1984-ல் சட்டம் வந்தது. 4 ஆண்டுகளுக்குப் பிறகு 1988 ஆம் ஆண்டு அக்டோபர் 3 ஆம் தேதி இது வந்தது. நல்லது. ஆனால் தமிழகத்தில் கடந்த 7 மாத கால நடைமுறைகளால் எங்களுக்கு ஏற்பட்டுள்ள அனுபவங்களை வைத்து, நான் சார்ந்திருக்கிற ஜனநாயக மாதர் சங்கம் இது பற்றி ஆய்வு நடத்தி கருத்துரை வழங்கியதில் சில குறைபாடுகள் பலவீனங்கள் நீக்கப்பட்டால் இது உண்மையிலேயே முதல் தரமாக இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குடும்ப சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறுகிய காலத்தில் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காக இது கொண்டு வரப்பட்டது. இவை தீர்க்கப்படும் விதம் மற்ற பிரச்சினைகள் தீர்க்கப்படும் விதத்திலிருந்து மாறுபட வேண்டும் என்பது போன்ற



1989 ஏப்ரல் 12] [திருமதி பாப்பா உமாநாத்

பல காரியங்களுக்காக குடும்ப கோர்ட்டுகள் கொண்டு வரப்பட்டன. இந்த நீதிமன்றத்தில் மனு அளிக்கும் முறை மிகவும், எளிமையப்படுத்தப்பட வேண்டும். தற்போதுள்ள முறைகள் மிகவும் சிக்கலானவை. அதிகம் படிக்காத பெண்களுக்கு மனு போடுவது சிரமமாக உள்ளது. ஆகவே 2 மனுக்கள் பிரதிகள் கொடுத்தால் போதும் என்ற முறையிலே ஏற்பாடு செய்ய வேண்டும். நீதிமன்ற கட்டணங்கள் ஸ்டாம்ப் கட்டணங்கள் ஆகியவற்றை முழுமையாக ரத்து செய்ய வேண்டும். முதலில் சமரசம் செய்வதற்கான ஆலோசகர்கள் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடத்தி சமரசம் ஏற்படவில்லை என்றால் பிறகு நீதிபதியிடம் அனுப்ப வேண்டும் எனபது சரியாக இருக்கும். இப்போது நீதிபதியே சமரசம் செய்யும் வேலையில் ஈடுபடுவதால் கால அவகாசம் ஆகிறது. ஆகவே சமரசம் செய்வதை ஆலோசகர்களே செய்து பிறகு அதன் மீது நீதிபதி கவனிப்பது என்பது பொருத்தமாக இருக்கும்.

சமரசம் செய்வதற்கான காலத்திற்கு ஒரு வரம்பு நிர்ணயிப்பது அவசியம். இப்போது கால வரையின்றி இழுத்து அடிக்கப்படுகிறது. 3 மாத காலம் என்று இதை நிர்ணயிக்கலாம். இன்னொன்று முக்கிய மாக குறிப்பிட விரும்புவது சமரச முயற்சிகள் தோல்வியடைந்து நீதிபதி விசாரணை நடத்தும்போது மனுதாரர்கள் தாங்கள் விருப்பப்பட்ட வழக்கறிஞர்கள், மாதர் சங்கம் அல்லது மற்ற அமைப்புகளில் பிரதிநிதிகள் தங்களுக்காக வாதாட வைத்துக்கொள்ளும் உரிமை அளிக்கப்பட வேண்டும். குறிப்பாக பெண்களுக்கு அந்த உதவி தேவை, என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சமரச ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு சட்டப் பயிற்சி அளிக்க குறுகிய கால பயிற்சித் திட்டத்தை உருவாக்க அரசு பொறுப்பேற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஜீவனாம்சம். கணவன் ஜீவனாம்சம் கொடுக்க வேண்டுமென்று ஆரம்ப ஆதாரங்கள் நிரூபிக்கப்பட்ட பின், மனு போட்டு 2 வாரங்களுககுள் அடிப்படை நடவடிக்கையாக ஜீவனாம்ச உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும். அதன்படி ஜீவனாம்சம் கொடுத்தால்தான் கணவன் அந்த வழக்கை தொடர முடியும் என்ற நிபந்தனையைக் கொண்டு வரவேண்டும். இப்படி நிர்ப்பந்தங்கள் தரப்பட்டால்தான் ஜீவனாம்சம் கொடுக்கபபடும் என்ற நிலை இருக்கிறது. தீர்ப்பு அளிக்கப்பட்டபின் இதை அமல் நடத்தும் பொறுப்பையும் நீதிமன்றம் ஏற்கவேண்டும். ஜீவனாம்சத் தொகையை நீதிமன்றத்தில் கட்ட வேண்டும். இல்லாவிடில் நீதிமன்றமே சம்பந்தப்பட்டவர்களுக்கு வாரண்ட் அனுப்ப வேண்டும். சிறையிலே தள்ளும் வகையிலே கூட சட்டம் திருத்தப்படவேண்டும்

அடுத்து குடும்ப நீதிமன்ற சட்டப்படி அதிலே நியமிக்கப்படுகிற நீதிபதி மற்றும் ஆலோசகர்கள் திருமணங்களைப் பாதுகாப்பதில் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று

இருக்கிறது. இப்போதெல்லாம் திருமணத்தை பாதுகாக்க பணம்
வேண்டும், ஸ்கூட்டர் வேண்டும், டி. வி. வேண்டும். அவைதான்
திருமணத்தை பாதுகாக்க முடியும். (குறுக்கீடு) ஆமாம். கார்
வேண்டும். ஆகவே இந்து திருமணங்களில் நம்பிக்கை கொண்ட
வர்கள் என்பது மட்டுமல்ல பெண்கள் உரிமை, சமத்துவம் ஆகிய
வற்றிலும் நம்பிக்கை கொண்டவர்களாக அவர்கள் இருக்க
வேண்டும் என்பதுதான் தேவை என்பதையும் நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

சென்னையிலே இன்னும் ஒரு குடும்ப கோர்ட் துவக்கப்படும்
என்ற அறிவிப்பு வரவேற்கத் தக்கது. குறைந்தபட்சம் மதுரை,
கோவை, திருச்சி ஆகிய மூன்று இடங்களிலும் அது துவக்கப்பட
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குடும்ப கோர்ட்டின்
தீர்ப்பையொட்டி மறு பரிசீலனை கோரி அப்பீல் செய்யும்போது, அது
பெஞ்சுக்கு அனுப்பப்படுகிறது. அதன்படி பெஞ்சு தீர்ப்பை மறு
பரிசீலனை செய்யக்கோரும் 2-வது அப்பீல் உரிமை இங்கு கிடை.
யாது, பெஞ்ச் தீர்ப்பு என்பதால். ஆகவே 2-வது அப்பீல் சுப்ரீம்
கோர்ட்டிற்குத்தான் போக முடியும். அது மிகுந்த காலதாமதத்தை
ஏற்படுத்துகிறது. ஆகவே முதல் அப்பீலை பரிசீலிக்க பெஞ்சுக்கு
பதிலாக ஒரு நீதிபதியை நியமித்தால் அது உதவிகரமாக
இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

இப்போது ஆலோசகர்களுக்கு ஒரு வழக்கிற்கு 50 ரூபாயும்,
Amicus Curiae வழக்கறிஞர்களுக்கு ஒரு கேசுக்கு 100 ரூபாயும்
அளிக்கப்படுகிறது. அது சரியல்ல. கர்நாடக மாநிலத்தில்
அந்த வழக்கறிஞர்களுக்கு 200 ரூபாய் தரப்படுகிறது. அதைக்
கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடும்பக்
கோர்ட் சில சமயம் மொபைல் கோர்ட்டாகவும் இருக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். இந்து திருமணங்களை கட்டாய
மாக பதிவு செய்திடல் வேண்டும். திருமணத்தின்போது மண
மக்களுக்கு அளிக்கப்படுகிற பரிசுகளையும் பதிவு செய்யவேண்டும்.
மணமக்களுக்கு பெற்றோர்கள் அளிக்கும்
திருமணச் செலவிற்கும் உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட வேண்டும்.
வரதட்சணை சாவு வழக்குகளை விசாரிக்க விசேஷ நீதிமன்றம்
அமைத்து வழக்கு பதிவு செய்த 6 மாத காலத்திற்குள் தீர்ப்பு
வழங்கப்படவேண்டும். இதற்கு முன்னோடியாக சதி சம்பந்தப்
பட்ட கோர்ட்டே இருக்கிறது. மேற்கண்ட கோர்ட் அமைக்கப்
படும் வரை வரதட்சணை சாவுகளை ஒட்டி கீழ்க்கண்ட திருத்தங்
கள் தேவை.

இறந்த பெண்ணைப் பற்றிய போஸ்ட் மார்ட்டம் சர்ட்டிபி
கேட்டும், பாரன்சிக் ரிப்போர்ட்டும் பெண்ணின் பெற்றோருக்கு
வழங்கப்படவேண்டும். இது சட்ட உரிமையாக்கப்படவேண்டும்.



சொத்துரிமை சம்பந்தமாக வரவு-செலவு கணக்கின் போதே
நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள்.
ஆந்திராவில் ஒன்று கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இங்கே
சொத்தில் பெண்களுக்கு சம உரிமை வேண்டும். அதை விரை
விலே கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆபாச போஸ்டர். இதில் தமிழ்நாடு முதலிடம்
வகிக்கக்கூடிய நிலைமைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. ஏற்கென
வே 1986-ல் பெண்களை ஆபாசமாகச் சித்தரிப்பதைத் தடுக்கும்
சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்திற்கான விதிமுறை
கள் தமிழகத்தில் இன்னும் இயற்றப்படவில்லை. அதைப்பற்றி
அமைச்சர் பதில் கூறும்போது சொல்வார் என்று நான் நம்பு
கிறேன். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் விளக்க வேண்டும்.
இது அமல் செய்யப்படுவதற்கு எந்த அறிகுறியும் தென்படவில்லை.
அது ரொம்ப ஜோராக, அழகாக, வண்ணவண்ணமாக ஒட்டப்
படுகிறது. அதை பலரும் கண்டு களிக்கக்கூடிய நிலைமை இருக்
கிறது. அந்தக் கொடுமை தாங்க முடியவில்லை. ஆகவே நட
வடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்தபடியாக சிறைச்சாலைக்கு வருகின்றபோது அதுபெரும்
சித்திரவதைக் கூடமாக இருக்கிறது. மாண்புமிகு திரு. பி.எச்.
பாண்டியன் நல்ல முறையிலே அதை வர்ணித்தார்கள். 10 ஆண்டு
கள் தண்டனை அனுபவித்த ஆயுள் தண்டனைக் கைதிகள்
விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது நியாயமானது. கேரளா
மாநிலத்தில் கூட அது செய்யப்பட்டிருக்கிறது. 433ஏ என்ற
பிரிவை ரத்து செய்வதன் மூலமாக 14 ஆண்டுகள் என்பதை 10
ஆண்டுகளாகக் குறைக்க முடியும் என்று சொல்கிறார்கள். அதைக்
கவனிக்க வேண்டும். அரசியல் கைதிகளுக்கு ஸ்பெஷல் வகுப்பு
வேண்டும். சிறைச்சாலையிலே சுகாதாரம் இல்லை. தண்டனை
காவல் முறை கான்விக்ட் வார்டர் அதை ரத்து செய்ய வேண்டும்
கைதிகள் தங்கள் குறைகளை எடுத்துக் கூற புகார் பெட்டி வைக்
கப்பட்டிருக்கிறது. அந்தப் பெட்டியில் போடப்படும் புகார்கள்
திருடப்படுகின்றன—அதிகாரிகளால். அது திருடப்படாமல் பாது
காக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
வேண்டுமானால் நல்ல பூட்டு போடலாம். அவசரகால விடுப்பு
வழி துணை காவல் கைதியோடு இப்போது ஒரு காவலர் போகி
றார். அது இல்லாமல் தரப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன். முதலில் கண்காணிப்பாளரைக் கேட்டுக் கொடுத்துக்
கொண்டிருந்தார்கள். இப்போது போலீசாரை கேட்டு கொடுப்பதி
னால் அது அவசர விடுப்பாக இல்லை என்பதையும் சொல்லிக்
கொள்கிறேன்.

ஜெயில் செல் என்ற அறையில் இன்றைக்கு 5, 10 பேர்கள்
போடுகிறார்கள். குறைந்தது இரண்டோ, மூன்றோ போட்டால்
அதுவே அதிகம். அப்படிப் போடுவதற்கு அவர்களை மனிதர்
களாக மதித்து நடப்பதற்கு ஏற்பாடு பண்ண வேண்டும்.

128696
N89.9.3

[திருமதி பாப்பா உமாநாத்] [1989 ஏப்ரல் 12

கைதிகளுக்கு சிறைச்சாலைகளிலே காண்டீன் வைக்க வேண்டும். அவர்கள் சொந்தச் செலவிலே காபி குடிப்பதற்கு. இந்தக் காபியை கண்ணால் பார்த்தே ரொம்ப நாளாகிறது. நாங்கள் ஆரம்பத்திலே போகின்றபோது காபியே கிடையாது. இப்போது என்னமோ அரசாங்கத்திலே இருப்பதாகச் சொல்கிறார்கள். நீங்கள் சில பத்திரிகைகள் கொடுப்பதாக இங்கே லிஸ்டிலே கொடுத்திருக்கிறீர்கள். எல்லா பத்திரிகைகளும் கொடுக்க வேண்டும். நாங்கள் எல்லாம் இருக்கின்றபோது கருப்பு மசியை பூசி 1, 2 பாராகூட இருக்காது. நான் ஒரு முறை கருப்பு மசியைப் போட்டு மறுபடியும் அரசாங்கத்திற்கு அனுப்பினேன். அப்போது இருந்த அரசாங்கத்திற்கு. 1950லே காங்கிரஸ் அரசாங்கம் இருந்தது. மாதம் 30 மில்லி வழங்கும் நல்லெண்ணைக்குப் பதிலாக 100 மில்லி தேங்காய் எண்ணெய் வழங்க வேண்டும். இரவு 8 மணிக்கு லாக்கப் செய்ய வேண்டும். கைதிகளுக்கு, தொழிற் கூடங்களிலே ரொம்ப வேலை கொடுக்கிறார்கள். அது நல்லது. ஆனால் சம்பளம் ரொம்ப குறைச்சல். பிச்சைக்காரர்களுக்குகூட 4 அணா கொடுத்தால் வாங்கமாட்டேன் என்கிறார்கள். காபி 60 பைசா விற்கிறது. அவர்களுக்கு ஒரு பான்ட், ஷர்ட் தைத்து பட்டன் வைத்து கொடுக்க எவ்வளவு கொடுக்கிறார்கள் தெரியுமா? 75 காசு தான். இது ரொம்ப கொடுமை. தொழிலாளர் நல அமைச்சர் இல்லை. அவர்கள் குறித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு சரியாக ஊதியம் வரையறுக்கப்பட வேண்டும். மாதாந்திர ஊதியம் கொடுக்க வேண்டும். 4 சுவர்களுக்குள் நடக்கக்கூடிய பல்வேறு ஊழல்கள் குற்றச்சாட்டுகள் கணக்கற்ற முறையில் இருக்கின்றன. அதற்கு ரகசிய புலனாய்வு மூலமாக விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) சிறைக் காவலர்களுக்கு போலீசாரைப் போல் ஊதியம் சம்பளகிரேட், வருடாந்திர ஊதிய உயர்வு வரையறுக்கப்படவேண்டும். வார்டர்களுக்கு சங்கம் வைத்து செயல்பட உரிமை தரவேண்டும். சிறைக்காவலர் அனைவருக்கும் ஓரளவாவது வீடுகள் கட்டித்தர வேண்டும். பண்டைய கால எக்கிமோக்கள் இருக்கிற மாதிரி அவர்கள் வீடுகள் எல்லாம் இருக்கிறது. படுத்து, கவிழ்ந்து போகிற மாதிரி, அதனால் நல்ல வீடாக மனிதன் வாழ்கிற வீடாகக் கட்டித்தர வேண்டும். சிறைக் காவலர்களுக்கு இரவும் பகலும் பணி இருப்பதால் 8 மணி நேர வேலை என்ற அடிப்படையில் 3 ஷிப்டுகள் செய்ய வேண்டும். போலீஸ்காரர்களைப் போல் அவர்களுக்கு ரேஷன் தரப்பட வேண்டும். அதிகாரிகள் வீட்டு ஆர்டர்லியாக இருப்பதை நிறுத்தவேண்டும். அது ரொம்ப அநியாயமாக இருக்கிறது. நாயை வளர்ப்பது, பூனை, மாடுகளை குளிப்பாட்டுவது, சோறாக்குவது குழந்தைகளை குளிப் பாட்டுவது இதையெல்லாம் செய்வது போன்ற நிலைமை இருக் கிறது. அவர்களும் மனிதர்கள்தான். ஆகவே, அந்த முறையை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி சிறையிலே தண்டனைக் கைதிகள் தொழிற் கல்வி



1989 ஏப்ரல் 12] [திருமதி பாப்பா உமாநாத்]

பயில வசதி செய்துதரப்பட வேண்டும். கைதிகளுக்கு வழங்கப்படுகின்ற உணவை அதிகாரிகள் நிறைய திருடுகிறார்கள். திருடுவதிலே பெரிய மன்னனாக இருந்தவர் மீது சமீபத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. நான் பேரைச் சொல்லவில்லை. சொன்னால் ஓவென்று சத்தம் போடுவார்கள். நரசிம்மன் கமிஷன் பரிந்துரைப்படி கைதி உணவை சிறை பஞ்சாயத்துக் குழுவிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த பஞ்சாயத்திலே கைதிகள் மெம்பராக இருந்தால் அவர்களை ஏதாவது காரணம் சொல்லி வேறு டக்கம் மாற்றிவிடுகிறார்கள். அதை நீங்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, அந்த முறையிலே இந்த அநீதியை எதிர்த்துப் பேசினால் மிருகத்தனமாக அடிக்கிறார்கள். கடலூர் ஜெயிலை தண்டனை ஜெயில் என்று வைத்திருக்கிறார்கள். அங்கே அனுப்பி விடுகிறார்கள். நான் கேட்கிறேன், உங்களை. நெஞ்சு பொறுக்க முடியாத அடி. அவர்களை ஜெயிலிலே போடுகிறார்கள். சில பேர் செத்துப்போய் விடுகிறார்கள். பல வழக்குகள் இருக்கின்றன. எனக்கு நேரம் இல்லை. ஏனென்றால் முன் பெஞ்சிலே 20 நிமிஷம். எங்களுக்குப் பத்து நிமிஷம் தான். துணை சபாநாயகர் அவர்கள் கொஞ்சம் கூடக் கொடுப்பார் என்று நினைக்கிறேன். இன்னும் ஒரு இரண்டு நிமிடத்திலே முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : நீங்கள் ஏற்கெனவே 18 நிமிடத்தைத் தாண்டிவிட்டீர்கள்.

**திருமதி பாப்பா உமாநாத்** : : கைதிகள்—எதிர்த்து சிறையிலே என்னங்க பண்ணமுடியும்? வெளிநடப்பா செய்ய முடியும் ஜெயிலிலே வெளிநடப்பு செய்ய முடியுமா? முடியாது. ரொம்பக் கஷ்டம். அதுமட்டமல்ல. நேரத்தை வீணாக்கக்கூடிய விவாதத்தைப் பண்ணமுடியுமா அங்கே? நன்றாக சாத்துவார்கள், உதைப்பார்கள். எனவே, முடியாது. ஆகவே, இருப்பது ஒரே ஒரு உண்ணாவிரதம். உண்ணாவிரதம் நாங்கள் இருந்து இருக்கிறோம். அனுபவத்திலே சொல்கிறேன். 1950 இலே திரு. குமாரசாமி ராஜா முதலமைச்சராக இருக்கும்போது, திரு. மாதவ மேனன் போலீஸ் அமைச்சராக இருக்கிற போது நாங்கள் எல்லாம் உண்ணாவிரதம் இருந்தோம். மதிப்பிற்குரிய திரு. கல்யாணசுந்தரம், என்னுடைய கணவர் உமாநாத், நான், என்னுடைய அன்னை எல்லோரும் உண்ணாவிரதம் இருந்தோம் 28 நாள். 23-வது நாள் என் அம்மா இறந்து போய்விட்டார்கள். இறந்து போன அம்மாவைப் பார்க்க நான் கேட்டபோது, மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சியினுடைய உள்துறை அமைச்சர்—இவர்களுக்கெல்லாம் தெரியாது. பல பேருக்கு. பிறந்து கூட இருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன்—காங்கிரஸ் அமைச்சர் என்ன சொன்னார் தெரியுமா? பக்கத்திலே போக முடியாது. ஒவ்வொரு

லாக்கப்பும் 24 மணி லாக்கப. தனித்தனி அறையிலே
அடைத்து வைத்து இருப்பார்கள். என் அம்மா 4-வது ரூமிலே.
பார்க்க வேண்டும் கடைசி தடவையாக என்று கேட்டபோது,
நீ கம்யூனிஸ்ட்டுக் கட்சியிலிருந்து ராஜினாமா செய்வதாகக்
கடிதம் எழுதிக்கொடுத்தால் அந்தக் கடைசிச் சவத்தை காட்டுவ
தாகச் சொன்னார்கள். நான் மறுத்துவிட்டதால் 1950—
இதே நம்முடைய சென்னை மத்திய சிறை, என்ன பண்ணினார்
என்று இன்றைக்கும் எனக்குத் தெரியாது. அண்ணா அவர்கள்
பொறுப்பேற்றபோதுகூட நான் போய்க் கேட்டேன். என்ன
செய்ய முடியும் என்று சொன்னார். அதற்கு முன்பே நடந்தது.
அந்தமாதிரி சிறைக் கொட்டடியில் என்னுடைய அன்னை
அவர்கள் இறந்திருக்கிறார்கள். 1950-இலே. கடைசி தடவை
யாகக் காண்பிக்கக்கூட விடவில்லை. ஆகவே, சிறைக் கைதிகளு
டைய கஷ்டம் எனக்கு நன்றாகத் தெரியும். அந்த முறையில்
இந்தப் பிரச்சினையில் நீங்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள
வேண்டும் என்று உங்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்
கொள்கிறேன். அதுமட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்களைக்
கொண்டு இருக்கக்கூடிய அந்த ஆலோசனைக் குழுக்கள் அமைப்
பதோடு, அவர்கள் பார்வையிடவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.
அடிக்கடி பார்வையிட வேண்டும். சர்வ கட்சிக் குழு ஒன்றை
அமைக்க வேண்டும். அவர்கள் போய் கண்காணிக்க வேண்டும்.
அந்த முறையிலே நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள்
மனிதாபிமானத்தோடு சிறைக் கைதிகளுடைய விஷயத்தில்
அதிகமான கூடுதல் கவனம் செலுத்தவேண்டும், பெண் கைதி
களுக்கு எந்தவித வசதியும் இல்லை. கக்கூஸ் வசதி கூட
இல்லை. நாள் பூராவும் அடைத்து வைத்திருக்கிறார்கள், சப்
ஜெயிலில். ஆண்களை எல்லாம் உள்ளே அடைத்த பிறகுதான்
அவர்களை வெளியே விடுகிறார்கள். அதுவரைக்கும் கக்கூஸ்
போகமுடியவில்லை. அந்த விஷயத்திலேயும் நீங்கள் கவனிக்க
வேண்டும். கக்கூஸுக்கு மேலே இருக்கக்கூடிய தேக்குமரத்தைக்
கூட கடலூரிலே அந்த சூப்பிரண்டு வீட்டுக்கு எடுத்துக்கொண்டு
போய்விட்டார். மேலே ஒப்பனாக இருக்கிறது. அதையும்
ஆழ்ந்து பரிசீலித்து நடவடிக்கை எடுத்து, இந்தத் துறையிலே
சட்ட அமைச்சர் அவர்கள் அதிகமான அக்கறை செலுத்தி நட
வடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்
கின்ற நீதி நிர்வாகம், தமிழ்நாடு சிறைகள் நிர்வாகம் என்ற
இந்த மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய கருத்துக்களை
நான் கூற விரும்புகிறேன். பொதுவாக, இன்றைக்குத் தமிழ்
நாட்டிலே இருக்கக்கூடிய ஒரு துயரமான நிலைமை, நீதிமன்றங்
களிலே ஏராளமான வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன என்ற
குற்றச்சாட்டு, தமிழ்நாட்டிலே இருக்கின்ற எல்லா மாவட்டங்
களிலேயும், எல்லாப் பகுதிகளிலேயும், எல்லா நீதிமன்றங்களிலே
யும் இருந்து வருகின்ற ஒரு மிகப் பெரிய புகார் ஆகும். அதை



நீக்குவதற்கு நம்முடைய அரசு மிகத் துரிதமாக நடவடிக்கை களை எடுத்தாமலாழிய அந்த வழக்குகளுடைய தேக்கத்தை நிவர்த்திக்க முடியாது. இதிலே மற்றொரு குறைபாடு என்ன வென்று சொன்னால், நீதிபதிகளுடைய பற்றாக்குறை எல்லா நீதிமன்றங்களிலேயும் காணப்படுகின்றது.

அந்த நதிமன்றங்களுக்குத் தேவையான நீதிபதிகளை நியமிப் பதிலே காலதாமதம் ஆகின்ற காரணத்தினாலும், ஏராளமான நீதிபதிகளுடைய இடங்கள் காலியாக இருக்கின்ற காரணத்தி னாலும் உரிய நீதிபதிகளை உரிய காலத்திலே நியமிக்காத காரணத்தினாலும் வழக்குகள் மேலும் தேங்கிக்கொண்டு இருக் கின்றன. அந்த வழக்குகளுடைய தேக்கத்தைப் போக்குவதற்கு உடனடி நடவடிக்கைகளை நம்முடைய அரசு மேற்கொண்டு ஆக வேண்டும்.

இதிலே நம்முடைய உயர்நீதிமன்றத்திலே கூட 25 நீதிபதி கள் இருக்க வேண்டும். ஆனால் இப்போது 21 நீதிபதிகள் தான் நம்முடைய உயர்நீதிமன்றத்திலே இருப்பதாகக் கேள்விப்படு கிறோம். அதிலே நான்கு நீதிபதிகளை நியமிப்பதற்கான பதவிகள் காலியாக இருக்கின்றன. இன்னும் நியமிக்கவில்லை. நம்முடைய அரசு, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு 25 உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பது போதாது, அதை 32-ஆக உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறது.

(முற்பகல் 11-30.)

32 நீதிபதிகளை உயர்நீதிமன்றத்தில் நியமித்தால் தான் ஏரா ளக்கு வழக்குகளின் தேக்கம் குறையும் என்பதை நம்முடைய மாநில அரசுக்கு கோரிக்கையாக வைக்கிறேன். அப்படி இருக் கின்றபோது ஏற்கெனவே இருக்கக் கூடிய 25 நீதிபதிகளை நிய மிக்கலாம் என்பதில் கூட 4 நீதிபதிகளுடைய பதவி காலியாக இருக்கிறது என்று சொன்னால் அது பொருத்தமாக இல்லை. நம்முடைய மாநில அரசு உடனடியாக அந்த 4 உயர்நீதிமன்றத்தி னுடைய நீதிபதிகளை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற கவர்ன்மெண்டு பிளீடர்கள், பப்ளிக் புராசிகூட்டர்கள், ஏ.பி.பிக்கள் இப்படிப் பட்ட பதவிகள் ஏராளமாக நியமிக்க வேண்டி இன்னும் காலி யாக இருக்கின்றன. பொதுவாக ஒரு மரபு என்ன என்று சொன் னால் மாநிலத்திலே புதிதாக ஒரு அரசு உருவாகின்றபோது ஏற்கெனவே நியமிக்கப்பட்ட கவர்ன்மெண்டு பிளீடர்கள், பப்ளிக் புராசிகூட்டர்கள், ஏ.பி. பிக்கள் இவர்கள் ராஜினாமா செய்ய வேண்டும், ராஜினாமா செய்து விடுவார்கள். அதற்கு அடுத்து உடனடியாக புதிதாக உருவாகின்ற அரசு புதிய கவர்ன்மெண்டு பிளீடர்களையும், பப்ளிக் புராசிக்கூட்டர்களையும், ஏ.பி. பிக் களையும் நியமிக்கும். ஆனால் நாம் பதவி ஏற்று 2, 3

மாத காலம் ஆகிறது. இன்னும் எல்லா இடங்களிலும் கவர்ன்
மெண்டு பிளீடர்கள், பப்ளிக் புராசிக்கூட்டர்கள், ஏ. பி. பிக்கள்
இவர்களை நாம் நியமிக்கவில்லை என்பதை நம்முடைய மாண்பு
மிகு அமைச்சரின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அடுத்து. நீதிமன்றங்களினுடைய நிலை பலயிடங்களில் மிகவும்
மோசமாக இருக்கிறது. நீதிமன்றங்களின் பரிபாலனம், கட்டிட
பரிபாலனம், கட்டிடங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை
பற்றி இந்த புத்தகத்தில் நான் பார்த்தேன். 12 லட்சத்து 50
ஆயிரம் ரூபாய் தான் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற நீதி
மன்றங்களுடைய கட்டிடங்களை சீர் செய்வதற்கும், செப்பனிடு
வதற்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1989-90 ஆம் ஆண்டுக்கு.
இந்த 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயை வைத்துக் கொண்டு
தமிழகம் முழுவதும் இருக்கக் கூடிய கட்டிடங்களை சீர்செய்து
அங்கே இருக்கக்கூடிய பிரிட்டிஷ்காரன் காலத்து நாற்காலிகளை
மாற்றுவது எப்படி சாத்தியம் என்பதை நம்முடைய அமைச்சர்
அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே
இன்னும் அதிகப்படியான கட்டிடங்களை செப்பனிடுவதற்கு
அந்தத் தொகையை உயர்த்துவதற்கு ஆவன செய்ய வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நீதிபதிகளைப் பொறுத்தவரையில் பலயிடங்களில்
இருக்கக் கூடிய குறைபாடு என்னவென்று சொன்னால் பலயிடங்
களில் நீதிபதிகள் சரியான நேரத்திற்கு கோர்ட்டுக்கு போவது
இல்லை என்பது தான். மத்தியானத்திற்கு மேல்
பல நீதிபதிகள் கோர்ட்டுக்கு வருகிறார்கள். அதிலே இன்-
சார்ஜ் என்று போடப்படுபவர்கள், அடிஷனல் சார்ஜ் என்று
போடப்படுபவர்கள் அந்த நீதிமன்றத்தில் உள்ள நீதிபதிகள்
அங்கே போகவேண்டும் என்று சொன்னால் பல நீதிபதிகள் அங்கே
போவது இல்லை. அங்கே இருக்கக் கூடிய குமாஸ்தா மற்ற
வர்கள் சேர்ந்து வாய்தா என்று எழுதி கட்டை தூக்கி போட்டு
விடுகிறார்கள். ஆக இந்த மாதிரி சரியான நேரத்தில் அங்கே
செல்ல வேண்டும். அடிஷனல் சார்ஜ் இன்-சார்ஜ் என்று போட்
டால் கண்டிப்பாக அவர்கள் அந்த இடத்திற்குச் சென்று அந்தக்
காரியத்தை மத்தியானமோ அல்லது காலையிலோ அந்த
கோர்ட்டுகளுக்குச் சென்று அவர்கள் அந்தப் பணியை அன்றாடம்
ஆற்ற வேண்டும் என்பதை கண்டிப்பான முறையில்
இந்த அரசு கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பெரிய குற்றச்சாட்டாக சிலயிடங்களில் நீதிபதி
களைப் பற்றி வருவது என்னவென்று சொன்னால், நில ஆர்ஜிதத்
தில் தொகை நிர்ணயம் செய்வதில் மிக பயங்கரமான அளவில்
ஊழல் நடைபெறுகிறது என்பது. எல்லோரும் தப்பு செய்
கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. இந்த நில ஆர்ஜிதம்
செய்யும்போது கலெக்டர் மற்றவர்கள் எல்லாம் சேர்ந்து-கலெக்
டர் அவர்கள் கூட ஒரு நீதிபதிதான் எல்லாவற்றையும் பார்த்து





ஒரு நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு இவ்வளவு பணம் என்று அவர்கள் அரசு சார்பில் பிக்ஸ் செய்கிறார்கள் நிலத்தை கையகப்படுத்தும் போது. ஆனால் மறுபடியும் கொண்டுபோய் நீதிமன்றத்தில் அப்பீல் செய்யும்போது ஒரு ஏக்கர் நிலத்திற்கு 5 ஆயிரம் ரூபாய் என்று கலெக்டர் அவர்களால் அல்லது அங்கே இருக்கக்கூடிய நில ஆர்ஜித அதிகாரிகளால் நிர்ணயிக்கப்பட்ட அந்த தொகைக்கு மேல் 10 மடங்கு 20 மடங்கு என்று நீதிமன்றத்தால் அந்த தொகை நிர்ணயிக்கப்படுகிறது. அது எப்படி? கலெக்டர் செய்வது தப்பா? அல்லது நீதிமன்றத்திற்கு போனதற்குப் பின்னால் அங்கே இருக்கின்றவர்களுடைய தவறா? இதில் யார் பொறுப்பு? அதில் பெரிய வேரியேஷன், டிபரன்ஸ் எப்படி ஏற்படுகிறது. இதை நம்முடைய அரசு கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுரையில் உயர்நீதிமன்றத்தின் பென்ச் ஒன்றை அமைக்கவேண்டும் என்பது நீண்டகாலமாக இருக்கக்கூடிய ஒரு கோரிக்கை ஆகும். அதேபோல் சுப்ரீம் கோர்ட் பென்ச் ஒன்று சென்னையில் வரவேண்டும் என்பது பற்றி நாங்கள் எல்லாம் பாராளுமன்றத்தில் இருக்கும்போது அதைப்பற்றி பேசி அதைக் கொண்டுவருகிறோம் என்று ஒரு உறுதிமொழி மத்திய அமைச்சர் அவர்கள் டெல்லியில் தந்தார்கள். எங்களுக்கு அந்த டெல்லி அமைச்சருடைய உறுதிமொழி பற்றி நமக்குத் தெரியும். இது வரை அவர்கள்,அதைப்பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இப்போது இங்கே இருக்கக்கூடிய உயர்நீதி மன்றத்தினுடைய பென்ச் ஒன்றை மதுரையில் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்குக் கூட மத்திய அரசிடத்திலே நாம் அனுமதி பெறவேண்டியிருக்கிறது. இன்னும் அந்த அனுமதி கிடைக்கவில்லை. ஆகவே நம்முடைய சட்டத்துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசை மிகவும் வலியுறுத்தி இந்த ஆண்டு இறுதிக்குள் உயர்நீதிமன்றத்தின் பென்ச் ஒன்றை மதுரையில் ஏற்படுத்தவேண்டும் அந்த பகுதி மக்கள், தென்பகுதியில் உள்ள மக்கள்,கன்னியாகுமரியிலிருந்து வருகின்றவர்கள் இப்போது மெட்ராஸ் வரவேண்டியிருக்கிறது. அங்கே சென்று அவர்கள் நீதி பெறுவதற்குப் பதிலாக மதுரையிலே நிச்சயமாக ஹை-கோர்ட். பென்ச்சை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, சின்னச் சின்ன வழக்குகள் என்று, ‘பெட்டி கேசஸ்’ என்று சொல்லப்படுகின்ற வழக்குகள் முடிக்கப்படாமல் ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் தேங்கிக் கிடக்கின்றன. முன்பெல்லாம் ஆனரரி மேஜிஸ்டிரேட் என்று இருப்பார்கள். ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரங்களிலும் அவர்களைப் பார்க்கலாம். அந்தந்த ஊர்களிலே இருக்கக்கூடிய கௌரவமானவர்களை, அந்தந்த ஊர்களிலே இருக்கக்கூடிய நியாயவான்களை நீதி பரிபாலனம் செய்வதற்கென்று கௌரவ மாஜிஸ்டிரேட்டாக நியமிப்பார்கள். சாதாரண சின்ன வழக்குகளையெல்லாம் அவர்கள் விசாரித்து முடிக்கின்ற ஒரு நிலைமை இருந்தது. இப்

போது என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, அந்தக் கௌரவ மாஜிஸ்டிரேட் பதவி, ஆனரரி மாஜிஸ்ரேட் பதவி இப்போது எங்கும் இல்லை. ஆகவே தயவுசெய்து நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அதைக் கவனித்து எல்லா இடங்களிலேயும் இந்த கௌரவமாஜிஸ்டிரேட்டுகளை நியமித்தார்களானால் அவர்களால், இந்தக் கோர்ட்டுகளில் முடிக்கப்படாமல் இருக்கக்கூடிய சின்ன சின்ன வழக்குகள் காலதாமதம் ஏற்படாமல் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று நான் இந்த அரசை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, நீதிமன்றங்களைப் பற்றி நான் சொல்ல விரும்புவது, கோயம்புத்தூரிலே இருக்கக்கூடிய கோர்ட் பற்றி. இது பற்றி நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கோயம்புத்தூரிலே இருக்கக்கூடிய செஷன்ஸ் கோர்ட். அந்த கோர்ட் இருக்கும் இடத்திற்குப் பின்னாலே நிறைய இடம் இருக்கிறது. அதற்குப் பின்னாலே இன்னும் மூன்று பெரிய கட்டிடங்களைக் கூட கட்டலாம்; அந்த அளவிற்கு அங்கே நிறைய நிலம் இருக்கிறது. ஆனால், அவ்வாறு கட்டாததால் வழக்கு நேரத்திலே அங்குள்ள வழக்கறிஞர்களைப் பார்த்தீர்களானால், ஒவ்வொரு கோர்ட்டும் ஒவ்வொரு இடத்திலே இருப்பதால் இங்கும் அங்கும் ஓடிக்கொண்டு இருப்பார்கள். ஒரு பர்லாங்குக்கு அந்தப் பக்கம் ஒரு கோர்ட் இருக்கும். இரண்டு பர்லாங்குக்கு இந்தப் பக்கம் ஒரு கோர்ட் இருக்கும். அங்கிருந்து இங்கிருக்கும் வழக்கிற்கு ஓடிவருவது; இங்கிருந்து அங்குள்ள வழக்கிற்கு ஆஜராக ஓடுவது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. கலெக்டர் ஆபிசிலே ஒரு கோர்ட் இருக்கிறது. பஸ்ஸ்டாண்ட் பக்கத்திலே ஒரு கோர்ட் இருக்கிறது. ஆகவே செஷன்ஸ் கோர்ட் இருக்கிற வளாகத்திலேயே இடம் இருக்கிற காரணத்தினால், அந்த காம்பௌண்டுக்குள்ளேயே எல்லா கோர்ட்டுகளுக்கும் தனித் தனியாக கட்டிடங்களைக் கட்டி இடம் ஒதுக்கினீர்கள் என்று சொன்னால், நீதிபதிகளுக்கும் சரி, வழக்கறிஞர்களுக்கும் சரி ரொம்ப வசதியாக இருக்கும். எங்கெங்கோ இருந்து ஓடிவந்து, காலதாமதமாக ஓடிவந்து, நீதிபதிகளுடைய கண்டனத்திற்கு வழக்கறிஞர்கள் ஆளாக வேண்டிய தேவை இருக்காது. ஆகவே தயவுசெய்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒருசில கருத்துக்களை இந்தச் சிறைச் சாலைகளைப் பற்றி நான் கூற விரும்புகிறேன். ரொம்ப காலம் நாமெல்லாம் சிறைகளில் இருக்கக்கூடிய வாய்ப்புக்களைப் பெற்றவர்கள் என்ற காரணத்தினால் அந்தக் கருத்துக்களை இங்கே சொல்வது மிக அவசியமானது என்று கருதுகிறேன். சிறைச் சாலைகளிலே பொதுவாக கவனிக்க வேண்டியது என்னவென்று சொன்னால், சிறைக் கைதிகளுடைய நிலைமைகள். அவர்களுடைய உணவு





நிலைமையாகட்டும். அங்கேயிருக்கிற கைதிகளுக்கு வழங்கப்படுகின்ற உடை மற்ற விவரங்களாகட்டும், சுகாதார வசதிகளாகட்டும், மருத்துவ வசதியாகட்டும் இவைகளை இன்னும் சற்று மேம்படுத்துவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, ஆயுள் தண்டனைக் கைதிகள். 14 வருடம், 15 வருடம் என்று எத்தனையோ வருடங்கள் அவர்கள் சிறையில் இருந்தாலும் அவர்களைப் பற்றி ஏனென்று கேட்கவே ஆள் கிடையாது. அவர்களெல்லோரும் ஆயுள் தண்டனைக் கைதிகளாவார்கள். வயதான கைதிகள் பலர் இப்படி இருக்கிறார்கள். சந்தர்ப்பச் சூழ்நிலையின் காரணமாக குற்றம் செய்த பல கைதிகள் ஆண்டுக்கணக்கில் அங்கே அனாதைகளாகக் கிடக்கிறார்கள். ஆகவே, அந்தக் கைதிகளுடைய நிலைமைகளைப் பற்றியெல்லாம் நம்முடைய அரசு கருணையோடு பரிசீலித்து குறைந்தபட்சம் 10 ஆண்டுக் காலம் முடிந்ததற்குப் பின்னாலாவது, ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுதலை செய்வதற்கு ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கொடுமையான குற்றம் செய்து, க்ருயல் குற்றம் செய்து தண்டனை பெற்ற கைதிகளை வேண்டுமானால் விடுதலை செய்ய வேண்டாம். 10 வருடமானாலும், 15 வருடமானாலும் இந்த மாதிரி கொடுமையான குற்றம் செய்த கைதிகள் உள்ளேயே இருக்கட்டும். ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலையின் காரணமாக, கோபத்தாலும், அவசரத்தாலும், பல்வேறு செயல்களில் ஈடுபட்டு இன்றைக்கு ஆயுள் தண்டனைக் கைதிகளாக உள்ளே இருக்கிறார்கள். அவர்களுடைய தண்டனையை ஒரு 10 ஆண்டுக் காலத்திற்கு மேலே நீட்டிக்காமல் அவர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, திறந்தவெளிச் சிறைச்சாலைகளைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே திறந்த வெளிச் சிறைச்சாலை என்பது கோயம்புத்தூர் மாவட்டத்தில், என்னுடைய தொகுதியிலிருக்கிற சிங்காநல்லூரில்தான் இருக்கிறது. ஒரே ஒரு சிறைச்சாலைதான் இந்த மாதிரி இருக்கிறது. ஏறக்குறைய 100 கைதிகள் அங்கே இருக்கிறார்கள். அந்த திறந்த வெளிச் சிறைச்சாலையில் இருக்கிற கைதிகளுக்கு அரசாங்கம் செய்திருக்கிற, பாராட்டக்கூடிய ஒரு அம்சம் என்னவென்று சொன்னால், அவர்கள் வேளாண்மை செய்வதற்காக ஒரு அதிகாரியை நியமித்து அந்த வேளாண்மைத் துறையிலே எல்லா விதமான பயிற்சியும் இந்தத் திறந்த வெளிச் சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்கு அளிக்கப்படுகின்றது. ஆகவே இப்படிப்பட்ட திறந்த வெளிச் சிறைச்சாலைகளை தமிழ்நாட்டிலே ஒவ்

வொரு மாவட்டத்திலேயும் அமைப்பதற்கு நம்முடைய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அரசியல் கைதிகளுக்கு சிறைச்சாலைகளில் ஏ-வகுப்பு கொடுக்கவேண்டுமென்று ஒரு நீதிமன்றத் தீர்ப்புகூட இருக்கிறது. அப்படி ஏ-வகுப்பு கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பு இருந்தாலும் கூட, பல சிறைச்சாலைகளில், அரசியலில் ஈடுபடுபவர்கள் போராட்டத்திலே ஈடுபட்டு சிறைச்சாலைக்குப் போகின்றபோது அவர்களுக்கு ஏ-வகுப்பு அளிக்கப்படுவதில்லை. அதையும் இந்த அரசு கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

சிறைக் கைதிகளைப் பூட்டுவது இருக்கிறதே, சரியாக மாலை 6.00 மணிக்கெல்லாம் சிறைச்சாலைகளிலே கைதிகளைப் பூட்டி னால் மறுநாள் காலை 6.00 மணிக்குத்தான் திறக்கிறார்கள். 6 மணிக்குப்பூட்டுவது என்று சொன்னால் 5 மணிக்கே கைதிகளைக் கொண்டுவந்து வரிசையில் நிற்கவைத்து இரவுச் சாப்பாட்டைக் கொடுத்து, சிறையிலே பூட்டினால் மறுநாள் காலை 6 மணிக்குத் தான் திறந்து விடுகிறார்கள். பிரிட்டிஷ் காலத்தில் போட்ட அந்தக் கொடுமையான சட்டத்தை நாம் இன்னும் கடைப்பிடிக்க வேண்டுமா? இவ்வளவு கொடுமை தேவையில்லை. மாலை 6 மணிக்கே பூட்டுகின்ற முறையை மாற்றவேண்டும். 6 மணிக்குப் பதிலாக 8 மணிக்கு பூட்டலாம். இரவு 8 மணிக்கு பூட்டி, காலை 6 மணிக்கு திறந்துவிடலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குத் தேவையான உத்தரவைப் பிறப்பிக்க வேண் டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறைப் பார்வையாளர்களை நியமிப்பது மிகவும் முக்கியமானது. பல இடங்களில் சிறைப் பார்வையாளர்கள் நியமிக்கப்படவில்லை. பக்கத்து ஊர்களில் இருக்கக்கூடிய பெரிய வர்கள், முக்கியமானவர்கள், நம்பிக்கைக்கு உரியவர்கள் போன்ற வர்களை சிறைப் பார்வையாளர்களாக நியமிப்பார்கள். அவர் கள் அவ்வப்போது சிறைக்குச் சென்று கைதிகளைப் பார்வையிடு வார்கள் அப்போது அந்தக் கைதிகள் ஏதாவது குறைபாடுகளைச் சொன்னால் அதை சிறை அதிகாரிகளிடம் சொல்லி, அல்லது அரசாங்கத்திற்குச் சொல்லி, பரிகாரம் காணக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. பல இடங்களில் சிறைப் பார்வையாளர்கள் நியமிக்கப்படாமல் இருப்பதால் அந்த வாய்ப்பு தற்போது இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறைப் பார்வையாளர்கள் நியமிக்கப்படாத இடங்களில் எல்லாம் உடனடியாக நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்தபடியாக, தொழிலாளர் நல நீதிமன்றங்கள் இருக் கின்றன. அங்கே வழக்குகள் ஆண்டுக் கணக்கில் தேங்கிக் கிடக் கின்றன. இப்படித் தேங்கிக் கிடந்தால் தொழிலாளர்களுக்கு எப்படி நியாயம் கிடைக்கும்? மேனேஜ்மெண்டுக்கும் தொழி லாளர்களுக்கும் இடையே நடைபெறுகின்ற வழக்கு 10, 13 ஆண்டுக் காலம் முடிவுபெறாமல் இருந்தால் அவர்களுக்கு நிச்சய மாக நியாயம் கிடைக்காது. ஆகையால் தொழிலாளர் நல கோர்ட்டுகளில் வழக்குகள் விரைந்து முடிக்கப்பட வேண்டும்; அதற்கு தகுந்த நடவடிக்கை நம்முடைய அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் 5 நிமிடங்கள் அதிகமாக எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்; விரைவில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. இரா. மோகன் : இன்னும் ஒரே நிமிடத்தில் முடித்து விடுகிறேன். சிறை வார்டன்கள் இருக்கிறார்கள். உண்மையான கைதி யார் என்று கேட்டால் இந்த சிறை வார்டன்கள்தான். அவர்களுடைய நிலைமை உயர்வதற்கு வழிவகை காணவேண்டும். குறிப்பாக, அவர்களுக்கு வீட்டுவசதி இல்லை. தயவுசெய்து அவர்களுக்கு தகுந்த வீட்டுவசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை சிறைச்சாலையில் இயங்கிவருகிற நூற்பாலை நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் இருக்கக் கூடிய சிறைச்சாலைகளுக்கு அங்கிருந்து சப்ளை செய்யப்படு கிறது. மேலும் அந்த நூற்பாலையை 'இம்ப்ரூவ்' செய்ய வேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

6. ஒழுங்குப் பிரச்சினை—தொடர்ச்சி.
பேரவை வளாகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிப்பு குறித்து.
—தொடர்ச்சி.

திரு. ரெ. பிச்சைமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். சட்டமன்றத்திலிருந்து உறுப்பினர்கள் வெளியே சென்று காப்பி யோ பாலோ அருந்திவிட்டு உள்ளே வரும்போது காவலர்கள் வெளியே தள்ளுகின்ற நிலைமை இருக்கிறது. கேட்டால், உங்க ளிடம் 'பாஸ்' இருக்கிறதா என்று கேட்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் என்று சொல்லியும் வெளியே தள்ளுகிறார்கள். நம் முடைய அலுவலகத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏதாவது அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதா? சட்டமன்ற உறுப் பினர் என்று சொல்லியும் உள்ளே விட மறுக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் களுடைய பாதுகாப்புக் கருதித் தான் அவர்கள் இப்படிக் கேட் கிறார்கள்.

5. மானியக் கோரிக்கைகள், 1989-90—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற நீதி நிருவாகம், சிறைச்சாலைகள் மானியக் கோரிக்கைகள்மீது நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய நாட்டில் லெஜிஸ்லேச்சர், எக்சிகியூட்டிவ், ஜுடிசியல் ஆகிய இந்த மூன்றும் இண்டிப்பெண்டெண்டாக தனித்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் நீதிபதிகளை நியமனம் செய்கிறபோது ஜுடிஷியரிலிருந்து நியமிக்காமல் எக்சிகியூட்டிவ் லெவலில் இருந்து நியமிக்கிறார்கள். ஜுடிஷியரியில் உள்ளவர்களைத்தான் நீதிபதிகளாக நியமிக்க வேண்டும் ; மற்றவர்களை நியமிக்கக் கூடாது. குறிப்பாக மாஜிஸ்டிரேட், ஜட்ஜஸ் போன்றவர்களை நீதித்துறையில் இருந்து தான் நியமிக்க வேண்டும்.

இங்கே கொடுத்திருக்கிற அறிக்கையில் ஹைகோர்ட் பற்றித் தான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர சப்மாஜிஸ்ட்ரேட் கோர்ட், முன்சீப் கோர்ட், பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. அவர்களுக்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்று சொல்லப்படவில்லை ; இது மிகவும் வருத்தப்படத்தக்கது.

குறிப்பாக, மெட்ராஸ் High Court அட்வகேட்ஸ் அசோசியேஷன் ஒரு ரெசலூஷன் பாஸ் பண்ணி அனுப்பியிருக்கிறார்கள். அதிலே ஜுடிஷியல் ஆபிசர்கள் பற்றி சொல்லியிருக்கிறர்கள். அதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் There is corruption and evil என்று சொல்லி, ரெசலூசன் பாஸ் பண்ணி அனுப்பியிருக்கிறார்கள்.

அவர்களும் பலவிதமான போராட்டங்களை நடத்தியது எல்லாம் நமக்கும் தெரியும். இதை அப்படி அந்த அளவுக்கே விட்டுவிடுவது என்பது சரியாக இருக்காது. நீதிபதிகளையே கரப்ஷன் என்று சொன்னால் நாட்டிலே நியாயமே நடக்க முடியாது

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : துணைத் தலைவர் அவர்களே, திரு. சுந்தரதாஸ் அவர்கள் சொல்வதிலே எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் இந்த முடிந்து போன பிரச்சினையை மீண்டும் கிளப்பி இரண்டு சாராருக்கும் ஒரு மோதல் உருவாகாமல் இருப்பதுதான் நல்லது. அந்த மெமோரண்டத்திலே கூட குறிப்பிட்டு அப்படி யார் செய்தார்கள் என்பதில்லாமல் பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.



அப்படிப் பொதுவாக இருக்கலாமா என்று தான் நான் கேட்க விரும்புகிறேன். குறிப்பிட்டுச் சொன்னால் உயர் நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது. எல்லாத் துறையிலும் நல்லவர்களும் இருக்கிறார்கள் ; தீயவர்களும் இருக்கிறார்கள். எனவே, பொத்தாம் பொதுவாக நீதிபதிகளைப் பற்றி இப்படிக் குற்றம் சாட்டுவது முறையாகாது. நம்மைப் பற்றி அதாவது அரசியல்வாதிகளைப் பற்றித் தவறான எண்ணம் இருந்தாலும் கூட நீதிமன்றத்திலே நீதி கிடைக்கும் என்று நம்புகிறார்கள். அந்த நம்பிக்கை பாழாகாத அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்துக்களைச் சொன்னால் அது பலன் அளிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, நான் அதற்காகத்தான் அதன் உள்ளே செல்ல விரும்பவில்லை. ரெசலூஷன் போடப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது என்றுதான் சொன்னேனே தவிர நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அந்த ரெசலூஷனிலே உண்மைகள் இருக்கலாம்.

இன்று நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், 'விஜிலன்ஸ் செல்' என்றிருந்தாலும் கூட அது 'ஆண்டி கரப்ஷன்' என்பதுடன் 'அட்டாச்' செய்யப்படவில்லை. அது தனியாக இருக்கிறது. ஆனால் கேரளா மாநிலத்தில் ஒரு டி.ஐ.ஜி. நியமனம் செய்து 'ஆண்டி கரப்ஷன்' துறையோடு விஜிலன்ஸ் அட்டாச் செய்து வைத்திருக்கிறார்கள். ஆகவே அதிலே தவறு என்று சொன்னால் உடனடியாக அந்த சீப் ஜஸ்டிஸ் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். ஆகவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால் நீதிமன்றம் சுத்தமானதாக இருக்கவேண்டுமென்றால் ஒரு டி.ஐ.ஜி. நியமித்து, அத்துறையை 'ஆண்டி கரப்ஷன்'-உடன் 'அட்டாச்' செய்து அதனுடைய 'ரிப்போர்ட்' அமைச்சருக்கோ அல்லது சம்பந்தப்பட்டவர்களுக்கோ கொடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் 'மெட்ராஸ் பார் கவுன்சில்'-லே இருந்து 21—5—1987-லே ஒரு 'ரெசலூஷன்' போட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. 'மெட்ராஸ் பார் கவுன்சில்' இது ஒரு 'கவர்ன்மெண்ட்' நிறுவனம்.

இன்னொன்று, நம்முடைய 'அட்வகேட்ஸ்' 'க்வாஷி ஜுடிஷியல் ஆபிஸர்ஸ்'-ஐ அல்லது ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் காணச் சென்றால் அவர்களுக்கு மதிப்பு கொடுப்பதே இல்லை என்றும் அரை மணி நேரம், ஒரு மணிநேரம் அவர்கள் காக்க வைக்கப்படுகிறார்கள் என்றும் நம்முடைய 'சீப் செக்கரட்டரி' அவர்களுக்கு எழுதப்பட்டிருக்கிறது.

"I am directed to communicate the following Resolution (30/87) passed by the Bar Council of Tamil Nadu at a meeting held on 18th April 1987 :—

It has come to the notice of the Bar Council that when advocates want to meet the officers of the Government or quasi-judicial officers, they are made to wait for long time. The Bar Council is of the view that whenever the advonates want to meet Government officers or quasi-judicial authorities in connection with their professional work, they should be given priority.

The Council resolves to request the Government that the officials may be instructed suitably so as not to make the advocates wait for a longtime.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் ஒரு தவறான கருத்து ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக நான் ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். அரசு அதிகாரிகளானாலும் சரி, அமைச்சர்களானாலும் சரி, அவர்களிடத்திலே முன்கூட்டியே நேரத்தை வாங்கிக் கொண்டு பார்ப்பதற்குச் சென்றால் அதிலே சங்கடம் எதுவும் இருக்காது. ஆனால் சில பேர் சாதாரணமாக என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் ஏதோ போனால் 'இண்டர்வியூ' கிடைக்கும் என்று எண்ணிக் கொண்டு வருகிறார்கள். அதனால் ஏற்படக்கூடிய கோளாறு தான் இது. ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது, நான் ரெவின்யூ அமைச்சராக இருந்தபோது திட்டவட்டமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் அறிவித்தது என்னவென்றால், 'அட்வகேட்ஸ்' வந்தால் அவர்களை முதலிலே கேட்டு அவர்களுடைய பிரச்சினைகளை முதலிலே முடித்து அனுப்பவேண்டுமென்பதுதான். எனவே, இதனை மனதில் கொண்டு குறித்த நேரத்தில் அவர்கள் வந்தால் அது பலனுள்ளதாக இருக்கும்.

[மாண்புமிகு [மாற்றுத் தலைவர் தலைமை]

அவர்கள் என்ன பண்ணுகிறார்கள் என்றால் ஹைகோர்ட்டிலே வேலைகளை முடித்துவிட்டு 'லஞ்ச் இண்டர்வல்' சமயத்திலே இங்கே வருகிறார்கள். அப்படி அவர்கள் இங்கே வரும் போது அதிகாரிகள் வேலையில் இருக்கிறார்கள். அதனால்தான் இந்தத் தவறு இருக்கலாமே தவிர யாரும் வழக்கறிஞர்களைக் காக்க வைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு செய்திருக்க மாட்டார்கள். அப்படிச் செய்திருப்பதாக நான் கருதவில்லை. அப்படிச் செய்யவும் மாட்டார்கள். இனிமேல் அப்படி நடைபெறாது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாமெல்லாம் வக்கீல். நம்முடைய பெர்மனென்ட் தொழில் வக்கீல் தொழில். அதிகாரிகளையும், கிளார்க்குகளையும் பாதுகாக்கின்ற பொறுப்பு நமக்கு இருக்கிறது. இதிலே சீப் செக்கரட்டரி பதில் கொடுக்கவில்லை என்று கூட எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே தயவுசெய்து மாண்புமிகு அமைச்சரின் அறிக்கையையே அரசு ஒரு ஆணையாக எடுத்துக் கொள்ளவேண்டும் ; எடுத்துக்கொள்ளும் என்று நான் நினைக்கிறேன். இனிமேல் அப்படி நடக்காது என்று நான் நினைக்கிறேன்

அடுத்து நோட்டரி பப்ளிக். நோட்டரி பப்ளிக் பெர்மனென்ட்டாக இருக்கிறார்கள். நோட்டரி பப்ளிக் 62 வயதுக்கு மேல் இருக்கக்கூடாது என்று ஒரு 'சீலிங்'-ஐக் கொடுக்கவேண்டும்.

(முற்பகல் 11–50)

இப்போது ரிட்டையர்ட் ஆபீசர்கள் எல்லாம் நோட்டரி பப்ளிக் ஆக இருக்கிறார்கள். ஆக இளைய வழக்கறிஞர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. நோட்டரி பப்ளிக் என்று சொன்னால், அவர்களுடைய பீசை கூட்டி அவர்கள் ஐந்து ஆண்டுக்காலம் ஜி.பி., பி.பி. மாதிரி கொடுக்கப்படும் நிலை இருக்கிறது. இப்போதுள்ள நிலையை, முறையை மாற்றிக் கொள்ளவேண்டும். 62 வயது என்று மாற்ற வேண்டும். Once Notary public always Notary public என்ற மாதிரி இருக்கக்கூடாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பிரச்சினையிலே தலையிடவேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையில் ஹைக்கோர்ட்டிலே 7 ஜட்ஜுகள் வேண்டும் என்று கேட்டு இருக்கின்றீர்கள். நம்முடைய மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலே, முன்சீப் கோர்ட்டிலே நீதிபதிகள் இருக்கிறார்களா? குளித்துறையைப் பொறுத்தவரையில், நான் என்னுடைய தொகுதிக்கு போகவில்லை. விளவங்கோடு—குளித்துறைப் பகுதி என்றால் 'பனிஷ்மெண்ட்' தொகுதி என்று நினைத்துக் கொண்டோ என்னவோ அங்கு பனிஷ்மெண்ட்' ஆன ஆட்களைக் கொண்டுவந்து போடுகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன். அங்கேகூட அவர்கள் வந்து வேலைகளைத் தொடங்குகிறார்கள்.

அங்கே பார் அசோசியேசன் செக்கரட்டரி கொலை செய்யப்பட்டிருக்கிறார். அந்தத் தகராறுக்கு நான் போகவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள். நாமே அந்தப் பிரச்சினையை உருவாக்கவேண்டாம் என்பதற்காக நானும் சொல்லவில்லை. எங்களுடைய பார் அசோசியேஷன் செக்கரட்டரி கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

காரணத்தை எல்லாம் நன்றாகச் சொல்லமுடியும். அதனால் இதிலே ஜுடிசியரிக்கும் லெஜிஸ்லேசருக்கும் பிரச்சினை உருவாகிவிடக் கூடாது என்பதற்காக சொல்ல விரும்பவில்லை. அந்த நீதிமன்றத்திலே யாரையும் பூர்த்தி செய்யவில்லை. என்னுடைய தொகுதி பொறுத்தவரையிலே நீதிமன்றத்திலே ஆயிரக்கணக்கான கேஸ்கள் தேங்கியிருக்கின்றன. முன்சீப் மேஜிஸ்ட்ரேட், சப் மேஜிஸ்ட்ரேட், சப் ஜட்ஜுகள் எத்தனை கேஸ்களில் தான் தீர்ப்பு சொல்லமுடியும் என்று நமக்குத் தெரியும். அதை கணக்கில் எடுத்துக்கொண்டு நீங்கள் நீதிபதிகளை நியமிக்கக்கூடாது. ஹைகோர்ட்டுக்கு ஏழு பேர்கள் பற்றி சொல்கிறீர்கள். ஆனால் நம்முடைய கையிலே இருக்கின்ற மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டு, சப்கோர்ட்டு, முன்சீப் கோர்ட், இவைகளுக்கு உடனடியாக நீங்கள் நியமிக்கலாமே என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அட்வகேட்டைப் பொறுத்தவரையில் இன்று It is a noble profession, but it is now in a eteriorating condition. என்னவென்று கேட்டால் வழக்கறிஞர்களுக்கு எந்த ஒரு பர்மனன்ட் இன்கம் இல்லை. வருமானம் இருக்கின்றவர்களும் இருக்கிறார்கள், இல்லாதவர்களும் இருக்கின்றார்கள். அவர்களுக்காக எந்த பெனிபிட் செய்யும் அளவில் எந்த பண்ட்சும் உருவாக்கப்படவில்லை. பென்சன்களும் தமிழ்நாட்டில்உருவாக்கப்படவில்லை. நான் இப்போதுள்ள அமைச்சரை குறைசொல்லவில்லை. 2 மாத காலம் தான் ஆகிறது. அவரைச் சொல்லமுடியாது. அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு இப்போது கொண்டு வருகிறேன். பல மாநிலங்களில் வழக்கறிஞர்களுக்கு என்று தனி பண்ட் உருவாக்கப்பட்டிருக்கிறது. பென்சன் கொடுக்கும் திட்டம் இருக்கிறது.

அதே போன்று, ஒரு அரசு ஊழியர் இறந்துவிட்டார் என்று சொன்னால், ஒரு டாக்சி டிரைவர் இறந்துவிட்டார் என்று சொன்னால், இன்னும் சொல்லப்போனால் ஒரு கூலி வேலை செய்பவர் இறந்துவிட்டால், அவருடைய குடும்பத்திற்கு நிதி உதவி கொடுக்கின்ற திட்டங்களை அரசு வைத்திருக்கிறது. ஆனால் ஒரு வழக்கறிஞர் பணி செய்யும்போது இறந்துவிட்டால் ஒன்றுமில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்வது, அமைச்சர் அவர்களும் வழக்கறிஞர் என்ற முறையிலே கேட்டுக்கொள்கிறேன். கருணை உள்ளம் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கூறியாவது நிச்சயமாக வழக்கறிஞர்களுக்கு ஒரு பண்ட் உருவாக்கித் தர வேண்டும் என்றும், இறந்துபோனால் கொடுப்பதற்கு, பென்சன் கொடுப்பதற்கு, மாதம் ரூ. 10 அல்லது ரூ. 15 வாங்கிக் கொள்ளலாம். அந்த நிலையை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பலபேர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு வக்கீல் ஆபீசில் பார்த்தால், 8 பேர், 10 பேர் இருக்கின்றார்கள். குறைந்தது இரண்டு பேர்களாவது இருப்பார்கள். அதுபோல



வக்கீல் கிளார்க்களுக்கும் பண்ட் உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அவர்களும் Citizen of India -தான். அவர்களும் படித்திருக்கிறார்கள். அந்த அட்வகேட்ஸ் கிளார்க்ஸ் கூட ஒரு 'ஸ்ட்ராங்கான யூனியன்' வைத்து இருக்கின்றார்கள். அவர்கள் கூட என்னிடம் சொன்னார்கள். நீங்கள் பேசும்போது எங்களுடைய கோரிக்கைகளையும் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கும் ஒரு பண்ட் உருவாக்கவேண்டும். பென்சன் கொடுக்கிற நிலையை உருவாக்கவேண்டும். எவ்வளவோ கோடி ரூபாய் வருமானம் நாட்டிலே வருகிறது. அவர்களுக்காக, வழக்கறிஞர்களுக்காக, கிளார்க்குகளுக்காக ஒரு கணிசமான தொகையை ஒதுக்கிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்ற வேகன்சிகள் பல இடங்களில் நிரப்பப்படாமல் இருக்கின்றது. ஹைகோர்ட் மாத்திரமல்ல நம்முடைய நீதிமன்றம், ஏழையெளிய மக்கள் இருக்கின்ற சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் சப் மேஜிஸ்ட்டிரேட்டு, நாங்குநேரி தாலுக்காவிலே, நம்முடைய சகோதரி எம்.எல்.ஏ. அவர்கள்கூட சொன்னார்கள், அந்த கோர்ட்டிலேயும் பல ஆண்டுகளாக மேஜிஸ்ட்ரேட் இல்லை என்று. அதுபோல குளித்தலையிலும் நீதிபதிகள் இல்லாமல் இருக்கின்றார்கள். ஆகவே உடனடியாக நீங்கள் நீதிபதிகளை, மேஜிஸ்ட்ரேட்டுகளை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பார் அசோசியேஷன் பில்டிங்க்ஸ் பொறுத்தவரையில், எங்கள் குளித்துறை கோர்ட்டு பொறுத்தவரையில் சப் கோர்ட் வேண்டுமென்று பார் அசோசியேஷன் பில்ட்டிங்-கை நாங்களாகவே 1974லே சரண்டர் செய்து கொடுத்தோம். ஆனால் 1974-க்கு பின்னால் இதுவரையிலும் எங்களுக்கு பார் அசோசியேஷன் பில்ட்டிங் கட்டித் தரவில்லை. எப்போது கேட்டாலும் பைனான்ஸ் செக்கரட்டரியிடம் இருக்கிறது என்று சொல்கின்றார்கள். அதற்குப் பின்னரும் பார் அசோசியேஷன் செக்கரட்டரி எல்லாம் கொண்டுவந்து பார்த்திருக்கிறேன். என்னவென்று கேட்டாலும் சென்று வாருங்கள் வந்துவிடும் என்று சொல்கிறார்கள். நாங்கள் பார் அசோசியேஷன் கட்டடத்தை வாலண்டரியாகக் கொடுத்தோம். குளித்துறை பில்ட்டிங்-கை சரண்டரை செய்தாலும்கூட இந்த அரசாங்கம் நிச்சயமாக முதலமைச்சர் அவர்களிடம் கூறியாவது தனி நிதி ஒதுக்கி நீங்கள் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பப்ளிக் பிராசிகியூட்டர் பிரச்சினைக்கு வருகிறேன். இன்றைக்கு நிறைய பப்ளிக் பிராசிகியூட்டர் பணியிடங்கள் நியமனம் ஆகாமல் இருக்கின்றன. அவற்றை எல்லாம் நிரப்ப வேண்டும். இதனால் அரசாங்க கேஸ்கள்

[திரு. மா. சுந்தரதாஸ்] [1989 ஏப்ரல் 12

நிறைய தேங்கிக் கிடக்கின்றன. அரசாங்க பிளீடர் வக்காலத்து போட்டு கவுண்டர் போடுவதில்லை. அதுபோல இன்ஜெங்சன் வாங்குவதும் இல்லை. அரசாங்க அதிகாரிகளும், அரசு வழக்கறிஞர்களும் முனைப்பாக இருந்தால் நிச்சயமாக ஸ்டே கொடுக்காமல் நிறைய இடங்களில் தடுத்திருக்க முடியும். அவர்கள் அவ்வப்போது உடனுக்குடன் கேசை கவுண்டர் போட்டிருந்தால் ஸ்டே கொடுக்காமல் பல கேஸ்களை தடுத்திருக்கலாம். பொதுவாக ஸ்டேயை வெக்கேட் பண்ணுவதற்கு கவுண்டர் போடுவதில்லை. இதன் காரணமாக இன்றைக்கு எத்தனையோ கேஸ்கள் பெண்டிங்கில் இருக்கின்றன. இவர்களைப் போடும்போது அரசு நல்லவர்களாக, வல்லவர்களாக பார்த்துப் போட வேண்டும். ஜி.பி.க்களை அதிகாரிகள் போய் பார்ப்பதை 'பிலோ தேர் டிகினிட்டி' என்று நினைக்கிறார்கள். பொதுவாக ஜி.பி. உடனுக்குடன் வக்காலத்தையும், கவுண்டரையும் பைல் பண்ணுவதில்லை. வழக்குகள் இம்மாதிரி தேங்கிக் கிடப்பதால் பலர் ஹைக்கோர்ட்டில் கேஸ் போடுகிறார்கள். ஆகவே, இந்நிலைமைகளை எல்லாம் தவிர்க்க, மாற்றியமைக்க அரசு நல்லவர்களாக வல்லவர்களாக பார்த்து ஜி.பி.க்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டு இன்னும் ஒரே ஒரு கருத்தைச் சொல்லி விடைபெறலாம் என்று கருதுகிறேன்.

என்னுடைய தொகுதியில், குழித்துறையில் ஒரு சப்-ஜெயில் இருக்கிறது. அங்கே தண்ணீர் வசதியில்லை. அங்கேயுள்ள அதிகாரிகளே கைதிகளை காலையில் குளிப்பதற்காக வெளியே அழைத்துச்செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அப்போது கைதி ஒருவர் ஓடிவிட்டார் என்றால் உடனே சம்பந்தப்பட்ட அதிகாரியை சஸ்பென்ட் செய்து விடுவார்கள். என் வீடு இந்த சப்-ஜெயிலுக்கு பக்கத்தில் இருப்பதால் இது குறித்து அங்கேயுள்ள தாசில்தாரைப் பார்த்து கேட்டேன். ஆனாலும் இதுவரை அங்கே தண்ணீர் வசதிக்கு வழிவகை செய்யப்படவில்லை. அங்கே தண்ணீர் வருகின்ற டேப்பை அடைந்து விடுவதாகச் சொல்கிறார்கள். ஆகவே, அரசு அந்த குழித்துறை சப்-ஜெயிலுக்கு தண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த சப்-ஜெயில் 15, 20 பேர்களுக்காக, வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப்பட்டது. அந்தக் கட்டிடம் இப்போது போதவில்லை. எந்த வசதியும் அதில் இல்லை. ஆகவே, குழித்துறையில் ஒரு புதிய சப்-ஜெயில் உருவாக்க வேண்டுமென்றும், அதற்குத் தேவையான இடம் அங்கே இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, தண்ணீர் வசதியில்லாத ஜெயில்களில் எல்லாம் கைதிகளுக்கு நல்லது செய்வதற்காக தண்ணீர் வசதியை செய்து கொடுக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன் நன்றி, வணக்கம்.



1989 ஏப்ரல் 12]

*திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றுவதற்கு வாய்ப்பளித்த தமிழ் இனத் தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல என்னை வெற்றி பெறச் செய்த திருமங்கலம் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் இந்தப் பேரவையின் மூலமாக என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று நடைபெறுகின்ற நீதி நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு சிறைச்சாலைகள் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் கூறி என் உரையைத் துவங்குகிறேன். நீதி நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், குறிப்பாக நீதிமன்றங்கள் மக்களாட்சியில் சுதந்திரமாக இயங்குவதற்கு நீதிபதிகளுக்கு பல சலுகைகளை செய்து கொடுத்தால்தான் அல்லது அவர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுத்தால்தான் மக்கள் ஆட்சியில் இருக்கின்ற அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தவறாமல் நீதி கிடைக்கும். எனவேதான் இந்த மானியக் கோரிக்கையின் கீழ் நமது மாண்புமிகு சட்ட அமைச்சர் 22 கோடி ரூபாய் இங்கே கேட்டிருக்கிறார்.

இன்றைக்குப் பல இடங்களில் நீதிபதிகளுக்கு வீட்டு வசதியில்லை. குறிப்பாக நீதிபதிகளுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு தொலைபேசி வசதி இருந்தால் அவர்கள் நீதிமன்றத்திற்கு வருகின்ற நேரத்தில் அல்லது மற்ற இடங்களில் இருக்கும்போது பல்வேறு விவரங்களை உடனுக்குடன் தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். அல்லது அவர்களுக்கு தேவைப்படும் தேவைகளை பூர்த்தி செய்ய வாய்ப்பு ஏற்படும். அல்லது நெருக்கடியான நேரத்தில் தொலைபேசியை பயன்படுத்த வாய்ப்பு ஏற்படும். எனவே, நமது கழக அரசு எல்லா நீதிமன்ற நீதிபதிகளுக்கும் தொலைபேசி வசதியை செய்துகொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

அதேபோல் நீண்ட நாட்களாக இருக்கும் கோரிக்கையான மதுரையில் உயர்நீதி மன்றப் பிரிவு வேண்டுமென்ற கோரிக்கை இன்றைய தினம் நமது கழக அரசு ஆய்வில் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இதை வரவேற்று, இது குறித்து மத்திய அரசிடம் சொல்லி, சென்னை உயர்நீதிமன்றப் பிரிவை மதுரையில் வைக்க துரித நடவடிக்கை எடுக்குமாறு நமது சட்ட அமைச்சரவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆர். சாமிநாதன்] [1989 ஏப்ரல் 12

அதேபோல் மாவட்டத் தலைமை இடங்களில் இருக்கின்ற நீதி மன்றங்களுக்கு எல்லா மக்களும் வந்து தங்களுக்கு நீதி கேட்டு அறிவதில் காலதாமதமும், அவர்களுக்குப் பொருள் விரயமும் ஏற்படுவதால், தலைமையிடங்களில் உள்ள நீதி மன்றங்களைப் பரவலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் அதை இன்றையதினம் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. என்று கூறபட்டிருக்கிறது. இதேபோலத்தான் திருமங்கலம் தொகுதியில் செக்கான் ஊரணிப் பகுதியில் இருக்கிற காவல் நிலைய எல்லைக்குட்பட்டவர்கள் இன்றைய தினம் 30 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள உசிலம்பட்டிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் 14 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திருமங்கலத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் ஆகியவற்றுக்கு வருவதுபோல, அங்கேயுள்ள நீதிமன்றத்திற்கும் வரக்கூடிய அளவுக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், செக்கான் ஊரணிப் பகுதியிலுள்ள மக்கள் தங்கள் வழக்குகளுக்காக உசிலம்பட்டி செல்ல வேண்டியிருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குத் தெரியப்படுத்துகிறேன்.

அடுத்து உசிலம்பட்டி தொகுதியில் முன்சீப் நீதிமன்றம் வேண்டுமென்ற கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. எனவே அங்கே முன்சீப் நீதிமன்றத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே இருக்கின்ற நீதிமன்றங்களில் கழிப்பறை வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை. மேலும் உசிலம்பட்டி நீதிமன்றத்திற்கு குற்றவியல் நீதிமன்றத்திற்கு, கடந்த 2 ஆண்டுகளாக நடுவர் நியமிக்கப்படாததால், வழக்குகள் அத்தனையும் நடைபெறாமல், தேங்கிக் கிடக்கின்றன என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்றைக்கு அரசு வழக்கறிஞர்கள் 1, 2 கிரேட் உள்ளவர்களை, அரசாங்கம் முழு நேர அதிகாரிகள் என்று அறிவித்திருக்கிறது. ஆனால் அரசு வழக்கறிஞர்கள் என்று தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்கள், நிரந்தரமாக்கப்படும்போது அவர்கள் வேலையில் சேர்ந்த, பணியில் சேர்ந்த காலத்திலிருந்து நிரந்தரமாக்க வேண்டுமென்று கழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அரசாங்க வழக்கறிஞர்கள் 1, 2 கிரேடில் பணியாற்றுகின்ற அரசாங்க வழக்கறிஞர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளம், நீதிபதிகளுக்குச் சமமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனக்கு முன்பாகப் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் கூறியதுபோல், வழக்கறிஞர்கள் பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால், கர்நாடக மாநிலத்தில் உள்ளதுபோல ஓர் அமைப்பை ஏற்படுத்தி அவர்களுடைய குடும்பங்களுக்கு 20,000 ரூபாய் வழங்கவேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 12] [திரு. ஆர். சாமிநாதன்]

அடுத்து உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் நியமிக்கப்பட்டாலும், உயர்நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டாலும் சீர் மரபினருக்கும், பிற்படுத்தப்பட்டோருக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் வழக்கறிஞர்களுக்கு 'கெசடட்' தகுதி கொடுக்க அரசாங்கம் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் நீதி மன்றங்களில் கொடுக்கின்ற தீர்ப்புகளை தொழிலதிபர்கள் உடனே நிறைவேற்றுவதில்லை. தவறு செய்கிறார்கள். எனவே தொழிலாளர் நல நீதி மன்றங்களில் கொடுக்கும் தீர்ப்பை தொழிலதிபர்கள் நிறைவேற்றவில்லை என்று சொன்னால், அவர்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது)

அண்ணா நினைவுநாள் அன்று 272 ஆண் கைதிகளையும், 71 பெண் கைதிகளையும் விடுதலை செய்த மாண்புமிகு கலைஞர் அவர்களை நான் பாராட்டுகிறேன். மேலும் சிறைச்சாலையில் உள்ள கைதிகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு பரோல் என்று அவசரகால விடுப்பு தரப்படுவதுண்டு. ஆனால் சிறைச்சாலை கண்காணிப்பாளர்கள் கடந்த 2 ஆண்டுக்காலமாக முறையாக கைதிகளை பரோலில் விடுவதற்குப் பதிலாக காலதாமதம் செய்து வருகிறார்கள். இதையெல்லாம் அரசாங்கம் கவனித்து சீராக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குற்றவாளிகள் விடுதலையான பிறகு, அவர்களெல்லாம் சிறு தொழில் செய்ய அரசாங்கம் பிரத்தியேக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மாவட்டத்தில் உள்ள கிளைச் சிறைச்சாலைகளில் வெள்ளையன் ஆட்சிக் காலத்திலிருந்தே தரப்படுகிற களி உருண்டைதான் தற்போதும் தொடர்ந்து கொடுக்கப்படுகிறது. கிளைச் சிறைச் சாலைகளில் கொடுக்கப்படுகிற களி உருண்டைகளை மாற்றி, மத்திய சிறைச்சாலைகளில் தரப்படுகிற அளவுக்கு நல்ல உணவு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், காவல் துறையில் வழங்கப்படுகிற ரிஸ்க் அலவன்ஸ் போன்றவைகள் சிறைச்சாலைகளில் பணியாற்றும் வார்டர்களுக்கும் கொடுக்கப் படவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சேலம் சிறைச்சாலைகளில் பணியாற்றுகிற அதிகாரிகளுக்கு 8 மணி நேரம் பணி என்று ஒதுக்கப்பட்டுள்ளது.

[திரு. ஆர். சாமிநாதன்] 1989 ஏப்ரல் 12

ஆனால் மற்ற மாவட்டங்களில் உள்ள மத்திய சிறைச்சாலைகளில் பணியாற்றுகிற அரசாங்க அதிகாரிகளுக்கு 24 மணி நேரம் என்று ஒதுக்கப்பட்டிருப்பதால் அவர்களுக்கும் மற்ற அரசாங்க அதிகாரிகளுக்கு எப்படி 8 மணி என்று ஒதுக்கப் பட்டிருக்கிறதோ, எப்படி தொழிலாளர்களுக்கு 8 மணி என்று ஒதுக்கப்பட்டிருக்கிறதோ, அப்படியே இவர்களுக்கும் 8 மணி நேரம் பணி என்று ஆக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

கடந்த கால ஆட்சியில், 1985 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர் போராட்டத்தையொட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொண்டர்கள் சிறைச்சாலையில் இருந்த போது, திருச்சி மத்திய சிறைச்சாலையில் அப்படி அடைக்கப் பட்டிருந்தபோது, அங்கே பந்தலில் திடீரென்று தீப்பிடித்துக் கொண்ட காரணத்தால் அங்கே இருக்கிற சிறைச்சாலை அதி காரிகள் தி.மு.க. தொண்டர்களை உள்ளே இருந்த அப்பாவித் தொண்டர்களை, அடித்து நொறுக்கி விட்டார்கள். சிறைக் கைதிகளை அவ்விதம் அடிப்பது தவறு என்பதை இந்த அரசு மனதில் கொண்டு, வரக்கூடிய காலங்களில் அவ்விதம் நடை பெறாத அளவுக்கு சிறை அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் தொழு நோய் காப்பகங்களில் நோயாளிகளின் எண்ணிக்கையைக் கூட்டி யிருக்கிறார்கள். அதைப் போலவே அந்த இல்லங்களின் எண்ணிக்கையையும் அதிகப் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்) : சீக்கிரம் ஒரு வரியில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ஆர். சாமிநாதன் : சிறைச்சாலைத் துறையில் டி.ஐ.ஜி போன்ற பதவிகள் காலியாக இருப்பதை நிறைவு செய்ய அர சாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபரிபாலனம் என்பது ஒரு அரசின் தலையாய கடமை. நீதியும், நெறிமுறைகளும் தவறிய அரசு வாழாது. வாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை. நெஞ்சுக்கு நீதி கேட்டு, அரசியல் பாதை அமைக்கத் துடித்தவர்களின் அரசுதான் இது. சொல்வதைச் செய்வோம் ; செய்வதைச் சொல்வோம் என்ற தேர்தல் அறிக்கை வெளியிட்டு, ஆட்சிக்கு வந்தவர்கள் நீங்கள். அந்தத் தேர்தல் அறிக்கையின் 13 ஆம் பக்கத்தில் ''தொன்மையான தமிழ் மொழி, தற்கால சமூகவியல், அறிவியல் வளர்ச்சி நிலைகளுக்கு ஏற்ப, வளம் பெறுவதற்குரிய வழிமுறைகள் மேற்கொள்ளப்படும்'' என்றும் ''உலகப்புகழ் பெற்ற நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து, மலிவு விலையில்



1989 ஏப்ரல் 12] [திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்]

வெளியிடப்படும் என்றும் சொல்லியுள்ளார்கள். உலகத்திலுள்ள
பெரிய நூல்களையெல்லாம் நீங்கள் தமிழில் மொழி
பெயர்ப்பது இருக்கட்டும். எங்கும் தமிழ் எதிலும் தமிழ்
என்று சொல்லி அரசினைக் கைப்பற்றியவர்கள் நீங்கள், தமிழ்
நாட்டின் நீதிமன்றங்கள் தமிழில் வழக்குகள் நடக்க வழக்
கறிஞர்கள் விவாதம் செய்ய, ஆணைகள் பிறப்பிக்கப்பட,
தீர்ப்புகள் வழங்கப்பட இந்த அரசு என்ன புதிய முயற்சிகளை
எடுத்துள்ளது என்று நிதிநிலை அறிக்கைகளையும் அது சம்பந்த
மான புத்தகங்களையும் புரட்டிப் பார்த்தால் அங்கே ஒன்றுமே
இல்லை.

முற்பகல் 12.10

1982 ஆம் ஆண்டு பிப்ரவரியிலிருந்து தமிழில் தான் எல்லா
நடவடிக்கைகளும் நடக்கிறது என்று நீங்கள் சொல்லலாம்
நீங்கள் பிறப்பித்துள்ள ஆணை தாள்களிலே இருக்கிறதே
யொழிய அதை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான
அடிப்படை வசதிகளை இந்த அரசு செய்யப் போகிறதா என்று
பார்த்தால் அதிலே எந்தவிதமான குறிப்பும் இல்லை. உயர்
நீதிமன்றம் நீங்கலாக அனைத்து உரிமையில் குற்றவியல்
மற்றும் ஏனைய நீதிமன்றங்களின் தமிழில் நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்பட்டு தமிழில் தீர்ப்புகளையும் தீர்ப்பு ஆணை
களையும் பிறபிக்க வேண்டுமென்ற ஆணை நடைமுறையில்
இருந்தும் கூட மத்திய மாநில சட்டங்கள் பெரும்பாலானவை
தமிழிலே மொழி பேயர்க்கப்படாமல் இருந்து வருகின்றன.
தமிழில் சட்டங்கள் இல்லாதபோது நீதிமன்ற நடவடிக்கைகள்
தமிழில் நடைபெற வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்படுவது
நீதிபதிகளுக்கும் வழக்கறிஞர்களுக்கும் பொது மக்களுக்கும்
பெரிய சிரமம் ஏற்பட்டிருக்கிறது. நீதிமன்றங்களின் தமிழில்
தான் நடவடிக்கை இருக்க வேண்டும் என்பதிலே யாருக்கும்
கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் அதை அமல்
படுத்த தமிழில் சட்டங்கள் வேண்டும். தேர்தல் அறிக்கையில்
உலகப் புகழ் பெற்ற இலக்கியங்களை தமிழில் மொழி பெயர்க்கப்
போவதாகச் சொல்லி இருக்கிற நீங்கள் முதலில் தமிழ் நாட்டில்
சட்டங்களை தமிழில் மொழி பெயர்க்க வேண்டும் ''கூரை
ஏறி கோழு பிடிக்க முடியாதவன், வானம் ஏறி வைகுண்டம்
போகிறேன்,, என்று சொல்வதைப் போல உலக நாட்டு இலக்
கியங்களை மொழி பெயர்க்கப் போகிறேன் என்று சொல்கின்ற
நீங்கள் முதலில் தமிழ் நாட்டிலே தமிழர்களுக்காக இருக்கிற
சட்டங்களை மொழி பெயர்க்க வேண்டும்.

திரு. வே. தங்கபாண்டியன் : தி.மு.க. ஆட்சியில்
இருந்தபோது பல்வேறு காரியங்களை தமிழ் துறைக்காக
செய்திருர்கிறார்கள் இப்போது இரண்டு மாத காலத்தில்
இவ்வளவு பெரிய காரியத்தை செய்ய எதிர்பார்க்க வேண்டு
மென்று உறுப்பினர்கள் ஆசைப்படுகிறார்கள் ஓராண்டுக்

காலம் கவர்னர் ஆட்சி இருந்தபோது மாண்புமிகு உறுப்பினரவர்களின் கட்சி ஏதாவது முயற்சி மேற்கொண்டு ஆக்கபூர்வமமான காரியத்தில் ஈடுபட்டிருக்கிறதா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பதில் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் ஆட்சியில் தான் இந்திய அரசியல் சாசன சட்டத்தை தமிழில் மொழி பெயர்த்து வழங்கி இருக்கிறார் என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு தலைவரவர்கள், அந்த மொழி பெயர்ப்பில் தவறு இருக்கிறது என்று கூட சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : எங்களுக்கு தமிழ் சரியாகத் தெரியாது நீங்கள்தான் வித்தகர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : உங்களுக்கு தமிழ் தெரியாது என்று நான் சொல்ல மாட்டேன். கன்னியாகுமரியை சேர்ந்தவர்கள், குமரியைச் சேர்ந்தவர்கள் நல்ல தமிழ் பேசக் கூடியவர்கள் என்று தெரியும். ஆனால் மொழி பெயர்பவர்கள் தவறாக மொழி பெயர்த்து, கவர்னர் வெளிட்ட பிறகு அந்த தவறுகள் எழுந்து இருப்பதாகவும் அது திருத்தப்படும் என்றும் சொல்லப்படுகிறது, எனவே இந்த அரசாங்கம் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது

மாண்புமிகு மாற்றுத் தலைவர். (திரு. மு. இராமநாதன்) : மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து நாஞ்சில் நாட்டினுடைய பெருமைக்குக் குந்தகம் விளைவித்து விடக் கூடாது என்பதை நினைவுபடுத்துகிறேன்.

திரு. சா .பீட்டர் ஆல்போன்ஸ் : எதற்கெடுத்தாலும் மத்திய அரசைச் சாடுகிறீர்கள். மத்திய அரசுக்கு மாநில மொழிகளின் மேல், மக்களின் மேல் அக்கறை இல்லை என்று சொல்கிறிர்கள். இந்தி மொழியை திணிப்பதற்கும். பரப்புவதற்கும் கோடிக்கணக்கான பணத்தை அது செலவிடுகிறது என்று சொல்கிறீர்கள், ஆனால் தமிழுக்காக, தமிழ்மொழி வளர்ச்சிக்காக, தமிழில் சட்டங்களை மொழியாக்கம் செய்வதற்காக மத்திய அரசு தரத் தயாராக வைத்திருக்கிற பணத்தை பயன்படுத்துகிற வழிமுறைகளை மட்டும் செய்யாமல் இருக்கிறீர்கள்.

முந்தைய ஆட்சியில் தமிழில் சட்டங்களை மொழி பெயர்ப்பதற்காக ஜஸ்டிஸ் மகாராஜன் தலைமையில் ஒரு ஆணையத்தை ஏற்படுத்தினார்கள். அதில் சட்டங்களை மொழி பெயர்ப்பதற்காக தனியாக வழக்கறிஞர்களை, சட்ட வல்லுநர்களை நியமனம் செய்தார்கள். அந்த ஆணையம் சிறப்பான முறையிலே சட்டச் சொல் அகராதி (லா லெக்ஸிகன்) வெளியிட்டது.





ஆனால் 10 ஆண்டுகளாக அந்த ஆணையம் அதிகாரி இல்லாமல், பருவத்தில் வாழ்விழந்த விதவையைப் போல் இருந்து வருகிறது. அங்கே பணியாற்றும் அரசு ஊழியர்கள், ஒரு பணியும், நடக்காமல், சம்பளம் மட்டும் வாங்கி வருகிறார்கள். இதில் என்ன வேடிக்கை என்றால், ஒவ்வொரு சட்டத்தையும் தமிழில் மொழி பெயர்க்க ஆகின்ற அத்தனை செலவையும் தருவதற்கு எங்களின் இனிய பிரதமர், இளைய பிரதமர் ராஜீவ் காந்தியின் அரசு தயாராக இருக்கிறது. அது மட்டுமல்ல, அந்தச் சட்டங்களை தமிழில் மொழி பெயர்த்து, அச்சிட்டு வழங்குவதற்காக காகிதங்களையும் கூட முழுவதும் இலவசமாக வழங்குவதற்கு மத்திய அரசு தயாராக இருக்கிறது. நான் மிகவும் அன்புடனும் பணிவுடனும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ''படிப்பது காயத்திரி ஜபம், செய்வது அனைத்தும் கர்மதோஷம்'' என்பதைப் போல அல்லாமல் தமிழ், தமிழ் என்று வெறும் பேச்சிலே பேசுவதை சற்று செயல்படுத்தி, தமிழில் சட்டங்களை மாற்றுகின்ற ஆணயத்திற்கு புதிய அதிகாரிகளை நியமனம் செய்து அங்கு விறையம் ஆகிக்கொண்டிருக்கும் அரசுப் பணத்தை பயன்படுத்தி தமிழ் வளர்ச்சிக்காக ராஜீவ் காந்தியின் அரசு தருவதற்கு தயாரரக இருக்கின்ற பணத்தை முழுவதையும் பெற்று கேரளாவைப் போல், கர்நாடகத்தை போல் இங்கு நாமும் நமது சட்டங்ளை நமது மொழியிலே மொழி பெயர்க்க ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கெள்கிறேன்.

இன்று people have lost faith in the Judicial system. அரசின் நீதி பரிபாலனத்தின் பேரில் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள். நீதிமன்றத்தின் நெடிய படிகளில் ஏறியவர்கள் வாழ்வில் தேற மாட்டார்கள் என்று சொல்லக் கூடிய அளவிற்கு நீதிமன்றங்கள் மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டன. கோழி முட்டம் நீங்க, கடா வெட்டி பலி கொடுத்தது போல், பத்து பைசா வழக்கிற்கு பத்து ரூபாய் செலவழிக்க வேண்டிய சூழ்நிலை இன்று பொது மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. என்ன காரணம் ? பெருகி வருகின்ற வழக்குகள, அவற்றினைத் தீர்ப்பதற்குத் தேவையான நீதிமன்றங்கள் இல்லை. இரண்டு வருடம், ஐந்து வருடம், சில சமயங்களில் இருபது வருடம் என்று நீதிமன்றத்தை விட்டு வெளியே வராத வழக்குகள் இருக்கின்றன. இந்த முறையினை மாற்ற வேண்டும்.

ஒரு உரிமையியல் வழக்கு என்றால் அதனை ஆறு மாதங்களுக்குள் முடித்தாக வேண்டும் என்றும், குற்றவியல் வழக்கு என்றால் மூன்று மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும் என்றும்

[திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்] [1989 ஏப்ரல் 12

ஆணை பிறப்பிக்க வேண்டும். புதிய நீதிமன்றங்களைத் திறப்பதால் மட்டும், அதிக நீதிபதிகளை நியமிப்பதால் மட்டும் இக்குறைகளை நிவர்த்தி செய்து விட முடியாது. ஒரு வழக்கிற்கு மேல், முதல் மேல் முறையீடு, இரண்டாவது மேல் முறையீடு, அதற்கு மேல் special leave petition என்பதை மாற்றி வழக்குகளுக்கு இறுதி வடிவங்களை மிகச் சீக்கிரமாக கொடுக்க finallity of decision அதைச் சீக்கிரம் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். இதற்காக Lok Adalat, Arbitration Act அதாவது மக்கள் நீதிமன்றம், சமரச சட்டம் போன்றவற்றை நிறையப்பயன்படுத்த வேண்டும். அதற்கான தகவல்களை உடனே உயர் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். மக்கள் நீதிமன்றம், ஆர்பிட்ரேஷன் சட்டம் போன்றவற்றை அதிகமாகப் பயன்படுத்தும்போது அரசுக்கு அதிகச் செலவும் இல்லை. வழக்குகளும் நீண்ட நாட்கள் நடைபெறாது. எனவே, அரசு இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் இந்த அரசினை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

இதை இந்த மாமன்றத்தில் சொல்வதற்கு எனக்கு வேதனையாக இருக்கிறது.

Next Revenue Department Officers Subordinate Courts have become the breeding centre of correption. இதற்கு என்ன காரணம் என்பதை ஆராய வேண்டும். ''நோய் நாடி, நோய் முதல் நாடி'' என்று சொல்வார்கள். இதற்கு என்ன காரணம் என்றால் நமது நீதிபதிகளின் அடிப்படைத் தேவைகளைக் கூட நாம் செய்து கொடுக்கிறோமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த நாட்டிலே ஒரு ஜனாதிபதிக்கு, பிரதமருக்கு, ஆளுநருக்கு, மாநில முதலமைச்சருக்கு இல்லாத அதிகாரம் கூட ஒரு நீதிபதிக்கு இருக்கிறது. குற்றம் செய்தவனைச் சிறையில் தள்ளுவதற்கும், ஏன், மரண தண்டனை விதிப்பதற்கே அதிகாரம் பெற்றிருக்கின்ற நீதிபதிகள், கண்ணியமாக வாழ்வதற்கு நாம் வழி செய்ய வேண்டும். மாவட்ட நீதிபதிகளுக்குக் கூட கார்கள் இல்லை. தொலை பேசி இல்லை. * *

திரு. என். கணபதி : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் வழக்கறிஞர் என்று தான் அறிகிறேன். * * என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு உறுப்பினர் கணபதியைப் போன்ற மிகப் பிரபலமான வழக்கறிஞர்கள்தான் கார் வைத்திருக்கிறார்கள். நான் சிறிய வக்கீல்.

* * மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1989 ஏப்ரல் 12]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** தலைவரவர்களே, நீதிபதிகளைப் பற்றி இப்படிப் பேசுவது முறையல்ல. ஏனென்றால், பொதுவாக * * * * சொல்வது முறையல்ல. எனவே, அதைக் குறிப்பிலிருந்து எடுப்பது நல்லது. * * எனவே, அது வேண்டாம். ஏற்கெனவே நீதிபதிக்கும் Barக்கும் கொஞ்சம் மோதல் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. நான் மிகுந்த பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அந்தக் குறிப்புகளை அகற்றி விடுவதுதான் நலம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்) :** மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதைப் போல அந்த ஒரு வரி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** நான் நீதிபதிகளைப் பற்றித் தவறாகச் சொல்லவில்லை. அவர்களுடைய நிலைமை அப்படியிருக்கிறது என்பதற்காகச் சொன்னேன். அதை நீக்குவதைப்பற்றி எனக்கொன்றும் ஆட்சேபணையில்லை.

அவர்களுடைய சம்பள விகிதங்களைக் கூட்ட வேண்டும். இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் நீதிபதிகளுக்குக் குறைவாக சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஒரு முதல் நிலை மாவட்ட நீதிபதிக்கு உத்தரப் பிரதேசத்தில் 7,300 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள், காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலம். குஜராத்தில் காங்கிரஸ் ஆளுகின்ற இன்னொரு மாநிலத்தில் 5,900 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆந்திராவில் 5,000 ரூபாய் கொடுக்கிறார்கள். கர்நாடகத்தில் 4,550 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் நாம், தமிழ் நாட்டில் வெறும் 3,000 ரூபாய் கொடுக்கிறோம்.

சென்னையிலே இருக்கின்ற நீதிபதிகளுக்கு இருப்பதற்குக் கூட வீடு கொடுக்கப்படவில்லை. மாற்றுதலாகி, சென்னைக்கு வந்தால், வீட்டைத் தேடிப் பிடிப்பதே அவர்களுக்குப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. கடைசியில் ஒரு சிறிய வீட்டிற்கு, சம்பளத்தில் பாதிக்கு மேல் வாடகையாகக் கொடுத்து விட்டு, அன்றாடத் தேவைகளுக்குக் கூட அல்லல் பட்டுக் கொண்டிருக்கிற நீதிபதிகளை எனக்குத் தெரியும்.

எழும்பூரில் தலைமைக் குற்றவியல் நீதிபதியின் வீட்டுக்கருகில் நிறைய இடம் இருக்கிறது. அதில் சென்னை வாழ் நீதிபதிகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமிடப்பட்டது. ஆனால் செயல் படுத்தப்படவில்லை. அதை உடனே செயல்படுத்த வேண்டும். நீதிபதிகள் தங்களின் அன்றாடத் தேவைகளுக்கு

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அடுத்தவர்களின் தயவை எதிர் நோக்கக் கூடிய சூழ்நிலை இருக்கக் கூடாது, அப்படியிருந்தால் அது அவர்கள் வழங்குகின்ற நீதியின் தரத்தினைப் பாதிக்கும் என்பதை உணர வேண்டும்.

20 ஆண்டுகள், 25 ஆண்டுகள் எந்த விதமான பதவி உயர்வும் இல்லாமல், அதே இடத்திலேயே சில நீதிபதிகள் இருக்கிறார்கள். நீதித் துறையில், பின்னால வந்தவர்கள், அனுபவம் பெற்றவர்களை விட வேகமாக முன்னேறி, அவர்கள் மேல நீதிபதிகளாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இதைப் போன்ற தனியார்களுக்குச் செய்யப்பட்ட அநீதிகள் துடைக்கப்பட வேண்டும்.

பிரிக்கப்பட்ட மாவட்டங்களில் இன்னும் மாவட்ட அமர்வு நீதிமன்றங்களும், குற்ற இயல் தலைமை நீதிபதிகளும நியமனம் செய்யப்படவில்லை. தஞ்சை, பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், காமராசர் மாவட்டம், ராமநாதபுரம் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம், ஆகியவற்றிற்கு இன்னும் அமர்வு நீதிமன்ற நீதிபதிகள் நியமிக்கப்படவில்லை. தலைமைக் குற்றவியல் நீதிபதிகளும் நியமிக்கப்படவில்லை.

[பிற்பகல் 12-20]

போலீஸ், வருவாய்த்துறை போன்ற அதிகாரிகளுக்கு பயிற்சிக் கல்லூரி இருப்பதைப் போல புதியதாக நியமனம் செய்யப்பட்ட நீதித்துறை அதிகாரிகளுக்கும் பயிற்சி கொடுப்பதற்காக ஒரு Judicial Academy உடனே ஆரம்பிக்க முடியுமா என்பதை இந்த அரசு பரிசீலிக்க வேண்டும்.

முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு நீதிமன்றங்களை ஒருங்கிணைந்த பிறகு Integration இந்த நீதிமன்றங்களில் எழக்கூடிய மேல் முறையீடுகள் அனைத்தும் அமர்வு நீதிமன்றத்திற்குத் தான் போக வேண்டுமென்று விதி இருக்கிறது. அப்போது அங்கே வழக்குகள் அதிகமாகின்றன. எனவே, தலைமை குற்றவியல் நடுவர்களாக மாவட்ட நீதிபதிகளை நியமிக்க முடியுமா என்பதை அரசு ஆராய வேண்டும்.

மேலும் வழக்கறிஞர்கள் மத்தியில் வேலை வாய்ப்பு பிரச்சினை இருக்கிறது. அதை அரசு பரிசீலனை செய்து புதியதாக சட்டம் பயின்று வருகிற இளம் வழக்கறிஞர்களுக்கு முதல் மூன்று ஆண்டுகளுக்கு மாதம் ரூபாய் 500 வழங்கி அரசு நல்ல வழக்கறிஞர்களை உருவாக்கும் முயற்சிக்கு துணை செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக சிறைத் துறைபற்றி ஒரு முக்கியமான தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன். அதை அவர்கள் தயவு செய்து உண்மையா என்று விசாரித்து அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்



கிறேன். கோவை சிறையில் ஒரு காண்ட்ராக்டர் அந்த சிறைக்கு பொருள்களை சப்ளை செய்து வருகிறார் பல்லாண்டு காலமாக. 1987-88-ஆம் ஆண்டு காக்கி, டெரிகாட்டன் துணிக்கு சாயம் போட ஒப்பந்தம் எடுத்துக் கொண்டார். அந்த ஒப்பந்தத்தில் ரூபாய் 8.60 சாயக் கூலியாகவும், ரூபாய் 2.05 மத்திய கலால் வரியாகவும் டெண்டர் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் அதற்கு பிறகு மத்திய அரசு அந்த எக்சைஸ் வரியை ரத்து செய்து விடுகிறது. ஆகவே சிறை கண்காணிப்பாளர் என்ன செய்கிறார் என்றால் அந்த ஒப்பந்தக்காரர் கொடுக்க வேண்டிய பில்லில் ரூபாய் 2.05 எக்சைஸ் வரி ரத்து செய்யப்பட்டதால், அது இல்லாமல் பில் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார். ஆனால் அதற்குப் பிறகு அந்த ஒப்பந்தக்காரர்-எத்தனை லட்சம் மீட்டர் தெரியுமா? நான்கு லட்சம் மீட்டர் துணி—அந்தத் துணிக்கு ரூபாய் 2.05 எக்சைஸ் வரி சேர்த்தே பில் கொடுக்கிறார். எந்த கண்காணிப்பாளர் அதைக் கொடுக்கக் கூடாது என்று சொன்னாரோ, அந்தக் கண்காணிப்பாளரே அந்த பில்லை அனுமதித்து அதற்கான பணம் ஒன்பது லட்சத்தைக் கொடுக்கிறார். அந்த ஒன்பது லட்சம் பணம் ஒரு வருடத்திற்கு அவரிடம் இருக்கிறது. அதற்கு பிறகு ஆடிட் அப்ஜெக்ஷன் வந்த பிறகு அதைத் திரும்ப கட்டச் சொல்லுகிறார்கள். அதை நான்கு தவணைகளில் திரும்ப கட்டுகிறார். அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஒன்பது லட்சம் ரூபாய் என்றால் வெளியே 100 ரூபாய்க்கு இரண்டு ரூபாய் வட்டி. மாதா மாதம் 18 ஆயிரம் ரூபாய் வட்டி. 1½ வருடம் அந்தத் தொகையை காண்ட்ராக்டரிடம் புழங்குவதற்கு அந்த சிறை கண்காணிப்பாளர் அனுமதித்தது மட்டுமல்லாமல் இவர் நல்ல காண்ட்ராக்டர் என்று சொல்லி Inspector-General of Prisons Office-க்கு சர்ட்டிபிகேட் கொடுத்து அனுப்புகிறார். அதை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும். சிறைத் துறையில் இருக்கிற பணம் ஒழுங்காகப் புழங்குகிறதா என்பதை அமைச்சர் அவர்கள் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அருமையான வாய்ப்பை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**திரு. என். கணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறைத்துறை மானிய கோரிக்கைகளை ஆதரித்து ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமாக வழக்குகள் ஆயிரக்கணக்கில் தேங்கிக் கிடக்கிற காரணத்தால் வழக்கறிஞர்களுக்கு நீதிமன்றங்களில் அதிகமாக வேலை இல்லை. குறிப்பிட்ட ஒரு சில வழக்கறிஞர்களை வைத்து வழக்கறிஞர்களுக்கு வருமானம் நிறைய வருகிறது என்று யாரும் தவறாகக் கருதி விடக்கூடாது. குறிப்பாக ஆயிரக்கணக்கில் இருக்கிற வழக்கறிஞர்களில் நூற்றுக்கணக்கான விரல் விட்டு எண்ணக் கூடிய வழக்கறிஞர்கள்தான் ஓரளவிற்கு கௌரவமான வாழ்க்கை நடத்துகிற அளவிற்கு இன்றைக்கு தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் எனக்கு முன்

[திரு. என். கணபதி] [1989 ஏப்ரல் 12

னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை
ஆதரித்து முதல் மூன்றாண்டுகளுக்கு வழக்கறிஞர்களுக்கு உதவித்
தொகை கொடுப்பது கூட சரியென்றுதான் நான் அவரை
ஆதரிக்கிறேன். முக்கியமாக நான் சொல்ல வந்தது, எல்லா
வற்றிற்கும் மாநில அரசாங்கத்தை குறை சொல்லிக் கொண்டு
இருக்கிற கட்சியைச் சார்ந்த எனக்கு முன்னால் பேசிய மாண்பு
மிகு உறுப்பினர் ''செக்ஷன் 30 அட்வகேட்ஸ் ஆக்ட்'' என்ற
ஒரு சட்டத்தில் வழக்கறிஞர்கள் எல்லா தீர்ப்பாயங்களிலும்,
குழுக்களிலும் சென்று தொழில் செய்யலாம் என்று பாராளு
மன்றம் நிறைவேற்றிய சட்டத்தை ஏறக்குறைய 20 ஆண்டு
களுக்கு மேலாக அமல்படுத்தாமல் இருக்கிற மத்திய அரசை
நீங்கள் அவர்கள் முன்னால் குறை சொல்லாவிட்டாலும், தனிப்
பட்ட முறையில் தூண்டுகோல் கொடுத்து அதை அமலில்
கொண்டு வருவதற்கு தங்களால் இயன்ற முயற்சியை செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வழக்குகள் தேக்கம் அதிகமாக இருக்கிறது
என்ற புள்ளி விவரத்தைப் பார்க்கிறபோது தெளிவாக தெரி
கிறது. நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் 25 ஆம்
பக்கத்திலே உயர்நீதிமன்றத்தைப் பொறுத்தவரை 1988
ஆம் ஆண்டு இறுதியில் ஏறக்குறைய 1,16,584 வழக்குகள் தேக்கத்
திலே இருக்கின்றன என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த
1,16,584 வழக்குகளில் 14 ஆயிரம் வழக்குகள் ரிட் மனுக்கள்.
இவைகள் ''ஸ்டாட்'' என்று சொல்லப்படுகின்ற ஸ்டேட்
அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிரிபியூனலுக்கு மாற்றப்பட்ட பிறகும்
கூட, ஏறக்குறைய 1,16,584 வழக்குகள் நிலுவையில் இருக்கின்
றன. இந்த வழக்குகளைப் பார்க்கின்ற நேரத்தில், அவைகளை
விசாரித்து தீர்ப்பு அளிக்கின்ற நீதிபதிகளின் எண்ணிக்கை
இப்போது இருப்பது 25 அதை 32 ஆக உயர்த்த வேண்டுமென்று
கேட்டுக் கொண்டிருக்கிறோம். 25 என்பதை 50 ஆகக் கூட
கேட்டால் பொருத்தமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில்
அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால்,
1983 ஆம் ஆண்டில் மாத்திரம் தாக்கல் செய்யப்பட்ட
வழக்குகள் 42,163. பைசல் செய்யப்பட்ட வழககுகள் 29,501.
ஆக மொத்தத்தில் ஏறக்குறைய 13 ஆயிரம் வழக்குகள் ஓர்
ஆண்டிலே தேக்கப்படுகிறது. இப்படி தேக்கப்பட்டு தேக்கப்
பட்டுத்தான் ஏறக்குறைய 1 லட்சத்து 16 ஆயிரம் வழக்குகள்
தற்போது நிலுவையில் இருக்கின்றன. அதற்காக நீதிபதிகளின்
எண்ணிக்கையை உயர்த்துவதற்கு, குறைந்தது 50 ஆகக் கேட்க
வேண்டும் என்று. உ. பி.யில் இருக்கிற மாதிரி, கேட்க வேண்டும்
என்று இந்த நேரத்திலே அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தாற்போல், இதற்கு ஏற்றார்போல், மாவட்டங்
களிலே உள்ள நீதிமன்றங்களிலும் மற்ற நீதிமன்றங்களிலும்
வழக்குகள் அதிகமாக நிலுவையில் இருக்கின்றன. செஷன்ஸ்
வழக்குகளைப் பொறுத்த வரையிலும் ஏறக்குறைய 3,250 வழக்கு



1989 ஏப்ரல் 12] [திரு. என். கணபதி]

கள் இந்த 1988 ஆம் ஆண்டு நிலுவையில் இருக்கிறது என்று
சொல்லப்படுகிறது. இந்த 3,250 வழக்குகளை, இருக்கின்ற
மாவட்ட நீதிமன்றங்கள் பைசல் செய்ய வேண்டுமானால் கூடு
தல் நீதிமன்றங்களை நாம்நியமிக்க வேண்டும் என்று இந்த
நேரததில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் உயர்நீதிமன்றத்திலே இருக்
கிற அந்த நீதிபதிகளின் எண்ணிக்கையை மாத்திரம் பெருக்கினால்
போதாது. அங்கே இருக்கிற அலுவலர்களையும் அதிகாரிகளை
யும் எண்ணிக்கையிலே பெருக்குவதோடு மாத்திரம் அல்லாமல்,
அவர்களும் நல்ல முறையில் இப்போது இருக்கின்ற விலைவாசிக்கு
ஏற்ப, கௌரவமான முறையில் வாழ்க்கை நடத்தக் கூடிய விதத்
தில் அவர்களுக்கு சம்பளத்தையும் கூட்டிக் கொடுக்க வேண்டும்,
வசதிகளைச் செய்து தரவேண்டும். இங்கே நாம் எல்லாம்
தலைமைச் செயலகத்திலே இருக்கிற காரணத்தால், மற்றவர்
களைப் பார்க்கிற நேரத்தில் சற்று இறங்கித் தான் பார்க்க
வேண்டியதாக இருக்கிறது. இளக்காரமாகப் பார்க்கக் கூடிய
மனப்பான்மை இங்கே இருப்பவர்களுக்கு இருக்கிறது. எனவே
நீதிமன்றத்திலே வேலை செய்பவர்களுக்கு, சம்பளம் போன்ற
வசதிகளைக் கொடுக்கின்ற நேரத்திலே, தலைமைச் செயலகத்
திலே இருப்பவர்கள், அவர்களுக்கு என்ன நாம் கொடுப்பது
என்ற அளவில், தங்களுடைய அந்தஸ்துக்கு குறைவாக இருக்க
வேண்டும் என்ற எண்ணத்தில் தான் அவர்களை நடத்திக்
கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த மனப்பான்மை மாறி,
உயர்நீதிமன்றத்திலே வேலை செய்பவர்களாக இருந்தாலும்
மாவட்ட நீதிமன்றங்களிலே வேலை செய்பவர்களாக இருந்
தாலும், அவர்களை நல்ல அந்தஸ்து Status as well as salary and
perquis tes என்று சொல்லக் கூடிய வகையில் அவைகளைக்
கொடுக்சக் கூடிய விதத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், இப்போது விற்கின்ற விலைவாசியைப்
பார்க்கின்ற நேரத்தில், நீதிமன்றங்களிலே வேலை செய்பவர்கள்
இந்தக் காலத்தில் சொந்த வீடு கட்டுவார்களா என்று தெரிந்து
கொள்ள முடியவில்லை. குறிப்பாக தலைநகரத்திலே இருக்கிற,
உயர்நீதி மன்றத்தில் வேலை செய்கின்ற அதிகாரிகளாக இருந்
தாலும், மாவட்ட நீதிமன்றங்களில் இருக்கிற அதிகாரிகளாக
இருந்தாலும், அவர்களுக்கு குறைந்த விலையில் மனைக்கட்டுகள்
கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்து, அவர்களுக்கு
குறைந்த விலையில் வீடுகளைக் கட்டிக் கொடுக்கக் கூடிய
சூழ்நிலைகளை உருவாக்கித் தரவேண்டும் என்று இந்த நேரத்
திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல, இங்கு சென்னை தலைமை உயர்நீதி
மன்றத்தில் இருக்கின்ற அரசு வழக்கறிஞர்களைக் கண்காணிப்
பதற்கு என்று ஒரு D rector of Litigations என்ற ஒரு பதவி இருப்ப
தாகத் தெரிகிறது. இருக்கின்ற வழக்கறிஞர்கள் 36 அல்லது

[திரு. என். கணபதி] [1989 ஏப்ரல் 12

38 பேர்கள் தான். அவர்களைக் கண்காணிப்பதற்கு ஏறக்
குறைய 16 பேர்களைக் கொண்ட ஒரு அதிகாரிகள் குழு அங்கே
இருக்கிறது. இந்த 32 பேர்களைக் கண்காணிப்பதற்கு இந்த
16 பேர்கள் தேவைதானா? இன்றைக்கு ஆண்டு ஒன்றுக்கு 4
லட்சம், 5 லட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டியது அவசியம்
தானா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தாற்போல இந்த மாவட்ட நீதிமன்றங்களிலும், கிரி
மினல் நீதிமன்றங்களிலும், நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களி
லும் இருக்கின்ற சூழ்நிலைகளைப் பார்க்கின்ற போது, கால்
இல்லாத, கையில்லாத நாற்காலிகள் தான் அங்கே இருக்கின்றன.
தலைவர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்பு
மிகு கல்வி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டத்துறை
அமைச்சர் அவர்களும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை
அமைச்சர் அவர்களும் மற்றும் மாண்புமிகு விவசாயத்துறை
அமைச்சர் அவர்களும் பல்வேறு தடவைகள் நீதிமன்றங்களுக்கு
வந்து, பல்வேறு வழக்குகளைச் சந்தித்திருக்கிறார்கள். அவர்
கள் எல்லாம் அங்கே செல்லுகின்ற நேரத்தில், அவர்களை உட்
கார வைப்பதற்குக் கூட எங்களைப் போன்ற வழக்கறிஞர்
களுக்கு அந்த நேரத்தில் வாய்ப்பு வசதி இல்லாமல் இருக்கிறது.
காரணம் அங்கே கால் உடைந்து, கை உடைந்து இருக்கின்ற
நாற்காலிகளை வைத்துக் கொண்டு இருப்பதால் நாங்கள் அவர்
களை எந்தவிதத்திலும் கவனிக்க முடியவில்லை. அதே நேரத்
தில் வழக்குகளை ஓரளவிற்கு வெற்றிகரமாக நடத்தி, வெற்றி
பெற்று தந்திருக்கிறோம். அது வேறு விஷயம்.

(பிற்பகல் 12-30)

ஆனால் இருக்கின்ற சூழ்நிலையைப் பார்க்கின்ற நேரத்தில்,
நீதிமன்றங்களில் வழக்கறிஞர்கள் உட்காருவதற்கோ அல்லது
குற்றவாளிகள் வந்து இருப்பதற்கோ, அல்லது வழக்காடுபவர்கள்
வந்து இருப்பதற்கோ போதிய சூழ்நிலை இல்லை, வசதிகள்
இல்லை. அவைகளைப் பெருக்குவதற்கு இந்த நேரத்தில் நட
வடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

முக்கியமான ஒரு பிரச்சினை. சப்-கோர்ட் என்று சொல்லப்
படுகின்ற சார்பு நீதிமன்றங்களில் இன்றைக்குக் கோடிக் கணக்கில்
வழக்குகளை தாக்கல் செய்தாலும், விசாரிக்கக் கூடிய அதிகாரத்
தைப் பெற்ற நீதிமன்றமாக இருக்கிறது. மாவட்டத்தில் இருக்
கின்ற சார்பு நீதிமன்றம் கோடிக் கணக்கில் வழக்குகளை விசாரிக்
கின்ற நேரத்தில், கோர்ட் ஃபீயாக நீதித்துறைக் கட்டணமாக
7½ பர்சென்ட் அவர்கள் கட்ட வேண்டியிருக்கிறது. ஆனால்
அதே சென்னை மாநகரில் உயர்நீதிமன்றத்தில் ''ஒரிஜினல்
சைட் என்று சொல்லக் கூடிய அளவில் அவர்கள் வழக்காடு
கின்ற நேரத்தில் ஒரு பர்சென்டிற்குக் குறைவாக இங்கே நீதித்



1989 ஏப்ரல் 12] [திரு. என். கணபதி]

துறைக்குச் செலுத்தி, ஏறக்குறைய கோடிக்கணக்கிலே இருக்
கின்ற வழக்குகளை நடத்திக் கொண்டிருக்கின்ற சூழ்நிலை இருக்
கிறது. இந்தப் பாகுபாடு போக்கப்பட வேண்டும்.

உதாரணமாக மற்ற மாவட்டங்களிலே இருக்கின்றவர்கள்
ஏறத்தாழ ரூ. 7,500 செலுத்தி ரூ.1 இலட்சத்திற்கு வழக்கு போட்
டால், இங்கே சென்னை மாநகரில் இருப்பவர்கள் ரூ. 4,500
செலுத்தினால் போதும். ஆனால் ரூ. 2 இலட்சத்திற்கு அவர்
கள் ரூ. 15,000 கட்டினால், இவர்கள் ரூ. 5,250 கட்டினால்
போதும். இப்படிப்பட்ட நிலைமை மாற்றப்பட்டு, நீதித்துறை
கட்டணம் என்பது சீராக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று நடுவர் நீதிமன்றம். ''ஆர்பிட்ரேஷன் ஆக்ட்''
என்று சொல்லப்படுகின்ற ஒரு சட்டம் இருக்கிறது. இந்தச்
சட்டத்தை எல்லா அரசுத் துறை நிறுவனங்கள் ஒப்பந்தங்கள்
போடுகின்ற நேரத்தில், இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, அவர்
களுடைய தகராறுகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற
விதத்திலே இங்கே ஒரு கிளாசை போட்டுக் கொள்கிறார்கள்.
அந்த ஷரத்தைப் போட்டுக் கொள்கின்ற காரணத்தால் அந்த
ஆர்பிட்ரேஷன் வழக்கு போகின்ற நேரத்தில், எத்தனை கோடிக்
கணக்கில் பணம் அதிலே சம்பந்தப்பட்டாலும், அவர்கள் வெறும்
ரூ. 200 மட்டும் நீதிமன்றக் கட்டணமாகக் கட்டி அந்த வழக்கை
நடத்தக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனால் அரசாங்
கத்திற்கு வரக் கூடிய நீதித்துறைக் கட்டணம் குறைவாகிறது.
அதே நேரத்தில் அந்த நடுவர் தீர்ப்புக்கு விடப்படுகின்ற. ஆர்பிட்
ரேஷன் தீர்ப்பிற்கு விடப்படுகின்ற விவகாரங்களில் பல்வேறு
முறைகளிலே அரசுக்கு நஷ்டம் ஏற்படக் கூடிய சூழ்நிலை உரு
வாகிறது. உதாரணமாக சமீபத்தில் நடந்த ஒரு வழக்கில்
வழக்கறிஞர் கட்டணமாக ரூ. 14 இலட்சமும், அந்த ஆர்பிட்
ரேஷன் கட்டணமாக ரூ. 14 இலட்சமும் அவர்களே வாங்கிக்
கொண்டு அரசாங்கத்திற்கு ஏறக்குறைய ரூ. 25 இலட்சம் நஷ்டம
ஆகி இருக்கின்றது என்று நான் கேள்விப்படுகிறேன். இப்படிப்
பட்ட நிலைமைகளைப் போக்குவதற்கு இந்த ஆர்பிட்ரேஷன்
ஆக்ட் என்ற நிலைமையை நம்முடைய ஒப்பந்தத்தில் இல்லாமல்
செய்தால் மிகச் சிறப்பாக இருக்கும் என்று இந்த நேரத்தில்
நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல் சிறைச் சாலைத் துறையைப் பொறுத்த
வரையில், பத்திரிகைகளில் கொடுக்கப்படும் பட்டியலைப் பார்த்
தேன். எல்லாம் காலைப் பத்திரிகைகளாக இருக்கின்றன.
மாலைப் பத்திரிகைகள் ஒன்றுமில்லை. நம்முடைய தமிழ்நாட்
டைப் பொறுத்த வரையில் மக்கள் குரல், மாலைப் பத்திரிகை
வருகிறது. ''நியூஸ் டுடே'' என்ற ஆங்கிலப் பத்திரிகை வரு
கிறது. அதே போன்று மாலை மலர், மாலை முரசு போன்ற
மாலைப் பத்திரிகைகள் வருகின்றன. விடுதலை என்ற மாலைப்

பத்திரிகை வருகிறது. இப்படி பத்திரிகைகளை வழங்கி அந்தச்
சிறைச்சாலைகளிலே இருக்கின்ற கைதிகள படிப்பதற்கு
வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே
கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சிறைச்சாலையைப் பொறுத்தவரையில் வழக்கறி
ஞர்கள் சிறைச்சாலையிலே கைதிகளைச் சந்திக்கின்ற நேரத்தில்,
அவர்களுக்குரிய கௌரவமும், மரியாதையும் அளிக்கப்பட
வில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இது
கண்டனத்திற்கு உரிய விஷயம். அடிக்கடி இதனால் பல பிரச்
சினைகள் வந்தாலும் கூட, சமீபத்தில் உயர்நீதிமன்றத்தில் ஒரு
வழக்கு வந்த போதிலும், அந்த நிலைமை இன்னும் சீராக்கப்பட
வில்லை எனவே சிறைச்சாலைக்குச் செல்லுகின்ற வழக்கறிஞர்கள்
தைரியமாக, கௌரவமாக குற்றவாளிகளைச் சந்தித்து, பல்
வேறு பிரச்சினைகளை, வழக்குகளைப் பற்றிப் பேசக் கூடிய
வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு, இந்த உயர்நீதிமன்றத்திற்கான புதிய கட்டிடம் கட்டு
வதற்கு பணத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஜெனரேட்டர்
வாங்குவதற்கு பணத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இப்படி
பல்வேறு பிரச்சினைகளை உயர்நீதிமன்றத்தில் கவனிக்கின்ற
நேரத்தில், புதிய கட்டிடம் கட்டப்படுகின்ற நிலையில், பழைய
கலை அழகோடு கொண்ட கட்டிடத்தை எந்த விதத்திலும்
மறைத்து விடாமல், அதே கலைப் பாங்கோடு கட்ட வேண்டு
மென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி
கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நீதி நிர்வாகம் சிறைத் துறையில் என்னுடைய கருத்
துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலில்
நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது தமிழ்நாடு என்று அழைக்கப்படும் நம்முடைய
மாநிலம் சென்னை மாநகரம், சென்னை ராஜ்யம் என்று
அழைக்சப்பட்டு வந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்
நாடு என்று பெயர் சூட்டினார்கள். அப்படி பெயர் சூட்டி 20
ஆண்டுக் காலம் ஆனாலும் இன்றும் சென்னை உயர்நீதிமன்றம்
என்று அழைக்கப்படுகிறதே ஒழிய தமிழ்நாடு உயர்நீதிமன்றம்
என்று அழைக்கப்படவில்லை. அதற்கு இந்த அரசு மத்திய
அரசை வலியுறுத்தி சென்னையிலே இருக்கிற உயர்நீதிமன்
றத்தை தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்று பெயரை மாற்று
வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
அடுத்து இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம்
உச்ச நீதிமன்றத்தினுடைய கிளையை சென்னையிலே வைக்க
வேண்டும். உயர்நீதிமன்றத்தினுடைய கிளை மதுரையிலே
இயங்க வேண்டுமென்றெல்லாம் பேசினார்கள். அதே கருத்தை
வலியுறுத்தி நானும் அதைப் பேச விழைகிறேன்.





மேலும் சட்டம் தான் சமுதாயத்தின் அடிப்படை.
Law w.t ι ut justice is blin.i. Justice without law is lame, எல்லா
நீதிமன்றங்களிலும் நீதிபதிகள் பற்றாக்குறை இருக்கிறது என்
பதை இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தெரி
வித்தார்கள். உச்ச நீதிமன்றம் ஆனாலும் சரி, உயர்நீதிமன்றம்
ஆனாலும் சரி, மாவட்ட நீதிமன்றம், வட்ட நீதிமன்றம் ஆனா
லும் சரி அனைத்திலும் நீதிபதிகளின் பற்றாக்குறை. இந்தப்
பற்றாக்குறையை இந்த அரசு உடனடியாகத் தீர்க்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இங்கே பேசிய
மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் கூட நீதிபதிகளைப்
பற்றி எல்லாம் குறிப்பிட்டார்கள். நீதிபதிகள் இவ்வாறு தவறு
செய்வதற்குக் காரணமே சென்ற ஆட்சிதான் காரணம்.

ஏனென்றால் ஒரு மாவட்ட முன்சீப்போ அல்லது ஜட்ஜோ
நியமிக்கிறபோது அவர்கள் அமைச்சர்களை எல்லாம் எதிர்
பார்த்துத்தான் இருந்தார்கள். அப்படி எதிர்பார்த்ததன் கார
மாக, அப்படி எதிர் பார்த்து பதவியைப் பெற்று விட்ட பிறகு
அவர்கள் நேர்மையாக இருக்க முடியாத காரணத்தால் கடந்த
10, 12 ஆண்டுகளாக நீதிமன்றங்களில் இருக்கிற ஒரு சில
நீதிபதிகள் தவறு செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.
அதை எல்லாம் இந்த அரசு நிச்சயமாக தீர்த்து வைக்க முடியும்
என்று நினைக்கிறேன். மேலும் இந்தப் பதவிகளுக்கு இப்படி
வருகின்ற காரணத்தால் திறமை படைத்தவர்கள் வரமுடியாமல்
போய் விடுகிறது. எனவே திறமையின் அடிப்படை
யில், இனிமேல் அப்பதவிக்கு வருபவர்களை தேர்வு செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீதிமன்றங்களில் வழக்குகள் தேங்கி கிடக்கின்றன என்று
இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள்.
வழக்குகள் தேங்குவதற்கு என்னைப் போன்ற அல்லது பேரவைத்
தலைவராக உட்கார்ந்திருக்கிற வழக்கறிஞர்கள் எல்லாம் கார
ணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். Vexaticus litigaticn
போன்றவைகளை எல்லாம் வழக்கறிஞர்கள் ஊக்கப்படுத்து
கிறார்கள். இதை எல்லாம் வழக்கறிஞர்களாக இருக்கிற
நாமெல்லாம் தடுத்து நிறுத்துவோமேயானால் வழக்குகள்
தேங்காமல் இருக்க முடியும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி) :
வெக்ஷேஸஸ் லிடிகேஷன் ஆக்ட் என்ற சட்டம் இருக்கிறதே.
அந்தச் சட்டத்தின் அடிப்படையில் தீர்க்க வேண்டிய விஷயத்தை
உறுப்பினர் அவர்கள் தானே தீர்ப்பு சொல்லி வழக்கறிஞர்களைக்
குற்றம் சொல்வது சரியல்ல.

திரு. அ. இராசேந்திரன் : நான் சொல்வது சட்டம் இருக்
கிறது. வழக்கறிஞர்களாகிய நமக்கும் பொறுப்பு இருக்கிறது
என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வழக்குகள் வரும்
போது அது போட வேண்டிய வழக்கா, போடக் கூடாத வழக்கா
என்று நாமே நிறுத்திக் கொள்ளலாம். அடுத்து நீதிபதிகள் ....

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கட்சிக்காரர் வழக்கு ஒன்று கொடுத் தால் நாமே முடிவு செய்து போடலாமா போட வேண்டாமா என்று சொல்லிவிடலாம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் நான் படித்தபோது அப்பிரண்டைஸுக்காக லெக்ச்சர்ஸ் நடக்கும். அதில் அன்றைக்கு ஜட்டிஸ் கோவிந்தமேனன், பிரபலமான வழக்கறிஞர் அவர் சொன்னார், உங்களுடைய வேலை கட்சிக் காரர் கொடுக்கிற வழக்குகளை எடுக்க வேண்டுமே தவிர— வழக்கின் சாதக பாதகங்களைச் சொல்லலாம். ஆனால் அவர் களே வழக்கு நடத்த வேண்டுமென்று சொன்னால் Your duty is to conduct the case but it is not for to you say that you should not file a case" என்று சொன்னார். அது தான் முறை என்று கூட நான் கருதுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி) : லார்ட் மெக்காலேயைப் பார்த்து ஒரு முறை கேட்டபோது "Don't be a Judge but becan advocate" என்று அவர் சொன்னார்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு அமைச்சர் அவர் களுக்கும் பேரவைத் தலைவருக்கும் நன்றி. மேலும் நீதிபதிகள் ''காஸ் ஆப் ஆக்ஷன்'' இல்லாத வழக்குகளை எல்லாம் அட்மிட் செய்கிற காரணத்தால் வழக்குகள் நீதிமன்றங்களிலே தேங்கிக் கிடக்கின்றன. அவைகளை எல்லாம் அந்தந்த உரிய நீதிபதிகள் சரிபார்த்து செய்தால் வழக்குகள் தேங்காமல் இருக்க முடியும். ஏனென்றால் பெட்டி கேஸ்களைப் பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். ஆனரரி மேஜிஸ்ட்டிரேட்டுகள் என்பவர்களை எல்லாம் நியமித்தால் இந்த பெட்டி கேஸ்களை யும், செக்ஷன் 75-ன்படியும் வரும் வழக்குகளை ஆனரரி மாஜிஸ் டிரேட்டுகள் விசாரித்தால் வழக்குகள் தேங்காமல் இருப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-40)

நீதி நிர்வாகத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூபாய் 22,38,34,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று கூறினார்கள். சென்ற ஆட்சியில் நீதி நிர் வாகத்திற்கு உரிய பணம் ஒதுக்கப்படாத காரணத்தால் நீதி மன்றம் பழைய கட்டிடத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. உடைந்த பெஞ்சுகள், நாற்காலிகள், கழிப்பறை இல்லாத நீதிமன்றம் என்று இப்படி காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. மேற்சொன்ன குறைகளை இந்த அரசு சரிசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் சட்ட அமைச்சர் அவர்கள் வழக்குரைஞராகப் பணிபுரிந்த காரணத்தினால் சிறைச்சாலைக்கு சில சீர்திருத்தங்களை கொண்டுவர வேண்டுமென்று நான் விரும்பு கிறேன். தஞ்சாவூர் போன்ற பகுதிகளில் டெனன்ட்ஸ் கோர்ட்டுகள்





இருக்கின்றன. டெனன்ட்ஸ் கோர்ட்டுகளில் தாசில்தார் விசாரிக் கிறார்கள். தாசில்தார் விசாரிக்கின்ற காரணத்தினால் அவருக்கு சட்ட அறிவு இல்லை என்று சொல்ல முடியாது. இருந்தாலும் அதற்கு உரிய அடிப்படை குவாலிபிகேஷன் இல்லாத காரணத்தி னால் அவர்கள் சரியாக விசாரிக்க முடியாமல் இருக்கிறது. அதற் கெல்லாம் சட்டம் படித்தவர்களை அதற்கென்று தனியாக ஸ்பெஷல் கோர்ட்டுகளைப் போட்டு டெனன்ட்ஸ் கோர்ட்டுகளை ஏற்படுத்தினால் சிறந்தவையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் கீழ்மை நீதிமன்றங்களில் ஒரு தாசில்தார் அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டுமென்றால் அவர்களை குற்ற வியல் நீதிமன்றங்களில் உட்கார வைத்து அவர்களுக்கு வழக்கு களை நடத்துவதற்கு பயிற்சி அளிக்கிறார்கள். இதெல்லாம் தேவையில்லாத விஷயம் என்று நான் கருதுகிறேன். காரணம் இருக்கின்ற சி. ஆர். பி. சி. 144, 145 செக்ஷன் 2-ஐ மட்டும் அந்த தாசில்தார் தெரிந்துகொண்டால் போதும். 324, 325, 323 இ. பி. கோ. அந்தச் சட்டங்களையெல்லாம் அவர்கள் தெரிந்து கொண்டு எக்ஸிகியூட்டிவ் மேஜிஸ்ட்ரேட்டாக அவர்கள் பணிபுரியப் போவதில்லை. ஆக நீதிமன்றங்களில் உட்கார்ந்து நீதிபதிகள் நடத்துகின்ற வழக்குகளைப் பார்த்து பயிற்சி பெற லாமே ஒழிய அவர்களிடத்திலே வழக்குகளை கொடுத்து அவர் களை நடத்தச் சொல்வது, அது நல்லமுறையிலே நடைபெற வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இங்கு சட்டமன்ற உறுப்பினர்களாக மகளிர் சிலர் இருக்கிறார்கள். நான் சொல்லுகின்ற கருத்தை அவர்கள் வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். இன்று இருக்கின்ற ரிஜிஸ்ட்ரேஷன் ஆஃப் இந்து மேரேஜ் ஆக்டில் ஒரு திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பிரிவு 18-ன்படி திருமணம் நடத்துவதற்கு அவர்கள் ரிஜிஸ்ட்ரார் ஆபீசுக்குச் சென்றால் அவர்கள் சொல்வதெல்லாம்—நீங்கள் முன்பே திருமணம் செய்து கொள்ள வேண்டும் ; அதை ரிஜிஸ்ட் டரேஷன் தான் நாங்கள் செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். ப்ரையர் மேரேஜ் நடந்திருக்க வேண்டும் ; அப்பொழுதுதான் ரிஜிஸ்ட்டர் செய்ய முடியும் என்கிறார்கள். ஒரு ஆணும், பெண் ணும் பதிவுத் துறைக்குச் சென்று நாங்கள் கணவன் மனைவியாக வாழவேண்டும் என்று சொன்னால், அவர்கள் நீங்கள் இதற்கு முன்பே திருமணம் செய்து கொண்டிருக்க வேண்டும், அப்பொழுது தான் ரிஜிஸ்ட்டர் செய்வோம் என்று சொல்வது சரியல்ல. அப்படி அவர்கள் சென்று அங்கே இரண்டு சாட்சிகள் வைத்து திருமணம் செய்வதை ஒப்புக்கொண்டு, அந்தச் சட்டத்திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு சட்ட திருத்தத்தைக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். இந்து மேரேஜ் ஆக்டில் பிரிவு 19-ன் கீழ்— சாதாரணமாக ஒரு கணவன் மனைவி சென்னையிலே வாழ் கிறார்கள் என்று வைத்துக் கொண்டால் அவர்களுடைய வாழ்க் கையிலே மண முறிவு ஏற்பட்டு, மனைவி திருநெல்வேலி அல்லது

கன்னியாகுமரியில் இருந்தால், அந்த மனைவி டைவர்ஸ் போன்று வழக்கு பதிவு செய்ய வேண்டுமென்றால் அவர்கள் திருமணம் செய்த இடத்திலேயே வழக்கு போட வேண்டும் அல்லது கணவன் மனைவி இருவரும் சேர்ந்து கடைசியாக எங்கே வாழ்ந்தார்களோ அந்த இடத்தில் வழக்கு போட வேண்டும். சாதாரணமாக ஏழைக் குடும்பத்திலே கன்னியாகுமரியில் பிறந்த பெண்மணிக்கு சென்னை யிலே திருமணம் நடந்தது என்றால், சென்னையிலே வாழ்க்கை நடத்தினால், பிறகு கணவனால் கைவிடப்பட்டால் அவள் கணவன் மீது வழக்கு தொடர வேண்டுமென்றால் சென்னைக்கு வந்து வழக்கு தொடர வேண்டும். இதன் காரணமாக நீதி பெண்களுக்கு கிடைக்காமல் சென்று விடுகின்றது. இதை மாற்றி சணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எங்கு வாழ்கிறார் களோ அந்த இடத்திலே வழக்கு போடுவதற்கு அவர்களுக்கு உரிமை அளிக்க வேண்டும். அதற்கு 19-வது பிரிவு திருத்தப்பட வேண்டும். இது கான்ஸ்டிடியூஷனில் கன்கரண்ட் லிஸ்டில் இருப்ப தால், இந்த அரசே அதை திருத்த முடியும் என்று கேட்டுக் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்ட திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் ஒரு திருத்தம். மோட்டார் ஆக்ட், எம். சி. ஓ. பி. வழக்குகள் எல்லாம் இருக்கும்போது, சார் நீதிமன்றங்களிலே இருக்கின்ற ஜட்ஜுகள் எல்லாம், 10 ஆண்டுகள் அவர்கள் நிறைவு பெற்று, 10 ஆண்டுக்காலம் அனுபவம் உள்ளவர்கள் தான் எம். சி. ஓ. பி. வழக்குகளை விசாரிக்க வேண்டும் என்று ஒரு சட்டம் இருக்கிறது. அதனால் சில நீதிமன்றங்களில் சார் நீதிபதிகள், 7 ஆண்டுக்காலம், 9 ஆண்டுக் காலம் என்று வருகிற வர்கள் அந்த வழக்கை விசாரிக்க முடியாமல் மற்றவர்களுக்கு, மாவட்ட நீதிபதிகளுக்கு அதை அனுப்பி விடுகிறார்கள். அதனால் மக்களுக்குத் தொல்லை ஏற்படுகிறது. அதையும் மாற்றி சார் நீதிபதிகளாக எப்போது பதவி ஏற்கிறார்களோ, அப்போதே அவர்களுக்கு அந்த பத்தாண்டுகளுக்குக் குறைவாக அனுபவம் இருந்தாலும், அவர்களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்கின்ற வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், சிறைத்துறையைப் பற்றி ஓரிரு வார்த்தைகளை மட்டும் சொல்லி விடை பெறலாம் என்று நினைக்கிறேன். சிறை யிலே இருப்பவர்கள் அத்தனை பேரும் குற்றவாளிகள் அல்ல. வெளியிலே இருப்பவர்கள் அத்தனை பேரும் நிரபராதிகள் அல்ல. ஆகவே, சிறையிலே இருப்பவர்களுடைய ஜீவாதார உரிமையை நாம் நிச்சயமாகப் பேணிக் காப்பாற்ற வேண்டும். அதற்காக சிறைத் துறையை பலவிதமாக செம்மைப்படுத்தப்பட வேண்டும். மேலும் சிறைத் துறைக்கு ஐ. ஜி. யாக வருபவர்களை சிறைத் துறையிலே இருப்பவர்களையே போடவேண்டும். காவல்துறை யிலே இருப்பவர்களைக் கொண்டுபோய் அங்கே ஐ. ஜி. யாகப் போடுவது, அவர்களுடைய உணர்வுகளை, கஷ்ட நஷ்டங்களைப் புரிந்துகொள்ளாமல் போய் விடுகிறது. அங்கே, காவல்துறை ஐ. ஜி. யாகப் போடாமல் சிறைத் துறையிலே இருப்பவர்களை



ஐ. ஜி. யாகப் போடவேண்டும். மேலும், அங்கே இருக்கின்ற வார்டர்கள், கான்விக்ட் வார்டன்கள் போன்றவர்களுக்கெல் லாம் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும். சிறைத் துறையை செம்மைப்படுதகி, சீர்படுத்த வேண்டும் என்று கூறி என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரே ஒரு வார்த்தையை மட்டும் கூறி . . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி) :** சட்டத் திலே தொகுதி என்ன சார் இருக்கிறது ? (சிரிப்பு).

**திரு. அ. இராசேந்திரன் :** வடாற்காடு மாவட்டம் போளூர் தொகுதியில் பல்லாண்டுக் காலமாக, முன்பு திராவிட முன்னேற் றக் கழக ஆட்சி இருந்தபோதுகூட, அங்கு வந்த கலைஞர் அவர்கள், பேராசிரியர் அவர்கள், அத்தனை பேர்களும் அங்கு சர்க்கரை ஆலை வேண்டும் என்பதை உணர்ந்து பல . . . . (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி) :** சட்டத் திற்கும், சர்க்கரைக்கும் சம்பந்தமே இல்லை. (சிரிப்பு) அடுத்து, திரு. அ. லெ. சுப்பிரமணியன்.

***திரு. அ. லெ. சுப்பிரமணியன் :** சட்டப் பேரவை தலைவர் அவர்களே, இந்த மானியத்தை வரவேற்று ஒரு சில கருத்துக் களை இங்கே கூற விரும்புகிறேன். மதுரையில் சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளை ஒன்றை அமைக்கவேண்டும் என்று சட்டமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கத்தில் குறிப்பு இருக்கின்றது. அதற்குத் தடையாக இருப்பவர்கள் உயர் நீதிமன்றத்திலே இருக்கின்ற நீதிபதிகளும், இங்கே தலைவராக இருக்கின்ற நம்முடைய சென்னை வழக்கறிஞர்களும்தான் என் டதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். ஏனென்றால் அவர்கள் இங்கிருநது உயர்நீதிமன்றத்தினுடைய கிளை மதுரைக் குப் போய்விட்டால் அவர்களுக்கு இன்னல் ஏற்படுகிறது. அவர் களுக்கு வசதிக் குறைவு ஏற்படுகிறது என்று கருதுகிறார்கள். அதைக் கருத்திலே எடுக்காமல் முடிவு செய்ய வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. எல். எஸ். அவர்கள் மதுரையில் பெஞ்ச் அமைப்பது பற்றிக் குறிப்பிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இதில் தடையாக யார் என்று சொல்வதைவிட அதற்கு முயற்சி எடுத்துக் கொள்வதுதான் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். வழக்கறிஞர்கள் தடை செய்ய முடியாது. கருத்துக்களைக் கேட்கின்ற இடத்தில் இருக்கின்ற அரசாங்கம், உயர்நீதிமன்றம், மத்திய அரசாங்கம், உச்சநீதிமன்றத் தலைமை இவர்களைத்தான் கேட்டு முடிவு செய்வார்களே தவிர, வழக்கறிஞர்களைக் கேட்டு முடிவு செய்வதாக இல்லை.

**திரு. அ. லெ. சுப்பிரமணியன் :** இத்தகைய அமைப்புக்கள் வேண்டாம் என்று தீர்மானம் போடுவதைத்தான் நான் குறிப் பிட்டேன். ஆகவே, விரைவில் அப்படிப்பட்ட கிளை அமைக்க வேண்டும் என்று முதலிலே கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. அ. லெ. சுப்பிரமணியன்] [1989 ஏப்ரல் 12

உயர்நீதிமன்றத்திலே இன்றைக்கு வழக்குகள் ஏராளமாகத் தேங்கிக் கிடக்கின்றன. கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் வழக்குகள் தேங்கியிருப்பதாக முதல்வர் அவர்கள் அன்றைக்கு அறிவித்து இருக்கிறார்கள். யார் வந்தாலும் '' பென்டென்சி ஆஃப் கேஸஸ்' என்று ஒரு லெக்ச்சரே அடிக்கிறார்கள். அதை நீக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். நான் சில அரிய யோசனைகளையும் கூற விரும்புகிறேன்.

[மாண்புமிகு பேரவைத் ௱லைவர் தலைமை]

இன்றைக்கு உயர்நீதிமன்றத்தில் உள்ள 25 நீதிபதிகளை 32 ஆக உயர்த்தவேண்டும் என்று இங்கே குறிப்பு வைத்திருக்கிறார்கள். அதிலேயும் மாவட்ட நீதிபதிகள், வழக்கறிஞர்கள் என்பவர்களை நியமிக்கின்றபோது 1: 2 என்ற விகிதத்தில் நியமிப்ப தாசு அன்றைக்கு முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கின்றார்கள் நான் கேட்க விரும்புவது, வழக்கறிஞர்களை நியமிக்கின்றபோது நேரிடையாக உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளாக உயர்நீதி மன்றத்தில் வழக்காடுகின்ற வழக்கறிஞர்களைத் தான் நியமிக்க வேண்டும் என்று ஏதும் விதி இருக்கிறதா? இங்கே சென்னை தவிர்த்து, பாளையங்கோட்டை, திருநெல்வேலி, கோயம் புத்தூர் போன்ற இடங்களில் திறமையான வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். ஆகவே, வழக்கறிஞர்களை நியமிக்கின்றபோது, சென்னைக்கு 50 சதவிகிதமும், மீதி 50 சதவிகிதம் வெளி மாவட்டங்களிலே இருக்கின்ற வழக்கறிஞர்களையும் நீங்கள் நியமிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு உயர் நீதிமன்றத்தில் அவர்கள் ஓய்வு பெறுகின்ற வயது 62 ஆக இருக்கிறது. உச்சநீதிமன்றத்தில் அது 65. எனவே இன்றைக்குத் தேங்கியிருக்கின்ற வழக்குகளை நாம் பைசல் செய்வதற்காக ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளை 3 ஆண்டுக் காலம் '' கான்ட்ராக்ட் பேசிஸில் '' அமர்த்திக் கொள்ளலாம் என்று '' இந்தியன் லா கமிஷன் '' ஏற்கெனவே அறிவித்திருக் கின்றது. சிபாரிசு செய்திருக்கின்றது. அதை நாம் ஏற்றுக் கொண்டு ஓய்வு பெற்ற திறமையான நீதிபதிகளை மூன்றாண்டுக் காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வழக்குகளைத் தீர்ப்பதற் காக அதிகப்படியாக நியமித்தால் அங்கே நீதிமன்றத்திலே இருக் கின்ற வழக்குகள் இன்றைக்கு விரைவிலே முடிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-50)

இன்றைக்கு சட்டத்தில் இருக்கிற ஒரு குறைபாடு என்னவென்றால், உயர்நீதிமன்றத்தில் கிட்டத்தட்ட 17,575 முதல் —பர்ஸ்ட்—அப்பீல்கள் பைசலாகாமல் இருக்கின்றன. நீதித் துறையைப் பொறுத்தவரையில் முன்சீப் கோர்ட் இருக்கிறது.



1989 ஏப்ரல் 12] [திரு. அ. லெ. சுப்பிரமணியன்]

ரூபாய் 15 ஆயிரம் வரையில்—அதற்கு பெக்யூனியரி ஜூரிஸ்டிக்ஷன் இருக்கிறது. அதற்குமேல் சப்-கோர்ட் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கணபதி அவர்கள் சொன்னதுபோல் அன்—லிமிடெட் ஜூரிஸ்டிக்ஷன் சப்-கோர்ட்டுக்கு இருக்கிறது. கோர்ட்டு களிலேயும் சப்-கோர்ட்டினுடைய தீர்ப்பிற்கு மேலாக அப்பீல் செய்ய உயர்நீதிமன்றம் இருக்கிறது. ஆனால் இன்றைக்கு இருக் கின்ற அமைப்பின்படி முன்சீப் கோர்ட்டில் ஒரு வழக்கு என்றால், அதற்கு அப்பீல்—முதல் முறையீடு சப்-கோர்ட்டுக்கு இருக்கிறது. சப்-கோர்ட்டில் ஒரிஜினல் சூட் என்றால், அதன்மீது முதல் மேல் முறையீடு ரூபாய் 40 ஆயிரம் வரைதான் மாவட்ட நீதிமன்றத் திற்கு இருக்கிறது. அதற்கு மேல் என்றால், உயர்நீதிமன்றத் திற்குச் செல்ல வேண்டும். நான் விரும்பி, வேண்டிக் கொள்வது என்னவென்றால், இன்றைக்கு கீழ்மை நீதிமன்றமான சப்-கோர்ட்டுக்கு அன்-லிமிடெட் ஜூரிஸ்டிக்ஷன் ஒரிஜனல் சைடி-ல் இருக்கும்போது அதே அளவு மாவட்ட நீதிமன்றத்திற்கும், சப் கோர்ட்டுகள் அப்பீல்களை ஏற்கின்ற அந்த முறையில் சட்டங் களைத் திருத்தினால் இன்றைக்கு பர்ஸ்ட் அப்பீல்ஸ்—முதல் முறையீடுகள்—உயர்நீதிமன்றத்திற்கு வரத் தேவையில்லை. இரண்டாவது மேல் முறையீடுகள் மட்டும் அங்கு வந்தால் போதும் அந்த அளவிற்குச் சடடத்தைத் திருத்தினால் இங்கே தேங்கிக் கிடக்கின்ற 20 ஆயிரம் வழக்குகள் 'முதல் ஏற்பு' அப்பீல் வழக்கு களாக இருக்கின்ற காரணத்தால் அவைகள் எல்லாம் கட்டுப் படுத்தப்படும் என்று நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித் துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று. இன்றைக்கு இந்த அரசாங்கம் வருவதற்கு முன்பு—6—10—1988-ல் ' இண்டக்ரேஷன் ஆப் மாஜிஸ்ட் ரேட்ஸ் அண்டு முன்சீப்ஸ் ' என்று சொல்லி, இரண்டு பேரையும் ஒருங்கிணைத்திருக்கிறார்கள். இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட் ரேட்டுகள் இனிமேல் கிடையாது. ஆனால் இதிலே இருக்கின்ற ஒரு சிக்கல் என்னவென்றால், அப்போது இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் இருக்கின்றபொழுது அவர்கள் ஏற்படுத்திய தீர்ப்புகளை மேல் முறையீடு செய்கின்ற அதிகாரம் முதன்மை குற்றவியல் நீதிபதிக்கு இருந்தது. அதாவது சீப் ஜூடிஸியல் மாஜிஸ்ட்ரேட். இன்றைக்கு இரண்டு பேரும் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளாக இருக்கின்ற காரணத்தால் அவருக்கு அந்த உரிமை இல்லாமல் போகிறது. எனவே, சீப் ஜூடிஸியல் மாஜிஸ்ட்ரேட் பதவியை '' டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் ' பதவியாக—அந்தஸ்தை உயர்த்திச் செய்து அப்படிப்பட்டவர்களை நியமித் தால் அவர்கள் வழக்குகளை—அப்பீல்களை—ஏற்று நடத்த வசதியாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் வழக்கறிஞர்கள் தொழில் புரிகின்ற நாங்கள் பல தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கின்றோம். சென்ற கவர்னர் ஆட்சியில் ஒரு ஜி. ஓ. போட்டிருக்கிறார்கள். ஜி. ஓ. எம். எஸ். 1528, ஹோம், தேதி 1—7—1988 என்பதாகும். அதற்கு பின்னால் ஜி. ஓ. எம். எஸ். நெ. 127, தேதி 23—1—1989,

ஹோம், டிரான்ஸ்போர்ட்—4. என்பதாகும். விபத்து நடக்கின்ற வழக்கு இருக்கிறதென்றால், அந்த விபத்து நடந்து முடிந்ததற்குப் பிறகு வழக்கு போட்டால் நீதிமன்றத்தில் நஷ்ட ஈடு கொடுக்கிறார்கள். சுமார் 60 ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்கிறார்கள் என்றால், மைனர்களாக இருந்தால் அவர்களுடைய நஷ்ட ஈட்டுத் தொகையை நேஷனலைஸ்டு பேங்கில் டிபாசிட் செய்ய வேண்டுமென்று விதி இருக்கிறது. மேஜர் ஆனதற்குப் பிறகு அந்தப் பணத்தை எடுத்துக் கொள்ள லாம் அல்லது அவர் மைனராக இருக்கின்றபோது செலவுக்காக வேண்டுமானால், வட்டித் தொகையை எடுக்கலாம் என்றிருக் கிறது. ஆனால் இந்த ஜி. ஓ.-வின்படி, அறிவிப்பின்படி, எந்தத் தொகையாக இருந்தாலும், யாருக்கு வந்தாலும், அதை, அவர்கள் படிக்காதவர்களாக இருந்தால், கோர்ட்டின் மூலமாக டிபாசிட் செய்யப்பட வேண்டும். அவருக்கு வீடு வாங்க வேண்டுமென்று தேவைப்பட்டால் மட்டுமே அந்தத் தொகையை எடுக்க முடியும் என்று அந்த ஜி. ஓ. கூறுகின்றது. அதைப்போல அரைகுறை செமி-லிட்டரேட்டாக இருந்தாலும், அதிலேயும் நீதிபதிக்கு, பணத்தைக் கொடுக்காமல் டிபாசிட் செய்ய வேண்டுமென்று உத்திரவிட அதிகாரமுள்ளது. இதனால், தனி உரிமை பாதிக்கப்படு வது மட்டுமல்லாமல் வழக்கறிஞர்களுக்கும் பாதகம் ஏற் படுகிறது. வழக்கறிஞர்களாகிய நாங்கள் வழக்கு நடத்துகிறோம். எங்களுக்கு ஊதியம் கொடுப்பதற்குக்கூட வழியில்லாமல், அத் தனை பணத்தையும் நீதிபதி டிபாசிட் செய்து விட்டால், வழக் கறிஞர்களும் பயன்பெற முடியாது, வழக்கு போடுபவர்களும் பயன்பெற முடியாது. அதுமட்டுமல்ல, நீதிபதியைப் பொறுத்த வரையில் எந்தெந்த பேங்குகளில் டிபாசிட் செய்ய வேண்டு மென்று அவர்களாகவே தேர்ந்தெடுத்துக் கொண்டு, தங்க ளுடைய பதவியை மிஸ்யூஸ் செய்வதற்கும் அந்த முறை வழி வகுக்கின்றது என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். எனவே அந்த ஜி. ஓ.-வை ரத்து செய்ய வேண்டும்.

இன்னும் வழக்கறிஞர்களைப் பொறுத்தவரையில் எத்த னையோ பதவிகளை எங்களுக்குத் தர வேண்டும். எச். ஆர். அண்டு சி. இ. கமிஷனர் பதவி இருக்கிறது. அது நீதி வழங்கக் கூடிய பதவி. அதைப்போல அசிஸ்டெண்ட் கமிஷனர் ஆப் அக்ரிகல்சுரல் இன்கம்டாக்ஸ், ரெண்ட் கோர்ட்ஸ் முதலியவை களில் வழக்கறிஞர்களை அமர்த்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இதெல்லாம் திரு. அ. லெ. சுப்பிரமணியன் அவர்களுக்கா, வழக்கறிஞர்களுக்கா ?

**திரு. அ. லெ. சுப்பிரமணியன்** : நெல்லை வழக்கறிஞர்கள் சங்கத் தலைவராகவும் நான் இருக்கிற காரணத்தால், பொது வாக வழக்கறிஞர்களுக்காக கேட்கிறேன். மாஜிஸ்டிரேட்டுகளை முன்பு எப்படி எடுத்தார்கள் என்றால் அவர்களுக்கு ஸ்டேட் கோட்டா என்று இருந்தது. அதிலே இருந்து 50 சதவீதம், 60 சதவீதம் மாஜிஸ்டிரேட்டுகளை எடுத்து இருக்கிறார்கள். உதார ணத்திற்கு நான் ஒன்றை கூற விரும்புவது, ஒருவர் மின்சார



வாரியத்தில் சாதாரண ஸ்டெனோவாக இருந்தவர் எஸ். எஸ். எல். சி. தான் படித்து இருக்கிறார். அவர் மாலை நேரக் கல்லூரி யில் படித்து அல்லது அஞ்சல் வழியாக படித்து பி. ஏ., பட்டம் பெற்றார். பிறகு மாலை நேரக் கல்லூரியில் படித்து பி. எல். பட்டம் பெற்றிருக்கிறார். ஸ்டேட் கோட்டா என்ற அடிப் படையில் திடீர் என்று மாஜிஸ்டிரேட்டாக வந்து உட்காருகிறார். ஒரு நாள் கூட கறுப்பு கோட் போட்டு வழக்கு நடத்தி இருப்பாரா என்றால் நிச்சயமாக இல்லை. அப்படிப்பட்ட நீதிபதிகள் இடத் திலே நாங்கள் வழக்கு நடத்த வேண்டிய ஒரு துர்பாக்கியமான நிலையில் இருக்கிறோம் என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் வழக்கறிஞர்களுக்கு ஓய்வு ஊதியம் தரப்பட வேண்டும். அவர்கள் சொன்னதைப் போல ஒருவர் இறந்தால் 10 ஆயிரம் ரூபாய் என்று எல்லோருக்கும் இருக்கும்போது நாங்கள் என்ன பாவம் செய்தோம்? வழக்கறிஞர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் தரப்பட வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதைப்போல குரூப் இன்ஷூரன்ஸ் திட்டங்கள் இவைகள் எல்லாம் வழக்கறிஞர்களுக்கு நடை முறைப்படுத்தப்பட வேண்டும்.

அடுத்து, நெல்லை நீதிமன்றக் கட்டிடத்தைப் பற்றி ஒரே ஒரு வார்த்தை பேசி முடித்து விடுகிறேன். இங்கே புதிய நீதிமன்றம் கட்டப்பட்ட நிலையில் (மணியடிக்கப் பெற்றது) ..ஒரே ஒரு நிமிஷத்தில் முடித்து விடுகிறேன். அதை இப்போது மாற்றி யிருக்கிறார்கள். ஆனால் இந்த நீதிமன்றத்தில் இடம் போதாத காரணத்தால் 3 நீதிமன்றங்களை 6 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பழைய இடத்தில் வைத்திருக்கிறார்கள். எனவே, நாங்கள் மிக கஷ்டமான நிலையில் 2 இடத்திலும் வழக்கை நடத்த வேண்டி யிருக்கிறது. எனவே, புது நீதிமன்றத்தில் முதல் கிரிமினல் கோர்ட் பிளாக்கில் மாடியைக் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் திருநெல்வேலி மாவட்டத்தில் லேபர் கோர்ட் கேட்டிருக்கிறார்கள். கோவில்பட்டியில் சப்-கோர்ட் கேட்டிருக் கிறார்கள். இவைகளை எல்லாம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ராமநாதபுரம் மாவட்டத்தை முந்தைய அரசு ரெவின்யூ மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் அதை மூன்றாகப் பிரித்து காமராஜ் என்றும், பசும் பொன் தேவர் திருமகனார் என்றும், இராமநாதபுரம் என்றும் பிரித்து இருக்கிறார்கள். பிரித்து 5 ஆண்டு காலம் ஆகிவிட்டது. இன்றைக்கும் அவர்கள் அங்கே ஜுடிஷியில் டிஸ்ட்டிரிக்டாக பிரித்து நீதிபதிகளை நியமித்து இருக்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை. இன்றைக்கு தேவர் திருமகனாரும், காமராஜும் நீதி தேடி மீண்டும் மதுரைக்கு வரவேண்டிய சூழ் நிலை இருக்கிறது. ஆகவே அந்த 3 மாவட்டங்களிலும் தலைமை நீதிமன்றம் ஏற்படுத்த வேண்டும். தென்காசியைப் பொறுத்தவரையில் சப்-கோர்ட் ஏற்படுத்தி இருந்தாலும் கூட

[திரு. அ. லெ. சுப்பிரமணியன்] [1989 ஏப்ரல் 12

அதிலே கட்டிடம் கட்டாமல் மிக இட நெருக்கடியில் இருந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் சீர் தூக்கிப் பார்த்து நிச்சயமாக எங்களுக்கு வாழ்வு தருகின்ற வகையில் நடவடிக்கை களை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நீதிபதி களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய சர்வீஸ் கண்டிஷன் மிக மோசமாக இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்கள் ஆசிரியராக இருந்தவர். ஆசிரியர்களுக்கு யூனிவர்ஸிட்டி கிராண்ட்ஸ் கமிஷனுடைய ஆணையின்படி சம்பளம் தருகிறார்கள். அவர் களை விட 10 மடங்கு அதிகமாக வேலை செய்பவர்கள் நீதிபதி கள். ஆகவே, அவர்களுடைய ஊதியத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் இன்றைக்கு ஒரு தேக்கநிலை நீதித் துறையைப் பொறுத்தவரையில் இருக்கிறது. எனவே, அரசு, உயர்நீதி மன்றம், வழக்கறிஞர்கள் ஆகிய 3 பேரும் கலந்து பேச ஒரு முத்தரப்பு மாநாடு போட அரசு நடவடிக்கை எடுத்தால் அதில் பலபேர் குறைகளை எடுத்துச் சொல்லி பரிகாரம் காணு வதற்கு அது வசதியாக இருக்கும். ஆகவே, அதற்கு ஏற்பாடு செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுக்கவேண் டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்துப் பேச இருப்பவர் அந்தக் காலத்தில் 5 மணித்துளி பேசி பரிசு பெற்ற சிறப்புக்குரிய திரு. பெ. சீனிவாசன் அவர்கள், எனவே பரிசு பெறும்படி பேசுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு).

**திரு. பெ. சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதானமும், உண்மையும், நேர்மையான குணமும் கொண்ட நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந் திருக்கும் இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளை மட்டும் நான் பேச விழைகிறேன்.

நீதிமன்றங்களில் இன்றைக்கு இருக்கிற மிகப்பெரிய குறைபாடு வழக்குகள் தேக்கம்; ஏராளமான வழக்குகள் பல ஆண்டு கால மாக அவைகள் வாய்தாவில் போய்க்கொண்டிருக்கின்றன. இதற்கு முக்கிய காரணம் பல வழக்குகளை எப்.ஐ.ஆர். ஸ்டேஜிலேயே நீதிபதிகள் தள்ளி விடலாம். ஒரு போலீஸ் அதிகாரி குற்றச் சாட்டுப் பத்திரிகை, எப்.ஐ.ஆர். ஃபஸ்ட் இன்பர்மேஷன் ரிப் போர்ட்டை வைத்துக்கொண்டு நீதிமன்றத்திற்கு கொண்டு வந்த உடனே கண்ணை மூடிக்கொண்டு 15 நாள் வாய்தாவை சொல்லி அனுப்பிவிடுகிறார்கள். அவைகளில் பாதி வழக்குகள் பொய் வழக்குகள் என்பது பின்னாலே நிரூபிக்கப்படுகின்றன. அதற்கு உதாரணமாக கடந்த காலத்தில் இன்றைய தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் மீது அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரை கொலை செய்ய முயற்சி செய்தார் என்று, வெளிப்படையாக பார்த்த பார்வையிலேயே பொய் வழக்கு



1989 ஏப்ரல் 12] [திரு. பெ. சீனிவாசன்]

என்று தெரிந்து இருக்கிற, ஒரு வழக்கை அங்கே நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, உடனே அவர் கைது செய்யப்பட, 15 நாள், 15 நாள், 15 நாள் ரிமாண்டில போய் கடைசியில் அவர் நான் வழக்காட வரமுடியாது என்று சொல்லி ஜாமீனில் போனால் போய் வாருங்கள் என்று சொல்லி, இப்படி ஒரு வேடிக்கையாக, நீதியே ஒரு கேலிக் கூத்தாக மாறக் கூடிய அளவிற்கு இருந்தது. அதே வழக்கு பெங்களூரிலே போடப் பட்டபோது, அங்கேயிருந்த நீதிபதி, இந்திரா காந்தி அம்மை யாரை கொலை செய்ய முயன்றதாக திராவிடமணி மற்றும் சோழன போன்றவர்கள் மேல் போடப்பட்ட வழக்கை ஏற்றுக் கொள்வதை மறுத்து உடனே அவர்களை விடுதலை செய்தார். அந்த முறை வரவேண்டும். எதற்கெடுத்தாலும், உடனே ரிமாண்ட், ரிமாண்ட என்று போடுவது, வாய்தா, வாய்தா என்று போடுவது, அதாவது Justice delayed is Justice denied என்று சொல்வார்கள்; இதைத் தவிர்க்க வேண்டும். ஏராளமான வழக்குகள், இப்படிபட்ட வழக்குகள், நீதி மன்றங்களிலே வரு கின்றன. அவைகளைத் தவிர்க்க வேண்டும்.

(பிற்பகல் 1.00).

அதற்கு அடுத்ததாகச் சொல்ல வேண்டுமென்று சொன் னால், கொலை வழக்கிலே கூட ஜாமீனிலே வருகின்றவர்கள், நான்கு ஆண்டு, ஐந்தாண்டு கூட ஜாமீனிலே வெளியே இருக்கிறார் கள். இது எந்த வகையிலும் பொருத்தமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதி யோடு அவையின் அலுவல் நேரம் சற்று நீட்டிக்கப்படுகிறது.

**திரு. பெ. சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ் கோர்ட்டுகளில் உள்ள வழக்குகளை சீக்கிரமாக முடிப்பதற்கு அரசாங்கம் துரிதமான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்.

நீதிபதிகள் நியமனம் பற்றி இங்கே சொன்னார்கள். சென்னை யிலேதான் நீதிபதிகளாக வருவதற்கு பொருத்தமானவர்கள் இருக்கிறார்கள் என்ற ஒரு அபிப்பிராயம் பல்லாண்டுக் காலமாக தொடர்ந்து நிலவி வருகின்றது. இந்த டைரக்ட் ரெக்ரூட் மெண்டை கூடிய அளவிற்கு குறைத்து ஒரு சப்-மேஜிஸ்டிரேட் பதவியிலேயிருந்து ஒருவர் முன்னேறி, நேர்மையாக, நல்ல நிதானமாக வேலை செய்வாரானால் அவர் ஹைகோர்ட் ஜட்ஜாக வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்ற எண்ணம் நாட்டிலே ஏற்பட வேண்டும். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரி களைப் போல நேரடியாக ஹைகோர்ட் ஜட்ஜாக சென்னை யிலே 7, 8, ஆண்டுக்காலம் இருந்தால் வந்துவிடலாம் என்ற அந்த எண்ணம் மறையவேண்டும். கூடியவரையில் முக்கால்வாசி பதவிகளில் கீழ்மட்டத்தில் இருந்து பதவி உயர்வு மூலம், கடுமையான உழைப்பின் மூலம் வருகிற நீதிபதிகள்தான் ஹைகோர்ட்,

[திரு. பெ. சீனிவாசன்] [1989 ஏப்ரல் 12

உயர்நீதி மன்ற நீதிபதிகளாக வரக்கூடிய வாய்ப்பை அரசாங்கம்
உருவாக்கவேண்டுமென்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்
கொளகிறேன்.

அடுத்து, சிறைச்சாலைகளைப் பற்றி ஒன்றிரண்டு வார்த்
தைகள் கூற விரும்புகிறேன். இந்தப் பேரவையிலே இருக்கிற
பெரும்பாலோர் எக்ஸ்-கான்விக்டுகள்தான். அரசியல் காரணங்
களுக்காக சிறைச்சாலைகளுக்குப் போனவர்கள். சிறையிலே
பலமுறை தவமிருந்தவர் நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர்
அவர்கள். அவர்கள் தவமிருந்த, பேரறிஞர் அண்ணாவால யாத்
திரை ஸ்தலம் என்று வர்ணிக்கப்பட்ட, புனிதமிக்க பாளையங்
கோட்டை சிறையிலே நம்முடைய மாண்புமிகு முதல அமைச்சர்
அவர்கள் இருந்த அதே அறையில் நானும் பாதுகாப்புக் கைதியாக
இருக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றவன். பலமுறை, பல சிறைச்
சாலைகளுக்கு, போராட்டங்களிலே ஈடுபட்டு சென்று வந்
திருக்கிறேன்.

அந்தச் சிறைச்சாலைகளில் ஒரு முக்கியமான அம்சம் என்ன
வென்றால், அங்கே பலவேறு வகையான குற்றவாளிகள இருக்
கிறார்கள். அதிலே இருக்கிற பல்வேறு வகையான குற்றவாளி
களில் மற்ற குற்றவாளிகளோடு இணைத்து ஒப்பிட ஏற்றவர்
களாக இல்லாமல், அதே நேரத்திலே உணர்ச்சியின் காரணமாக
கொலை செய்துவிட்டு வந்தவர்கள் ஆயுள் கைதிகளாக அங்கே
நிரம்பப் பேர் இருக்கிறார்கள். அந்தக் கைதிகளுக்கும் மற்ற
கைதிகளுக்கும் நிரம்ப வித்தியாசம் உண்டு. மனப்பான்மையிலும்,
நடவடிக்கையிலும், கடந்த கால வாழ்க்கையிலும், நடைமுறை
யிலும் நிரம்ப வித்தியாசம் உண்டு. ஏதோ ஒரு மான ரோஷத்
திற்காக, அந்த நேரத்தில் ஆத்திரத்தைத தணிக்க முடியாமல்
இதைவிட வேறு வழியில்லை என்று ஒரு முடிவிற்கு வந்துதான்,
பலபேர் அந்தக் கொலை முயற்சியிலே ஈடுபட்டு விடுகிறார்கள.
அபபடி கொலை செய்தவர்களை நாம் நன்றாகப் பரிசீலித்துப்
பார்த்தால்—சிறைகளிலேயிருந்தவர்களுக்கு நன்றாகத் தெரியும்—
வெளியே இருக்கின்ற கோடிக்கணக்கான மக்களைவிட அவர்கள்
நேர்மையானவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் செய்த
தவறுக்காக அவர்கள் அனுபவிக்கிற தண்டனை சட்டப்படி
சரியாக இருந்தாலும்கூட, அந்தக் கைதிகளுக்கு ஒரு குறிப்பிட்ட
காலவரையறைக்கு பின்னாலே விடுதலை உண்டு என்ற நியதி
இருக்கிறது. அந்த நியதியில் விடுதலை பெறுகின்ற அந்த ஆயுட்
காலக் கைதிகள் எங்களிடம் வற்புறுத்தி ஒன்றைத் தெரிவிக்கச்
சொல்கிறார்கள். அவர்களை சிறைகளில் அடிமை விலங்குகளைப்
போல நடத்துகிறார்கள் என்று சொல்கிறார்கள். நம்முடைய
மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூட சிறையில் இருக்கும்
போது, ஆயுட்கால கைதிகள் பலபேர் அவரோடு பழகியிருக்கிறார்
கள். அந்த ஆயுட்கால கைதிகளுக்கு ஒரு வாய்ப்புத் தரலாம்.
எப்படியும் அவர்கள் 10 ஆண்டுக்காலம் சிறையில் இருப்பது
உறுதி. அந்த பத்து ஆண்டுக் காலத்தில், அவர்களுக்கென்று
சிறைச்சாலையில் கல்வி வசதிக்கு ஏற்பாடு செய்து தந்து,



1989 ஏப்ரல் 12] [திரு. பெ. சீனிவாசன்]

எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்தால் இவ்வளவு ரெமிஷன், பி.ஏ.
பாஸ் செய்தால் இவ்வளவு ரெமிஷன், எம்.ஏ. பாஸ் செய்தால்
பூரண விடுதலை என்று கல்வி அடிப்படையில் அவர்களுடைய
தண்டனைக் காலத்தைக் குறைக்கலாம். அப்படி அவாகள் கல்வி
பெற்று விடுதலை பெற்று வெளியே வந்ததற்குப் பின்னால்
இன்றைக்கு இருக்கிற மோசமான சூழ்நிலையில் அவர்கள் இருக்கக்
கூடாது. எப்படி வேலை வாய்ப்பிலே பலபேருக்கு சலுகைகள்
தருகிறோமோ அதைப்போல பழைய குற்றவாளிகள என்ற
முறையில் இந்த ஆயுட்காலக் கைதிகளுக்கு மாத்திரம் வேலை
வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரவேண்டும். நாங்கள் பார்த்த
சிறைச்சாலைகளில் பலபேர் மிக நல்ல நடத்தையுள்ளவர்கள்,
நல்ல திறமையுள்ளவர்கள், நல்ல பாடகர்கள், ஓவியாகள்,
படிப்பாளிகள் எத்தனையோ பேர் விமோசனம் இல்லாமல் சிறைச்
சாலைகளிலே மனம் நொந்து கிடக்கிறார்கள். அவர்களுக்
கெல்லாம் நம்முடைய சட்ட அமைச்சர் அவர்களும் நம்முடைய
மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும்—இவர்களைப் பற்றி
நன்றாகத் தெரிந்தவர்கள் என்ற காரணத்தால் இதை
வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்—அவர்களுக்கு கல்விக்கு
வாய்ப்பு தரவேண்டும். இன்றைக்கு அந்த வாய்ப்பு இருக்கிறது.
ஆனால் மிகக் குறைவாக இருக்கிறது. யாரோ ஒன்றிரண்டு பேர்
கல்வி கற்க விரும்பினால், சிறப்பான முறையில் இல்லாமல்,
சாதாரணமான ஏற்பாடு செய்யப்படுகிறது. அவர்களுக்கு நல்ல
ஏற்பாடு செய்து, கல்வியை நல்ல முறையில் பரப்பி, அவர்
களிடையே கல்வியை புகுத்தி, அவர்கள் தேர்வு பெற்றால் அந்தத்
தேர்வின் அடிப்படையில் அவர்களுக்கு ரெமிஷன் வழங்க
வேண்டும்.

இன்றைக்கு ஆயுள் கைதியாக இருக்கிறவர்கள் 10 ஆண்டு
காலம் ஆனாலும் அவர்களுக்கு பரிசீலனை என்பது கிடையாது.
15 ஆண்டு காலத்தைத் தாண்டினாலும் அவர்களை போர்டுக்கு
அனுப்புவதில்லை. கடந்த 10 ஆண்டு காலத்தில் நடைபெற்ற
ஆட்சியில் அவர்களுக்கு என்ன கோபம் என்று தெரியவில்லை—
அந்தப் புனித சாம்ராஜ்யத்தில் சிலரை 15 ஆண்டு காலம்
ஆனபின்னாலும் போர்டுக்கு வரவிடவில்லை. அவர்கள் போர்
டுக்கு வராமல் நிறுத்தப்பட்டு, அவர்களுடைய கோரிக்கை நிரா
கரிக்கப்பட்டிருக்கிறது. ஏதோ சந்தர்ப்பவசத்தினால் ஆயுள்
கைதிகளானவர்களை அந்தக் காலத்து அந்தமான் கைதிகளைப்
போல் பார்க்கிறார்கள். அவர்களுக்கு உரிய சலுகை கிடைக்க
வேண்டும். அவர்களுடைய குடும்பங்களுக்கு வெளியே பாதுகாப்பு
இருக்க வேண்டும்; போதிய கண்காணிப்பு இருக்க வேண்டும்.
எதிரிகளால் பழிவாங்கும் சூழ்நிலை இல்லாமல் அவர்களைக் காப்
பாற்ற வேண்டும். அவர்கள் பிரச்சினையை இந்த முறையிலே
அணுகி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கல்வி கற்க வாய்ப்
பை ஏற்படுத்தி, குறிப்பிட்ட கல்வித் தகுதி பெறுகின்றவர்களுக்கு
10 ஆண்டு காலத்திலே உறுதியாக விடுதலை என்ற சூழ்நிலையை
உருவாக்கினால் அந்தக் கல்வி பண்பாட்டை உருவாக்கும்; அந்தப்
பண்பாடே அவர்களை நல்லவர்களாக மாற்றும்.

[திரு. பெ. சீனிவாசன்] [1989 ஏப்ரல் 12

நான் மற்றக் கைதிகளைப் பற்றிச் சொல்லவில்லை. சிறைச் சாலையிலே 'ஹாபிச்சுவல் அஃபன்டர்ஸ்' என்று இருக்கிறார்கள். சிலர் சிறையிலே வாடிக்கையான பிரஜைகளாக இருக்கிறார்கள். 3 மாதம் உள்ளே இருப்பார்கள். வெளியே வருவார்கள். பின் போலீசாரிடம் சொல்லி மீண்டும் உள்ளே வந்துவிடுவார் கள். அவர்களுக்கு சிறையிலே கடுமையான வேலை கொடுக்க வேண்டும். இப்போது இருப்பது போதாது. காரணம் அவர்கள் எந்தக் காலத்திலேயும் திருந்தப் போவதில்லை. உள்ளே வந்து மற்றவர்களைத் திருத்துகிறார்களே தவிர அவர்கள் திருந்து வதில்லை. சில நேரங்களில் நானே பார்த்திருக்கிறேன். எங்க ளுடைய பொருள்களைக் கூட திருடுவார்கள். இப்படிப்பட்டவர் களை மிகக் கடுமையான நடவடிக்கை மூலம் திருத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

'லைஃப் கான்விக்ட்ஸ்', ஆயுள் கைதிகளைப் பொறுத்த வரையில் அரசாங்கம் ஒரு மாறுதல் செய்து, நல்ல சூழ்நிலைகளை உருவாக்கி, அவர்களைப் பண்பட்டவர்களாக ஆக்க வேண்டு மென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. பி. எச். பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் பேசும்போது முந்தைய அரசு 10 ஆண்டு காலமாகியும் விடுதலை செய்யவில்லை என்று சொன்னார்கள். 1980 ஆம் ஆண்டு ஒரு தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். சட்ட அமைச்சரிடம் கொடுத்திருக்கிறேன். நகலை 5 நீதிபதிகள் அடங்கிய 'கான்ஸ்டிடியூஷன் பெஞ்ச்' ஒன்றை அமைத்து, அவர்கள் இந்த ஆயுள் கைதிகள் தண்டனை பற்றி ஒரு தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். ஆயுள் தண்டனை பெற்ற வர்கள் என்றால், 14 ஆண்டுகள் உள்ளே இருக்க வேண்டும்; சிறையில் இருக்க வேண்டுமென்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அதை மாற்றினால் ஒழிய 10 ஆண்டில் விடுதலை செய்ய முடியாது. அல்லது அரசியல் சட்டப் பிரிவு 161-ன்படி அரசாங்கம் விடுதலை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. அப்துல் லத்தீப் அவர்கள். அவர்கள் இன்றிலிருந்து ஒரு சூளுரை எடுத்திருக் கிறார்கள். அவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் மிகப்பொருத் தமாகப் பேசி முடித்து விடுவதாகச் சூளுரை எடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அவர்கள் பேசுவார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் குறித்த 13 மற்றும் 14-வது மானியக் கோரிக்கைகளை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மக்களுடைய உரிமையை நிலைநிறுத்துகின்ற ஒரு துறை குறித்தும், அந்த உரிமையை யார் மீறுகிறார்களோ அல்லது மாற்றுகிறார்களோ. அந்த உரிமையை மீறி யார் அக்கிரமம்



1989 ஏப்ரல் 12] [திரு. எம். அப்துல் லத்தீப்]

செய்கிறார்களோ அவர்களைக் கண்டுபிடித்து, அவர்களை சமு தாயத்திலிருந்து தனிமைப்படுத்துகின்ற ஒரு துறை குறித்தும் நடைபெறுகின்ற இந்த விவாதம் மிக முக்கியமான ஒரு விவாதம் என்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. நம்முடைய அரசமைப்புச் சட்டத்தில் 'செப்பரேஷன் ஆஃப் பவர்ஸ்' என்பது வரையறை செய்யப்பட்ட ஒன்று. நிர்வாகத்தில் இருந்து நீதித் துறையும் இந்த இரண்டு துறைகளிலிருந்து தனி அதிகாரமும் இறையாண்மை யும் பெற்ற சட்டமன்றத் துறையும் செம்மையாக அவரவர் களுக்கு ஒதுக்கப்பட்ட இறையாண்மை உள்ள இடங்களில் அவர் கள் ஒருவருக்கொருவர் மதிப்பு கொடுக்கக்கூடிய வகையிலும், அதே நேரத்தில் இந்த மூன்று துறைகளும் ஒன்றையொன்று ஆக்கிரமிப்பு செய்யாமல் செயல்பட வேண்டுமென்பது நம்முடைய அரசமைப்புச் சட்டம் வகுத்திருக்கிற ஒரு ஆரோக்கியமான வரையறை என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 1-10)

அது எப்படி நடக்கிறது என்று பார்க்கும்போது சில சிக்கல்கள் நம்முடைய நீதி நிர்வாகத் துறையிலேயும், நிர்வாகத் துறை யிலேயும் ஏற்படுகின்றன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நீதிபதிகள், அவர்கள் பணிகள் மற்றும் அந்தப் பணிகளுக்காக அவர்கள் பெறுகிற பலன்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் அவர்கள் அரசமைப்புச் சட்டத்திற்கு மட்டும்தான் கடமைப் பட்டவர்கள். அதிலும் குறிப்பாக உயர்நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றங்களில் பணியாற்றக்கூடிய நீதிபதிகள் அரசமைப்புச் சட்டத்தால் உத்தரவாதம் அளிக்கப்பட்டு தங்களுடைய பணி யினை மேற்கொண்டிருக்கிறார்கள். நிர்வாகத் துறையினருக்கு அவர்கள் எந்த வகையிலும் கட்டுப்பட்டவர்கள் அல்ல. அதே நேரத்தில் எக்ஸிக்யூட்டிவ் என்று சொல்லக்கூடிய நிர்வாகத் துறையினருக்கு அவர்கள் கடமைப்பட்டவர்கள் அல்ல என்ற ஒரு உணர்வோடு செயல்பட வேண்டும். எக்ஸிக்யூட்டிவினுடைய தயவு இருந்தால்தான் மேற்கொண்டு பலன் உண்டு; அல்லது ஆதாயம் உண்டு; சில வாய்ப்புக்களை நாம் பெற முடியும்; பெற்றுக் கொள்ள முடியும் என்ற எண்ணம் கூட நீதிபதிகளிடத் திலே ஏற்படுவது நம்முடைய நீதித்துறைக்கும் நல்லதல்ல; ஜனநாயகம் வரையறுத்திருக்கின்ற 'செப்பரேஷன் ஆஃப் பவர்ஸ்' என்று சொல்லக்கூடிய ஆரோக்கியமான அரசமைப்புச் சட்ட வரையறைக்கும் நல்லதல்ல என்ற அளவில் நாம் இந்தப் பிரச் சினையை அணுக வேண்டும் என்று நான் மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஒரு எண்ணம் வருகிற காரணத் தால்தான் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். உதாரணமாக உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றங்களில் பணியாற்றக்கூடிய நீதிபதிகள் தாம் ஓய்வு பெற்றதற்குப் பிறகும் எக்ஸிக்யூட்டிவ் என்று சொல்லக்கூடிய நிர்வாகத் துறையினருடைய தயவு இருந் தால் தான் மேலும், மேலும் சில வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று எண்ணுவதோடு, பணியாற்றக்கூடியவ

களுக்கு அப்பேர்ப்பட்ட ஒரு எண்ணத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு சில சூழ்நிலைகளை நிர்வாகம் ஏற்படுத்துமேயானால், அந்த நிர்வாகம் ஏற்படுத்துகிற அந்தச் சூழ்நிலைக்கு அவர்களும் கட்டுப் பட்டு செயல்படத் தொடங்குவார்களேயானால், 'இன்டி பென்டென்ஸ் ஆஃப் தி ஜுடிஷியரி' என்று சொல்லக்கூடியது கேலிக்குரியதாக ஆகிவிடும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இன்றைக்கு நாட்டிலே மிக முக்கியமான ஒரு பிரச்சினை பொது விவாதத்திற்கு உட்பட்டதாக ஆக்கப்பட்டிருக்கிறது. பொது விவாதத்திற்கு மட்டுமல்ல; பாராளுமன்றத்திலே, ஏன், இன்னும் சொல்லப் போனால் சில சட்டமன்றங்களில் கூட சில குறிப்பிட்ட நீதிபதிகள் அவர்கள் ஓய்வு பெற்ற பிறகும் கூட அரசாங்கத்தினுடைய, நிர்வாகத் துறையினுடைய சில அமைப்பு களுக்கு அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற காரணத் தால், அல்லது அவர்கள் ஓய்வு பெற்றதற்குப் பிறகும் அவர்க ளுக்கு வழங்கப்பட்ட சில வாய்ப்புக்களை அவர்கள் பயன் படுத்திக் கொண்ட காரணத்தினால் அப்படி ஒரு வாய்ப்பு நமக்கும் கிடைக்கும் என்று பரவலாக நீதித் துறையிலே ஒரு எண்ணம் நிலவுவதோடு மட்டுமல்லாமல் இந்த வகையிலே நடந்து கொண்டால் நாம் மேற்கொண்டு ஓய்வு பெற்ற பிறகும் கூட வாய்ப்புக்களைப் பெற முடியும் என்ற அளவுக்கு அவர்கள் பணிந்து நடக்கக் கூடியவர்களாக இருக்கிறார்களோ என்ற ஒரு சந்தேகம் நாட்டிலே ஏற்பட்டு இருப்பதோடு இன்றைக்கு உச்ச நீதிமன்றத்தினுடைய நீதி பதிகளாக இருந்தவர்கள், நம்முடைய உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளாக இருந்தவர்கள் கூட, மேற்கொண்டு நிர்வாகம் என்று சொல்லக்கூடிய எக்ஸிக்யூட்டிவினரால் அளிக்கப்படக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தையும், வாய்ப்பையும் அவர்கள் பயன்படுத்த அவர்களுடைய இச்சைக்கேற்ப, விருப்பத்திற் கேற்ப சில தீர்ப்புகளை வழங்கி இருக்கிறார்களோ என்று இன்றைக்கு பொதுவாக ஒரு பொது விவாதம் நாட்டிலே ஏற்படக்கூடிய அளவுக்கு நீதிபதிகள் தம்மை ஆளாக்கிக் கொள்கிறார்கள். அந்த வகையில் இன்றைக்கு நடைமுறைகள் இருக்கின்றன என்பது வேதனைக்குரிய ஒன்று. எனவே நீதி பதிகள் 'இன்டிபென்டென்ஸ் ஆஃப் தி ஜுடிஷியரி' என்று சொல்லக்கூடிய அளவுக்கு அவர்கள் பரிபூரணமான சுதந்திரம் உள்ளவர்கள். அவர்களை எந்த வகையிலும் எக்ஸிக்யூட்டிவ் கட்டுப்படுத்த முடியாது. அவர்கள் கட்டுப்பட்டவர்கள் அல்ல, அவர்கள் எந்த வகையிலும் எக்ஸிக்யூட்டிவினருக்கு கடமைப் பட்டவர்களும் அல்ல.

உச்ச நீதிமன்றத்தில், உயர்நீதிமன்றத்தில் பணியாற்றக் கூடிய நீதிபதிகள் மற்றவர்களுடைய தயவால் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்கள் அல்ல; வாய்ப்பைப் பெற்றவர்கள் அல்ல. இந்த நாட்டினுடைய அரசமைப்புச் சட்டம் அவர் களுக்குத் தந்திருக்கின்ற ஒரு வாய்ப்பு என்ற வகையில் அவர் களுடைய முழுமையான நம்பிக்கையையும், முழுமையான



விசுவாசத்தையும் அரசமைப்புச் சட்டத்திற்கு மட்டுமே அவர்கள் வைத்துக்கொள்ள வேண்டும். ஆளுகிறவர்கள் இன்றைக்கு வருகிறார்கள்; நாளைக்குப் போகிறார்கள்; அப்படி வருகின்ற ஆளுபவர்கள் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். எனவே அந்தப் பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களுடைய உணர்வுகளுக்கும், கொள்கை களுக்கும் ஏற்ப நீதிபதிகள் நடந்துகொள்வதுதான் அவர் களுக்கு நல்லது என்ற உணர்வை நீதிபதிகள் ஏற்படுத்திக் கொண்டது நல்லதல்ல; அப்படி ஏற்படுத்தக்கூடிய அளவிலே அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருவது கூட எக்ஸிக்யூட்டிவினர் என்று சொல்லக்கூடிய அமைச்சரவைக்கு ஏற்புடையதல்ல என்பதை நான் விளக்காமல் பேச முடியாது என்ற காரணத்தால்—நான் எதை, எதை நினைத்துப் பேசு கிறேன் என்பதை அமைச்சர்கள் புரிந்துகொண்டால் போதும், நாடு புரிந்துகொண்டால் போதும், எனவே—அந்த அளவுக்கு நடைமுறையிலே நீதிபதிகளும் அதிலும் குறிப்பாக இந்த நீதித் துறையிலே மிகச் சிறப்புக்குரியவர்களாக பணியாற்றக் கூடியவர்கள், நீதித்துறையிலே யாருக்கும் சார்புடையவர்க ளாக இல்லாமல், சுதந்திரமானவர்களாகப் பணியாற்றக்கூடிய வர்கள் என்ற ஒரு மகத்தான பாரம்பரியத்துக்கு உரியவர்கள் கூட இன்றைக்கு சாதாரணமாக விமர்சிக்கப்படக்கூடிய அளவுக்கு ஆளாக்கப்பட்டிருப்பது நீதித்துறைக்கு ஏற்பட்ட ஒரு மகத்தான அவலநிலை என்பதை நான் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

இன்றைக்கு உச்ச நீதி மன்றத்திலே ஏராளமான வழக்குகள் தேக்கம் பெற்றிருக்கிறது என்பது குற்றச்சாட்டாக எல்லோ ராலும் சொல்லப்படுகிறது. வழக்கறிஞர்கள் மட்டுமல்ல, சாதாரணமாக வழக்காடு மன்றத்திற்கு செல்கின்ற பாமர மக்கள்கூட சொல்கிறார்கள். நீதிமன்றத்திற்கு சென்று 10 செருப்புகள் தேய்ந்த பிறகுதான் அவர்களுக்கு வழக்குகளிலே தீர்ப்பே, நியாயமே கிடைக்கும். இப்படி கிடைக்கிறதோ, அப்படி கிடைக்கிறதோ, சாதகமோ, பாதகமோ, ஆனால் அவர்கள் நூற்றுக்கணக்கான படிகளை ஏறி, 10 ஆண்டுகள் வரையிலேகூட நீதிமன்றத்தினுடைய நிழலிலே நின்றால்தான் நீதி கிடைக்கும் என்ற நிலை இருக்குமானால், நம்முடைய நீதி, நண்பர் திரு. சீனிவாசன் அவர்கள் சொன்னதுபோல், 'ஜஸ்டிஸ் டிலேய்ட் இஸ் ஜஸ்டிஸ் டினைட்' என்ற அளவுக்குத் தான் அது ஆகும் என்பதை அரசு புரிந்துகொண்டு— இன்றைக்கு ஒப்பு கொள்ளப்பட்ட, உயர்நீதிமன்றத்தினுடைய நீதிபதிகளின் ஒப்புக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை 25, கடந்த காலத் திலே, அதனுடைய எண்ணிக்கை மிகக் குறைந்தது—அவரவர்கள் ஓய்வு பெறும்போது, ஓய்வு பெறுவதற்கு முன்னாலேயே 6 மாதத்திற்கு முன்னாலேயே, இன்னார் ஓய்வு பெறுகிறார், அவருடைய இடத்தை, ஓய்வு பெறுகின்ற அவருடைய இடத்தை அடுத்த நிமிடத்திலே நிறைவு செய்யவேண்டும் என்று,

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1989 ஏப்ரல் 12

அதற்கு ஒரு ஆளை தயாராக வைத்துக்கொண்டிருக்க வேண்டும். சாஸ்திர சம்பிரதாயங்கள் இருக்கின்றன. நீதிமன்றத்தினுடைய உயர்நீதிமன்றத்தினுடைய பிரதம நீதிபதி அவர்கள் அரசுக்கு பரிந்துரை செய்வது, அரசு மத்திய அரசாங்கத்தினுடைய உள் நாட்டுத்துறை அமைச்சகத்துக்கு பரிந்துரை செய்வது, பிறகு அவர்கள் சுப்ரீம் கோர்ட்டு பிரதம நீதிபதிக்குப் பரிந்துரை செய்வது, அதற்குப் பிறகு இன்றைக்கு அரசியல் காரணங்களை எல்லாம் அடிப்படையாகக் கொண்டு ஒருவரை தேர்ந்தெடுப்பதற்கு வருடக்கணக்காக ஆகிறது என்கிற நிலை. இருக்கும்போது, ஒரு 6 மாதத்திற்கு பேனல் வைக்கவேண்டும், யார் யார் எந்த எந்த நேரத்திலே ஓய்வு பெறுகிறார்கள், அந்த தேதி என்ன, அந்த இடத்திலே நிரப்புவதற்கு யார் தயார் நிலையிலே இருக்கவேண்டும் என்று இடையில் சாஸ்திர சம்பிரதாயங்களை நேர்மைப்படுத்தவேண்டும். நாம் கடைபிடிக்கவேண்டிய முறை இருக்கிறது. ஒருவர் இன்றைக்குக் காலையிலே ரிட்டையர் ஆகிவிட்டால் மாலையிலே அடுத்த நீதிபதி அந்த இடத்தை நிரப்பும் வகையிலே, அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்ளக் கூடிய அளவுக்கு, நீதி நிர்வாகத்தை செம்மைப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குக்கூட, இந்த நிலையிலேகூட, 4 நீதிபதிகள் இன்றைக்கு இல்லாமல் இருக்கின்றார்கள். புதியவர்கள் பெயர்களை எல்லாம் மத்திய உள்நாட்டு அமைச்சகத்துக்கு பரிந்துரை செய்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இதிலே இருக்கின்ற வேதனையெல்லாம் என்னவென்றால், இங்கே ஒரு கட்சி ஆட்சி செய்தால் அங்கே மேலே ஒரு கட்சி ஆட்சி செய்கிறது. அனுப்பப்படுகின்ற நீதிபதியினுடைய பெயரை கட்சிக் கண்ணோட்டத்தோடு அவர்கள் பார்க்கிறார்கள். எனவே ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை முறையாக நீதிபதிகளுடைய பெயர்களை பரிந்துரை செய்திருக்கும்போது, அதை 'இப்சோ பேக்டோ' அதாவது சாதாரண நிலையிலே அவர்களைக் குறித்து இன்டெலிஜென்ஸ் ரிப்போர்ட்டை எல்லாம் கேதர் செய்கிறார்கள். உள்நாட்டு துறை, ஓம் மினிஸ்ட்ரி-க்கு ஒரு பெயர் பரிந்துரை செய்யப்பட்டால். அவர்கள் இன்டெலிஜென்ஸ் ரிப்போர்ட் கேதர் செய்தபிறகுதான் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுடைய பரிந்துரையை அவர்கள் ஏற்று ஜனாதிபதிக்கு, அவரை நியமிப்பதற்காக, அனுப்புகிறார்கள். எனவே இந்த சாதாரண நிலைகளை எல்லாம் முடித்து உடனடியாக அவர்கள் நியமனம் பெற வேண்டுமே தவிர, காலதாமதம் என்பது நீதியை மக்களுக்கு மறுப்பதற்கு சமமாகும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதே நேரத்தில் இன்றைக்கு 25 நீதிபதிகள் உயர்நீதிமன்றத்திற்கு என்று குறித்திருப்பதுகூட போதாது என்பது என்னுடைய கருத்தாகும். லட்சக்கணக்கான வழக்குகள் இன்றைக்கு நிலுவையிலே இருக்கின்றன. இவைகள் எல்லாம் உடனடியாக



1989 ஏப்ரல் 12] [திரு. எம். அப்துல் லத்தீப்]

தீர்க்கப்படவேண்டுமென்றால் குறைந்தபட்சம் 40 நீதிபதிகளாவது உயர்நீதிமன்றத்திலே நியமிக்கப்படவேண்டும் என்று இந்த அரசு மத்திய அரசாங்கத்துக்கு பரிந்துரை செய்து அதற்கான சட்டபூர்வமான நடவடிக்கைகள் என்ன என்னவோ அவைகளையெல்லாம் நிறைவேற்றி 40 நீதிபதிகள் பதவிகள் என்று உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே, நீதித்துறையிலே, குறிப்பாக நம்முடைய பப்ளிக் பிராசிக்யூட்டர்கள் இன்றைக்கு சென்னையிலே இருக்கக்கூடியவர்கள், ஃபர்ஸ்ட் கிரேடு, செகண்ட் கிரேடு பப்ளிக் பிராசிக்யூட்டர்கள் எல்லாம் நம்முடைய போலீஸ் கமிஷனருடைய நிர்வாகத்திற்குள் அவர்கள் அமைக்கப்பட்டிருக்கிறார்கள். போலீஸ் துறையில், இன்றைக்கு சிட்டி கமிஷனருடைய நிர்வாகத்திற்கு கீழ் உட்பட்டவர்களாக இந்த பப்ளிக் பிராசிக்யூட்டர்கள் போடப்பட்டிருக்கின்றார்கள்.

மாவட்டத்திலே இருக்கக்கூடியவர்கள் கலெக்டருடைய ஆளுகைக்குட்பட்டவர்களாக இருக்கின்றார்கள். கலெக்டர்களுடைய ஆளுகைக் குட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்றால், பப்ளிக் பிராசிக்யூட்டர்கள் how can they develop a Judicial temperament how can they discharge their duties with a sense of independence, என்பது எனக்குத் தெரியவில்லை. கலெக்டர் ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசராக இருக்கலாம். ஆனால் ஒரு 'லா ஆபீசர்' அவருடைய ஆளுகைக்குட்படுத்தப்பட்டு இன்றைக்கு அவர் நடந்து கொண்டிருக்கிறார் என்று சொன்னால், அது மிகவும் வேதனைக்குரியது.

(பிற்பகல் 1–20)

அப்படி என்றால் இந்த இண்டிபென்டன்ஸ்ஆஃப் தி ஜுடிஷியரி என்று சொல்வதற்கு அர்த்தமில்லாமல் அல்லவா அது ஆகிறது? இதற்கு அமைச்சர் என்ன சொல்லப் போகிறார் என்று எனக்குத் தெரியும். Directorate of Prosecution—it is under the contemplation and consideration of the Government. A separate Directorate for Prosecution என்கிற அளவுக்கு, ஒரு துறை வருவது குறித்து அரசினுடைய கவனத்தில் இருக்கிறது என்பது எனக்கும் தெரியும். எனவே அந்த இயக்குநரகத்தை உடனடியாக ஏற்படுத்த வேண்டும். அதுகுறித்து உடனடியாக முனைந்து செயல்படுத்த வேண்டும். மாவட்ட கலெக்டர்களிடமும், போலீஸ் கமிஷனர்களிடமும் இருக்கின்ற நீதி சம்பந்தப்பட்ட அதிகாரத்தை மாற்ற வேண்டும். இந்த அதிகாரங்கள் அனைத்தையும் வரப்போகிற இயக்குநருடைய ஆளுகைக்கு உட்படுத்தவேண்டும். City Police Commissioner has got Judicial powers. At times he can function as a Judical Office and he can go in for Judicial dispensation.

சிட்டி போலீஸ் கமிஷனர் எப்படி ஜுடிசியல் ஆபிசராக பணியாற்ற முடியும். போலீஸ் கமிஷனருடைய கடமையோடு எப்படி ஜுடிசியல் கடமையையும் அவர் ஆற்ற முடியும் என்று எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது, உறுப்பினருக்கும் பேரவைத் தலைவருக்கும் இடையே தலையை நீட்டக் கூடாது என்பதை உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே ஒரு ஹைக்கோர்ட் பெஞ்ச் அமைக்கப்பட வேண்டும். அதுபோல சென்னையில் ஒரு சுப்ரீம் கோர்ட் பெஞ்ச் அமைக்கப்பட வேண்டும். இதனை ஏன் கொடுக்கக்கூடாது என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். காரணம் இன்றைய தினம் மகாராஷ்டிராவில் இருக்கிற அவுரங்காபாத்தில் ஹைக்கோர்ட் பெஞ்ச் ஒன்றை அமைத்திருக்கிறார்கள். கேரளாவில் உள்ள எர்னாகுளத்தில் ஹைக் கோர்ட் பெஞ்ச் ஒன்றை அமைத்திருக்கிறார்கள். அதுபோல உத்தர பிரதேசத்திலுள்ள அலகாபாத்தில் ஹைக்கோர்ட் பெஞ்ச் ஒன்றை அமைத்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது நம் மாநிலத்திலும் மதுரையில், தெ. மாநிலத்திலுள்ள மக்களின் சௌகரியத்திற்காக, வழக்கறிஞர்களின் சௌகரியத்திற்காக ஏன் அமைக்கக்கூடாது? அதுபோல சுப்ரீம் கோர்ட் பெஞ்ச் ஒன்றை சென்னையில் வைக்க வேண்டுமென்பது நம்முடைய நீண்டகால நியாயமான கோரிக்கையாதலால் நான் இன்றைக்கும் இந்த அவையில் இந்தக் கோரிக்கையை வற்புறுத்துகின்றேன். இதனை நான் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அடுத்து, நீதிமன்றங்களை எங்கெங்கே அமைக்க வேண்டுமென்று வரதராஜன் கமிஷன் ஒன்றை அமைத்ததன் மூலம் அது பரிந்துரை செய்திருக்கிறது. அது அவுட்-மோடட். காரணம் 10 ஆண்டுகளுக்கு முன்பாக அது அறிக்கையை கொடுத்திருக்கிறது. அன்றைக்கு இருந்த நிலைமையை அடிப்படையாகக் கொண்டு அது சில பரிந்துரைகளை செய்திருக்கிறது. அன்றைக்கு அது என்னதான் பரிந்துரை செய்திருந்தாலும் கூட இன்றைக்கு முழுமையாக நிலைமைகளே மாறிவிட்டன. உதாரணமாக அன்றைக்கு வாணியம்பாடி சப்-தாலுகாவாக இருந்தது. அந்த நிலைமையில்தான் அந்த கமிஷன் அன்றைக்கு அங்கே வந்தது. இப்போது வாணியம்பாடி தாலுகாவாக உயர்ந்திருக்கிறது. அத்துடன் அதனுடைய தன்மையும் மாறியிருக்கிறது. ஜனத்தொகை எண்ணிக்கையும் மாறியிருக்கிறது. வசதிகள் மாறியிருக்கிறது. எல்லா விஷயங்களும் மாறியிருக்கிற சூழ்நிலையில் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள சப்-கோர்ட்டுகள், முன்சீப் கோர்ட்டுகள், சிவில் கோர்ட்டு





<u>மண்பாண்டப் பிரிவு :</u>

பூ ஜாடிகள், தண்ணீர் ஜாடிகள் மற்றும் கூஜாக்கள் தயாரிக்கப்பட்டு பல்வேறு அரசுத் துறைகளுக்கு அளிக்கப்படுகின்றன. சுமார் பத்து இல்லவாசிகள் இப்பிரிவில் செயல்படுகின்றனர்.

<u>தச்சு வேலை.</u>

இப்பிரிவில் சுமார் பத்து இல்லவாசிகள் வேலை செய்கிறார்கள். அரசுத் துறைகளிலிருந்து பெறபபடும் எல்லாவிதமான மரச்சாமான்களும் இங்கு பழுது பார்க்கப்பட்டு அத்துறைகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டுகின்றன. மேல்பாக்கம் அரசு காப்பு முகாமிலுள்ள இல்லவாசிகளின் எண்ணிக்கை வேலைக்கு அமர்த்தப்பட்ட இல்லவாசிகளின் எண்ணிக்கை, உற்பததிததிறன், உற்பத்தி பொருட்களின் விற்பனை விவரம், அலுவலர்கள் பற்றிய விவரங்கள் மற்றும் காப்பு முகாமில் தயாராகும் பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த ஆதாய/இழப்பு விவரங்கள் முறையே அட்டவணைகள் அ.இ.உ.எ.ஐ. மற்றும் ஓ வில் உள்ளன.

அட்டவணை—அ.

மேல்பாக்கம் அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதியில் 1987-ம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி நிலவரப்படி உள் உறுப்பினர்களின் விவரம்.

| விடுதியின் பெயர். | பெரியோர். | | சிறியோர். | | | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| | ஆண். | பெண். | ஆண். | பெண். | சிறார். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| அரசினர் ஏழைகள் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கம். | 44 | 8 | - | - | - | 52 |



அட்டவணை—இ.

அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கம் 1987–88-ம் ஆண்டில் வேலையில் அமர்த்தப்பட்ட உள் உறுப்பினர்களின் எண்ணிக்கை (அக்டோபர் 1987 முதல் செப்டம்பர் 1988 வரை)

| மாதமும் வருடமும். | தச்சு பிரிவு. | தையல் பிரிவு. | புத்தகப் பிரிவு. | நெசவுப் பிரிவு. | மண் பாண்டப் பிரிவு | இதரப் பணியில் உள்ளவர்கள். | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| அக்டோபர் 1987 | - | 1 | 3 | 2 | . | . | 6 |
| நவம்பர் 1987 | - | 1 | 2 | 2 | . | . | 5 |
| டிசம்பர் 1987 | - | 1 | 3 | 2 | . | . | 6 |
| ஜனவரி 1988 | 3 | 1 | 2 | 2 | .. | .. | 8 |
| பிப்ரவரி 1988 | 3 | 1 | 2 | 2 | .. | .. | 8 |
| மார்ச் 1988 | 4 | 1 | .. | 1 | .. | .. | 8 |
| ஏப்ரல் 1988 | 7 | 1 | .. | 1 | .. | .. | 9 |
| மே 1988 | 4 | 2 | .. | 3 | | .. | 9 |
| ஜூன் 1988 | - | 2 | - | 2 | . | .. | 4 |
| ஜூலை 1988 | .. | 2 | .. | 2 | .. | .. | 4 |
| ஆகஸ்ட் 1988 | - | 2 | .. | 2 | . | . | 4 |
| செப்டம்பர் 1988 | - | 2 | . | 2 | . | . | 4 |
| மொத்தம் .. | 21 | 17 | 12 | 23 | .. | .. | 7 |

[1989 ஏப்ரல் 12

அட்டவணை உ.

அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கத்தில் உள்ள தொழிற் கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விவரம்.

(அக்டோபர் 1987 முதல் செப்டம்பர் 1988 வரை)

| | | |
|---|---|---|
| 1. தையல் பிரிவு .. | பனியன் 258 எண்கள் .. | கால் சட்டைகள். 190 எண்கள் |
| 2. நெசவுப் பிரிவு | வெள்ளைகாடா 396 மீ. | துண்டுகள் 400 எண்கள். |
| 3. தச்சுப் பிரிவு .. | மரத் தளவாடங்களின் பழுது நீக்கம் செய்திடும் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. | |
| 4. புத்தகம் கட்டுமானப் பிரிவு. | கோப்பு அட்டைகள். | 150 எண்கள் |
| 5. மண்பாண்டப் பிரிவு. | மூடியுடன் கூடிய பானைங்கள் 33 எண்கள். | மூடியுடன் கூடிய கூஜா 14 எண்கள். |

அட்டவணை எ.

அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கம் விற்பனைப பொருட்களின் விவரம்.)

(அக்டோபர் 1987 முதல் செப்டம்பர் 1988 வரை.)

| பொருட்களின் பெயர். | மதிப்பு ரூ. பை. |
|---|---|
| புத்தக,கட்டுமானம் .. .. .. .. | 707.45 |
| மண் கூஜாக்கள் .. .. .. .. | 391.85 |
| நெசவுப் பிரிவு .. .. .. .. | 3,738.80 |
| தையல் பிரிவு .. .. .. .. | 5,603.60 |
| மொத்தம் .. | 10,441.70 |



1989 ஏப்ரல் 12]

அட்டவணை—ஐ

அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கம்—அலுவலர்கள் பற்றிய விவரப் பட்டியல்.

| வரிசை எண். (1) | பதவியின் பெயர். (2) | பதவியின் எண்ணிக்கை. (3) | |
|---|---|---|---|
| 1 | நிருவாகி .. .. .. | 1 | |
| 2 | துணை நிருவாகி .. .. .. | 1 | (இப்பதவி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.) |
| 3 | மருத்துவ அலுவலர் .. .. | 1 | |
| 4 | அலுவலகக் கண்காணிப்பாளர் .. | 1 | |
| 5 | உதவியாளர்கள் .. .. .. | 2 | |
| 6 | இளநிலை உதவியாளர்கள் .. .. | 2 | |
| 7 | தட்டச்சர் .. .. .. .. | 1 | |
| 8 | சமூக நல ஊழியர் .. .. .. | 1 | |
| 9 | போதகர்கள் . . .. . | 5 | |
| 10 | அலுவலக உதவியாளர்கள் .. .. | 2 | |
| 11 | தலைமைக் காவலர் .. .. .. | 1 | |

| | | | |
|---|---|---|---|
| 12 | காவலர்கள் | 11 | (9 பதவிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன). |
| 13 | வாயிற் காவலர்கள் | 2 | |
| 14 | தலைமைக் காப்பாளர் | 1 | |
| 15 | காப்பாளர்கள் | 9 | (7 பதவிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.) |
| 16 | சமையற்காரர் | 3 | |
| 17 | துப்புரவுப் பணியாளர்கள் | 3 | |
| 18 | சலவையாளர்கள் | 3 | |
| 19 | சவரப் பணியாளர்கள் | 2 | |
| 20 | மருந்தாளுநர்கள் | 2 | |
| 21 | செவிலியர்கள் | 2 | (1 பதவி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.) |
| 22 | பெண் செவிலியர் உதவியாளர்கள் | 2 | ,, |
| 23 | ஆண் செவிலியர் உதவியாளர்கள் | 2 | ,, |
| 24 | ஓட்டுநர் | 1 | |
| | மொத்தம் | 61 | |



அட்டவணை—ஓ.

அரசினர் பிச்சைக்காரர் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கத்தில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த ஆதாயம் இழப்பு விபரம்.

| | 1983–84. | 1984–85. | 1985–86. | 1986–87 | 1987–88. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| மூலப் பொருட்கள் மற்றும் கூலிக்கான செலவு | 0.35 | 0.27 | 0.12 | 0.16 | 0.17 |
| தயாரிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு | 0.42 | 0.32 | 0.24 | 0.20 | 0.20 |
| இலாப நட்டம். | + 0.07 | (+) 0.05 | (+) 0.12 | (+) 0.04 | (+) 0.03 |

600 008 13 8696

கள் இருக்கின்றனவே, அந்தப் பகுதிகளை எல்லாம் விட ராணிப்பேட்டை வளர்ச்சி பெற்றிருக்கிற நிலையில் 'எங்கே ராணிப்பேட்டையில் கோர்ட்' என்று நான் கேட்க ஆசைப் படுகிறேன். இது குறித்து நான் முன்பே சொல்லியிருக்கிறேன். ஆனாலும் முட்டையிலிருந்து இன்னும் குஞ்சு பொரிக்கவில்லை. முட்டை முட்டையாகத்தான் இருக்கிறது. அதிலிருந்து குஞ்சு பொரிக்க வேண்டும். அங்கே அவசியம் முன்சீப் கோர்ட் வர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் சேப்பாக்கம் தொகுதியைச் சார்ந்தவர்தானே ? (சிரிப்பு)

**திரு. எம். அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேப்பாக்கம் தொகுதியில்தான் சென்னை மத்திய சிறைச்சாலை இருக்கிறது. அதைச் சார்ந்தே இதையும் பேசுகிறேன். காரணம் இந்தக் கோரிக்கையைதான், வாணியம்பாடி சம்பந்தப்பட்ட கோரிக்கையைத்தான் நான் கடந்த காலத்திலும் இங்கே பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் திரு. சீனிவாசன் பூர்வீக வாசனை என்று சொல்கிறார். (சிரிப்பு)

**திரு. எம். அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சேப்பாக்கம் தொகுதியில் ஜெயிலுக்குப் போகிற குற்றவாளிகள் மிகக் குறைவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படி என்றால் சொந்த ஊரில்தான் குற்றவாளிகள் அதிகமா ? (சிரிப்பு)

**திரு. எம். அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து இந்த சிறைச்சாலைகள் குறித்து சில விஷயங்களை கூறுகிறேன். இன்றைக்கு சிறைத் துறையில் காவலர்களாக இருக்கின்றவர்களுக்கும் காவல் துறையில் பணி யாற்றுகிறவர்களுக்கும் சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறது. காவல் துறைக்கு ஈடாக சிறைத் துறைக்கு சம்பளம் கொடுப்ப தில்லை. ஏன் இந்த பாகுபாடு ? அப்படி என்றால் காவல் துறையில் இருப்பவர்களைவிட இவர்கள் வேலை குறைவாக செய் கிறார்களா ? வேலை செய்கிற சூழ்நிலை அப்படி இருக் கிறதா, கன்ஜீனியல் அட்மோஸ்பியரா, பிரண்ட்லி அட்மோஸ்பியரா, ஹேப்பி அட்மோஸ்பியரா, ஹெல்தி அட்மோஸ்பியரா, ஏன் இந்த வித்தியாசம் என்று எனக்குத் தெரியவில்லை. ஏன் இப்படி சிறைத் துறையில் இருப்பவர் களுக்கு, அதிகாரிகளுக்கு எல்லாம் காவல் துறையில் வேலை செய்கிறவர்களை விட குறைவாக சம்பளம் கொடுக்கிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவாகப் பார்க்கிறார்கள். ஆகவே அவர்களுடைய கோரிக்கை நிறைவேறும் என்று கருதுகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விரைந்து முடிக்கச் சொல்லிப் பார்க்கிறார்களா, இல்லை கோரிக்கையை ஏற்றுப் பார்க்கிறார்களா? (சிரிப்பு)

திரு. எம். அப்துல் லத்தீப் : அந்தப் பழக்கம் எனக்கு இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்வதால் நான் பாயின்ட் பை பாயின்ட் போகிறேன்.

அடுத்து, பல இடங்களில் சிறைச்சாலைகளுக்கு அதிக காலியிடங்கள் இருக்கின்றன. அந்தக் காலியிடங்களில் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கலாம் அல்லவா? காலி இடங்கள் நிறைய இருக்கின்றன. பாளையங்கோட்டை சிறைச்சாலை பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கேதான் அவரை தனிமைப்படுத்தி வைத்திருந்தார்கள். எவ்வளவோ இடம் அங்கே இருக்கிறது. திருச்சி மத்திய சிறைச்சாலையில் எவ்வளவோ இடம் இருக்கிறது. அங்கே வேலை செய்யும் அதிகாரிகள், அங்கே இருந்து அவைகளைக் கண்காணிக்கக்கூடிய வகையிலே அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கலாம். தயவு செய்து அதையும் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிறைச்சாலைக் காவலர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்க வேண்டும். சில நேரங்களில், சிறைச்சாலைகளில் இருக்கும் கைதிகள் They may run amuck, they may be violent, they way do anything அவர்களுக்கு என்ன, வந்தது வந்தோம் என்று சொல்வதைக் கேட்டிருக்கிறேன், எனவே காவலர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்க வேண்டும். சிறைச்சாலைகளில் வேலை செய்கின்ற அவர்களுக்கு சப்சிடைஸ்ட் ரேஷன் கார்டுகளைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே அரசியல் சம்பந்தமான போராட்டங்களில் கலந்துகொண்டு சிறைக்குச் செல்கின்றவர்களை முறையாக நடத்த வேண்டும். அவர்கள் கைதிகளா? அவர்கள் குற்றவாளிகளா? தங்கள் மான உணர்வை உணர்த்துவதற்கு, சமுதாயத்திற்காகத் தன்னை அழித்துக் கொள்ள வந்த தியாகச் செம்மல்கள் அரசியல் கைதிகள். அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் மரியாதையாக நடத்த வேண்டும். அவர்களுக்கென்று தனிச் சலுகைகள் கொடுக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் இதுவரை சிறைச்சாலைக்குப் போனதாகத் தெரியவில்லை.





திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவரவர்களே, 1965லே நான் கூடப் போயிருக்கிறேன். என்னோடு வந்தவர்கள், என்னோடு பணியாற்றியவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். குறிப்பாக திரு. சீனிவாசன் அவர்கள்.. அதையெல்லாம் இப்போது சொல்ல விரும்பவில்லை. You can see the records of Mr. Bhakthavatsalam, the then Hon. Chief Minister.... ஆகவே எனக்குக்கூட கொஞ்சம் தெரியும். சிறைச்சாலையில் 16 நாட்கள் இருந்தேன்..........

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்திப் அவர்கள் சொல்கிற அரசியல்வாதிகள் போராட்டங்கள் என்பது இன்றைக்குப் பொருந்துமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சும்மாக் கேட்கிறார். நீங்கள் மேலே போகலாம்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவரவர்களே, நியாயமாகவும், நாட்டின் நலிவைப் போக்கவும், இன மானத்தை உணர்த்துவதற்காகவும் யார் உண்மையாகப் போராடுகிறார்களோ அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். இன்றைய பிரச்சினைக்குள் போகவில்லை. போனால் இன்னும் பிரச்சினைகள் வளரும், எனவே அதை விட்டுவிடுகிறேன்.

மாநில அளவிலே சிறைத் துறைக்கு என்று ஒரு டி.ஐ.ஜி. பதவி உள்ளது. மேலும் இதை ரேஞ்சுகளாகப் பிரித்து, ஒவ்வொரு ரேஞ்சுக்கும் ஒரு டி.ஐ.ஜி. வைத்து, சிறை நிர்வாகம் சரியாக நடக்குமா என்பதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதனுடைய 'பிசிபிலிட்டி' யை நிதிநிலையை அனுசரித்து, பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு 14 வருடங்கள் கழித்தும் ஆயுள் தண்டனைக் கைதிகள் பலர் சிறையில் உள்ளார்கள். இது குறைக்கப்பட்டு 10 ஆண்டுகள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் வாசக்டமி செய்து கொண்டவர்களுக்கு ஓராண்டு விடுப்பு என்று சொல்லுகிறார்கள். 'ரெமிஷன்' என்று சொல்லுகிறார்கள். Those who are going in for Vasectomy, அதிலே என்ன வேடிக்கை என்று சொன்னால், 60 வயதுக் கிழவன் கூட வாசக்டமி செய்து கொள்கிறான். 55வது வயதில் சிறைக்குப் போயிருப்பான். அவனைக் கூட, 60 வயது கிழவனைக் கூட, நீ வாசக்டமி செய்துகொள், உனக்கு ஒரு வருஷம் ரெமிஷன் கிடைக்குமென்று சொல்லி.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் விரைந்து முடிக்கலாம்.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** ஆக வயதானவர்களுக்குச்
செய்வது. அதுவும் வாலிபர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவரவர்
களே, 60 வயதிற்கும் மேற்பட்டவர்களுக்கும் பல இடங்
களிலே குழந்தை பிறந்திருக்கிறதென்ற செய்தி அரசாங்கத்
திற்கு வந்திருக்கிறது.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** குழந்தை பிறக்கும். 80 வயதுக்
கிழவனுக்குக் கூட குழந்தை பிறந்திருக்கிறது. எனக்குத்
தெரியும். 80 வயதிலே ஒருவனுக்குக் குழந்தை பிறக்கிறதென்று
சொன்னால், அவனுக்கு......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பற்றி, பணனாமலை
ஒரு நாளைக்கு விவாதித்துத் தெரிந்து கொள்ளலாம். வரைவில்
முடித்தால் சட்ட அமைச்சர் அவர்கள் உரையாற்றுவதற்கு
வாய்ப்பாக இருக்கும்.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** தலைவரவர்களே, இது
மாதிரி ரெமிஷன்கள் எல்லாம், These are deplorable. They are
not remissions at all. These are allurements. These are very
undesirable allurements, என்ற முறையிலே இதைப் பற்றி
அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த முறைகள்
எல்லாம் மாற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 'அட்வைசரி போர்ட்', ரெமிஷன் கொடுப்பதற்காக
வைத்திருக்கிறார்கள். இதிலேயுள்ள சில முறைகளைப் பற்றி
விளக்கமாகப் பேச எனக்கு நேரமில்லை. அதைக் கூட அரசு
கொஞ்சம் மாற்றி அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

பொதுவாக சிறைச்சாலைகளில் உள்ள சிறைவாசி ஒருவருக்கு
திடீரென்று இருதய நோய் வந்து விடுகிறது. அல்லது ஏதாவது
காக்காய் வலிப்பு நோய் போல் வந்து விடுகிறது. ஏனென்றால்
இப்போது யார் யாருக்கெல்லாமோ வருகிறது. அவர்கள்
நடக்க முடியாது என்று கூட சொல்லுகிறார்கள். வெளியே
இருப்பவர்களுக்கே கூட முடக்குவாதம் வருகிறபோது, சிறைச்
சாலைகளில் இருப்பவர்களுக்கும் முடக்குவாதம் வரலாம்.
அதை இடக்கு வாதம் என்று கூட ஏற்றுக் கொள்ளலாம்.
எனவே, அப்படிப்பட்ட நேரங்களில் தயவு செய்து, அவர்களைத்
தூக்கிச் செல்வதற்கு, அதுவும் இரவு நேரங்களில் தூக்கிச்



செல்லுவதற்கு ஒரு ஆம்புலன்ஸ் அனைத்து மாவட்ட மத்திய
சிறைச்சாலைகளிலும் இருக்க வேண்டும். இங்கே சென்னை
யில் மத்திய சிறைச்சாலைக்கு பக்கத்திலேயே ஜெனரல் ஆஸ்
பிடல் இருக்கிறது, பாளையங்கோட்டையில் நான் பார்த்
திருக்கிறேன். எனவே இப்படிப்பட்ட மத்திய சிறைச்சாலை
களைப் பொறுத்த வரையிலாவது இந்த ஆம்புலன்ஸ் வசதி
செய்து தரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்பு
கிறேன். அதோடு, இப்போது சிறைச்சாலைகளில் இருப்
பவர்களுக்கு பல்வேறு வகையான வேலை தரப்படுகிறது.
ஸ்கில்டு லேபர், அன் ஸ்கில்டு லேபர் என்று பிரிக்கிறீர்கள்.
அப்படி பிரிக்கிறபோது அவர்களுக்கு கொடுக்கிற வேஜஸ்
மிகவும் குறைவாக இருக்கிறது. ஸ்கில்டு லேபருக்கு 1 ரூபாயும்,
செமி ஸ்கில்டு லேபருக்கு 50 பைசாவும், கொடுக்கப்படுவதாக
நீங்கள் கொடுத்திருக்கிற குறிப்பிலேயே இருக்கிறது. அன்
ஸ்கில்டு லேபருக்கு 25 பைசாதான் தரப்படுகிறது. இது
எப்போது நிர்ணயிக்கப்பட்டது? ராபர்ட் கிளைவ் காலத்தில்
நிர்ணயிக்கப்பட்டது. அந்தக் காலத்திலிருந்த மணி வேல்யூ
என்ன? 1960 ஆம் ஆண்டு ரூபாய் மதிப்பு 100 பைசா.
இன்றைக்கு 1989-ல் 10¾ பைசா, 11 பைசா என்று வந்து
விட்டது. கவைக்குதவாத இதே இந்த அளவுக்கு வந்து
விட்டபோது, பிரிட்டிஷ்காரன் காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட
இந்தக் கூலியை மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அவர்களிலே நல்லவர்களும் இருக்கிறார்கள்
என்று நண்பர் சீனிவாசன் அவர்கள் பேசும்போது கூட குறிப்
பிட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் வெளியே வரும்போது
உதவுகிற வகையில் இது இருக்க வேண்டும். எனவே இதை
மாற்றியமைக்க வேண்டும். எந்த அளவுக்குச் சாத்தியமோ
அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு நேரமில்லாத
காரணத்தால், மற்றவர்கள் கையைத் தூக்கி தூக்கி பசி பசி
என்று காட்டுகிறார்கள். உங்களுக்கெல்லாம் பசி எனக்கு
வயிற்றுப் பசி இல்லை, நான் மாலையில் தான் சாப்பிட வேண்டும்.
இந்த வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.
வணக்கம்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** எனக்கெல்லாம் பேச
சந்தர்ப்பமே கொடுக்கவில்லையே. நிறையப் பேச எடுத்துக்
கொண்டு வந்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாளைக்குக் காலையில்
முதலில் பேச வாய்ப்பு அளிக்கப்படும்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** இந்த சப்ஜெக்டிலே பேச
நான் ஆவலோடு என்னென்னவோ எடுத்து வந்தேனே.

[1989 ஏப்ரல் 12

7. அறிவிப்பு

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சரின் பதிலுக்கு முன் ஒரு சிறிய அறிவிப்பு.

இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் :

13-4-1989 ஆம் நாள் முதல் 18-4-1989 ஆம் நாள் வரை ஏற்கெனவே அறிவித்தபடி.

13-4-1989 அன்று வினாக்கள் — விடைகள் நேரம் இல்லை.

19-4-1989 காலை 28 சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும்.

மாலை 36 பாசனம்

37 பொதுப் பணிகள் — கட்டிடங்கள்

38 பொதுப் பணிகள் — பணியாளரமைப்பும் கருவிகளும், தளவாடமும்.

[illegible] பாசனம் குறித்த மூலதனச் செலவு.

53 பொதுப் பணிகள் — கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.

[illegible]-1989 காலை 29 தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்.

44 எழுது பொருள் அச்சுத் துறை

47 செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.



மாலை 12 தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்.

25 சின்கோனா

33 வீட்டு வசதி

45 காட்டுவளத் துறை

56 காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு.

21-4-1989 காலை 27 கதர்த்தொழில்

30 சமூக நலன்

48 ஊரகத் தொழில்கள்

57 ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.

மாலை 23 கூட்டுறவு

35 நுகர் பொருள் வழங்கல்

22-4-1989 காலை 10 பால் வழங்கு திட்டங்கள்.

21 மீனளம்

22 கால்நடை வளர்ப்பு

23-4-1989 ஞாயிற்றுக்கிழமை—விடுமுறை

24-4-1989 காலை 24 தொழில்கள்

51 தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாலை 31 பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்.

[illegible]-4-1989 காலை 4 பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்— நிருவாகம்.

9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | 11 | மாவட்ட நிருவாகம் |
| | | 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கான நன்மைகளும். |
| | | 43 | பல்வகை |
| | | 58 | பல்வகை மூலதனச் செலவு. |
| | | 59 | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். |
| | மாலை | 26 | கைத்தறியும் துணித் தொழிலும் |
| | | 34 | நகர்ப்புற வளர்ச்சி |
| 26–4–1989 | | 2 | மாநில ஆயத்தீர்வைத் துறை |
| | | 15 | காவல் துறை |
| | | 16 | தீயணைப்புப் பணிகள் |
| | (பேரவை காலையிலும் மாலையிலும் கூடும்.) | | |
| 27–4–1989 | காலை | 32 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன். |
| | மாலை | | அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும். |
| 28–4–1989 | | 7 | மாநிலச் சட்ட மன்றம் |
| | | 8 | தேர்தல்கள் |
| | | | 1989–90 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்க சட்ட மூன்வடிவு அறிமுகம் செய்தல். |
| 29–4–1989 | | | 1989–90 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும். |
| | | | அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும். |
| 30–4–1989 | ஞாயிற்றுக்கிழமை | | விடுமுறை |
| 1–5–1989 | மே நாள் | | விடுமுறை |
| 2–5–1989 | | | அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும். |



### 5. மானியக் கோரிக்கைகள், 1989–90—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டு இருக்கின்ற மானியக் கோரிக்கைகளின் மீது சட்டமன்ற உறுப்பினர்கள் நல்ல பல கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். சிறைத் துறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள்—சொல்லிய கருத்துக்கள்—குறிப்பாக 14 ஆண்டுக்காலம் சிறைவாசம் அனுபவித்த ஆயுள் கைதிகளை பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே ஒரு நல்ல செய்தியோடு என்னுடைய கருத்தைத் தெரிவிக்கலாமென்று நான் கருதுகிறேன்.

முதலமைச்சர் அவர்களோடு கலந்து கொண்டு நான் தெரிவிக்க இருக்கிற, உங்களால் வரவேற்கப்பட இருக்கிற கருத்து என்று நான் கருதுவது, இப்போது சிறைகளில் 14 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 106 இருக்குமென்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் பி.எச். பாண்டியன் அவர்களும் மற்ற நண்பர்கள் எல்லாம் சட்ட மேற்கோள்களை எடுத்துச் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக கான்ஸ்டிடியூஷன் பென்ச், ஐந்து நீதிபதிகள் அடங்கிய பென்ச்சின் முடிவை சுட்டிக்காட்டி, 14 ஆண்டுக்காலம் அவர்கள் சிறையில் தண்டனை அனுபவித்து இருந்தால்தான் விடுதலை செய்யலாம் என்றும் அல்லது அரசாங்கத்திற்கு சில குறிப்பிட்ட அரசியல் சட்ட அடிப்படையில் விடுதலை செய்ய உரிமை உண்டு என்றும் சொல்லி இருக்கிறார்கள். எனவே நான் அறிவிக்க விரும்புவது 14 ஆண்டுகளுக்கு மேல் சிறைவாசம் அனுபவித்து இருக்கிற ஆயுள் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்று அரசு முடிவு எடுத்துள்ளதை இந்த மன்றத்தின் மூலமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு நல்ல செய்தி என்னவென்று சொன்னால் ஆயுள் தண்டனை அனுபவிக்கிறவர்கள் பரோலில் (காவல் விடுப்பில்) வர வேண்டுமென்று சொன்னால் 5 ஆண்டுகள் முடிந்த பிறகு தான் முதல் தடவையாக அவர்களுக்கு விடுப்பு அளிக்கலாமென்றும் அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள், இரண்டு ஆண்டுகள் என்று தான் விடுப்பு அளிக்கலாம் என்றும் இப்போது விதி முறைகள் இருப்பதாக சொல்கிறார்கள். ஐந்தாண்டுக் காலம் அதிகம் என்றுதான் நான் கருதுகிறேன். 15 நாட்கள் என்று வைத்தாலே எவ்வளவு கஷ்டம் என்பது பலருக்குத் தெரியும். எனவே 5 ஆண்டுக்காலம் என்பதை 3 ஆண்டுக் காலமாக குறைத்து, 3 ஆண்டுகள் தண்டனை அனுபவித்து இருந்தால், அவர்களுக்கு பரோல் கொடுக்கலாம் என்றும் அதற்குப் பிறகு இரண்டு இரண்டு ஆண்டுகளுக்கும் அவர்களுடைய நடத்தையை அனுசரித்து அவர்களுக்கு விடுப்பு கொடுக்கலாம் என்றும்; அதற்கு அரசாங்கம் அந்த விதி

முறையைத் திருத்த வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது என்பதையும் இந்த அவையின் மூலமாக நான் அறிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான கருத்து என்னவென்று சொன்னால், அவசரக் காலப் பிரச்சினை. நீங்கள் சொல்வதுபோல திடீரென்று ஒரு பிரச்சினை—யாராவது இறந்து விட்டால் அல்லது உடல் நலக் குறைவாக இருக்கும் போது அந்த சூப்பரின்டென்டென்ட் அவர்களே விடுப்பு அளிக்கலாம் என்று இப்போது விதிமுறை இருக்கிறது. ஆனால் அந்த விதிமுறை எப்படி இருக்கிறது என்று சொன்னால், முதல் தடவை 6 நாட்களும் அதற்குப் பிறகு மூன்று, மூன்று நாட்களும் என்றும் மொத்தம் 15 நாட்கள் விடுமுறை கொடுக்கலாம் என்றும் இருக்கிறது. அப்படி இருக்கும் போது அவர் முதல் தடவையாக விடுப்பிலே செல்லும்போது 3 நாட்கள் போதும் என்று சொன்னாலும் 6 நாட்கள் நீ போய்த்தான் ஆக வேண்டுமென்று வற்புறுத்தப் படுவதாக தெரிய வருகிறது. எனவே தான் அந்த விதியை மாற்றி 15 நாட்களுக்கு விடுப்பு கொடுக்கும் அதிகாரம் அந்த கண்காணிப்பாளருக்கு அளிக்கப்படுகிறது. எப்படி வேண்டுமானாலும் அவர் விடுப்புக் கொடுக்கலாம். முதலில் 3 நாட்கள் பிறகு 3 நாட்கள் அல்லது முதலிலேயே 6 நாட்கள். இப்படி எப்படி வேண்டுமானாலும் விடுப்புக் கொடுக்கலாம் என்ற அந்த அதிகாரத்தை இப்போது மாவட்டக் கண்காணிப்பாளருக்கு வழங்கி இருக்கிறோம் என்ற அந்த செய்தியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-40)

அடுத்து பரோல் விஷயம். இதுதான் முக்கியமானது. நம்முடைய எம்.எல்.ஏ.க்களுக்கும் தொந்தரவாக இருப்பது இந்த பரோல் தான். பரோலில் விட வேண்டுமென்று ஏராளமான விண்ணப்பங்கள் வருகின்றன. ஆனால் அந்த பரோல் விண்ணப்பங்கள் மீது உடனே உத்தரவு போட்டுவிடுவது என்பதுகூட சிறப்பாகாது, முறையாகாது. ஏனென்று சொன்னால் யாருக்காக பரோல் கொடுக்கிறார்களோ, அவர்களைப் பற்றிய குறிப்பு நம்முடைய கையில் கிடையாது. அவர்கள் நல்லவர்களாக இருக்கலாம்; சில பேர் கொடுமையான குற்றங்கள் செய்தவர்களாக இருக்கலாம்; அந்தச் சிறைச்சாலையில் சரியான முறையில் நடக்காமல் இருக்கலாம். எனவேதான் அதைப் பற்றி ஒரு குறிப்பு வாங்கிய பிறகு, அரசாங்கத்தின் மூலமாகக் குறிப்பு வாங்கிய பிறகுதான் அவர்களைப் பரோலிலே விடுவிக்க வேண்டுமென்ற ஒரு முறை இருக்கிறது. இப்பொழுது நாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்று சொன்னால், ஒரு மனு வந்தால் அந்த மனுவின் மீது பத்து நாட்களுக்குள்ளாக அரசாங்கத்திற்கு அறிவிப்பு வந்து



விட வேண்டுமென்றும், அந்த அறிவிப்பு வந்த பிறகு விடுப்பில் விடுகின்ற விஷயத்தை முடிவு செய்யலாம் என்றும் இப்பொழுது நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக முடிவு செய்திருக்கிறோம் என்ற நிலையையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே நம்முடைய நண்பர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். சிறைத் துறையிலே சிறைவாசிகளுக்கு அவர்கள் செய்கின்ற வேலைக்குக் கொடுக்கப்படுகின்ற ஊதியம் மிகமிகக் குறைவு என்று சுட்டிக் காட்டினார்கள். நம்முடைய முதலமைச்சரவர்களைக் கேட்டுக் கொண்டு அதைப் பரிசீலனை செய்யலாம்; அதைப் பரிசீலித்து உயர்த்துவதற்கான வாய்ப்புகள் இருந்தால் உயர்த்தலாம் என்ற கருத்து இருக்கிறது. எனவே, நானும் அந்தக் கருத்தை உங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பரவலாக ஒரு கருத்து சொல்லப்படுகிறது. சிறைத் துறை என்று சொன்னால் ஏதோ அங்கே கொண்டு போய் அடைத்து அவர்களைக் கொடுமைப்படுத்த வேண்டுமென்ற நிலையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சிறைக்கு அனுப்பப்படுவது, சிறைக்குச் சென்றவன் சிறைக்குச் சென்ற பிறகு திருந்தி வெளியே வரும்பொழுது சமுதாயத்திற்குப் பயன்படக் கூடிய ஒரு குடிமகனாக—உங்களை நான் சொல்லவில்லை—ஒரு குடிமகனாக வர வேண்டுமென்ற எண்ணத்தோடு தான் சிறைக்கு அனுப்பப் படுகிறார்கள். எனவே, நான் ஒரு நான்கு நாட்களுக்கு முன்னாலே மாவட்டக் கண்காணிப்பாளர்களுடைய கூட்டத்தை கூட்டி அதிலே சொல்லியிருக்கிறேன். இங்கே சொன்னது போல, படிப்பதற்கு வசதி, தொழில் கற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள், அவர்கள் நல்லவர்களாக இருந்தால் அவர்கள் கட்டுப்பாடு இல்லாமல் without escort கூட போய்ப் படிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே தான் அந்த முறைகளெல்லாம் சிறப்பாகப் பின்பற்றப்படும் என்று நான் நம்புகிறேன்.

அது மாத்திரமல்ல, இன்றைக்குச் சிறைத் துறையிலே பல தவறுகள் இருக்கின்றன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, கண்காணிப்பு அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பது, குறிப்பாக இந்த உணவு வழங்குகிற விஷயத்திலும், உடை வழங்குகிற விஷயத்திலும் அவர்கள் பிரத்தியேகமான கவனத்தைச் செலுத்த வேண்டுமென்றும், அதுபோல குறைபாடுகள் ஏற்படக் கூடாது, அப்படி ஏற்படுமானால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சிறைத் துறைக் கண்காணிப்பாளர்களும் திடீர் சோதனைகள் மூலமாக இந்தக் குறைகளைக் களைய வேண்டுமென்று அவர்களுக்குத் தெரிவிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் பெண்களைப் பற்றிச் சொன்னார்கள். இந்த அரசு பெண்கள் விஷயத்தில், அதிலும் குறிப்பாக அரசாங்க வேலைகளில் நியமிப்பதானாலும், மற்ற பிரச்சினைகளானாலும் பெண்களுக்கு விசேஷ அந்தஸ்து கொடுக்க வேண்டுமென்று இருப்பது உங்களுக்கெல்லாம் தெரிந்த விஷயம்தான். எனவே சிறையிலே இருக்கின்ற பெண்களுக்குத் தக்க பாதுகாப்பு கொடுக்கப்படும். ஏதாவது குறை இருக்குமானால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானால் நிச்சயமாக, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நாங்கள் கூட்டிய கண்காணிப்பாளர்கள் கூட்டத்திலும் கூட பெண்கள் சிறையை நிர்வகிக்கின்ற அந்தப் பெண் அதிகாரி, அங்கு இருக்கின்ற பெண்களுக்குப் போதுமான உடை வசதிகள் இல்லை என்று சொன்னார்கள். அவர்களுக்கு ஆண்டு தோறும் இரண்டு சாரியும் இரண்டு பிளவுஸ்களும் தான் கொடுக்கிறார்கள், அது போதாது என்று சொன்னார்கள். அதை அரசாங்கம் பரிசீலிக்கிறது. எந்த அளவிற்கு அந்த உடை வசதிகளை அதிகப்படுத்த முடியுமோ அவைகளைச் செய்வோம் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இங்கே சிறையிலே பணியாற்றக் கூடிய வார்டர்களைப் பற்றிச் சொன்னார்கள். சிறை வார்டர்களுக்குக் கொடுக்கப்படக் கூடிய ஊதியம் காவலர்களுக்குக் கொடுக்கப்படக் கூடிய ஊதிய அளவிற்கு இல்லை என்ற ஒரு குறைபாட்டைச் சொன்னார்கள். சிறை வார்டர்கள் ஜெயிலர்கள் இவர்களைப் பற்றிய சம்பளப் பிரச்சினை எல்லாம் இன்றைக்கு பே கமிஷன் முன்னாலே இருக்கிறது. எனவே, பே கமிஷன் அதைப் பரிசீலித்துப் பார்த்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். அந்த பே கமிஷன் ரெக்கமன்டேஷன் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சிறைத் துறையிலே டி.ஐ.ஜி.யைப் பற்றி இங்கே சொன்னார்கள். இப்பொழுது டி.ஐ.ஜி.யைப் பற்றி ஒன்று இருக்கிறது. அந்தப் பதவியை நிரப்புவதற்கும் இன்னும் அதிகமான டி.ஐ.ஜி.க்களைப் போடவேண்டுமா என்று பரிசீலிப்பதற்கு அரசு யோசனை செய்து வருகிறது. ஆனால் நிதி நெருக்கடி இருக்கிற நேரத்தில் பதவிகளை அதிகப்படுத்திக் கொண்டு போகாமலேயே சிறைத் துறை நிர்வாகம் செம்மைப்பட்டு விடும் என்று சொல்ல முடியாது.

அங்கேயிருக்கிற கண்காணிப்பாளர்கள் மற்றவர்கள் சிறப்பான முறையில் கண்காணிப்பார்களானால் அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் இங்கே ஒரு



குறிப்பைச் சொன்னார்கள். சிறைத் துறை அதிகாரிகளை Inspector-General of Prisons–ஆக நியமிக்க வேண்டுமென்ற குறிப்பைச் சொன்னார்கள். அதில் ஒன்றும் தவறு இருப்பதாக நான் கருதவில்லை. இருந்தாலும் பார்க்கும் போது இங்கே கூட முந்தைய காலத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கூட சிறைத் துறையின் உயர் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். Inspector-General of Prisons ஆக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் இப்போது சிலகாலமாக Inspector General of Prisons ஆக an I.P.S. Officer இருந்து கொண்டு இருக்கிறாரே தவிர வேறு ஒன்றுமில்லை என்ற கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். சிறைத் துறை பற்றி இந்த அளவிற்கு போதுமென்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் சிறைத் துறை பற்றி நீங்கள் சொன்ன கருத்துக்களை எல்லாம் அதிகாரிகள் குறிப்பு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குறிப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். கோவை மத்திய சிறையில் அது நடைபெற்றதாகச் சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டை மறுப்பது என்னுடைய கடமையென்று நான் கருதுகிறேன். கோவை மத்திய சிறையில் உற்பத்தி செய்யப்படும் டெரிகாட்டன் துணிகளை சாயம் தோய்ப்பதற்கு 1987-88 ஆம் ஆண்டிற்கு திரு. எஸ். கனகராஜ் செட்டி என்பவர் ஒப்பந்தக்காரராக நியமனம் செய்யப்பட்டார். 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்திய அரசாங்கம் கோவை மத்திய சிறையில் தயாரிக்கப்படும் பொருள்களுக்கு சுங்க வரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்தது. ஆனால் திரு. எஸ். கனகராஜ் செட்டி ஒப்பந்தக்காரர் அந்த விலக்குக்குப் பின்னாலும் சுங்க வரியையும் சேர்த்தே சாயம் தோய்த்ததற்கான பணம் பெற்றுள்ளார். சுங்க வரிக்காக அவர் பெற்ற தொகை எட்டு லட்சம் ஆகும். இது பின்னால் கண்டுபிடிக்கப்பட்டு முழுத் தொகையும் அவரிடமிருந்து வசூலிக்கப்பட்டு விட்டது. அந்த அளவிற்கு நம்முடைய காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று கருதுகிறேன். அவர் சொன்னது அந்தத் தொகைக்கு வட்டி போய் விட்டது என்று சொன்னார்கள். வட்டிக்காரன் கடை இது அல்ல. இருந்தாலும்கூட தொகைக்கான இந்த வட்டித் தொகையையும் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இந்திய அரசு விலக்கு அளித்த பிறகும் எவ்வாறு மேற்படி ஒபபந்தக்காரருக்கு சுங்க வரியும் சேர்த்து தவறாக அளித்தார்க்ள் என்பதற்கு பொறுப்பானவர்கள் மீது இலாகாப் பூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நீதி நிர்வாகத்திற்கு வரும்போது நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை நீதி நிர்வாகம் செம்மையாக நடைபெற வேண்டும். An Efficient and Incorruptible Judiciary. அது தான்

[திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா] [1989 ஏப்ரல் 12

நோக்கம். அந்த நோக்கத்தின் அடிப்படையில்தான் இன்றைக்கு அரசாங்கம் செயல்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியது—நான் பெயரைச் சொல்ல நேரமில்லை—பொதுவாக முக்கியக் கருத்தாக வலியுறுத்தியது மதுரையில் சென்னை உயர் நீதிமன்றத்தின் கிளை, ஒரு பெஞ்ச் அமைக்க வேண்டும் என்பதாகும்.எனக்கு ஞாபகம் 1974 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அப்படி ஒரு பெஞ்ச் வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டு மத்திய அரசுக்கு அது தெரிவிக்கப்பட்டது. பல வற்புறுத்தல்கள் நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக மேற்கொள்ளப்பட்டன. அதற்குப் பிறகு ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. ஜஸ்வந்த்சிங் கமிஷன் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் சொன்னது போல கமிஷன் நியமிக்கப்பட்டது. அந்தக் கமிஷனுடைய சிபார்சுக்குப் பிறகு நம்முடைய தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய கருத்தைக் கேட்பதற்காக அனுப்பப்பட்டு தமிழ்நாடு அரசாங்கம் மதுரையில் ஒரு பெஞ்ச் நிறுவப்பட வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறது. அழுத்தந் திருத்தமாக வற்புறுத்துகிறது அதை என்றுதான் சொல்ல வேண்டும். நம்மைப் பொறுத்த வரையில் நாம் வற்புறுத்துவோம். ஆனால் உயர் நீதிமன்றத்தினுடைய கிளையைக் கொடுக்க வேண்டிய பொறுப்பு, அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கிறது. அவர்கள் என்ன செய்தார்கள் என்றால் நம்முடைய அரசாங்கத்தினுடைய கருத்தோடு உயர் நீதிமன்றத்தின் கருத்தையும் கேட்கிறார்கள். உச்ச நீதிமன்றத்தின் கருத்தையும் கேட்கிறார்கள். இப்போது எனக்கு கிடைத்திருக்கிற தகவல்படி—சென்னை உயர்நீதி மன்றத்தைச் சேர்ந்த நீதிபதிகள் தலைமை நீதிபதி என்று சொன்னால் அவர்கள் எல்லாம் ஒரு மீட்டிங் நடத்தி முடிவு செய்வார்கள் என்றுதான் நினைக்கிறேன்—தலைமை நீதிபதி அவர்கள் இதற்கு இசைவு தெரிவிக்கவில்லை என்ற ஒரு கருத்து எனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் மீண்டும் அதை வற்புறுத்துவோம். தலைமை நீதிபதிக்கும் தெரிவிப்போம். உங்களுடைய உணர்வுகளை மதித்து மத்திய அரசும், உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் இந்த கிளை அமைவதற்கு அனுமதி தருமென்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-50]

எப்படி உயர் நீதிமன்றத்தினுடைய கிளை ஒன்று மதுரைக்கு வேண்டும் என்று இங்கே வற்புறுத்தினார்களோ, அதைப்போன்று சுப்ரீம் கோர்ட்டினுடைய கிளை ஒன்று தென் மாநிலங்களுக்கு வேண்டும், அப்படித் தென் மாநிலங்களுக்கு என்று வற்புறுத்தப்படும்போது, எங்களுடைய கோரிக்கை அந்தக் கிளை தமிழ்நாட்டில் அமைக்கப்பட வேண்டும் என்பதுதான். அதற்குத் தேவையான வசதிகளை தமிழ்நாடு சர்க்கார் செய்து கொடுப்பதற்குத் தயார்



1989 ஏப்ரல் 12] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

என்று தெரிவித்து இருந்தும்கூட, அதுபற்றி ஒரு தகவல்கூட கிடைக்கவில்லை. எனவே உங்களுடைய உணர்வுகளை மனதிலே கொண்டு, மீண்டும் அந்தக் கருத்தை மத்திய அரசாங்கத்திற்கு வற்புறுத்துவோம் என்பதை நான் உங்களுக்கு எல்லாம் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்தது நம்முடைய நண்பர் கணபதி அவர்கள் இங்கே பேசுகிறபோது உயர் நீதிமன்றத்தில் இருக்கிற Directorate of Government Litigations என்ற ஒரு அமைப்புபற்றிச் சொன்னார்கள். அவர்கள் வேலை என்ன என்று சொன்னால், அங்கேயிருக்கின்ற Advocate-General, Government Pleader, Public Prosecutor இவர்கள் அலுவலகங்களிலே பணியாற்றக்கூடிய ஊழியர்களை மேற்பார்வை செய்வதற்கு என்று அமைக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். இப்போது இருக்கின்ற அட்வகேட்-ஜெனரலுடைய ஒபினியன், அவர்களுடைய கருத்தை Public Prosecutor and Government Pleader கருத்தையும் நான் கேட்கும்போது, அப்படிப்பட்ட ஒரு அமைப்பு தேவையில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே அந்த அமைப்பு கலைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படி கலைக்கப்படும்போது அவர்களுக்கு ஒன்றும் பாதகம் இல்லை. அவர்கள் ஏற்கெனவே செக்ரடேரியட்டில் பணிபுரிந்தவர்கள், எனவே அவர்கள் பழைய வேலைக்கு வந்துவிடுவார்கள். அதைப்பற்றி பிரச்சினை இருப்பதாகச் சொல்ல முடியாது, எனவே அந்த அளவிற்கு நான் இந்தக் கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஒரு குறிப்பை நம்முடைய உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அரசியல் சட்டத்தை பேராசிரியர் உட்பட பல பேர்கள் எரித்ததற்காக—கலைஞர் மீது கூட வழக்கு இருந்து—அவர்கள் மீது வழக்கு போட்டார்கள். அந்த வழக்கை விசாரிப்பதற்கு ஒரு ஸ்பெசல் கோர்ட் நியமிக்கப்பட்டது. அந்த ஸ்பெசல் கோர்ட்டை நியமித்தபோது, ஸ்பெசல் பப்ளிக் பிராசிக்யூட்டர் ஒருவரை நியமித்தார்கள். இன்னும், 4, 5 பிராசிக்யூட்டர்கள் எல்லாம் நியமிக்கப்பட்டார்கள். அந்த வழக்கை நடத்துவதற்கு ஆன செலவு எவ்வளவு என்கிற ஒரு குறிப்பைநான் பார்த்த போது, அதை உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பது முறையாக இருக்கும் என்பதால், நான் அவைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த வழக்கிலே ஒரு மூத்த வழக்கறிஞர், சீனியர் கவுன்சல்—பெயரைச் சொல்ல வேண்டாம் என்று நினைக்கிறேன்—மூத்த வழக்கறிஞர் அவர்களுக்குக் கொடுத்த ஃபீஸ் 2 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய். ஸ்பெசல் ஃபீசாக ஒரு சீனியர் கவுன்சலுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் அங்கே பணியாற்று

[திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா] [1989 ஏப்ரல் 12

கின்ற அசிஸ்டன்ட் பப்ளிக் பிராசிகியூட்டர், சைதாப்பேட்டையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு சம்பந்தமாக (குறுக்கீடு), தமிழ்நாட்டைச் சேர்ந்தவர், சீனியர் கவுன்சல் அபிபுல்லா பாஷா என்பவருக்கு 2 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் ஃபீஸ் கொடுத்து இருக்கிறார்கள். அவர் ஒரு சீனியர் கவுன்சல். அவர் வந்து அரசாங்க வக்கீல் அல்ல. ஆனால் அரசாங்க வக்கீலாக இருந்து, மாதந்தோறும் சம்பளம் பெற்றுக் கொண்டு, பணியாற்றுகிற அசிஸ்டன்ட் பப்ளிக் பிராசிகியூட்டர்களுக்கு எப்படி ஸ்பெசல் பீஸ் கொடுக்கலாம் என்பது எனக்குத் தெரியவில்லை. பாண்டியன் தான் விளக்க வேண்டும். ஜி. எம். சையத் பஷியுதீன், வழக்கறிஞர், சிறப்பு வழக்கு நடத்துநர், ஸ்பெசல் பி. பி. அவருக்கு 96 ஆயிரம் ரூபாய்.

**திரு. பி. எச். பாண்டியன் :** சாதாரணமாக வெளியிலே இருந்து மூத்த வழக்கறிஞர்களை வைப்பதற்குக் காரணம் ** அரசாங்கத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அவர்கள் மாதச் சம்பளத்தை வாங்கக் கூடியவர்கள்.**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 50 ஆண்டுக் காலமாக நடைபெற்று வருகிற மொழிப் போராட்டத்தின் தொடர்ச்சியாக இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடியவர்களை எப்படியும் சிறைச் சாலையிலே வைக்க வேண்டும் என்பதற்காக இவ்வளவு லட்சம் ரூபாய்களை அ.தி.மு.க. அரசு செலவழித்து இருக்கிறது என்பதை நாடு அறிந்தால் போதுமானது.

**திரு. பி. எச். பாண்டியன் :** இந்த வழக்குக்கு மட்டுமல்ல எந்த வழக்காக இருந்தாலும் சரி, அவர்கள் சீனியர் கவுன்சலை ஏன் வைக்கிறார்கள் என்றால் ** இது அவைக் குறிப்பீலே இருக்க வேண்டாம். நாளை மற்றவர்கள் தவறாகச் சொல்வார்கள். அரசாங்க வக்கீலினுடைய திறமை வேறு. தனிப்பட்ட வக்கீலினுடைய திறமை வேறு.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** இல்லை. நான் அதை ஒத்துக்கொள்கிறேன். ஸ்பெஷல் கௌன்சலுக்குக் கொடுங்கள். He is a Government servant. He is an Assistant Public Prosecutor. மாதச்சம்பளம் வாங்குகிறார்கள். ஜி. எம். சையத் பசியுதீன் ரூ. 96,000, வி. ஆர். வெங்கடசாமி, ஓய்வு பெற்ற சென்னை மாநகர் கூடுதல் வழக்கு நடத்துநர், இளநிலை வழக்கறிஞர் ரூ. 96,000. ஆர். எஸ். ஜீவரத்தினம், இளநிலை வழக்கறிஞர் ரூ. 96,000, டி. முனிரத்தின நாயுடு, இளநிலை வழக்கறிஞர் ரூ. 96,000, ஏ. வி. கோபாலகிருஷ்ணன், துணைக் காவல் துறைத் தலைவர், சி.ஐ.டி., சென்னை. அவர் சட்ட ஆலோசகர். அவருக்கும் பீஸ் ரூ. 26,000. ஆக ரூ. 7,01,000. (குறுக்கீடு).

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



1989 ஏப்ரல் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உண்மையிலேயே உற்சாகம் அதிகமாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** பாண்டியன் சொன்ன மாதிரி நிறைய வழக்குகள் இருக்கின்றன. நேரம் இல்லாததால் சொல்ல முடியவில்லை. அதேமாதிரி சுகுமாரன் கொலை வழக்கு என்பது மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டது. (குறுக்கீடு).

**திரு. எம். அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வழக்கறிஞர்களைத் தவிர்த்து மற்றவர்களுடைய சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக ரூ. . இலட்சம் அளவிற்கு அரசு செலவழித்திருக்கிறது. இப்படிச் செலவழிப்பதற்கு முன்பு வேறு வழக்கறிஞர்களை வைப்பதற்கு முன்பு சட்டத் துறையிடம் முறையாக கருத்துரை கேட்கப்பட்டிருக்கிறதா? அப்படி என்றால், சட்டத் துறை எந்த அடிப்படையில் அரசு வழக்கறிஞர்களைத் தவிர்த்து, சம்பளம் வாங்குகிற வழக்கறிஞர்களைத் தவிர்த்து, வேறு வகையிலே அவர்களுடைய சேவையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் பரிந்துரை செய்தார்கள் என்ற விவரங்களை எல்லாம் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் சொல்ல முன்வந்தது மொழிப் போராட்டத்தில் நடைபெற்ற ஒரு வழக்கில் அரசாங்க வக்கீல்கள் நடத்தியிருக்கலாம். கலைஞரையும், பேராசிரியரையும் எப்படியாவது சிறையில் வைத்துவிட வேண்டுமென்பதற்காக ரூ. 7 இலட்சம் செலவு செய்தது முறையா என்ற கருத்தைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தென்னரசு அவர்கள் ஏதோ கேட்க விரும்புகிறார்கள்.

**திரு எஸ். எஸ். தென்னரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாண்டியன் அவர்கள் * * * * என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த ஒரு தொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. பி. எச். பாண்டியன் :** நான் பேசிய பேச்சைக் கூட எடுத்துவிடலாம். அவர் சொன்ன மாதிரி வெளியில் வேறு ** ** என்ற மாதிரி வரும் அது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

வார்த்தையை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்வது என்னவென்றால், தனிப்பட்ட முறையில் வழக்கறிஞர்களாக இருக்கக் கூடியவர்கள் ரொம்ப அதிகம் படிக்கின்றார்கள். அதிகமாக உட்காருவார்கள். இலட்சம் இலட்சமாக சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசை அவர்களுக்குண்டு அரசாங்கத்திற்கு வரும்போது எவ்வளவு உழைத்தாலும் ரூ. 1,000, ரூ. 2,000 என்ற அளவிற்கு மேலே கிடையாது. இது அவைக்குறிப்பில் இருக்க வேண்டாம். பிறகு புத்தகம் அதிகமாகப் படிக்க மாட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திரு. தென்னரசு அவர்கள் சொன்ன * * பொறுத்தது. எனவே அந்த வரிகள் அனைத்தும் அறவே நீக்கப்படவேண்டும். திரு. பாண்டியன் சொன்ன * * பொறுத்தது. அதனால் அதை எடுக்கத் தேவையில்லை.

திரு. பி. எச். பாண்டியன் : சபாநாயகர் அரசாங்கத்தில் இருப்பது கிடையாது. எனக்குத் தெரியாது. நான் அங்குதான் உட்கார்ந்திருந்தேன். வேறு யார் சொல்லியிருந்தாலும் பரவா பில்லை. அதனால தான் எடுக்கச் சொல்கிறேன். எனக்கு எப்படித் தெரியும்? I am not a Member of the Cabinet.

THIRU M. ABDUL LATHEEF : Mr. Speaker Sir, What I want to say is, that it is an extraordinary situation; something extraordinary by passing the Legal Department of the Government. The Government thought it fit to procure the Services of some Advocates who had no direct responsibility with the Government. Therefore under whose instructions the concerned Department, the Law Department procured the services of the Advocates mentioned by the Hon. Minister in this House Some, Advccates have been enrolled particularly to conduct this case. Under whose instructions the services of the Advocates have been procured, whether it was oral or in writing and who recommended the names of those Advocates? இதெல்லாம் தெரிய வேண்டாமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: அதெல்லாம் சொல்ல வேண்டியது தான். அதில் ஒன்றும் தப்பு இல்லை. நிலைமை என்னவென்றால் இப்போது ஃபைலைத்தேடிப் பார்த்துச் சொல்ல நேரம் ஆகும். ஒரு குறிப்பு இருக்கிறது. அதைப் படிக்கிறேன். கேட்டால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். நம்முடைய அமைச்சர் மாண்புமிகு திரு. வீரபாண்டி ஆறுமுகம் மீது போட்ட கேசில்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



எவ்வளவு செலவு ஆகியிருக்கிறது என்றால், ஒரு கணக்கு கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கணக்கு முழுமையாக இருக்குமா என்று என்னால் நம்பமுடியவில்லை. அதைக் கூட எவ்வளவு என்று சொன்னால், ரூ. 2,73,260. ராம் ஜெத்மலானி இவர்களுக்கு எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 2-00)

இன்னும் விளக்கமாகச் சொல்லவேண்டுமென்றால், The stock file relating to Justice T. Ramaprasad Rao Com mission of Enquiry, Madras in the G.O. Index for 1983-84 has been thoroughly verified. Eventhough Thiru Ram Jeth Malani has been appointed to represent the former Chief Minister there are no Government Orders to show—Mr. Latheef please follow—there are no Government Orders to show that what fee has been paid and sanctioned to him till January 1985. The Commission was wound up in March 1984. அப்படிங்கறது தான் விஷயம். (சிரிப்பு) That is what I made very clear to you. அப்புறம் இன்னொரு பிரச்சினை.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய வழக்கைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முழு தகவலையும் அவைக்குத் தரவில்லை. முழுத் தகவலையும் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாதியிலேயே நிறுத்தி விட்டார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : முழுத் தகவலையும் சொன்னால், அவர் மீது வழக்குப் போடப்பட்டது. சுகுமாரன் கொலை வழக்கு என்று. அந்தக் கொலை வழக்கிற்கு ஸ்பெஷல் கோர்ட் நியமித்தார்கள். அது சேலத்திலே இல்லாமல் தர்மபுரியில் நடைபெற்றது. அங்கே அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். அதற்குப் பிறகு ஹைகோர்ட்டிலே அப்பீல் செய்தார்கள். அப்பீலிலும் கூட திரு. வீரபாண்டி ஆறுமுகத்தை மறுபடியும் விடுதலை செய்தார்கள். பிறகு மேலே சுப்ரீம் கோர்ட் வரைக்கும் போயிருக்கிறார்கள். எனவேதான் இப்படி ஏராளமான பணத்தைச் செலவழித்து, கீழ்க்கோர்ட்டிலே தீர்ப்பு ஆன பிறகும் செய்தார்கள் என்பதைத் தான் நான் உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை. பாம்பன் பிரிட்ஜ். பாம்பன் பிரிட்ஜ் பற்றி மாண்புமிகு உறுப்பினர் கணபதி அவர்கள் சப்ஜெக்ட்டை தொட்டு காட்டினார்களே தவிர விளக்கமாகச் சொல்லவில்லை. பாம்பன் பிரிட்ஜ் ஆதியில் நீலகண்டன் பிரதர்ஸ் என்பவரால் கான்டிராக்ட் எடுக்கப்பட்டது. புயல் வீசிய காரணத்தினாலே அங்கே செய்த வேலைகள் எல்லாம் பாழாகி விட்டன. அவர் கோர்ட்டிற்கு போய் தனக்கு கிளெய்மாக 3 கோடி ரூபாய் கேட்டார்கள். மத்திய அரசாங்கத்தின் சாதனையாக அந்த பாம்பன் பிரிட்ஜ் வேலை.

அரசாங்கத்தின் உத்தரவின்படி கவுன்ட்டர் கிளெய்ம் போடப்பட்டது. அரசாங்கத்தின் சார்பாக 10 கோடி ரூபாய் கிளெய்ம் போடப்பட்டது. 10 பிளஸ் 3 13 கோடி ரூபாய்க்கு. இந்த 13 கோடி ரூபாய்க்கு ஒரு பெர்சன்ட் பீஸ் என்று நிர்ணயிக்கப்பட்டது. வழக்கு நடத்திய வழக்கறிஞருக்கு 14 இலட்ச ரூபாய். யாருக்கு வழக்கறிஞருக்கு. பிறகு ஆர்பிட்டிரேஷனுக்கு போடப்பட்டபோது ஆர்பிட்டிரேஷன் செய்கிற அவர்கள் ஒரு பீஸ் வைத்து 11 இலட்சம் ரூபாய் போட்டார்கள். இதில் 10 இலட்சம் ரூபாய் டெபாசிட் செய்யப்பட வேண்டும் என்கிறபோதுதான் எங்களுக்கு பைல் வந்தது. அந்தப் பத்து இலட்சம் ரூபாய் வேறு வழியில்லாமல் அரசாங்கத்தின் சார்பாக டெப்பாசிட் செய்யப்பட்டிருக்கிறது. இது யாருடைய தவறு என்று தெரியவில்லை. தவறு இருப்பதைப் பார்த்து அதையும் பரிசீலிப்பதற்கு நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் கோர்ட்டிலேயெல்லாம் தமிழிலே நடைபெறவேண்டும் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஏற்கெனவே கோர்ட்டிலே—ஹைகோர்ட் தவிர மற்ற கோர்ட்களிலேயெல்லாம் தமிழிலே தான் நடைபெறுகிறது. சாட்சியம், விசாரணை, குறுக்கு விசாரணை நீதிபதிகள் எழுதக் கூடிய தீர்ப்பு அத்தனையும் தமிழில் தான் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. சட்டங்களை தமிழில் கொண்டுவர வேண்டுமென்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். சட்டங்களைத் தமிழிலே கொண்டு வர வேண்டும் என்பது தான் அரசாங்கத்தினுடைய கொள்கை. அதற்காக ஒரு கமிஷன் அபீஷியல் லாங்குவேஜ் கமிஷன் என்று ஒன்று இருக்கிறது. அது செயல்படாமல் இருக்கிறது. அந்த அபீஷியல் லாங்குவேஜ் கமிஷனைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்குரிய தலைவர்களையும் உறுப்பினர்களையும் நியமித்து அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இங்கே நண்பர்கள் சொன்னதைப் போல சில சட்டங்கள் மிகப் பழமையான சட்டங்கள். சில தேவையற்றவையாகக் கூட இருக்கலாம். அவைகளையெல்லாம் பரிசீலித்து அப்-டு-டேட் ஆக ஆக்குவதற்கு ஒரு ஸ்டேட் லா கமிஷன் போட வேண்டுமென்





கின்ற கருத்து அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது. ஸ்டேட் லா கமிஷன் மூலமாக தமிழ்நாடு சட்டங்களையும், தமிழ் நாட்டிற்கு அப்ளை ஆகக் கூடிய சென்டிரல் ஆக்ட்டுகளையும், தேவையானவைகளைப் பார்த்து திருத்த வேண்டியவைகளைத் திருத்தியும், தேவையற்றவைகளை நீக்குவதற்கான சிபாரிசு செய்வதற்கான ஒரு அமைப்பாக அது இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்சனை இப்பொழுது ஹைகோர்ட் அதற்கு சபார்டினேட் ஜூடிஷியரி. சுப்பீரியர் ஜூடிஷியரி சபார்டினேட் ஜூடிஷியரி என்ற அளவிற்கு இருக்கிறது. ஹை கோர்ட்டைப் பொறுத்தவரையில் பல வேறு காரியங்களை அரசாங்கம் செய்து இருக்கிறது. ஏற்கெனவே அங்கு உயர் நீதி மன்றத்தினுடைய ஒரு புதிய கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்திருக்கிறது. நம்முடைய திரு. கணபதி சொன்னதைப் போல ஏற்கெனவே அமைத்திருக்கின்ற சென்னை உயர் நீதிமன்றக் கட்டிடத்தைப் போல் புதியதாக கட்டப்படுகின்ற கட்டிடம் கலையழகு குறையாமல் நம்முடைய கலாச்சாரத்தை பிரதிபலிக்கின்ற அளவிற்கு இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்திற்கு, உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களின் அழைப்பின் பேரில் அங்கு சென்றிருந்தார்கள். நானும் உடன் சென்றிருந்தேன். அங்கு புதிய கட்டிடத்தினுடைய மாடலைக் காண்பித்தார்கள். மாடலைக் காண்பித்து உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள் சொன்னார்கள். நாங்களே பார்த்து இந்தப் புதிய கட்டிடம் பழைய கட்டிடத்திற்கு ஒத்துப்போகிற மாதிரி இருக்க வேண்டுமென்ற நிலை—நீங்கள் கருத்து தெரிவியுங்கள் என்று சொன்ன பிறகு—ஆர்க்கிடெக்ட்சர்—அந்த ஆர்க்கிடெக்சர் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு, சீப் என்ஜினியர் அவர்களைக் கலந்து ஆலோசித்து, செயலாளர், சம்பந்தப்பட்ட அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களையும் கலந்து இரண்டு நாட்களுக்கு முன்னால்தான் அந்த வடிவமைப்பை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். உயர்நீதிமன்றக் கட்டிடங்களும், அந்தப் புதிய கட்டிடமும் விரைவாக கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமாத்திரமல்ல, அவர்கள் சென்ற போது, முதலமைச்சர் அவர்கள் சென்ற போது ஒரு கோர்ட் ஹாலைக் காண்பித்தார்கள். அந்த கோர்ட் ஹாலிலே மேலிருந்த அந்தத் தளம் நல்ல வேளையாக நீதிபதி தலைமேல் விழாமல் கீழே விழுந்ததாகச் சொன்னார்கள். அதனால் அவையெல்லாம் ரிப்பேர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மொத்தமாக தமிழ்நாட்டில் இன்றைக்கு பல மாவட்டங்களில் கோர்ட்டுகள் வேண்டுமென்று கோரிக்கை வருகிறது. நியாயமான கோரிக்கைகள் என்று சொல்லலாம். அந்தக் கோரிக்கைகளை அரசாங்கமே முடிவு செய்துவிட முடியாது. அரசாங்கம் உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி அவர்கள் பரிசீலனை செய்து அவர்களுடைய பரிந்துரையின் பேரில் தான் முடிவு எடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் இதுபோன்ற கோர்ட் கட்டிடங்கள் நீதிபதிகள் குடியிருப்பு மற்றும் வசதிகளையெல்லாம் செய்ய வேண்டும். என்பது தான் தமிழ்நாட்டில் ஏராளமான கோர்ட்டுகள்இப்போது பழுதடைந்திருப்பதை நாம் பார்க்கிறோம் எனவேஅவைகளை கவனிக்க வேண்டுமென்று அரசாங்கம் விரும்புகிறதுஎனவே தான் ஒரு மாஸ்டர் ப்ளான்—5 ஆண்டுகளுக்கு என்று ஒரு மாஸ்டர் ப்ளான் தயாரிக்கலாமா என்ற ஒரு கருத்து இப்போது பரிசீலிக்கப்பட்டு இருக்கிறது. ஏன் என்று சொன்னால் அண்மையில் வந்திருந்த ஃபைனான்ஸ் கமிஷனிடத்தில் நம்முடைய அரசின் சார்பாக முதலமைச்சர் நிதி அதிகமாகத் தேவை என்று வற்புறுத்தினார்கள். நீதித்துறை பற்றி சொல்லும்போது அப்கிரடேஷன் ஆப் ஜுடிஷியரி நீதித்துறையினுடைய நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக நிதி உதவி தேவை என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அந்த நிதிக் குழுவிலே கூட குஜராத்தைச் சேர்ந்த நீதிபதி ஜஸ்டிஸ் குரேஷி என்பவர் வந்திருந்தார். அவர் இதை அனுதாபத்தோடு கவனிப்பதாகச் சொல்லி இருக்கிறார். நிதிக் கமிஷனுடைய உதவியும் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். எனவே ஒரு மாஸ்டர் ப்ளான் தயாரிக்கப்பட்டு தேவையான நடவடிக்கை எல்லாம் எடுத்துக் கொள்ளலாம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர்கள் வழக்குரைஞர்களைப் பற்றிச் சொன்னார்கள். திரு. ஏ. எல். சுப்பிரமணியன் அவர்கள் நாங்கள் இறந்தால் ஒரு உதவியும் கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். அவர்கள் நீண்ட நாள் வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன். லாயர்ஸ் வெல்பேர் ஸ்கீம் என்ற திட்டம் இருக்கிறது ஏற்கெனவே 1987ஆம் ஆண்டில் சட்டம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தில் சில குறைபாடு இருப்பதாக பார் கௌன்சில் மூலமாகத் தெரிவித்திருக்கிறார்கள். நேற்று முன்தினம் பார் கௌன்சில் தலைவரும் உறுப்பினர்களும் நம்முடைய அதிகாரிகளையும், என்னையும் சந்தித்துப் பேசினார்கள். அதிலே உள்ள குறைகளை நிவர்த்தித்து—அந்த வெல்பேர் பண்ட் ஆக்ட் என்று நான் நினைக்கிறேன்—அந்தச் சட்டத்தை அமலாக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2-10)

வழக்கறிஞர்களுக்கு மட்டும் போதுமா என்றால் போதாது. வழக்கறிஞர்களுக்கு உதவியாக இருப்பவர்கள் வழக்கறிஞர்களுடைய குமாஸ்தாக்கள் தான். சில வேளைகளில் வக்கீல் இல்லாவிட்டாலும் கூட சமாளித்துவிடலாம். குமாஸ்தாக்கள் இல்லாவிட்டால் சமாளிக்க முடியாது. எனவே தான் வக்கீல் குமாஸ்தாக்களுக்கும் ஒரு 'வெல்பேர் ஸ்கீம்' கொண்டு வர வேண்டும் என்ற கருத்து அரசாங்கத்தில் இருக்கிறது. அதையும் இந்த அரசாங்கம் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினா திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் பெண் நீதிபதிகள் நியமிக்கப்படவேண்டும் என்றும், பப்ளிக் ப்ராசிக்யூட்டர் போன்ற பதவிகளில் நியமிக்கப்பட வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இது முழுக்க, முழுக்க நம்முடைய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கின்ற கொள்கை. ஒரு கஷ்டம் என்னவென்று சொன்னால், போதுமான எண்ணிக்கையில் பெண்கள் வருவதில்லை. இப்போதுகூட, சென்னையில் ஒரு பேமிலி கோர்ட் நடக்கிறது. அந்த பேமிலி கோர்ட்டில் கிட்டத்தட்ட 5 ஆயிரம் வழக்குகள் இருக்கின்றன. 5,000 வழக்குகளை அந்த நீதிபதிகள் எப்போதுதான் முடிப்பார்கள் என்று தெரியவில்லை. எனவேதான், இன்னொரு பேமிலி கோர்ட் அமைக்கப்பட வேண்டும் என்ற ஒரு கருத்து தலைமை நீதிபதியால் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நிதி நெருக்கடி இருந்தாலும் அதை மீண்டும் நாங்கள் வற்புறுத்துவதாக இருக்கிறோம். அந்த நீதிமன்றத்திற்கு ஒரு பெண் நீதிபதி நியமிக்கப்படவேண்டும் என்று அரசாங்கமும் கருதுகிறது. தலைமை நீதிபதியும் கருதுகிறார். எனவே, அதற்குப் பொருத்தமான ஒரு பெண் நீதிபதி கிடைப்பாரேயானால் நியமிக்கப்படுவார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, உயர்நீதிமன்றத்தில் இருக்கின்ற காலி இடங்களைப் பற்றிச் சொன்னார்கள். இப்போது நம்முடைய சர்க்காரிலே 'சாங்க்ஷன்டு ஸ்ட்ரெங்க்த்' 25. இப்போது இருக்கின்ற காலி ஸ்தானங்கள் நான்கு என்று கணக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று சொல்கிறார்கள். எப்படியென்று சொன்னால், சீஃப் ஜஸ்டிஸ் 'ஆக்டிங்'-காகவே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை மாற்றினால் அப்போதுதான் அது காலியாகும் என்று சொல்லி. 3 இடங்களைத்தான் நிரப்பலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த மூன்று இடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளையும் அரசாங்கத்தின் சார்பாக எடுத்துக் கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வழக்கு மன்றங்களில் வழக்குகள் ஏராளமாகத் தேங்கி இருப்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. இங்கே நண்பர்கள் கூடச் சொன்னார்கள். டிஸ்ட்ரிக்ட் முன்சீப்கள் நியமிக்கப்படவில்லை. ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட்டுகள் நியமிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். நான் நம்முடைய ரிஜிஸ்திராரைக் கேட்டபோது 40, 46 இடங்களிலேதான் 'வேக்கன்ஸி' இருப்பதாகச் சொல்கிறார்கள். அதுவும்கூட விரைவாக நிரப்பப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன். நம்முடையஉயர்நீதிமன்றத்தைப்போதாது அதை பொறுத்தவரையில் 25 நீதிபதிகளுடைய எண்ணிக்கை 32-ஆக உயர்த்த வேண்டும் என்ற ஒரு கருத்து இருந்து வருகிறது. அதை அந்தக் கருத்தை வற்புறுத்தி ஏற்கெனவே மத்திய சர்க்காரிடத்திலே தெரிவித்து இருக்கிறோம். உங்களுடைய உணர்வின் அடிப்படையிலே மீண்டும் மத்திய சர்க்காரை வற்புறுத்தி, அந்த

25-என்ற எண்ணிக்கையை 32-ஆக உயர்த்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிறகு, 'ஹானரரி மாஜிஸ்திரேட்டைப்' பற்றிச் சொன்னார்கள். அதையெல்லாம் தனியாகச் சொல்லிக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். 73-ஆம் ஆண்டைய குற்றவியல் நடைமுறைக் கோவையில் 'ஹானரரி மாஜிஸ்திரேட்' நியமிக்க வகை செய்யப்படவில்லை. மாறாக தனி மாஜிஸ்திரேட்டுகளை நியமிக்க வகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி சட்டத்தில் பட்டம் பெற்ற அரசு ஊழியர்களை, ஊழியர்களாக பணியாற்றுபவர்களை மாத்திரம்தான் தனி மாஜிஸ்திரேட்டாக நியமிக்கப்படமுடியும். அதற்கான விதிகளை மாநில அரசு ஏற்படுத்தியுள்ளது. குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவையும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளையும் எதிர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு அனுமதிக்கப்பட்டது. அந்த வழக்கு அவர்களுக்கு சாதகமாக முடிந்தது. அதனை எதிர்த்து மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்திருக்கிறது. பெண்டிங்காக இருப்பதால் நாம் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே 'எக்கனாமிக் அஃபன்ஸஸ்' பற்றிச் சொன்னார்கள். இப்போது எக்கனாமிக் அஃபென்ஸ் என்று சொன்னால் சாதாரணமாக ஏழை எளியவர்கள்தான் அதிகமாக அந்த வழக்குகளிலே மாட்டிக் கொண்டு வருவதை நாம் பார்க்கிறோம். நம்முடைய நண்பர்கள் யாராவது சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். இப்போது அந்த 'டாக்ஸ் எவேஷன்' என்பது ஒரு பெரிய குற்றமாக நடைபெற்று வருகிறது. 'டாக்ஸ் எவேஷன்' என்ற ஒரு கருத்தரங்கில் ஜஸ்டிஸ் திரு. வேணுகோபால் அவர்கள் சொல்லிய ஒரு கருத்தை மாத்திரம் சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்ள நான் விரும்புகிறேன்.

Tax evasion leads to generation of black money and black money in turn leads to inflation. During the discussion on the Finance Bill, 1984 in Parliament, it was stated that generation of black money in this country is at the rate of Rs. 20,000 crores per year. The latest Report on aspects of black economy in India prepared by the National Institute of Public Finance and Policy has given the most disturbing finding that nearly 75 per cent of the taxable income is evaded in this country.





இதைவிடக் கொடுமையான குற்றம் இருப்பதாக நான் கருதவில்லை. அதைவிட இன்னொரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். The tax-evaded unaccounted money finds its destination in Banks in Switzerland just depriving the country of capital for income generating activities. According to the recent study of theInternational Monetary Fund, the Indian deposits (underline thewords 'Indian Deposits') in Swiss Banks are of the order of 1,332 crores of rupees. வெளிநாட்டு வங்கிகளில் முடக்கி வைக்கப்பட்டிருக்கும் தொகை ரூபாய் 1,332 கோடி என்று கணக்கு போட்டிருக்கிறார்கள். சட்டத்தின் மூலம் இவைகளில் எல்லாம் தப்பித்துக் கொண்டு நிறைய பேர் இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் தேதி இந்திய நாடு முழுவதும் ஒரு பந்த் நடைபெற்றது. அது முழுக்க முழுக்க ஒரு அரசியல் நடவடிக்கை. அதிலே ஈடுபட்ட தொழிலாளர்கள், விவசாய மக்கள், பல்வேறு விதமான தொழிற்சங்க ஸ்தாபனங்கள், வேறு எந்தவிதமான இதர குற்றங்களோ அல்லது வேறு நடவடிக்கைகளோ அன்றைக்கு இல்லை அவர்கள் பெயரில். அவர்கள் பெயரில் வழக்கு தொடர்ந்து இன்று வரையிலும் அது இழுத்துக்கொண்டு இருக்கிறது. அந்த வழக்குகள் நடக்கவும் இல்லை, அவர்களை விடுதலை செய்வதற்கு அரசு முன்வர வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை அரசு நிறைவேற்றுமா என்று அறிய விரும்புகிறேன் இன்னொரு முக்கியமான விஷயம் சிறைச்சாலைகளில் கொடுக்கக்கூடிய உணவுப் பொருட்கள் இருக்கிறதே அவைகளை காண்டிராக்டர்கள் சப்ளை என்பதை நிறுத்தி அதை சிவில் சப்ளை டிபார்ட்மெண்டு மூலமாக அதை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தால் திருட்டும் குறையும், ஓரளவுக்கு நல்ல பொருளும் கிடைக்கும். அதற்கும் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி போன்ற பொருட்கள் இப்போதும் சிவில் சப்ளைஸ் இலாக்கா மூலம் தான் வாங்கப்படுகிறது. அங்கே கிடைக்காத பொருட்களைத் தான் டெண்டர்விட்டு வாங்குகிறார்கள். அந்த டெண்டர் முறையில் முறைகேடு இருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் வழக்குகளைப் பற்றிச் சொன்னார்கள். அரசியல் சம்பந்தமான வழக்குகள் அதுபோன்ற வழக்குகள் எல்லாம் வாபஸ் பெற வேண்டும் என்று அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

[திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா] [1989 ஏப்ரல் 12

புள்ளி விவரத்தை நாங்கள் சேகரித்துக் கொண்டிருக்கிறோம்.
அந்த புள்ளி விவரங்களை எடுத்து வைத்துக் கொண்டு உடனடி
யாக நடவடிக்கை எடுக்கப்படும். அப்படி ஏதாவது தவறு இருக்கு
மானால் அந்த விவரங்களைப் தருவார்களானால் நிச்சயமாக
அந்த பந்த் வழக்குகள் மட்டும் அல்ல, எங்கள் மீது கூட பல
வழக்குகளை போட்டு, இருக்கிறார்கள் அரசியல் வழக்குகள்.
அந்த வழக்குகளில் குறிப்பிட்ட ஸ்பெசிபிக் கிரிமினல் அபன்ஸ்
என்று இருந்தால் மட்டும் அதை வாபஸ் பெற்றுக் கொள்ள முடி
யாமல் மற்ற வழக்குகள் அத்தனையும் கட்சி பேதம் இல்லாமல்
வாபஸ் ஆகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு தகவலைத் தெரிவித்துக் கொள்கிறேன். 2, 3
ஆண்டுகளுக்கு முன்னால் இந்து முன்னணி மீது சில வழக்கு
களைப் போட்டிருக்கிறார்கள். அந்த வழக்குகளைக் கூட வாபஸ்
வாங்கலாம் என்று தான் அரசு முடிவு எடுத்து இருக்கிறது.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நான் பேசும்போதும், ஆளுங்கட்சி உறுப்பினர்கள்
பேசும்போதும் ஒன்றைப் பற்றி சொன்னோம். எங்களுடைய
நீதிமன்றங்களில் உட்காருவதற்கு நாற்காலி கிடையாது. பல
வற்றை தாங்கள் பேசிக்கொண்டு இருக்கிறீர்கள். அதைப்பற்றி
ஒரு வார்த்தை கூட வரவில்லை. அந்த கோர்ட்டுகளில் போனால்
நான் மட்டும் அல்ல வக்கீல்கள் எல்லாம் கூட அங்கே உட்காரு
வதற்கு நாற்காலி இல்லாமல் மிகவும் கஷ்டப்படும் நிலைமை
இருக்கிறது. அதற்கு இந்த பட்ஜெட்டில் பண்டு ஒதுக்கவில்லை.
அது வருத்தமான விஷயம். தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்
சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள், தயவுசெய்து மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் பணத்தை ஒதுக்கி கோர்ட்டுகளில் உட்
காருவதற்கு நாற்காலி வசதியைச் செய்து கொடுக்கும்படி
கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.
சுந்தரதாஸ் அவர்கள் நாற்காலி பற்றி ரொம்ப அக்கறையாக
இருக்கிறார்கள். பாராட்ட வேண்டியதுதான். நாற்காலிதான்
முக்கியம். உட்கார இடம் இல்லை என்று சொன்னால் என்ன
செய்வது. அதனால் நாற்காலி கேட்கிறார். ஆனால் உங்களைப்
போன்றவர்கள் போகும் போது நாற்காலியில் நிச்சயமாக யார்
இருந்தாலும் எழுந்து இடம் கொடுத்து விடுவார்கள். அதை நான்
அனுபவத்தில் பார்த்தேன். அதில் ஒன்றும் தவறு இல்லை.
ஆனால் நான் முதலில் சொன்னது போல் மாஸ்டர் பிளான்



1989 ஏப்ரல் 12] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

தயாரிக்கும்போது அது எல்லாம் கவனத்தில் கொள்ளப்படும்
என்று தங்களுக்குக் கூறிக் கொள்கிறேன். குறிப்பிட்ட சில இடங்
களில் தேவையான வேலைகளை அவ்வப்போது கவனத்தில் எடுத்
துக்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். இதில் ஒரு பிரச்சினை
என்னவென்று சொன்னால், நம்முடைய பொதுப்பணித் துறை
அமைச்சர் விரும்பிக் கொடுத்தால் கூட அதை கோர்ட் ஏற்றுக்
கொள்ள முடியாது. ஹைக்கோர்ட் உத்திரவு போட்டு
வந்தால் தான் ஏற்றுக்கொள்ள முடியுமே தவிர மற்றபடி முடி
யாது. நான் கூட முதலில் ஒரு தடவை என் ஊருக்குச் சென்ற
போது உடைந்த பேன், நேரம் காட்டாத கடிகாரம், நீங்கள்
சொன்னது போல் உட்கார முடியாத நாற்காலி எல்லாம் இருந்
தன. அவைகளைக் கொடுக்கலாம் என்று நான் சொன்னபோது,
முடியாது, முடியாது என்று சொல்லி, ஹைக்கோர்ட் மூலமாகத்
தான் வரவேண்டும் என்று சொன்னார்கள். எனவே
ஹைக்கோர்ட்தான் சுப்ரீமாக இருக்கிறது நம்முடைய
திரு. பாண்டியன் அவர்கள் பாஷையில்.

(பிற்பகல் 2-20)

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு அவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம்
குடும்பக் கோர்ட் சம்பந்தமாக சில ஆலோசனைகள் வைக்கப்
பட்டன. குறிப்பாக, சமரச முயற்சி தோல்வி அடைந்த பிறகு,
நீதிபதியிடம் அந்த வழக்கு போகும்போது ஒரு பெண்ணால் தன்
னுடைய நிலையை எடுத்துச் சொல்ல முடியவில்லை என்பதால் ஒரு
வழக்கறிஞரையோ அல்லது தனக்கு தேவையான மாதர்
இயக்கப் பிரதிநிதியையோ வைத்துக்கொள்ள வேண்டுமென்று
நான் கோரியிருந்தேன். அது செய்யப்படவேண்டுமென்று மறு
படியும் கேட்டுக் கொள்வதோடு அது பற்றியும் மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

திருச்சி, மதுரை, கோவை போன்ற நகரங்களில் குடும்பக்
கோர்ட் அமைப்பது அவசியம் என்று சொல்லியிருந்தேன். இத
னால் வழக்குகள் குவியாமல் உடனடியாகத் தீர்வதற்கு வசதியாக
இருக்கும். அது பற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
கூறுவதை நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பேமிலி கோர்ட்டுக்கு கவுன்
சலரிடம் சமரசத்திற்குப் போகலாம் என்றுதான் இப்போது
இருக்கிறது. பேமிலி கோர்ட்டுக்குக் கூட வழக்குகள் போகலாம்
என்று அனுமதி இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். பேமிலி
கோர்ட் வைப்பதற்கு 10 இலட்சம் ஜனத்தொகை இருக்க வேண்டு
மென்று சொல்கிறார்கள். அதனால்தான் இது ஒரு பிரச்சினை.
இன்னொரு பிரச்சினையைப் பற்றிச் சொல்வதற்கு நான் மறந்து

விட்டேன். அதை இப்போது சொல்கிறேன். மோட்டார் வெகிகிள்ஸ் ஆக்சிடெண்ட் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. லெ. சுப்பிரமணியன் அவர்கள் சொன்னார்கள். அதாவது, ஆக்ஸிடெண்டிற்கென்று கொடுக்கப்படுகின்ற காம்பன்ஷேசன் முழுவதையும் பாங்கிலே டெபாசிட் செய்ய வேண்டுமென்று உத்தரவு இருப்பதாகச் சொன்னார்கள். அதுவும் 3 ஆண்டுகளுக்கு அந்தத் தொகை டெபாசிட்டிலே இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதுபற்றி நான் விசாரித்து அறிந்த வரையிலே, ஹைக்கோர்ட் மூலமாக சர்க்குலர் அனுப்பியிருக்கிறார்கள். அதாவது மைனர்க்கு என்று ஒதுக்கப்படுகின்ற தொகையை மாத்திரம்தான் பாங்கிலே டெபாசிட் செய்யலாம் என்றும் மற்றத் தொகையை கொடுக்கலாம் என்றும், ஹைக்கோர்ட்டிலிருந்து சர்க்குலர் அனுப்பியிருப்பதாகச் சொன்னார்கள். அரசாங்க உத்தரவும் அதன்படி திருத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக்கொண்டு அதுபற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பொய் வழக்குகளெல்லாம் திரும்பப் பெறப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே சொன்ன காரணத்தினால், குறிப்பிட்டு அவரிடத்திலே சொல்ல விரும்புகிறேன். கோவையிலேயும் தமிழ்நாட்டினுடைய பல இடங்களிலேயும், 19 வயது, 20 வயது, 22 வயது இளைஞர்களையெல்லாம் கைது செய்து கடந்த ஆட்சிக் காலத்தில், வெடி குண்டு வைத்தார்கள் என்று பொய் வழக்கு போட்டு இன்னும் அந்த வழக்குகளெல்லாம் நீதிமன்றங்களிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நம்முடைய சட்டமன்றத்திலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் மேலெல்லாம் பொய் வழக்குகளைப் போட்டு அவர்களை இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையான குற்றவாளிகளை கைது செய்யட்டும்; உண்மையான குற்றவாளிகளுக்கு தண்டனை கொடுக்கட்டும், யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை. இளைஞர்கள் அதாவது கழகத்திலே இருக்கிற காரணத்தினாலும் தி.மு.க. இளைஞர் அணியிலே இருக்கிற காரணத்தினாலும் வேண்டுமென்றே திட்டமிட்டு போடப்பட்ட அநியாயமான பொய் வழக்குகளையெல்லாம் இந்த அரசு திரும்பப் பெறுமா என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகன் அவர்கள் சொல்லிய கருத்து கவனத்திலே கொண்டு ஆராயப்படும்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முந்திய அரசு ஆட்சிக் காலத்தில் விவசாயிகளுடைய உடைமைகளை ஜப்தி செய்கின்றபோது அனைத்துக்



கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து தஞ்சை மாவட்டத்தில் ''ஜப்தி மறியல் போராட்டம்'' நடத்தினோம். அப்பொழுது, காங்கிரஸ், தி.மு.க. கம்யூனிஸ்ட் போன்ற அனைத்துக் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து போராட்டம் நடத்தியபோது போடப்பட்ட பல, வழக்குகள் முடிந்து விட்டன. ஆனால் இன்னும் சில வழக்குகள் பேராவூரணி, திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை போன்ற பகுதிகளிலே உள்ளவர்கள்மீது போடப்பட்ட அந்த வழக்குகள் முடிவுறாமல் பாக்கி இருக்கின்றன. அதையெல்லாம் தயவுசெய்து இந்த அரசு வாபஸ் பெறுமா? அதே நேரத்தில் பேராவூரணியில் ஒரு சப்-மேஜிஸ்டிரேட் கோர்ட் அமைப்பதற்கு இங்கே அரசுக்கு கோரிக்கை வந்திருக்கிறது. அதற்கு அரசு விரைவில் ஆவன செய்யுமா என்று அன்புடன் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களோடு சேர்ந்து நடத்திய, காங்கிரஸ் கட்சிக்காரர்கள் நடத்திய அந்தப் போராட்டத்தில் போடப்பட்ட வழக்குகள் நிச்சயமாக வாபஸ் பெறப்படும். இப்போது நீங்கள் அவர்களோடு சேர்ந்திருக்கிற காரணத்தினால் அந்த வழக்குகள் நிச்சயமாக நடத்தப்பட மாட்டாது. (சிரிப்பு).

திரு. க. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாவட்ட நீதிபதி, சார் நீதிபதிகளெல்லாம் உயர்நீதி மன்றத்தினால் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால் உரிமையியல் நீதிபதி மட்டும் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் நியமிக்கப்படுகிறார். அந்த மாதிரி உயர்நீதி மன்றத்திற்கும் நியமிக்கும் அதிகாரத்தை அரசு அளிக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை மனதில் கொள்வோம்.

திரு. ஏ. சி. தயாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைத் துறையிலிருந்து நன்னடத்தைப் பிரிவைத் தனியாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. சிறைகள் சீர்திருத்தக் கழகமும், இந்திய உச்ச நீதிமன்றமும் இது பற்றி கருத்து தெரிவித்து இருக்கிறது. ஆகவே, அரசுக்கு சிறைத் துறையிலிருந்து நன்னடத்தைப் பிரிவை பிரிக்க ஏதாவது ஆலோசனை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு ஆலோசனை இப்போது இல்லை.

[திரு. கோ. பூவராகன்] [1989 ஏப்ரல் 12

**திரு. கோ. பூவராகன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, முந்திய அரசாங்கம் அரசியல் தலைவர்கள் எப்படியாவது தண்டனை பெற்றுத் தீர வேண்டும் என்ற நோக்கத்தோடு ஏராளமாக, பல இலட்ச ரூபாய் செலவிட்டு அதற்கு முயற்சியும் எடுத்து இருக்கிறார்கள்.

அதைப் போன்று 6, 7 ஆண்டுக் காலமாக ஷுகர் கேன் செஸ் 20 கோடி ரூபாய்க்கு மேல் அரசாங்கத்திற்கு வர வேண்டும். அதைப் பெறுவதற்காக என்ன முயற்சி செய்தார்கள் ? ஏதாவது சிறப்பு ஏற்பாடு செய்து, தனியாக வழக்கறிஞர்கள் நியமிக்க ஏற்பாடு செய்தார்களா என்று தெரியவில்லை. அதைப் போன்று 'ஹவுசிங்', வீட்டு வசதி வாரியத்திலே ஒரு நிலை கட்டி, இரண்டு நிலை கட்டி, அப்படியே விடப்பட்டு 7, 8 ஆண்டுகள் ஆகிவிட்டன. அதிலே காண்ட்ராக்டர்கள் கோர்ட்டுக்குப் போய் தடை பெற்றிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதைப் போன்று பாம்பன் பிரிட்ஜ், இன்னும் பல வேலைகள் இருக்கின்றன. அவை சம்பந்தமாக முந்தைய அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? அதை எல்லாம் ஆராய்ந்து பார்த்து, இப்போது இருக்கிற அரசாங்கம் அந்தத் தடையை நீக்குவதற்கு, நம்முடைய அரசாங்கத்திற்கு அந்த வருமானம் வருவதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் சொன்னவை நல்ல கருத்துக்கள். நல்ல கருத்துக்களை அந்த அரசு கவனிக்கவில்லை என்று தெரிகிறது. இபபோது நம்முடைய அரசு மூலமாக அரசாங்க வழக்கறிஞர்களுக்குத் தெவித்திருக்கிறோம். இந்த ஸ்டே விவகாரத்தை சீக்கிரம் முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சுப்ரீம் கோர்ட்டுக்கு நம்முடைய அட்வகேட் ஜெனரல் அவர்களே போய்ப் பார்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதைப் போன்று உயர் நீதிமன்றத்திலும் வழக்குகளை விரைவில் பைசல் செய்ய வேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால நான் தஞ்சாவூருக்குச் சென்ற போது அங்கே சொன்னார்கள். தஞ்சாவூர் முனிசிபாலிட்டி மீது போடுகின்ற வழக்குகள் எதுவும் தீர்க்கப்படாமலே இருக்கின்றன. டாக்சேஷன், லீஸ் போன்ற வழக்குகளாக இருந்தாலும் கூட தீர்க்கப்படாமல், அந்த மாவட்ட நீதிபதி 111 வழக்குகளில் சிக்க வைத்திருக்கிறார். தஞ்சாவூர் நகராட்சி மீது மட்டும் 111 வழக்குகள். அவைகளை வெக்கேட் செய்யப் போனால், பெட்டிஷன் போட்டால் அவர் உத்தரவு போட்டால் கூட மேலே உயர்நீதி மன்றத்தின் மூலம் தீர்த்து வைக்கலாம். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறேன்.



2989 ஏப்ரல் 12]

**திரு. பி. எச். பாண்டியன் :** தலைவரவர்களே, நான் பேசும் போது மாண்புமிகு அமைச்சரிடம் ஒரு தகவலை எதிர் பார்த்தேன். சிறைச்சாலையில் அண்டர் ட்ரயல்ஸ் ஆக இரண்டாண்டு காலத்திற்குச் குறைவாக தண்டனை பெற்று உள்ளே இருப்பவர்களுக்கும் ஜீவாதார உரிமை உண்டு. 1978 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு இருக்கிறது. எந்தத் தேர்தலிலும் அவர்களுக்கு வாக்களிக்க வாய்ப்பு கிடையாது. சில நேரங்களில் தேர்தலுக்கு முந்தைய நாள் அல்லது இரண்டு நாட்களுக்கு முன்பாக அரசாங்கம் நினைத்தால் 5,000 பேர்களை உளளே போட்டு விடலாம். அப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் தேர்தலிலே வாக்களிக்க தேர்தல் கமிஷனோடு தொடர்பு கொண்டு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்பது ஒன்று. இன்னொன்று, 14 ஆண்டுகளுக்கு மேல் ஆயுள் தண்டனை பெற்றவர்கள் சிறையில் இருந்தால் அவர்கள் விடுதலை செய்யப் படுவார்கள் என்று சொன்னீர்கள். நீங்கள் National Institute of Public Finance புத்தகத்தில் படிக்கும் போது, பல கோடி ரூபாய் கறுப்புப் பணத்தைச் சேர்த்து வைத்திருப்பவர்கள் எல்லாம் வெளியிலே உலாவும்போது இந்த 14 ஆண்டுகள் வரை இவர்கள் எல்லாம் கட்டாயமாக தண்டனை அனுபவிக்க வேண்டுமா ? ஒரு தனி மனிதனைச் சாடியது கொலையில் முடிந்ததாக அவருக்கு 14 ஆண்டு தண்டனை. சமுதாயத்தைச் சாடியவர்கள் எல்லாம் வெளியே இருக்கும்போது தனி மனிதனைச் சாடிய ஒருவரை கட்டாயம் 14 ஆண்டுகள் உள்ளே வைக்கப் போகிறீர்களா ? இல்லை என்றால் 161-வது அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி 10 ஆண்டுகள் தண்டனை முடித்தவர்களை எல்லாம் வெளியிலே விடப்போகிறீர்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி நல்ல கேள்விதான். பொருளாதாரக் குற்றவாளிகளை கடுமையாகத் தண்டிக்க வேண்டுமென்ற கருத்து இருப்பதாக நான் கருதவில்லை. அதற்குரிய சட்டத்தை இயற்றுவது மத்திய அரசினுடைய கடமையாக இருக்கிறது. இருந்தாலும் கொடுமையான குற்றங்களைச் செய்கிறவர்களுக்கு கடுமையான தண்டனை அளிக்க சட்டம் இயற்ற வேண்டுமென்றால் அதற்கு இந்த அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாண்டுகளுக்குக் குறைவாகத் தண்டனைப் பெற்றவர்களுக்கு ஓட்டுரிமை அளிக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அந்தக் கருத்தை ஆராய்ந்து அவர்கள் சொன்ன மாதிரி எலக்ஷன் கமிஷனைக் கலந்து உரிய நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம்.

திருமதி பாப்பா உமாநாத், திரு. பொன். விஜயராகவன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 22,38,34,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள்.

திருமதி பாப்பா உமாநாத், திருவாளர்கள் ரெ. பிச்சைமுத்து, பொன். விஜயராகவன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,62,60,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(பிற்பகல் 2-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஓர் அறிவிப்பு. நம்முடைய மதிப்புமிகு உறுப்பினர் திரு. பி.எச். பாண்டியன் அவர்கள் பேசிய பேச்சிலிருந்து ** என்ற தொடர் மட்டுமே அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



## 8. அரசினர் தீர்மானம்

### விதி 32 ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தை மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை (13—4—1989 ஆம் தேதியன்று) தளர்த்த வேண்டும்".

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 13—4—1989 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-31 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

எதுவுமில்லை

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

81. கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989—90 (தமிழ், ஆங்கிலம்).

82. கோரிக்கை எண். 14 — தமிழ் நாடு சிறைகளின் நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

*[1989 ஏப்ரல் 12*

## இணைப்புகள்

*(49 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண். 13.

## நீதி நிருவாகம் 1989-90.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க, அனைத்துக் குடிமக்களுக்கும் நீதி வழங்குவது இவ்வரசின் கொள்கையாகும். நீதியை நிருவகிப்பது நீதி மன்றங்களின் பொறுப்பாகும். அரசின் செயற் பிரிவு மற்றும் நிருவாகப் பிரிவினின்றும் இது தனித்து செயல்படுகின்றது. வழக்கு நிலுவைகளை அகற்றப் புதிதாகவும் கூடுதலாகவும் நீதி மன்றங்கள் அமைப்பது பற்றி உயர் நீதிமன்றம் பரிந்துரைப் பதின் பேரில் காலந்தாழ்த்தாது அரசு ஒப்புதல் வழங்குவதோடு நீதி மன்றங்களுக்குத் தேவையான இட வசதி, பணியாளர், மேசை நாற்காலி போன்றவை உட்பட அனைத்து வசதிகளுக்கும் அரசு வகை செய்வதன் வாயிலாக தனது பணிகளை ஆற்றுகிறது.

2. நீதி நிருவாகம் பற்றிய சிறப்புக் கூறுகள் வருமாறு :— 13 ஆம் எண் மானியக் கோரிக்கையும் 'நீதி நிருவாகம்' தொடர்பான மானியங்களும் இதன் கீழ் குறிப்பிடப்பட்ட நீதி மன்றங்கள், அதிகாரிகள், பணியாளர் அமைப்பு ஆகியவை குறித்த செலவை குறிப்பதாகும்.

(1) உயர் நீதி மன்றம், சென்னை.

(2) நொடித்தவர் சொத்தாட்சியர், உயர்நீதிமன்றம், சென்னை.

(3) சிவில்-செஷன்ஸ் நீதிமன்றங்கள் (சென்னை மாநகர் சிவில் நீதி மன்றம் உட்பட).

(4) சிறு வழக்கு நீதிமன்றங்கள், சென்னை ;

(5) பெருநகர் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் :

(6) குற்றவியல் சார்நிலை நீதிமன்றங்கள் (நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள், நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள்).

(7) அரசு பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை.

(8) அரசு சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்.

(9) சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னையிலுள்ள தொழில் நடுவர் மன்றம்.



*1989 ஏப்ரல் 12]*

விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் மன்றம், அரசுப் போக்குவரத்து மேல் முறையீட்டு நடுவர் மன்றம், கூட்டுறவு சங்கங்களின் வழக்குகளுக்கான நடுவர் மன்றங்கள், 1976 ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) சட்டத்தின்படி செய்துகொள்ளப்படும் மேல் முறையீடுகளைக் கவனிக்கும் மேல் முறையீட்டு நடுவர் மன்றம் போன்ற நடுவர் மன்றங்கள் அந்தந்தத் துறையின் நிதிக் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. அத்தகைய நடுவர் மன்றங்களின் செலவு அந்தந்தத் துறைக் கணக்குகளில் பற்று எழுதப்படுகிறது.

(10) குடும்ப விவகாரங்கள் குறித்த நீதிமன்றம், சென்னை மாநகர்.

3. நீதிமன்றங்கள், அலுவலர்களிடையே பின் வருவனவற்றைப் பற்றிய செலவு, ''சாட்டிய செலவினம்'' என்றும் ''அனுமதிக்கப்பட்ட செலவினம்'' என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது :—

### சாட்டியவை.

1. உயர்நீதிமன்றம் (நீதிபதிகள், பதிவாளர் அசல் வழக்குகள், மேல் முறையீடுகள் ஆகியவற்றை கவனிக்கும் பணியாளர் அமைப்பு, மொழிபெயர்ப்பு மற்றும் அச்சுத் துறை, சட்ட அறிவிப்பாளர்கள். மற்றும் பணியாளரமைப்பு, உதவிப் பதிவாளர், புதுச்சேரி, புதுச்சேரிக்கு அதிகார வரம்பை நீட்டித்தல் தொடர்பான பணியாளரமைப்பு, சென்னை ஷெரீப், மற்றும் அவரது பணியாளர்கள்.

### அனுமதிக்கப்பட்டவை.

1. சென்னை மாநகர் சிவில் நீதிமன்றம் உட்பட சிவில் செஷன்ஸ்நீதிமன்றங்கள்.
2. சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை.
3. மாநகர் மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்கள், சென்னை.
4. குற்றவியல் சார்நிலை நீதி மன்றங்கள்.
5. அரசுப் பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை.
6. அரசு சட்ட ஆலோசகர்கள் வழக்குரைஞர்கள்.
7. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நீதி மன்றங்கள், சென்னையிலுள்ள தொழில் நடுவர் மன்றம்.

8. பதிப்பு ஆசிரியர், பணியாளர்கள், தமிழ் சட்ட இதழ் வெளியீடு, சென்னை.

2. நொடித்தவர் சொத்தாட்சியரும் அவரது பணியாளமைப்பும்.

4. சென்னை உயர்நீதிமன்றம்.—மாநிலத்தில் நீதி வழங்கும் தலைமை நீதிமன்றம் உயர்நீதிமன்றமாகும். உயர் நீதி மன்றத் திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை தலைமை நீதிபதியையும் சேர்த்து 25 ஆகும்.

உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்ப தற்காகவும், உயர்நீதிமன்றத்தில் முடிவுறாமலுள்ள வழக்குகளைத் துரிதமாக்க வகை செய்யவும் தற்போதைய உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 25-லிருந்து 32 ஆக உயர்த்துமாறு கோரி அரசுக்கு உயர்நீதிமன்றம் செயற் குறிப்புகளை அனுப்பியுள்ளது. இச்செயற் குறிப்பு ஆய்வு செய்யப்பட்டு, இது தொடர்பாக இந்திய அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

5. உரிமை வழக்குகளில் அசல் தரப்பு வழக்குகளையும் 'ரிட்' வழக்குகளையும் உயர்நீதிமன்றம் விசாரணை செய்யும் அதி காரம் பெற்றதாகும். உரிமை வழக்குகளிலும், குற்றவியல் வழக்குகளிலும் மேல் முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரம் இதற்கு உண்டு. சென்னை மாநகருக்குள் சொத்தின் மதிப்பு ரூ. 1,00,000-க்கு மேற்பட்டுள்ள அசல் தரப்பு வழக்குகளை சென்னை உயர் நீதிமன்றம் விசாரணை செய்கிறது. தலைமை நீதிபதி ஏனைய நீதிபதிகளுக்குப் பணிகளைப் பிரித்து வழங்கு கிறார். தலைமை நீதிபதி உட்பட 21 நீதிபதிகள் தற்போது உள்ளனர். மாதமொன்றுக்கு தலைமை நீதிபதி ரூ. 9,000-மும் ஏனைய நீதிபதிகள் ஒவ்வொருவரும் ரூ. 8,000-மும் ஊதியமாகப் பெறுகின்றனர். நீதிபதிகளின் ஊதியம் இந்திய அரசியலமைப் புச் சட்டத்தின்படி வரையறுக்கப்படுகிறது. அவர்களுடைய பணி நிலைமைகள் உயர்நீதிமன்ற நீதிபதிகள் (பணி நிலை மைகள்) சட்டத்திற்குட்பட்டவையாகும்.

6. பதிவாளர், உயர்நீதிமன்ற அலுவலகத்தின் நிருவாகத் தலைவர் ஆவார். இவருக்கு உதவியாகப் பல அதிகாரிகள் அதாவது கூடுதல் பதிவாளர், மாஸ்டர், துணைப் பதிவாளர், நீதிமன்றம் நியமித்த கணக்கு ஆய்வாளர், வழக்குகளை வகைப் படுத்தும் தனி அதிகாரி, உதவிப் பதிவாளர்கள், நிருவாக அதி காரிகள், முதுநிலை கணக்கு அதிகாரி ஆகியோர் உள்ளனர்.

உயர்நீதிமன்ற அலுவலகம் பல பிரிவுகளைக் கொண்டது. அவை நிருவாகத்துறை, நூலகம், அசல் தரப்பு வழக்குப் பிரிவு, மேல் முறையீட்டுத் தரப்பு வழக்குப் பிரிவு, நொடிப்பு நிலை வழக்குப் பிரிவு, உச்ச நீதிமன்றப் பிரிவு, குற்றவியல் வழக்குப் பிரிவு, புதுச்சேரி பிரிவு, நீதிமன்ற அதிகாரிகள் பிரிவு, மேல் முறையீடுகள் பரிசீலனையாளர்கள் பிரிவு, நேர்முக உதவியாளர்





கள் பிரிவு, மொழிபெயர்ப்பு மற்றும் அச்சுத்துறைப் பிரிவு, நகல் எடுப்போர் பிரிவு, வரவு-செலவுத் திட்டப் பிரிவு மற்றும் ஆவணப் பிரிவு ஆகியனவையாகும்.

புதுச்சேரி (மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி) தொடர் பான வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரமும் உயர்நீதி மன்றத்திற்குரியதாகும். புதுச்சேரி தொடர்பான வழக்குகளை உயர்நீதி மன்றத்தில் கவனிக்கும் அதிகாரி, பணியாளர் ஆத் யோர் குறித்த செலவை தமிழ்நாடு அரசு முதலில் ஏற்றுக் கொண்டு பின்னர் புதுச்சேரி அரசிடமிருந்து அத்தொகையைத் திரும்பப் பெறுகிறது.

நீதி வழங்குவதோடு, மாநில நீதித்துறையின் நிருவாகத்திற் கும் உயர் நீதிமன்றம் பொறுப்பு வகிக்கிறது.

7. சட்ட அதிகாரிகள் :—மாநகரிலும், வெளியூர்களிலும் உள்ள சட்ட அதிகாரிகள், அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்காட நியமிக்கப்பட்டுள்ள வழக்குரைஞர் குறித்த செலவு களையும் வழக்கு தாக்கல் செய்வது தொடர்பான செலவுகள் உட்பட அரசு வழக்குரைஞர்களால் செய்யப்படுகிற செலவுகளை யும் செய்வதற்கு இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. உயர்நீதிமன்றத்தில் ஒரு மாநில தலைமை வழக்குரைஞரும், ஒரு அரசு வழக்குரைஞரும் உள்ளனர். அரசு உரிமையியல் வழக்குரை ஞர் தவிர, 8 கூடுதல் அரசு உரிமையியல் வழக்குரைஞர்களும், 28 அரசு வழக்குரைஞர்களும் (உரிமையியல்), இரு அரசு உரிமை யியல் சிறப்பு வழக்குரைஞர்களும், உரிமை இயல் வழக்குகளை கவனித்து வருகின்றனர். குற்றவியல் வழக்குகளைப் பொறுத்தமட் டில், ஒரு குற்றவியல் அரசு வழக்கு நடத்துநர் உள்ளார். ஒரு குற் றவியல் அரசு வழக்கு நடத்துநர் தவிர இரு கூடுதல் அரசு வழக்கு நடத்துநர்கள், மூன்று அரசு வழக்குரைஞர்கள் (குற்றவியல்) உயர்நீதிமன்றத்தில் உள்ளனர். இவர்களைத் தவிர, மாநகர் அரசு வழக்கறிஞர், மாநகர் அரசு கூடுதல் வழக்கறிஞர், மாநகர அரசு வழக்கு நடத்துநர், மாநகர் அரசு கூடுதல் வழக்கு நடத்துநர்கள், அரசு உதவி வழக்கு நடத்துநர்கள், நிலை-I, நிலை II ஆகியோர் உள்ளனர்.

வெளியூர்களில் அரசு வழக்கறிஞர்களும், அரசு வழக்கு நடத்துநர்களும் உள்ளனர். மேலும் அரசு உதவி வழக்கு நடத்து நர்கள் நிலை I, நிலை II ஆகியோரும் உள்ளனர். இவர்கள் நிரந்தர காலச் சம்பள ஏற்றமுறையில் சம்பளம் பெறும் முழுநேர அதிகாரிகள் ஆவர்.

மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களிலும், சார்நிலை நீதிமன்றங் களிலும் அரசுப் பணியாற்றுவதற்காக வழக்குரைஞர்கள் நியமிக் கப்படுகின்றனர். அவர்கள் ஆற்றும் பணியைப் பொறுத்து அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணம் வழங்கப்படுகிறது அவர்கள் வழக்குரைஞர் அமர்த்துக் கட்டணம் பெற இயலாது.

சட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்படும் அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள், சம்பந்தப்பட்ட துறையின் வரவு-செலவுத் திட்டத் தலைப்பில் பற்று வைக்கப்படுகின்றன. அவர்கள் ஆற்றும் பணியைப் பொறுத்து அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணத்திற்கு அரசினால் அல்லது சம்பந்தப்பட்ட துறைத் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

8. குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள்.—மாநகரிலும், பிற இடங்களிலும், உள்ள குற்றவியல்உதவி வழக்கு நடததுநர்கள் (நிலை-I, நிலை-II) மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களிலுள்ள வழக்குகளைக் கவனிக்கின்றனர். இவர்கள் குற்றவியல் நடைமுறை சட்டக்கோவையின் 25-ஆம் பிரிவின் கீழ் மத்தியச் சட்டம் 2/1974 மாநில அரசால் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் முறையான சம்பள விகிதம் பெறும் முழுநேர அரசுப் பணியாளர்களாவர்.

அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களின் சம்பள வீதம் வருமாறு :—

1. அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர், நிலை-I ரூ. 1,575—90—1,845—100—2,245—110—2,685.

2. அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர், நிலை-II ரூ. 1,340—75—1,715—90—2,435.

குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்குகளின் விசாரணையை விரைவு படுத்த வேண்டுமென்ற நோக்குடன், ஒவ்வொரு குற்றவியல் நீதிமன்றத்திற்கும், குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர் (நிலை-II) ஒருவரை அரசு நியமித்துள்ளது.

அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களை மேற்பார்வை செய்வதற்கும், கண்காணிப்பதற்கும் தற்போது துறைத் தலைவர் யாருமில்லை. நிருவாக வசதிக்காக, வெளியூர்களிலுள்ள குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் மாவட்ட ஆட்சியர்களின் கட்டுப்பாட்டின் கீழும், சென்னை மாநகரிலுள்ள குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் சென்னை காவல் துறை ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழும் உள்ளனர். குற்றவியல் வழக்கு நடத்துநர்களுக்கான இயக்கத்தை ஏற்படுத்துவது பற்றி அரசு 1986-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஆணைகள் பிறப்பித்துள்ளது. அந்த ஆணைகளின்படி. அரசு குற்றவியல் வழக்கு நடத்துநர் இயக்ககம் சென்னையில் அமைக்கப்படும். சரக அளவில் அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்து இயக்குநர்களுக்கான 8 அலுவலகங்கள் சென்னை, செங்கற்பட்டு, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி,





கோயம்புத்தூர், வேலூர், இராமநாதபுரம் ஆகிய இடங்களில் அமைக்கப்படும். உள் (நீதிமன்றங்கள்) துறையில் தொடர்ந்து பொறுப்பு வகித்துவரும் அரசு இணைச் செயலாளர்கள் அரசு குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் இயக்ககம் அமைப்பதற்கான தனி அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். தனி அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக, புதிய துறை அமைப்பது தொடர்பாக மாநகரிலும் வெளியூர்களிலும் அலுவலகங்களை அமைப்பதற்கு தகுந்த கட்டிடங்களைத் தேர்ந்தெடுத்தல், அலுவலகங்களில் பயன்படுத்துவதற்கான மேசை-நாற்காலிகள், எழுது பொருட்கள், ஏனைய பொருட்கள் ஆகியவற்றை வாங்கும் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. புதிய துறைக்காக ஏற்படுத்தப்பட்ட பதவிகளுக்கான பணி விதிகளும் வெளியிடப்பட்டுள்ளன. மேற் குறிப்பிட்ட பணி விதிகளுக்கிணங்க பல்வேறு பதவிகளுக்கான காலி இடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

9. அரசுத் துறைகள் சார்பில் உரிமையியல் வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கான நீதிமன்ற முத்திரைத்தாள் வாங்கும் வகையில் கணிசமான தொகையை அரசு உரிமையியல் வழக்கறிஞர் செலவிடுகிறார். மேற்சொன்ன செலவு, தற்போது "2014. நீதி நிருவாகம்-114. சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்-ஏபி. அரசு உரிமையியல் வழக்கறிஞர்- 04, அலுவலகச் செலவுகள்" என்பதன் கீழ் பற்று வைக்கப்படுகிறது.

1989–90-ஆம் ஆண்டில் "சட்ட அதிகாரிகள்" என்ற தலைப்பின்கீழ் மொத்த செலவுத் தொகை ரூ. 1,74,63,000 என்று மதிப்பிடப்படுகிறது. மேற்சொன்ன செலவில் வெளியூரிலுள்ள I, II-ஆம் நிலை பதவித் தரத்திலுள்ள அசகு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்களின் சம்பளமும், படியும் பணியாளர்களின் சம்பளமும் படியும் அடங்கும். மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சட்ட அதிகாரிகள் (வெளியூர்), அதாவது I, II ஆம் நிலை பதவித் தரத்திலுள்ள அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள் தொடர்பான செலவு, 1981–82 ஆம் ஆண்டு முதல் "114. சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்" என்ற தலைப்பின்கீழ் காட்டப்பட்டுள்ளது.

10. அரசுப் பொறுப்பு சொத்தாட்சியர் (பொறுப்பு சொத்தாட்சியர்) சென்னை.—சென்னை, அரசப் பொறுப்பு சொத்தாட்சியர் (பொறுப்பு சொத்தாட்சியர்) மாவட்ட நீதிபதி பதவித்தரத்தில் உள்ள ஓர் அதிகாரியாவார். அவருக்கு உதவியாக துணை அரசுப் பொறுப்பு சொத்தாட்சியர் (பொறுப்பு சொத்தாட்சியர்) ஒருவர் உள்ளார். அவருடைய சம்பள விகிதம் ரூ. 1,575—90—1,845—100—2,245—110—2,685 ஆகும். இவ்விரு அதிகாரிகளும் உரிய வயதடையாப் பிள்ளைகளின் சொத்துக்கள், மரணமடைந்தவர்களின்

எஸ்டேட்டுகள் ஆகியவற்றைக் கவனித்து வருகின்றனர். அவர்கள் அரசுப் பொறுப்பு சொத்தாட்சியர் சட்டத்திலும், பொறுப்பு சொத்தாட்சியர் சட்டத்திலும் உள்ள விதித்துறைகளுக்கு இணங்க அவர்களிடம் ஒப்படைக்கப்படும் கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர், இவ்வதிகாரிகளுக்கு தொழில் நுட்ப முறையில் உதவி செய்வதற்காக ரூ. 1,160—50—1,460 70—1,950 என்ற சம்பள விகிதத்தில் உதவிப் பொறியாளர் ஒருவர் உள்ளார். பட்டயக் கணக்கர் கல்வித் தகுதியுடைய சிறப்பு கணக்கர் பதவி ஒன்றும் இவ்வலுவலகத்தில் உள்ளது.

1989-90-ஆம் ஆண்டிற்கு இத்தலைப்பின் கீழ் ரூ. 7,10,069 செலவாகுமென மதிப்பிடப்படுகிறது.

11. பெருநகர் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள.— இம்மாநகரில பெருநகர் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் பெருநகர் தலைமை கூடுதல் மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் உட்பட, 25 பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் செயலபட்டு வருகின்றன. இரு மாநகர் மாஜிஸ்டிரேட்டுகள், நடமாடும் நீதிமன்றங்கள இரண்டின் மாஜிஸ்ட்டிரேட்டுகளாகப பணியாற்றுகின்றனர். பெருநகர் தலைமை மாஜிஸ்டிரேட்டு, நிலை- II, மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் இருப்பவராவார். பெருநகர் தலைமைக் கூடுதல் மாஜிஸ்டிரேட்டு, சார்நிலை நீதிபதி பதவித்தரத்தில் இருப்பவராவார். பொருளாதாரக் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த, மாவட்ட திபதிகள பதவித்தரத்தில் கூடுதல் தலைமை பெருநகர் மாஜிஸ்டிரேட்டு பதவிகள் இரண்டு உளளன. இரண்டாம், மூன்றாம், நான்காம் பத்தாம். பதினொன்றாம் பெருநகர் மாஜிஸ்டிரேட்டுகளும் சார்நிலை நீதிபதிகள் பதவித்தரத்தைச் சேர்ந்தவாகளாவர். ஏனைய அனைத்து பெருநகர் மாஜிஸ்டிரேட்டுகளும் மாவட்ட முன்சீப பதவித்தரத்தைச் சேர்ந்தவராவர். பெருநகர் மாஜிஸ்டிரேட்டுகள், சென்னை மாநகர் காவல் நிலையங்களை யொட்டி அதிகார வரம்பைச் செலுத்துகின்றனர்.

1989—90-ஆம் ஆண்டில் இம்மாநகரிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்களின் செலவு ரூ. 55,35,000 ஆக இருக்குமென மதிப்பிடப்படுகிறது.

பயணச் சீட்டு இல்லாமல பயணம் செய்வது போன்ற குற்றங்கள் குறித்து இந்திய இரயில்வே சட்டத்தின்கீழ் விசாரணை செய்து தீர்ப்பளிபபதற்காக, எழும்பூர் இரயிலவே நிலையத்தில் ஒன்றும், சென்ட்ரல் இரயில்வே நிலையத்தில் ஒன்றுமாக இரயிவே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் இரண்டு உள்ளன.

12. மாநகர் சிவில் நீதிமன்றம், சென்னை— சென்னை மாநகர் சிவில் நீதிமன்றத்தில் 26 நீதித்துறை அதிகாரிகள் (8 மாவட்ட நீதிபதிகள், 18 சார் நிலை நீதிபதிகள) பணிபுரிகின்றனர். மாநகர் சிவில் நீதிமன்றத்தில் மாவட்ட முன்சீப்



பதவித் தரத்தில் பதிவாளருக்கென தனிப் பதவி ஒன்று உள்ளது. இவர் நிருவாகத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார். மாநகர் சிவில் நீதி மன்றத்தின் அதிகார வரம்பு, சென்னை மாநகர் முழுவதுமாகும். சென்னை மாநகரில் சிவில் நீதிமன்றம், ரூபாய் 1,00,000 வரை பண அதிகார வரம்பையும், ரூபாய் 30,000 வரை மேல் முறையீட்டு அதிகார வரம்பையும் கொண்டுளளது. சென்னை செஷன்ஸ் கோட்டத்தின் ( Division ) செஷன்ஸ் நீதிமன்றமாகவும் இந்த மாநகர் சிவில் நீதிமன்றம் செயல்படுகின்றது. குற்றவியல் சட்டத் திருத்த சட்டத்தின்கீழ் பட்டியலிடப்பட்ட வழக்குகளை ( Calendar Cases) விசாரிக்கும் தனி நீதிபதிகளுக்கான அதிகாரம் செனனை மாநகர் சிவில் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தை சேர்ந்த. சில நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டுளளது.

மாநகர் சிவில் நீதிமன்றத்தைப் பொறுத்த வரை 1989—90 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. 68,75,000 செலவு ஆகுமென்று மதிப்பிடப்படுகிறது.

13. மாவட்டங்களிலுள்ள சிவில் நீதிமன்றங்கள்.— இம்மாநிலத்தில் மொத்தம் 17 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. கோயம்புத்தூர், தென் ஆற்காடு (கடலூரில்), இராமநாதபுரம், வட ஆர்க்காடு (வேலூரில்), மதுரை, பெரியார் (ஈரோட்டில) ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதல மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றங்கள் அமைந்துள்ளன. சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றங்கள் இரண்டு உள்ளன. அந்தந்த கோட்டங்களைச் சேர்ந்த மாவட்ட நீதிபதிகளே செஷன்ஸ் நீதிபதியாகச் செயல்படுகின்றனர். தொழிளாலர் காப்புறுதிச் சட்டம், எஸ்டேட் ஒழிப்புச் சட்டம், மோட்டார் வண்டிகள் சட்டம் போன்ற சில தனிச் சட்டங்களின் கீழ் சிறப்பு நடுவர் மன்றங்களாகவும் இந்த நீதிபதிகள் பணியாற்றுகின்றனர். சம்பந்தப்பட்ட கோட்டங்களில் சார் நிலை சிவில் நீதிமன்றங்களையும் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களையும் மாவட்ட நீதிபதிகள் ஆய்வு செய்கின்றனர். மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, ஆகிய மாவட்ட நீதிபதிகள், அடுத்துள்ள மூன்று அல்லது அதற்கும் அதிகமான மாவட்டங்களில் குற்றவியல் சட்டத்திருத்தச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை விசாரணை செய்யும் அதிகார வரம்பு கொண்ட சிறப்பு நீதிபதிகளாகச் செயல்படுகின்றனர். இந்நீதிபதிகள், ரூபாய் 30,000 வரையிலும் சிவில் மேல் முறையீட்டு அதிகார வரம்பு கொண்டவர்களாயுள்ளனர்.

மேலும், இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீ[illegible] வழக்குகளை விசாரணை செய்வதற்காக, மாவட்ட செஷன்ஸ் நீதிபதி பதவித்தரத்தில் ஆறு கூடுதல் நீதி மன்றங்களை சென்னை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, கோயம்[illegible]

புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் அமைக்க அரசு 1982-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அனுமதி வழங்கியுள்ளது. இது தொடர்பான செலவு, '2014. நீதி நிருவாகம், என்ற தலைப்பின்கீழ் " 108. குற்றவியல் நீதிமன்றங்கள் என்பதன் கீழ் பற்று எழுதப்படுகிறது.

14. சார்நிலை நீதிமன்றங்கள் : இம்மாநிலத்தில் 67 சார்நிலை நீதிமன்றங்கள் ( Sub-Courts ) உள்ளன. இவற்றில் கோயம்புத்தூர், மதுரை ஆகிய இரு இடங்களிலுள்ள விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றக் கூடுதல் ஆயங்களைச் சேர்ந்த நீதிபதி பதவிகள் இரண்டும் அடங்கும். சார்நிலை நீதிபதிகள் அசல் தரப்பு வழக்குகளில் வரம்பேதுமின்றி வழக்குகள் அனைத்தையும் விசாரிக்கும் அதிகாரம் உடையவராவர். இவர்களுடைய அதிகார வரம்பு பற்றி சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் 15,000 ரூபாய் வரை மதிப்புடைய பண வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் உள்ள மாவட்ட முன்சீப்புகள் வழங்கும் தீர்ப்புகளுக் கெதிராகச் செய்யப்படும் மேல்முறையீடுகளையும் விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் அதிகாரமுடையவராவர். சார்நிலை நீதிபதிகளே செஷன்ஸ் உதவி நீதிபதிகளுமாவர். மேலும், தற்போது சார்நிலை நீதிமன்றங்கள் அனைத்தும் மோட்டார் வண்டி விபத்து கோரிக்கை நடுவர் மன்றங்களாக அமைக்கப்பட்டுள்ளன. 10 ஆண்டுகள் நீதித்துறையில் பணியாற்றிய அனுபவமுள்ள சார்நிலை நீதிபதிகளே, மோட்டார் வண்டி விபத்து உரிமைக் கோரிக்கை நடுவர் மன்றங்களாகவும் செயல்படுவதுடன் இந்நடுவர் மன்றங்களின் நீதிபதிகளாகவும் பணியாற்றுகின்றனர்.

15. மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள்.—இம்மாநிலத்தில் மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் 126 உள்ளன. அத்துடன் மாவட்ட முன்சீப்-நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் 9-ம் உள்ளன. 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7 ஆம் நாளிலிருந்து ரூ. 15,000 வரையிலும் பண வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தை மாவட்ட முன்சீப்புகள் பெற்றுள்ளனர். மாவட்ட முன்சீப் நீதிமன்றம் ஒவ்வொன்றும் வரையறுக்கப்பட்ட அதிகார வரம்பைக் கொண்டுள்ளன. இவர்கள், ரூ. 500 வரை சிறு வழக்கு அதிகார வரம்பையும் செலுத்துகின்றனர். மேலும், இந்நீதிபதிகள் அவர்களுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர்.

நகலெடுப்போர், நீதிமன்றக் கட்டளைகளைச் சார்வு செய்வோர் ஆகிய பணியாளர் அமைப்புகள் உட்பட, வெளியூர்களிலுள்ள மாவட்ட நீதிமன்றங்கள், சார்நிலை நீதி மன்றங்கள், மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் ஆகியவை தொடர்பாக 1989-90ம் ஆண்டில் 10,15,84,000 ரூபாய் செலவு



ஏற்படுமென்று மதிப்பிடப்படுகிறது. இச்செலவில், அதிகாரிகளின் சம்பளம், படிகள், அரசுப் பணி அஞ்சல் வில்லைகள், கட்டண வீதங்கள், வரிகள், வாடகைகள், அலுவலகச் செலவுகள், புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள், மின் கட்டணம் தொலை பேசிக் கட்டணம், அறைக்கலன்கள் போன்றவையும் செஷன்ஸ் நீதிமன்றங்கள் முதலியவற்றில் சாட்சியம் அளிக்க வரும் சாட்சிகளுக்கு வழங்கத்தக்க உணவு, போக்குவரத்துக் கட்டணம் முதலிய சில்லறைச் செலவுகளும் அடங்கும்.

16. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள் — தொழிலாளர் நல நீதிமன்றங்கள் சென்னையில் நான்கும் மதுரையில் இரண்டும், கோயம்புத்தூரில் ஒன்றும் உள்ளன. மாநிலம் முழுவதிலும் அதிகார வரம்பைச் செலுத்தும் தொழில் நடுவர் மன்றம் ஒன்றும் சென்னையில் உள்ளது. தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தை சேர்ந்தவர்களாவர். அரசு அனுப்புகின்ற தொழில் தகராறுகள் குறித்தும் சம்பந்தப்பட்ட தரப்பினர் தாக்கல் செய்யும் கோரிக்கை மனுக்கள் குறித்தும் தொழிலாளர் நல நீதியன்றங்கள் விசாரணை செய்து தீர்ப்பு வழங்குகின்றன.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் முகாம் அதிகாரிகள் ஆவர். அவர்கள் அனைவரும் முகாம் நீதிமன்றங்களை அமைத்து, அவரவர் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் எழும் தொழிலாளர் தகராறுகளையும் கோரிக்கை மனுக்களையும் விசாரித்து தீர்வு செய்கின்றனர்.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொடர்பாக ஏற்படும், செலவு, கோரிக்கை எண் 13-ன் கீழ் "2230, தொழிலாளர் நலன் வேலைவாய்ப்பு-01 தொழிலாளர் நலன் 101 தொழில் உறவு திட்டத்தில் சேராதது—ஏசி. சென்னை, மதுரை கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நீதிமன்றங்கள்" என்ற தலைப்பின்கீழ் பற்று எழுதப்படுகிறது.

சென்னை தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர் மன்றம் ஆகியவை தொடர்பாக 1989-90 ஆம் ஆண்டில் மொத்தம் 22,66,000 ரூபாய் செலவு ஏற்படுமென்று மதிப்பிடப்படுகிறது.

17. சிறு வழக்கு நீதிமன்றம், சென்னை.—மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்த நீதிபதியே இந்த நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாவார். சார்நிலை நீதிபதி ( Sub-Judge ) பதவித் தரத்தைச் சேர்ந்த 7 நீதிபதிகளும் மாவட்ட முன்சீப் பதவித் தரத்தைச் சேர்ந்த 8 நீதிபதிகளும் உள்ளனர். இந்நீதிமன்றத்தில் மாவட்ட முன்சீப்

பதவித் தரத்தைச் சேர்ந்த பதிவாளர் பதவி ஒன்று தனியா உள்ளது. இப்பதிவாளரே நிருவாகத்திற்கும் பொறுப்பு வகிகிறார். குறிப்பிட்ட சில ஆணை நிறைவேற்று மனுக்களை முடிவு செய்தல் போன்ற சில நீதித்துறை அலுவல்களையும் இவர் கவனித்து வருகின்றார். மாநகர் சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை தலைமை நீதிபதியும், துணை நீதிபதிகளும் செலுத்துகின்றனர். மோட்டார் வண்டிகள் சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரிப்பதற்கென்றே நடுவர் மன்றமாக நீதிபதிகள் V, VI ஆகியோர் பணியாற்றி வருகின்றனர். தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை வாடகை கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ் மேல் முறையீட்டு அதிகாரிகளாக நீதிபதிகள் VII, VIII ஆகியோர் பணியாற்றுகின்றனர். IX லிருந்து XV வரையிலான நீதிபதிகள் சென்னை மாநகரத்தின் வாடகை கட்டுப்பாடு அதிகாரிகளாகப் பணியாற்றுகின்றனர். தலைமை நீதிபதி மற்றும் II, III, IV, VII, VIII நீதிபதிகள் ஆகியோர் வாடகை கட்டுப்பாடு மேல் முறையீடுகளை விசாரணை செய்வதற்குரிய அதிகாரம் உடையவராவர். சிறு வழக்குகள் நீதிமன்றம் தொடர்பாக 1989–90 ஆம் ஆண்டில 40,01,000 ரூபாய் செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்படுகிறது.

முன்னாள் ஜமீன் எஸ்டேட்டுகள் இனாம் எஸ்டேட்டுகள் ஒழிப்பு குறித்து இழப்பீட்டுத் தொகையைப் பங்கிட்டுப் பகிர்ந்தளிக்கும் பணிக்காக திருச்சிராப்பள்ளியிலும், இராமநாதபுரத்திலும் உளள நடுவர் மன்றம் தொடர்பாக இந்த உள் சிறு தலைப்பின்கீழ் ஏற்படும் 94,000 ரூபாய் செலவுத் தொகையும் மேற்சொன்ன தொகையில் அடங்கும்.

18 மாவட்டங்களிலுளள குற்றவியல் நீதிமன்றங்கள்.

(i) நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள்: இம்மாநிலத்தில் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் 14 உள்ளன. இவற்றுடன் கும்பகோணத்தில் ஒன்றும் கன்னியாகுமரியில் ஒனறுமாக நீதித்துறை கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன. பொருளாதார குற்றங்களை விசாரணை செய்ய மதுரையில கூடுதல் தலைமை நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு உள்ளார். இதற்காக தருமபுர மாவட்டத்தில் கிருஷ்ணகிரியில் கூடுதல் தனி நீதிபதி ஒருவர் உள்ளார். இந்நீதிமன்றங்களிலுளள நீதிபதிகள் சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் உள்ளனர். நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் தங்கள் மாவட்டங்களிலுள்ள குற்றவியல் சார்நிலை நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர். நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் தங்களுடைய நிருவாகப் பணியோடு 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் விதிமுறைகளின் கீழ் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்



படும்மேல் முறையீடுகள், அந்நீதிமன்றங்களால் மேற்கூறிய நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்போது, அவற்றை இவர்கள் விசாரணை செய்ய மேற்கூறிய சட்டக் கோவையின்கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர்.

(ii) நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள்: —நீதித்துறை இரண்டாம் வகுப்ப மாஜிஸ்டிரேட்டு பதவி, நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு பதவியாக நிலை உயர்த்தப்பட வேண்டுமென்றும், நிலை உயர்த்தப்பட்ட பதவி தமிழ்நாடு மாநில நீதித்துறைப் பணியின் கீழ் ஒரே பதவியாக மாவட்ட முன்சீப் பதவியுடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டுமென்றும், உள் துறையின் 31–1–1976 ஆம் நாளிட்ட 202-ம் எண். அரசாணையில் அரசு ஆணை பிறப்பித்தது. அரசு, அண்மையில், தமிழ்நாடு மாநில நீதித்துறைப் பணி விதிகளைத் தக்கவாறு திருத்தி, உள் துறையின் 6–10–1988 ஆம் நாளிட்ட 2196 ஆம் எண். அரசாணையில் ஆணை பிறப்பித்துள்ளது. திருத்த விதிகள் 6–10–1988-லிருந்து செயலுக்கு வந்துள்ளன. உயர்நீதிமன்றம், 31–10–1988 ஆம் நாளிட்ட தன்னுடைய 102/88 ஆம் எண் அறிவிக்கையில் மாவட்ட முன்சீப்புகள் நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள், உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள், நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் ஆகியோருக்கு மாவட்ட முன்சீப் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள் என மறு பதவிப் பெயர் அளித்துள்ளது. தற்போது 223 நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன.

19. வெளியூர்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் அனைத்திற்கும் 1989–90 ஆம் ஆண்டில் 4,90,23,000 ரூபாய் செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்படுகிறது.

இவை தவிர, பயணச் சீட்டின்றிப் பயணம் செய்வது போன்ற குற்றங்களை இந்திய இரயில்வே சட்டத்தின் கீழ் விசாரணை செய்ய இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள், எழும்பூர் இரயில் நிலையத்தில் ஒன்றும், சென்ட்ரல் இரயில் நிலையத்தில் ஒன்றும் இருப்பதுடன், வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோயம்புத்தூர், மதுரை, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பளளி ஆகிய மாவடடங்களில் இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களும் உள்ளன. இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களுக்குரிய செலவை நீதித்துறையே மேற்கொள்கிறது. மேற்குறிப்பிட்ட நீதிமன்றங்கள் வசூலிக்கும் அபராதத் தொகை, நீதித்துறை மேற்கொண்ட செலவிற்குப் பதிலாக, அத்துறைக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

1980–81 ஆம் ஆண்டில் ஏழாம் நிதிக் கமிஷன் பரிந்துரைகளின்படி, மத்திய அரசின் நிதி உதவியுடன் இவ்வரசு குற்ற வழக்கு நீதிமன்றங்களை, அதாவது நெய்வேலியில் நீதித்துறை

இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றத்தையும், திருவண்ணாமலை, கோபிச்செட்டிபாளையம், வெள்ளியூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு தரத்தில் மூன்று நீதிமன்றங்களையும் தொடங்க அனுமதி அளித்தது. மேற்குறிப்பிட்ட நீதிமன்றங்களைப் பொறுத்தவரை ஏழாம் நிதிக் கமிஷன் 1979–84 வரையிலான கால அளவிற்கு வருவாய்க் கணக்கில் செலவிற்காக 10.04 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தது. நீதித்துறை மேற்குறிப்பிட்ட நிதி ஒதுக்கத்தை முழுவதுமாகப் பயன்படுத்தியுள்ளது. அத்துறை மேற்குறிப்பிட்ட கால அளவில் 12,47,429 ரூபாய் செலவிட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நான்கு நீதிமன்றங்களுக்கு மாஜிஸ்டிரேட்டுகள மாவட்ட முன்சீப்புப் பதவிகள் ஒருங்கிணைப்பு, குறித்த அரசு ஆணையின்படி மறு பதவிப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது அவை இப்போதும் செயல்படுகின்றன. அந்நீதிமன்றங்களுக்கான செலவை தற்போது தமிழ்நாடுஅரசு 1984–85 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொண்டு வருகிறது.

1955 ஆம் ஆண்டு மக்களுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரணை செய்வதற்காக மதுரை, திருச்சிராப்பள்ளி, கும்பகோணம், திருநெல்வேலி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்று என்ற வகையில் நீதித் துறை முதல்வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் நான்கிற்கும் அரசு 13—11—1981 ஆம் நாளிட்ட உள் துறையின் ஆணை எண் 2688-ல் அனுமதி அளித்துள்ளது. மேற்குறிப்பிட்ட நீதிமன்றங்களுக்கான செலவில் 50 சதவீதத் தொகை மத்திய அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படத்தக்கதாகும்.

20. <u>தமிழில் சட்ட இதழ்கள்.</u>—'தீர்ப்புத் திரட்டு' என்னும் சட்டத் தமிழ் (திங்கள்) இதழ் ஒன்றை உயர்நீதி மன்றம் வெளியிட்டு வருகிறது. மாவட்ட நீதிபதி நிலை 2 பதவித்தரத்தில் தலைமைப் பதிப்பாசிரியர் ஒருவரும் சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் இணைப் பதிப்பாசிரியர் ஒருவரும், உதவிப் பதிப்பாசிரியர், சுருக்கெழுத்து தட்டச்சர், தட்டச்சர் படி திருத்துபவர் அலுவலக உதவியாளர்கள், ஆகிய பணியாளர்களை நியமிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. தமிழ் சட்ட இதழ் தலைமைப் பதிப்பாசிரியர், அலுவலக பணியாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம், படிகள், குறித்த செலவு ''2014. நீதி-நிருவாகம்—800. ஏனைய செலவு—ஏசி. சட்ட இதழ். வெளியிடுதல்'' என்னும் தலைப்பில் பற்றெழுதப்படுகிறது. 1989-90 ஆம் ஆண்டுக்கான செலவு ரு. 5,13,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தீர்ப்புத் திரட்டு சட்டத் தமிழ் (திங்கள்) இதழ் வழக்குரைஞர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஓர் இதழ் ரூ 5 என்ற பெயரளவிலான விலையில் விற்பனைக்குக் கிடைக்கிறது.



21. <u>நீதிமன்றக் கட்டிடங்கள்:</u>—நீதித் துறையில் உயர்நீதிமன்றக் கட்டிடங்களையும் உயர்நீதிமன்றக் கட்டிடங்கள் தவிர ஏனைய கட்டிடங்களையும் பராமரிப்பதற்குரிய செலவு 13 ஆம் எண் மானியக் கோரிக்கையில் ''2059 பொதுப் பணிகள்'' என்கிற கணக்குத் தலைப்பின்கீழ் காட்டப்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டில் செய்யக்கருதியுள்ள செலவு ரூ. 12,50,000 ஆகும்.

22. 1988–89 ஆம் ஆண்டில் பின்வரும் இனங்களுக்கான செலவிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.—

(1) சென்னை உயர்நீதி மன்றத்திற்குக் கூடுதல் கட்டிடத் தொகுதியின் கட்டுமானப் பணியின் முதற் கட்டப பணியை மேற்கொள்ள 4.13 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(2) உயர் நீதிமன்றத்தின் நீதிமன்றக் கூடங்களில் மின் விசிறிகளில் அனாவசியமான அதிர்வுகள் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு எடை சேர்ப்பதன் மூலம் அத்தகைய அதிர்வு ஏற்படாமலிருக்க வகை செய்ய 18,200 ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

(3) உயர்நீதிமன்றத்தின் நீதிமன்றக் கூடங்களில் தற்போதுள்ள மின் விளக்குகளை அலங்கார ஃப்ளோரசெண்ட் இரட்டை விளக்குகளாக மாற்ற 69,900 ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

(4) உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள கட்டிடங்களுக்கு தடையின்றி இடையறாமல் மின்சாரம் கிடைக்கச் செய்யும நோக்கத்துடன் மின் உற்பத்தி எந்திரம் வாங்க 9.9 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

(5) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மாவட்ட நீதிபதிக்கு நாகர்கோயிலில் குடியிருப்புகள் கட்டுவதற்காக, ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட 3.95 லட்சம் ரூபாயுடன் மேலும் 2.38 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

(6) திருக்கோயிலூர் மாவட்ட முன்சீப் நீதிமன்றக் கட்டிடங்களில் ஆவண அறையைப் பழுதுபார்க்க 38,000 ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

(7) செங்கல்பட்டு ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடங்களில் உள்ள விருந்தினர் இல்லத்தில், சீர்பெருமக்கள் பயன்படுத்துவதற்காக அறைகலன்கள், பீங்கான் பொருள்கள் ஆகியவற்றிற்காக 48,000 ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

(8) சென்னை மாநகர சிவில் நீதிமன்ற முக்கியக் கட்டடத்தில் நிறுவப்பட்டுள்ள மின் தூக்கியின் சிறப்பு பழுது பார்ப்புக்காக 30,000 ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

(9) உயர் நீதிமன்றக் கட்டிடங்களில் சிறப்புப் பழுது பார்ப்புப் பணியையும் பொதுவான பழுது பார்ப்புப் பணியையும் மேற்கொள்ள 22,363 ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

23. <u>மதுரையில் உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுதல்</u>:—மதுரையில் உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுவதன் அவசியம் குறித்து 1972ஆம் ஆண்டிலேயே பரிசீலிக்கப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246-ம் பிரிவின்படி உயர்நீதிமன்றத்தினை அமைத்து நிருவகிக்கும் அதிகாரம் மத்திய நாடாளுமன்றத்திற்கு மட்டுமே உரியதாகும். எனவே, இம்மாநிலத்தின் தென் மாவட்டங்களிலுள்ள வழக்குத் தொடுக்கும் பொது மக்களின் தேவையினை நிறைவு செய்யும்வகையில் உயர்நீதி மன்றத்தின் ஆயம் அல்லது முகாம் நீதிமன்றத்தையாவது நிறுவுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு 1973ஆம் ஆண்டிலேயே மைய அரசுக்கு இம்மாநில அரசு கடிதம் எழுதியது. மைய அரசு மாநிலத் தலைநகரங்கள் தவிர ஏனைய இடங்களில் உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுவது குறித்த அனைத்துக் கூறுகளையும் கண்டறிவதற்காக உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியான திரு. ஜஸ்வந்த்சிங் என்பவர் தலைமையில் குழு ஒன்றினை ஏற்கெனவே நியமித்தது தமிழக அரசின் மேற்படி கோரிக்கையை மைய அரசு இக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பியது. திரு. ஜஸ்வந்த்சிங் தலைமையிலான குழு 1984-ல் தமிழ்நாட்டிற்கு மூன்று முறை வருகை தந்து இம்மாநில அரசின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியது. கோயம்புத்தூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, கொடைக்கானல், திருநெல்வேலி, சென்னை ஆகிய இடங்களில் வசிக்கும் வழக்காடு மக்கள் இதில் ஆர்வமுள்ள மக்கள், நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் கருத்துக்களைக் கேட்டறிந்தது. சென்னை உயர்நீதி மன்றக் தலைமை நீதிபதியுடனும் தமிழக அரசின் ஏனைய அதிகாரிகளுடனும் விவாதித்தது. ஜஸ்வந்த்சிங் குழு தம்முடைய அறிக்கையை மத்திய அரசிடம் அளித்தது. மத்திய அரசு நீதிபதி ஜஸ்வந்த்சிங் கமிஷன் அறிக்கையையும் பரிந்துரையையும் தமிழ்நாடு ஆளுநர், முதலமைச்சர், சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி ஆகியோருக்கு அனுப்பி, சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியைக் கலந்தாலோசித்துக் குறிப்புரைகள் அளிக்குமாறு மாநில அரசை கேட்டுக் கொண்டது. இது குறித்து சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. உயர் நீதிமன்றம் தனது கருத்துக்களை அரசுக்கு அனுப்பியுள்ளது. இது பரிசீலனையில் உள்ளது.

24. <u>சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுதல்</u>:—இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246 ஆம் பிரிவின்படி உச்ச நீதிமன்றத்தினை நிறுவுதல், அமைத்தல், அதிகார வரம்பினை வரையறுத்தல், அதிகாரங்களை நிர்ணயித்தல் ஆகியவை மத்திய அரசின் நாடாளுமன்றத்திற்கு மட்டுமே உரிய அதிகாரமாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 130 ஆம்



பிரிவின்படி இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் இந்தியத் தலைமை நீதிபதி அவ்வப்போது குறிப்பிடக்கூடியவாறு டில்லியில் அல்லது வேறு இடம் அல்லது இடங்களில் உச்ச நீதிமன்றம் கூடும். சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை நிறுவுவதற்கு மைய அரசின் இசைவினைப் பெற வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக விரைவில் முடிவு எடுக்குமாறு மாநில அரசு மைய அரசைக் கேட்டுக் கொண்டது. அமைக்கக் கருதியுள்ள உச்ச நீதிமன்றத்தின் ஆயம் நீதிபதிகளின் குடியிருப்பு ஆகியவற்றுக்கான கட்டிடங்கள் போன்ற தேவையான வசதிகளைச் செய்து தருவதாகவும் இம்மாநில அரசு மைய அரசுக்கு தெரிவித்துள்ளது. இது தொடர்பாகச் செயற்குறிப்பு இந்திய தலைமை நீதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மைய அரசு 1983-ம் ஆண்டு ஜூன் திங்களில் இம்மாநில அரசுக்குத் தெரிவித்தது. இதற்குரிய பதில் அவரிடமிருந்து மத்திய அரசுக்கு இன்னும் வரவில்லை. இந்திய தலைமை நீதிபதியின் பரிந்துரை கிடைத்தவுடன் இச்செயற் குறிப்பின் மீது மைய அரசு முடிவு எடுக்கும்.

25. பொது.—குறிப்பிட்ட ஒரு பகுதியில் நீதிமன்றங்கள் அதிக அளவில் இருப்பதைத் தவிர்ப்பதற்காகவும், தங்களுடைய வழக்குகளுக்காகத் தலைமை இடங்களுக்குச் செல்வது கடினமாக இருக்கிறது என்பதால் வழக்குத் தொடுக்கும் பொது மக்களுக்குத் தகுந்த உதவி அளிப்பதற்காகவும் தலைமை இடங்களில் உள்ள நீதிமன்றங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்று கொள்கையளவில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சிவில், குற்றவியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பை மாநிலம் முழுவதும் ஆய்வு செய்வதற்காக அரசால் நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகள் குழு தனது அறிக்கையை அரசுக்கு அனுப்பியது. உயர்நீதி மன்றம் பரிந்துரைத்தவாறு நீதிமன்றங்களின் அதிகார வரம்பு குறித்து ஆய்வு செய்து இக்குழுவின் பரிந்துரையை அரசு ஏற்றுக் கொண்டு ஐந்தாண்டு கால அளவில் படிப்படியாக அப்பரிந்துரைகளை நிறைவேற்ற முடிவு செய்துள்ளது.

தற்போது உள்ளவாறு, வெளியூரிலுள்ள சிவில் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு தமிழ்நாடு சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்படுகிறது. இது போன்றே, மாநகர சிவில் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு தமிழ்நாடு சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழும், சிறு வழக்குகள் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, மாநில சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழும் நிர்ணயிக்கப்படுகிறது.

மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. சார் நிலை நீதிமன்றத்தின் அதிகார வரம்பு ஒன்று அல்லது

அதற்கு மேற்பட்ட முன்சீப் நீதிமன்றத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்
ளது. மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தைப் பொறுத்த
மட்டில், அதன் அதிகார வரம்பு தஞ்சாவூர், இராமநாதபுரம்,
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய
வருவாய் மாவட்டங்கள் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் வருவாய் மாவட்டம் இரு நீதித்துறைப் பிரிவு
களாக அதாவது மேற்கு தஞ்சாவூர், கிழக்கு தஞ்சாவூர் எனப்
பிரிக்கப்பட்டுள்ளது. இவை தனி மாவட்ட செஷன்ஸ் நீதிபதி
களைக் கொண்டு முறையே தஞ்சாவூரிலும், நாகப்பட்டினத்
திலும் செயல்படுகின்றன

இராமநாதபுரம் முன்னாள் வருவாய் மாவட்டம் மூன்று
வருவாய் மாவட்டங்களாக அதாவது இராமநாதபுரம் மாவட்டம்
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், காமராஜர் மாவட்
டம் என பிரிக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்ட நீதிபதி
மேற்சொன்ன 3 வருவாய் மாவட்டங்களிலும் அதிகார வரம்பைச்
செலுத்துகிறார். முன்னாள் திருநெல்வேலி வருவாய் மாவட்டம்,
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சிதம்பரனார்
மாவட்டம் என இரு வருவாய் மாவட்டங்களாகப் பிரிக்கப்
பட்டுள்ளன. திருநெல்வேலி மாவட்ட நீதிபதி மேற்கூறிய
இரு வருவாய் மாவட்டங்களிலும் அதிகார வரம்பைச்
செலுத்துகிறார். குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்த
மட்டில், 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக்
கோவையின் (மத்திய சட்டம் 2/1974) கீழ் அதிகார வரம்பு
நிர்ணயிக்கப்படுகிறது.

புதிய நீதிமன்றங்கள் அமைக்குமாறு வழக்கறிஞர் சங்கத்
திடமிருந்து அல்லது வழக்காடும் பொது மக்களிடமிருந்து
முறையீடுகள் வரப்பெறும்போது உயர் நீதிமன்றம் அத்தகைய
முறையீடுகளைப் பரிசீலித்த பின்னர், புதிய நீதிமன்றங்களை
அமைப்பதற்குச் செயற் குறிப்புகளை அனுப்புகிறது. அந்தந்த
மாவட்ட நீதிபதிகளுடன், அல்லது நீதித்துறை தலைமை
மாஜிஸ்டிரேட்டுகளுடன் கலந்தாலோசித்து முறையீடுகளைக்
கவனமாகப் பரிசீலித்து புதிய நீதிமன்றம் ஏற்படுத்துவது
அவசியமென்று உயர் நீதிமன்றம் மன நிறைவடைந்தால்
அதுபற்றி அரசுக்கு எழுதுகிறது

பிரித்தல் குழு (Separation Committee) அறிக்கையின்
209 ஆம் பாராவின்படி குறிப்பிட்ட ஒரு நீதிமன்றத்தில்
முடிவடையாமலுள்ள வழக்குகள் இரு மாதங்களுக்கான
அல்லது ஒரு மாஜிஸ்டிரேட்டுக்கு இருக்க வேண்டிய பணியைக்
காட்டிலும் அதிகமாக உள்ள பணியைக் குறிப்பிடும்போது
கூடுதலாக மாஜிஸ்டிரேட்டு நியமிப்பதன் மூலம், உடனடி
நிவாரணம் அளிக்கப்பட வேண்டும். கூடுதல் மாஜிஸ்டிரேட்டு
களை நியமிப்பதில் காலந்தாழ்த்துவதால் செலவு குறையும்
என்று எண்ணுவது தவறான கருத்தாகும். ஏனெனில் மேலும்



மேலும் பணி கூடுதலாகச் சேர்ந்து கொண்டு வரும் நிலையில்
கூடுதல் அதிகாரி எக்கால அளவுக்கு தேவைப்படுகிறாரோ
அக்கால அளவும் அதற்கு நிகராக அதிகரிக்கும்.

புதிய இடங்களில் புதிய நீதிமன்றங்களை ஏற்படுத்துவதைத் தவிர, உரிமையியல் வழக்குகளின் நிலுவை சமாளிக்க இயலாத அளவுக்குப் பெருகி விடும் நிலை ஏற்பட்டால், வழக்குகளை விரைவில் முடிப்பதன் மூலம், வழக்காடும் பொது மக்களின் நலனைக் காப்பதைக் கருத்தில் கொண்டு நிலுவைகளைத் தீர்ப்பதற்காகக் கூடுதலாக உரிமையியல் வழக்கு நீதிமன்றங்களை ஏற்படுத்துமாறு உயர் நீதிமன்றம் அவ்வப்போது அரசுக்கு பரிந்துரைக்கிறது.

சாதாரணமாக, மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களில் விசாரணையிலுள்ள 200 பழைய வழக்குகள் அல்லது துணை நீதிமன்றங்களில் விசாரணையிலுள்ள 75 வழக்குகள் நிலுவையிருப்பின், அவை கூடுதலாக நீதிமன்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்னும் கோரிக்கையைத் தெரிவிக்கப் போதுமானது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

1975 ஆம் ஆண்டில் கடன் நிவாரண அவசரச் சட்டத்தை செயல்படுத்தியதன் விளைவாக, முடிவடையாமலுள்ள சில வழக்குகளில் மேற்கொண்டு நடைமுறைகள் நிறுத்தி வைக்கப் பட்டன. சில புதிய வழக்குகள் தாக்கல் செய்வதும் தடை செய்யப்பட்டது.

தடையாணை பிறப்பிக்கப்பட்டிருந்ததால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலிருந்த வழக்குகளும் வழக்கு நடவடிக்கைகளும் 1978 ஆம் ஆண்டில் கடன் நிவாரண அவசரச் சட்டம் நீக்கப்பட்ட பின்னர் விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டன. மேலும் அதிக அளவில் புதிய வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டன. இதன் விளைவாக உரிமை இயல நீதிமன்றங்களில் அதிக வழக்குகள் முடிவு செய்யப் படாமல் இருந்தன.

26. 1988–89 ஆம் ஆண்டில் பின்வரும் உரிமையியல் நீதிமன்றங்களை ஏற்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது :—

(1) தருமபுரியில் துணை நீதிமன்றம்.

(2) பின்வரும் 18 மாவட்டக் கூடுதல் மூன்சீப் நீதிமன்றங்கள் (இவை தலைமை அலுவலர்கள் இல்லாததால் கலைக்கப்பட்டன) மீண்டும் அமைக்கப்பட்டுள்ளன.

[1989 ஏப்ரல் 12

(i) மாவட்டக் கூடுதல் முன்சீப் நீதிமன்றம், II, ஈரோடு.

(ii) மாவட்டக் கூடுதல் முன்சீப் நீதிமன்றம், புதுக்கோட்டை.

(iii) மாவட்டக் கூடுதல் முன்சீப் நீதிமன்றம், தூத்துக்குடி.

(iv) மாவட்டக் கூடுதல் முன்சீப் நீதிமன்றம், விழுப்புரம்.

(v) மாவட்டக் கூடுதல் முன்சீப் நீதிமன்றம், திண்டிவனம்.

(vi) மாவட்டக் கூடுதல் முன்சீப் நீதிமன்றம், கடலூர்.

(vii) மாவட்டக் கூடுதல் முன்சீப் நீதிமன்றம்-II, கோயம்புத்தூர்.

(viii) மாவட்டக் கூடுதல் முன்சீப் நீதிமன்றம்-III, கோயம்புத்தூர்.

(ix) மாவட்டக் கூடுதல் முன்சீப் நீதிமன்றம், திருவண்ணாமலை.

(x) மாவட்டக் கூடுதல் முன்சீப் நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்.

(xi) மாவட்டக் கூடுதல் முன்சீப் நீதிமன்றம், திருப்பத்தூர்.

(xii) மாவட்டக் கூடுதல் முன்சீப் நீதிமன்றம், திண்டுக்கல்.

(xiii) மாவட்டக் கூடுதல் முன்சீப் நீதிமன்றம், ஆரணி.

(xiv) மாவட்டக் கூடுதல் முன்சீப் நீதிமன்றம், அம்பாசமுத்திரம்.

(xv) சிறு வழக்கு நீதிமன்றம், XII சென்னை.

(xvi) சிறு வழக்கு நீதிமன்றம், XIII சென்னை.

(xvii) சிறு வழக்கு நீதிமன்றம், XIV சென்னை.

(xviii) சிறு வழக்கு நீதிமன்றம், XV சென்னை.

27. உயர் நீதிமன்றத்தின் அசல் தரப்பு, மேல்முறையீட்டு தரப்பு ஆகியவற்றின்கீழ் வரும் வழக்குகளின் மூலமும், சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்களின் மூலமும், "நீதி நிருவாகம்" என்ற தலைப்பின்கீழ் வருவாய் பெறுவது முக்கியமானதொரு தொடர்பான கூறு ஆகும்.

"0070 01 102. நீதி நிருவாகம் மற்றும் "0030 01 101 நீதித் துறை முத்திரைத் தாள்கள் (முத்திரைத் தாள் வகையில் வசூலிக்கப்பட்ட நீதிமன்றக் கட்டணங்கள்)" என்ற தலைப்



1989 ஏப்ரல் 12]

பின் கீழ் கிடைத்த வருவாய் வரவு, "2014, நீதி நிருவாகம்" என்பதன் கீழ், 1984–85, 1985–86, 1986–87, 1987–88, 1988–89 மற்றும் 1989–90 ஆகிய ஆண்டுகளுக்கான செலவு ஆகியவை பின்வரும் விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன:

| | கணக்குகள், 1984–85. | கணக்குகள், 1985–86. | கணக்குகள், 1986–87. | கணக்குகள் 1987–88. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| வரவுகள்— 0070 01 102 நீதி நிருவாகம். | 311.42 | 357.26 | 375.78 | 417.18 |
| 0030 01 101 நீதித்துறை முத்திரைத் தாள்கள். | 843.64 | 897.30 | 1,225.84 | 1,310.58 |
| மொத்த வரவு | 1,155.06 | 1,254.56 | 1,601.62 | 1,727.76 |
| செலவு— 2014. நீதி நிருவாகம். | 1,458.00 | 1,720.00 | 1,938.05 | 2,155.01 |

| | வரவு-செலவு திட்ட மதிப்பீடு, 1988–89. | திருத்த மதிப்பீடு 1988–89. | வரவு-செலவு திட்ட மதிப்பீடு 1989–90. |
|---|---|---|---|
| | (6) | (7) | (8) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| வரவுகள்— 0070 01 102 நீதி நிருவாகம். | 408.62 | 488.17 | 466.63 |
| 0030 01 101 நீதித் துறை முத்திரைத் தாள்கள். | 1,374.74 | 1,399.52 | 1,511.48 |
| மொத்த வரவு .. | 1,783.36 | 1,887.69 | 1,978.11 |
| செலவு— 2014. நீதி நிருவாகம். | 2,510.74 | 2,345.57 | 2,470.51 |

28. ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை உதவி.—இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 39-ஏ பிரிவின்படி ஏழை எளியவர்களுக்கு சட்ட ஆலோசனை அளிக்க வேண்டியது சட்டப்படி அரசின் கடமையாகும். ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை நல்கும் பொருட்டு 1977 ஆம் ஆண்டில் அரசு அமைத்த தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு, உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதிகள் இருவரின் கீழ் செயல்பட்டு வருகிறது.

மாவட்டங்களிலும் வட்டங்களிலும், சட்ட உதவிக் குழுக்கள் இருப்பதுடன், மாநகரிலும், மாவட்டங்களிலும் சட்ட ஆலோசனைப் பிரிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இம் மாநிலத்திலுள்ள 35 சட்ட உதவி மையங்களுடன் 18 மாவட்டக் குழுக்களும், 88 வட்டக் குழுக்களும், சட்ட ஆலோசனை பிரிவுகள், 8-ம் இணக்க ஏற்பாட்டைச் செய்யும் நிலையங்கள் 57-ம் உள்ளன.

இக்குழு, ஏழை எளியவர்களுக்கும், சட்ட ஆலோசனை பெறத் தகுதியுடையோருக்கும், சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கும் சட்ட ஆலோசனை வழங்கி வருகிறது. மோட்டார் விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வாங்கித் தர இக்குழு சட்ட உதவி செய்கிறது. மாவட்ட நீதி மன்றங்கள், நடுவர் மன்றங்கள் ஆகியவற்றிலுள்ள அதிகாரிகள் மூலமாக நிவாரணம் வாங்கித் தர உதவி செய்வதும் மகளிருக்கும் குழந்தைகளுக்கும் வாழ்க்கை செலவுப் படியைப் பெற்றுத் தர உதவி செய்வதும் இக்குழுவின் பணித் திட்டங்களில் அடங்கும்.

அரசு அதிகாரிகளும் அரசு சார்பற்றவர்களும் உள்ள ஒரு நிருவாகக் குழு, சட்ட ஆலோசனை உதவிக் குழுவின் பணி களை நிருவகிக்கின்றது. தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழுவின் செலவுக்காக அதற்கு அரசு ஆண்டு தோறும் மானியம் அளிக்கிறது. 1988–89 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 45 இலட்சம் ஒதுக்கப் பட்டது. 1988–89 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டில் இத்தொகை ரூ. 51,95,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சாதாரணமாக தமிழ் நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழுவிற்கு ஓராண்டின் நான்கு காலாண்டுகளுக்கு நான்கு சமத் தவணைகளில் மானியம் வழங்கப்படுகிறது. 1988—89 ஆம் ஆண்டிற்கான மானியம் குழுவிற்கு ஏற்கனவே வழங்கப் பட்டுள்ளது.

சாதாரணமாக, பெண்களின் திருமண உறவு பிரச்சினை களைக் கவனிப்பது மட்டுமல்லாமல், கணவன்—மனைவிக் கிடையில் சமரசம் செய்வது, உடன்பாடு காண்பது, ஆலோசனை வழங்குவது ஆகிய பெண்கள் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சினைகளைப் பதிவு செய்து கவனிக்கும் பொருட்டு பெண்களுக்காக தனி மையங்களைத் தொடங்குவதென அண்மையில் இக்குழு கொள்கை மு வு எடுத்துள்ளது. இதன்



முதல் கட்டமாக, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும் பெண்களுக்கென மையம் ஒன்று தொடங்கப்பட உள்ளது. அத்தகைய மையங்கள், சென்னை, செங்கற்பட்டு, கடலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. ஏனைய மாவட்டத் தலைமை யிடங்களிலும் பெண்களுக்கான மையங்கள் விரைவில் தொடங் கப்படும்.

இந் நாட்டில் பல்வேறு மாநிலங்களில் செயல்படும் சட்ட உதவி திட்டங்களுக்கு சட்டப்படிக்கான அடிப்படையை அளிக்கவும், அவை மிகப் பயனுள்ள வகையில் செயல்படவும், மத்திய அரசு, 1987ஆம் ஆண்டு சட்டப்பணி அதிகார மன்றங்கள் சட்டத்தை (மத்தியச் சட்டம் 39/1987) இயற்றியுள்ளது. இச்சட்டம், இன்னும் செயலுக்குக் கொண்டு வரப்படவில்லை.

29. மக்கள் நீதிமன்றம்.—தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழுவின் பல திட்டங்களில், மக்கள் நீதி மன்றங்களின் கூட்டங்களைக் கூட்டும் திட்டமும் ஒன்றாகும். லோக் அதாலத் என்பது மக்கள் நீதிமன்றம் என்று பொருள் படும். இத்திட்டம், சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கிடையே யான சட்டப்படிக்கான பிரச்சினைகளை பேச்சு வார்த்தைகள் மூலமும், இணக்கப் பேச்சு வார்த்தைகள் மூலமும், தீர்த்து வைப்பதும், சமூக நலனை நோக்கமாகக் கொண்ட அனுபவம் வாய்ந்த மன்றத்தார் அடங்கிய குழு உறுப்பினர்களின் உதவியுடன், இசைவு பொது அறிவு மனிதாபிமான அணுகுமுறை ஆகியவற்றின் மூலம் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதுமே இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் நோக்கங்கள்: (i) இது வரையில் நீதிமன்றங்களுக்குச் செல்லாத பிரச்சினை களையும் (வழக்குத் தொடர்வதற்கு முன்னர்), (ii) நீதி மன்றத்தில் தீர்ப்பாகாமலுள்ள வழக்குகளையும் (நிலுவை யாகவுள்ள வழக்குகள்) தீர்ப்பதே ஆகும். இரண்டாவது நோக்கம் தொடர்பாக நீதிமன்றங்களிலும் நடுவர் மன்றங்களி லும் தீர்ப்பாகாமலுள்ள வழக்குகளைப் பொறுத்த வரையில், மக்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்காக, சம்பந்தப்பட்ட தரப்பி னர்கள் அனைவரின் இசைவைப் பெற்று மக்கள் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளையொட்டி ஆணைகளைப் பெறுவதற் காக சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களுக்கும், நடுவர்மன்றங்களுக்கும் திரும்ப அனுப்பி வைக்கும் வகையில் இக்குழு திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. வழக்கிற்கு ஒரு முடிவை எடுக்க இத்திட்டம் வகை செய்கிறது. ஈட்டுறுதி செய்யப்பட்ட வண்டிகள் சம்பந்தமான மோட்டார் விபத்துக்கள் உரிமைக் கோரிக்கைகள் நீதிமன்றங்களி டம் தீர்ப்பாகாமலுள்ள உரிமைக் கோரிக்கைகள், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான வண்டிகள் தொடர் பான ஒரு சில வழக்குகள் ஆகியவற்றை முடிப்பதற்காகவும் இக் குழு இதுவரையில் மக்கள் நீதிமன்றக் கூட்டங்கள் பலவற்றை

[1989 ஏப்ரல் 12

கூட்டியுள்ளது. வேலூரில் கூட்டப்பட்ட மக்கள் நீதிமன்றத்தில்
பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திற்குச்
சொந்தமான வண்டிகள் தொடர்பான பல வழக்குகளும்
இடம் பெற்றன.

தமிழ்நாட்டில் உள்ள மக்கள் நீதிமன்றத் திட்டத்தின் ஆய்வு
வரம்பு அதாவது நிலம் கையகப்படுத்தும் வழக்குகள், குற்றவியல்
நடைமுறைக்கோவை 125ஆம் பிரிவின்கீழ் உள்ள நடவடிக்கைகள்
சிவில் நீதி மன்றங்கள் முதலியவற்றிடமுள்ள திருமணம் சம்பந்த
மான தகராறுகள் ஆகியவை ஏனைய பகுதிகளுக்கும் நீட்டிக்
கப்படும்.

மோட்டார் விபத்து உரிமைக் கோரிக்கைகள் நடுவர் மன்றங்
களிடமுள்ள உரிமைக் கோரிக்கைகளை இந்த மக்கள் நீதி
மன்றங்களில் திர்த்து வைப்பதில் தமிழ்நாடு மாநிலம் சட்ட
உதவி ஆலோசனைக் குழு பின்பற்றும் நடைமுறை வருமாறு :—

மக்கள் நீதிமன்றத்தைக் கூட்ட விழையும் சட்ட உதவி
ஆலோசனைக் குழு அல்லது சட்ட உதவிக் குழு மக்கள் நீதிமன்
றத்தைக் கூட்டுவதற்கான நாள், இடம் பற்றி முடிவு செய்யும்.
பின்னர் சட்ட உதவிக் குழு (1) மக்கள் நீதிமன்றத்தைக் கூட்ட
வும், (2) நடுவர் மன்றங்களில் உள்ள ஆவணங்களைப் பரிசீலிப்
பதற்காக, சட்ட உதவி ஏற்பாட்டின் அலுவலர்களின் அனுமதி
யைப் பெறுவதற்காகவும், மக்கள் நீதிமன்றத்திற்கான வழக்
குகளைத் தொகுப்பதற்காக நடுவர் மன்றங்களிடமிருந்து ஆவணங்
களின் நகல்களைப் பெறுவதற்காகவும், (3) மக்கள் நீதிமன்றத்
தில் எடுக்கப்படும் முடிவுகளைப் பதிவு செய்து அவற்றின் மீது
ஆணைகள் பிறப்பிப்பதற்காக மக்கள் நீதிமன்றம் கூடும் நாளில்
(சாதாரணமாக அது ஒரு விடுமுறை நாளாக இருக்கும்) மக்கள்
நீதிமன்றம் கூடும் இடத்தில் நடுவர் மன்றங்கள் கலந்து கொள்ள
அவைகளுக்கு அனுமதியைப் பெறவும், உயர்நீதிமன்றத்தின்
அனுமதியைக் கோரும்.

மக்கள் நீதிமன்றம் அறிவிக்கப்பட்ட பின்னர் சட்ட உதவிக்
குழு சம்பந்தப்பட்ட நடுவர் மன்றங்களின் உதவியுடன் மக்கள்
நீதிமன்றத்தின் முன் வைக்கப்படக்கூடிய விபத்து சம்பந்தப்பட்ட
உரிமைக் கோரிக்கைகள் குறித்து விவரங்களை மக்கள் நீதிமன்றம்
சேகரிக்கும் என்பது இதன் அடுத்த நிலைப் பணிகளாகும். இவை
பொறுப்பு குறித்து சட்டப்படி பிரச்சினை இல்லாதவை.
இங்கு அளவு மட்டுமே பிரச்சினையாக இருக்கும். மக்கள் நீதி
மன்றத்தின் முன் வைக்கப்படக் கூடிய விஷயம் குறித்து ஒப்புக்
கொண்டுள்ள இரு தரப்பினர்களும் சம்பந்தப்பட்ட வழக்குகள்
அடங்கிய பட்டியல் ஒன்று தயாரிக்கப்படும். பின்னர் சட்ட
உதவிக் குழு வழக்குகளைத் தொகுத்து, பின்னர் சம்பந்தப்பட்ட
தரப்பினர்களுடன் பூர்வாங்க விவாதம் நடத்தும். இந்த விவா
தம், மாநிலக் குழுவின் செயலாளர் முன்னிலையில் அல்லது
மாவட்டக் குழுவின் செயலாளர் முன்னிலையில் அல்லது மாவட்
டக்குழுத் தலைவரால் நியமனம் செய்யப்பட்ட, ஓய்வு பெற்ற



1989 ஏப்ரல் 12]

நீதித் துறை அதிகாரி முன்னிலையில் நடைபெறும். இந்த விவா
தங்களில் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள், இரு தரப்பு சார்பான
வழக்குரைஞர்கள், இன்ஸூரன்ஸ் கழகத்தின் அல்லது அரசுப்
போக்குவரத்துக் கழகத்தின் அதிகாரிகள் கலந்து கொள்ளுமாறு
கேட்டுக் கொள்ளப்படுவார்கள். இந்த பூர்வாங்க விவாதத்தின்
மூலம் கருத்து வேறுபாடுகளை வெகுவாகக் குறைக்க முடியும்
என்று கருதப்படுகிறது. இதனால், மக்கள் நீதிமன்றத்தின் பணி
எளிதாகும்.

மக்கள் நீதிமன்றம் கூடும் நாளன்று ஒரு சிறிய தொடக்க
நிகழ்ச்சிக்குப் பிறகு மக்கள் நீதிமன்றம் விசாரணையைத்
தொடங்கும். மக்கள் நீதிமன்றத்தின் இந்த அமைப்பில் பொது
மக்கள் கலந்து கொள்கிறார்களா என்று பார்த்துக் கொள்ளப்
படுகிறது. ஓய்வு பெற்ற நீதிபதிகள், ஓய்வு பெற்ற நீதித்துறை
அதிகாரிகள், காவல் துறையின் ஓய்வு பெற்ற முதுநிலை அதிகாரி
கள், சட்டத்துறை அதிகாரிகள், கல்வித் துறையைச் சேர்ந்தவர்
கள், வழக்குரைஞர்கள் சங்கத் தலைவர்கள், சமூகப் பணியாளர்
ஆகியோர் இதில் உள்ளனர். மக்கள் நீதிமன்றத்தில் ஒன்றுக்கும்
மேற்பட்டவர்கள் சில சமயங்களில் மூன்று பேர் இருப்பார்கள்.
இதில் சமூகப் பணியாளர் ஒருவரும் அடங்குவர். பூர்வாங்க
விவாதத்தின் முடிவுகள் தொகுக்கப்பட்டு மக்கள் நீதிமன்றத்தின்
முன் வைக்கப்படுகிறது. மக்கள் நீதிமன்றக் கூட்டம் ஒன்றில்
அமைக்கப்பட்ட மக்கள் நீதிமன்றங்களின் எண்ணிக்கை பட்டிய
லிடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையையொட்டி அதிகமாக
இருக்கலாம். பேச்சு வார்த்தையின் மூலமும் உடன்பாட்டின்
மூலமும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே முக்கிய நோக்கம்
என்பதை மக்கள் நீதிமன்றம் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்
கொள்ளப்படுகிறது. முறையற்ற வகையில் பிரச்சினைகளுக்குத்
தீர்வு காணாமல் இணக்கமான முறையில் பிரச்சினைகளைத்
தீர்க்க முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் தீர்வு காண்பதற்கு
எந்த வகையிலும் கட்டாயப்படுத்தப்படவில்லை அல்லது வற்
புறுத்தப்படவில்லை என்று சம்பந்தப்பட்ட தரப்பினர் உணரு
மாறும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்
ளப்படுகிறது. தீர்வு தானாகவே காணப்பட வேண்டும் என்றும்,
இணங்குவித்தல் மூலமும், விடாமுயற்சி மூலமும் சுமுகமான தீர்வு
காண்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர்களைக் கொண்டு வரும்
பொருட்டு தாங்கள் இதில் தலையிடுவதாகவும், சம்பந்தப்
பட்ட தரப்பினர்களுக்கு விளக்கிக் கூறுமாறும் இணக்க அதி
காரிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மக்கள் நீதிமன்றத்
தின் முன்னிலையில் உரிமைக் கோரிக்கைகள் தீர்க்கப்பட்ட பின்
னர் அங்கு எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்க தீர்ப்பு வழங்கு
வதற்காக நடுவர் மன்றத்தின் முன் விஷயங்கள் வைக்கப்படு
கின்றன.

மத்திய அரசின் விருப்பத்திற்கிணங்க சென்னை மாநகரில்
ஒரு குடும்ப நீதி மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. குடும்பத்தில் ஏற்
படும் தகராறுகளை சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்கு மேற்படி
நீதிமன்றம் 3-10-1988-லிருந்து செயல்பட்டு வருகிறது.

டி 2 எ 53-89—23

30. இயல் நீதிமன்றம்.—இயல் நீதிமன்றம் ஒன்று 1976ஆம் ஆண்டிலிருந்து மதுரையில் இயங்கி வருகிறது. பொதுக் குற்றங்களையும், போக்குவரத்து விதிகளை மீறி இழைக்கப்படும் குற்றங்களையும் விசாரிக்க நீதித்துறை மாஜிஸ்டிரேட் தலைமையில் இந்த நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது. பெருகிவரும் குற்றங்களைத் தடுக்கவும், குற்றங்களை புரிபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும், அரசு மீண்டும் இயல் நீதிமன்றங்களை சென்னை மாநகரில் (இந்நீதி மன்றங்கள் 1977 ஆம் ஆண்டில் செயல்படுவது நிறுத்தி வைக்கப்பட்டது) செயலுக்கு கொண்டு வந்துள்ளது. சென்னை மாநகரில் பொதுக் குற்றங்களையும், போக்குவரத்து விதிகளை மீறி இழைக்கப்படும் குற்றங்களையும் விசாரித்து முடிவு செய்வதற்கு மாவட்ட முன்சீப் பதவித் தரத்தில் வட சென்னையில் ஒன்றும், தென் சென்னையில் ஒன்றுமாக இரண்டு இயல் நீதிமன்றங்களைத் தேவையான பணியாளர்களுடன் அமைப்பதற்கு 1982 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இயல் நீதிமன்றங்கள் 31-3-1983 ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கியுள்ளது. கோயம்புத்தூரில் உள்ள நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றத்தை (எண் 4) இயல் போக்குவரத்து நீதிமன்றமாக மாற்ற 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அரசு அனுமதி வழங்கியுள்ளது. சென்னை மாநகரில் பொதுக் குற்றங்களையும், போக்குவரத்து விதிகளை மீறி இழைக்கப்படும் குற்றங்களையும் விசாரித்து முடிவு செய்வதற்கு மேலும் கூடுதலாக இயல் நீதிமன்றம் ஒன்று அமைப்பதற்கு 1986 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

31. உரிமையியல் நீதிமன்றங்களில் தமிழில் தீர்ப்பு வழங்குதல்.—உயர்நீதி மன்றத்தின் கீழுள்ள நடுவர் மன்றங்கள், வாடகை குறித்த நீதி மன்றங்கள், வருவாய் நீதி மன்றங்கள் உள்பட உரிமையியல் நீதிமன்றங்களில் 1-2-1982 ஆம் நாளிலிருந்து தமிழில் தீர்ப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

32. 1988-89 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் :—

(1) உயர்நீதிமன்றக் கூடங்கள், அலுவலர் அறைகள் உயர் நீதிமன்றப் பிரிவுகள் ஆகியவற்றில் பயன்படுத்துவதற்காக மேசை நாற்காலிகள் போன்ற மரச் சாமான்கள் வாங்க ரூ. 3 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

(2) ஈரோடு ஒன்று சேர்க்கப்பட்ட புதிய நீதிமன்றக் கட்டிடங்களிலுள்ள 11 நீதிமன்றக் கூடங்களில் பயன்படுத்துவதற்காக அரைவட்ட வடிவிலான 11 மேசைகளை வாங்க ரூ. 1.10 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.



(3) செங்கற்பட்டு, ஒன்று சேர்க்கப்பட்ட புதிய நீதி மன்றக் கட்டிடங்களில் பயன்படுத்துவதற்காக, மேசை நாற்காலிகள் போன்ற மரச் சாமான்கள் வாங்க ரூ. 2,23,900-க்கு அனுமதி வழங்கப்பட்டது.

(4) நிருவாகத் துறையில் பயன்படுத்துவதற்காக, 60 இரும்பு நிலை அடுக்கம் (பதிவேடு) வாங்க ரூ. 1,18,400-க்கும் சென்னை உயர் நீதிமன்ற ஆங்கிலப் பதிவேடு பிரிவில் பயன்படுத்துவதற்காக, இரும்பு நிலை அடுக்கம் (பதிவேடு) வாங்க ரூ. 64,000-க்கும் அனுமதி வழங்கப்பட்டது.

(5) மாவட்ட நீதிபதிகளுக்கும் சென்னை தலைமை பெருநகர் மாஜிஸ்டிரேட் பதவிக்கு இணையான அதிகாரிகளுக்கும் 21 நேர்முக உதவியாளர்களை ரூ. 1,340—75—1,715—90—2,435 என்ற சம்பள வீதத்தில் நியமிக்க அனுமதி வழங்கப்பட்டது.

(6) திருநெல்வேலி, முதன்மை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம், எழும்பூர், முதன்மை பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் ஆகிய நீதிமன்றம் ஒவ்வொன்றிலும் உள்ள நூலகத்தில் பயன்படுத்துவதற்காக புத்தகங்கள், அடுக்கங்கள் (அதாவது புத்தகங்களுக்கு ரூ. 10,000, அடுக்கங்களுக்கு ரூ. 10,000 என்று) வாங்குவதற்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 20,000 என்ற வீதத்தில், மொத்தம் ரூ. 40,000 வழங்க அரசு அனுமதி வழங்கியது.

(7) சென்னை, எழும்பூர், தலைமை பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் உள்ள பதிவுறு எழுத்தர் அறைக்கு இரும்பு நிலை அடுக்கம் (பதிவேடு) வழங்குவதற்கு அரசு ரூ. 30,000 வழங்கியது.

(8) சென்னை, சட்ட உதவி ஆலோசனைக் குழுவிற்கு கூடுதல் கட்டிடங்களைக் கட்டுவதற்கு ரூ. 2 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

(9) கரூர், துணை நீதிபதிக்கு குடியிருப்புகளைக் கட்டுவதற்கு ரூ. 3.30 இலட்சத்திற்கு அரசு அனுமதி வழங்கியது.

(10) 219 இளநிலை உதவியாளர்களை உதவியாளர்களாகவும், 17 செரஸ்தார் உதவியாளர்களை நிலை உயர்த்தவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(11) அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர் (நிலை II ) பதவியை (15 பதவியை) அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர் (நிலை I ) ஆக பதவி உயர்த்துவதற்கு அரசு அனுமதி வழங்கியது.

33. நீதிபதி பதவிகளை நியமித்தல்.—மாவட்ட முன்சீப்களை நியமித்தல்.—மாஜிஸ்டிரேட் பதவிகளிலிருந்து மாற்றல் மூலமும், வழக்குரைஞர்கள் மன்றத்திலிருந்து தேர்ந்தெடுப்பதன் மூலமும் நிரப்புவதற்கு மாவட்ட முன்சீப் பதவிகளில் அதிகமான அளவில் காலியிடங்கள் இருந்தன. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு விண்ணப்பதாரர்களை நேர் காணல் செய்து பின்னர் முன்சீப்களாக நியமிப்பதற்கு 128 பேர் அடங்கிய பட்டியலை அனுப்பியது. அக்குழு அனுப்பிய பட்டியலிலிருந்து 125 பேரை நியமித்து 1988 அக்டோபரில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

துணை நீதிபதிகள்.—மாவட்ட முன்சீப் பதவிகளிலிருந்து பதவி உயர்வு கொடுப்பதன் மூலம் துணை நீதிபதிகளாக நியமிப்பதற்கு தகுதியுள்ள ஆட்கள் இல்லாததால், துணை நீதிபதிகள் பதவித் தரத்தில் உள்ள காலியிடங்கள் சில காலம் நிரப்பப்பட முடியவில்லை. எனவே, இதிலுள்ள 28 காலியிடங்கள் பதவி உயர்வு மூலமும், நேரடி நியமனம் மூலமும் 1:1 என்ற விகிதாச்சாரத்தில் நிரப்பப்படலாம். அவ்வாறே 14 துணை நீதிபதிகள் பதவிகளை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கு விண்ணப்பங்களைக் கேட்டு, தகுதியான நபர்களின் பட்டியலை அனுப்ப வேண்டும் என்று உயர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்பட்டது. அரசின் பரிசீலனைக்கு 42 பெயர்கள் கொண்ட பட்டியலை உயர் நீதிமன்றம் அனுப்பியது உயர் நீதிமன்றம் அனுப்பிய பட்டியலிலிருந்து 14 பேரை நியமனம் செய்ய அரசு ஏற்பளித்தது. எஞ்சியுள்ள 14 துணை நீதிபதி காலியிடங்கள், மாவட்ட முன்சீப்களுக்கிடையே பதவி உயர்வு அளிப்பதன் மூலம் நிரப்பப்பட்டன.

34. 1986, 1987, 1988 ஆம் ஆண்டுகளில் சென்னை உயர் நீதிமன்றத்திலும், சார்நிலை நீதிமன்றங்களிலும் (சிவில், குற்றவியல்) தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள், தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள், தீர்ப்பாகாமலுள்ள வழக்குகள் ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

[1989 ஏப்ரல் 12



1989 ஏப்ரல் 12]

1986, 1987 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளில் சென்னை உயர்நீதிமன்றம், சார்நிலை நீதிமன்றங்கள் (சிவில்) ஆகியவற்றில் தாக்கல் செய்யப்பட்ட முடிவு செய்யப்பட்ட விசாரணையிலுள்ள வழக்குகள் பற்றிய புள்ளி விவரங்கள் வருமாறு :—

| வழக்குகளின் தன்மை. | 1986 | | | | 1987 | | | | 1988 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| உயர்நீதிமன்றம், சென்னை— | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 815 | 3,879 | 374 | 3,505 | 1,053 | 4,558 | 312 | 4,246 | 1,607 | 5,853 | 253 | 2,600 |
| 2 உயில் தொடர்பான அசல் தரப்பு வழக்குகள். | 21 | 102 | 2 | 100 | 52 | 152 | 10 | 142 | 36 | 178 | 6 | 172 |
| 3 இல்வாழ்க்கை தொடர்பான அசல் தரப்பு வழக்குகள். | 43 | 126 | 45 | 82 | 42 | 123 | 29 | 94 | 52 | 146 | 24 | 122 |
| 4 நடுவர் தீர்ப்புச் சட்டத்தின் கீழ் மனு. | 86 | 173 | 35 | 138 | 60 | 198 | 93 | 105 | 38 | 143 | 20 | 123 |
| 5 இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் மனு. | 389 | 556 | 294 | 262 | 414 | 676 | 364 | 312 | 361 | 673 | 327 | 346 |
| 6 ஏனைய அசல் தரப்பு மனுக்கள் .. | 158 | 404 | 138 | 266 | 191 | 457 | 136 | 321 | 161 | 482 | 126 | 356 |
| 7 நிறுவனங்கள் சங்கங்கள் தலைப்புத் தொடர்பான வழக்குகள். | 59 | 243 | 26 | 217 | 73 | 290 | 20 | 270 | 135 | 405 | 15 | 390 |
| 8 நிறுவனம் தொடர்பான ஏனைய மனுக்கள். | 32 | 81 | 39 | 42 | 58 | 100 | 25 | 75 | 23 | 98 | 13 | 85 |
| 9 தேர்தல் மனுக்கள் .. .. | 1 | 9 | 6 | 3 | .. | 3 | 1 | 2 | | 2 | 2 | [illegible] |
| 10 நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள். | 78 | 147 | 57 | 90 | 98 | 188 | 59 | 127 | 94 | 223 | 72 | 151 |
| 11 நிறைவேற்று மனுக்கள் .. | 158 | 189 | 118 | 71 | 146 | 217 | 121 | 96 | 83 | 179 | 69 | 110 |
| 12 நிறுவனம் தொடர்பான விண்ணப்பங்கள். | 770 | 1,349 | 488 | 861 | 753 | 1,576 | 265 | 1,311 | 590 | 1,901 | 206 | 1,681 |
| 13 அவதூறு தொடர்பான விண்ணப்பங்கள் | 309 | 569 | 315 | 254 | 365 | 619 | 209 | 410 | 468 | 876 | 337 | 539 |

| வழக்குகளின் தன்மை. (1) | 1986: இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (2) | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. (3) | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (4) | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. (5) |
|---|---|---|---|---|
| **பல்வகை விண்ணப்பங்கள்—** | | | | |
| 14 நொடிப்பு நிலை மனுக்கள் தொடர்பான கோப்புகள். | 351 | 474 | 281 | 193 |
| 15 முதலாம் மேல் முறையீடுகள் .. | 1,309 | 6,636 | 677 | 5,959 |
| 16 அசல்தரப்பு மேல் முறையீடுகள் .. | 289 | 1,009 | 166 | 843 |
| 17 முத்திரைப் பத்திரம் தொடர்பான மேல் முறையீடுகள். | 242 | 550 | 142 | 408 |
| 18 ரிட் மேல் முறையீடுகள் .. | 1,396 | 34,82 | 1,111 | 2,371 |
| 19 இரண்டாம் மேல் முறையீடுகள் .. | 2,288 | 11,816 | 1,018 | 10798 |
| 20 ஆணைக்கு எதிரான மேல்முறையீடுகள். | 1,214 | 4,724 | 427 | 4,297 |
| 21 மேல்முறையீட்டு ஆணைக்கு எதிரான மேல் முறையீடுகள். | 88 | 385 | 16 | 369 |
| 22 சிவில் மறு விசாரணை மனுக்கள் .. | 4,284 | 12470 | 3,418 | 9,052 |
| 23 வரி வழக்குகள் .. | 2,039 | 10,334 | 430 | 9,904 |
| 24 வரி வழக்கு மனுக்கள் .. | 571 | 1,080 | 422 | 658 |
| 25 பிற நீதிமன்றங்களிலிருந்து அனுப்பப்படுகின்ற வழக்குகள். | 10 | 61 | .. | 61 |
| 26 இல்வாழ்க்கைத் தொடர்பான வழக்குகள். | 23 | 85 | .. | 85 |
| 27 ரிட் மனுக்கள் .. | 14 503 | 51,615 | 8,113 | 43502 |
| 28 உச்ச நீதிமன்ற (இசைவு மனுக்கள்) | 62 | 655 | 546 | 109 |
| 29 தனி நடுவர் மன்ற மேல்முறையீடுகள் | 53 | 695 | 5 | 690 |
| 30 அவதூறு தொடர்பான மேல்முறையீடுகள். | 9 | 19 | 3 | 16 |



| இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (6) | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. (7) | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (8) | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. (9) | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (10) | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை (11) | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (12) | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. (13) |
|---|---|---|---|---|---|---|---|
| [illegible] | 562 | 229 | 333 | 516 | 849 | 484 | 365 |
| 1,129 | 7,088 | 798 | 6,290 | 1,519 | 7,809 | 234 | 7,575 |
| 216 | 1,059 | 127 | 932 | 208 | 1,140 | 196 | 944 |
| 179 | 587 | 108 | 479 | 202 | 681 | 380 | 301 |
| 2,339 | 4,710 | 1,554 | 3,156 | 1,665 | 4,821 | 1,493 | 3,328 |
| 2,957 | 12,755 | 1,103 | 11,652 | 1,771 | 13,423 | 1,112 | 12,311 |
| 1,109 | 5,409 | 864 | 4,542 | 1,192 | 5,734 | 361 | 5,373 |
| 65 | 434 | 48 | 386 | 76 | 462 | 120 | 342 |
| 4,869 | 13921 | 4,054 | 9,867 | 3,465 | 13332 | 4,018 | 9,34 |
| 1,420 | 11,324 | 191 | 11183 | 1,319 | 12443 | 306 | 12137 |
| 377 | 1,035 | 393 | 642 | 246 | 888 | 123 | 765 |
| 11 | 72 | .. | 72 | 12 | 84 | .. | 84 |
| 42 | 127 | 35 | 92 | 45 | 137 | 25 | 112 |
| 13,342 | 56,844 | 9,655 | 47,189 | 16,196 | 63,385 | 7,348 | 56,402 |
| 26 | 135 | 20 | 115 | 35 | 150 | 31 | 119 |
| 25 | 715 | 8 | 707 | 32 | 739 | 553 | 186 |
| 13 | 29 | 6 | 23 | 4 | 27 | 4 | 23 |

| வழக்குகளின் தன்மை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 31 வணிகக்குறி தொடர்பான மேல் முறையிடுகள். | 10 | 42 | 1 | 41 | 5 | 46 | .. | 46 | 6 | 52 | 2 | 50 |
| 32. வணிகக்குறி தொடர்பான இரண்டாம் மேல் முறையீடுகள். | 1 | 4 | .. | .. | 4 | .. | 4 | .. | 4 | .. | 4 | 1 | 3 |
| 33 பல்வகை வழக்குகள் .. .. | 41,396 | 97,750 | 31,197 | 66,553 | 40,944 | 1,07,497 | 45,738 | 61;759 | 42,163 | 1,03,922 | 27,501 | 74,421 |
| மாநகர சிவில் நீதி மன்றம், சென்னை:— | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. .. | 10,617 | 26,329 | 10,877 | 15,452 | 11,800 | 27,252 | 10,056 | 17,196 | 13,996 | 31,192 | 8,320 | 22,872 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் .. | 33,537 | 57,806 | 33,132 | 24,674 | 21,495 | 46.169 | 21,378 | 24,791 | 14,087 | 38,878 | 19,094 | 19,784 |
| 3 சிவில் மேல் முறையீடுகள் .. | 577 | 1,149 | 698 | 451 | 771 | 1,222 | 652 | 570 | 647 | 1,217 | 623 | 594 |
| 4 சிவில் பல்வகை மேல்முறையீடுகள் | 263 | 462 | 291 | 171 | 234 | 405 | 270 | 135 | 258 | 385 | 194 | 191 |
| 5 நிறைவேற்று நடைமுறைகள் .. | 2,864 | 5,710 | 2,602 | 3,108 | 3,143 | 6,251 | 2,578 | 3,653 | 3,397 | 7,050 | 2,223 | 4,827 |
| சிறு வழக்கு நீதிமன்றம், சென்னை— | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. .. | 4,317 | 7,833 | 5,172 | 2,661 | 7,161 | 9,822 | 9,987 | 5,435 | 7,933 | 15,368 | 4,967 | 10,401 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள் .. | 21,089 | 27,692 | 19,295 | 8,397 | 20,172 | 28,569 | 19,141 | 9,428 | 8,044 | 17,472 | 4,846 | 12,626 |
| 3 ஆணை நிறைவேற்று நடைமுறைகள் | 670 | 2,252 | 562 | 1,690 | 1,804 | 3,474 | 2,435 | 1,149 | 289 | 1,438 | 609 | 830 |
| மாவட்ட நீதிமன்றங்கள்.— | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. .. | 1,622 | 1,801 | 1,564 | 237 | 1,689 | 1,926 | 1,604 | 322 | 1,179 | 1,501 | 1,130 | 371 |
| 2 சிவில் மேல்முறையீடுகள் .. .. | 2,986 | 5,299 | 3,057 | 2,242 | 3,542 | 5,784 | 3,441 | 2,343 | 3,386 | 5,729 | 3,651 | 2,078 |
| 3 சிவில் பல்வகை மேல்முறையீடுகள் | 1,526 | 2,581 | 1,254 | 1,327 | 1,793 | 3,160 | 1,476 | 1,684 | 1,470 | 3,154 | 1 664 | 1,490 |
| 4 சிவில் பல்வகை வழக்குகள் .. | 34,144 | 37,939 | 33,253 | 4,686 | 33,315 | 38,001 | 33,337 | 4,624 | 33,250 | 37,874 | 32,735 | 5 239 |
| 5 ஆணை நிறைவேற்றுமனுக்கள் .. | 439 | 562 | 351 | 211 | 492 | 703 | 454 | 249 | 452 | 701 | 468 | 233 |
| 6 நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள். | .. | 1 | 1 | .. | 4 | 4 | 1 | 3 | 3 | 6 | 4 | 2 |

| வழக்குகளின் தன்மை. (1) | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (2) | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. (3) | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (4) | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. (5) | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (6) | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. (7) | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (8) | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. (9) | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்டும் வழக்குகளின் எண்ணிக்கை. (10) | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. (11) | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. (12) | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. (13) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **துணை நீதிமன்றங்கள்:—** | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் .. | 13,917 | 31,441 | 11,579 | 19,862 | 16,342 | 6,204 | 11,282 | 24,922 | 16,981 | 41,703 | 11,789 | 33,114 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள். | 1,12,340 | 1,44,289 | 1,06,378 | 37,911 | 1,21,222 | 1,59,133 | 1,11,588 | 47,545 | 1,13,405 | 1,60,905 | 1,03,736 | 52,714 |
| 3 சிவில் மேல்முறையீடுகள் | 4,354 | 9,881 | 4,320 | 5,561 | 4,722 | 10,283 | 4,030 | 6,253 | 4,357 | 10,610 | 3,828 | 6,772 |
| 4 சிவில் பல்வகை மேல் முறையீடுகள். | 1,935 | 5,052 | 2,039 | 3,013 | 1,730 | 4,743 | 1,487 | 3,254 | 1,818 | 5,072 | 1,381 | 3,691 |
| 5 ஆணை நிறைவேற்று மனுக்கள். | 7,088 | 12,717 | 6,535 | 6,132 | 6,945 | 13,127 | 5,802 | 9,325 | 6,256 | 13,581 | 4,976 | 8,605 |
| 6 நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள். | 1,333 | 2,008 | 839 | 1,169 | 134 | 1,303 | 355 | 948 | 436 | 1,384 | 201 | 1,093 |
| மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள்: | | | | | | | | | | | | |
| 1 சிவில் வழக்குகள் | 19,561 | 2,18,663 | 80,985 | 1,37,678 | 1,04,392 | 2,42,070 | 88,208 | 1,53,862 | 1,03,858 | 2,57,720 | 87,637 | 1,70,083 |
| 2 சிவில் பல்வகை வழக்குகள். | 2,65,488 | 3,79,844 | 2,56,401 | 1,23,443 | 2,95,963 | 4,19,406 | 2,73,745 | 1,45,661 | 2,53,835 | 3,99,496 | 2,48,218 | 1,51,278 |
| 3 நிறைவேற்று மனுக்கள் | 41,367 | 85,718 | 42,723 | 42,995 | 29,048 | 72,043 | 37,254 | 34,789 | 46,002 | 80,791 | 36,063 | 44,728 |
| 4 நொடிப்பு நிலை தொடர்பான மனுக்கள். | 185 | 401 | 179 | 222 | 73 | 295 | 187 | 105 | 58 | 168 | 92 | 71 |

**சென்னை உயர்நீதி மன்றத்திலும் (குற்றவியல்) சார்நிலை நீதிமன்றங்களிலும், 1986 1987 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளில் தொடரப்பட்ட, முடிவு செய்யப்பட்ட விசாரணையிலுள்ள வழக்குகள் பற்றிய புள்ளி விவரங்கள்.—**

| | 1986. | | | | 1987. | | | | 1988. | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வழக்குகளின் தன்மை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாதவழக்குகளின் எண்ணிக்கை | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | முடிவு செய்வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| **உயர்நீதிமன்றம், சென்னை:** | | | | | | | | | | | | |
| 1 பிற நீதிமன்றங்களிலிருந்து அனுப்பப்படும் விசாரணைகள். | 14 | 24 | 18 | 6 | 16 | 22 | 10 | 12 | 6 | 18 | 10 | 8 |
| 2 குற்றவியல் வழக்கு மேல் முறையீடுகள். | 1,196 | 4,176 | 612 | 3,564 | 1,052 | 4,616 | 731 | 3,885 | 672 | 4,557 | 447 | 4,110 |
| 3 குற்றவியல் மறு விசாரணை மனுக்கள். | 882 | 3,433 | 824 | 2,609 | 840 | 3,449 | 845 | 2,604 | 664 | 3,268 | 502 | 2,76 |
| 4 வேறு நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படும் வழக்குகள். | | | | | | | | | | | | |
| 5 பல்வகை வழக்குகள் | 15,221 | 20,762 | 9,411 | 11,351 | 14,213 | 25,564 | 13,371 | 12,173 | 12,078 | 24,251 | 10,510 | 13,741 |
| **செசன்ஸ் நீதிமன்றங்கள்:** | | | | | | | | | | | | |
| 1 செசன்ஸ் வழக்குகள் | 800 | 2,858 | 2,037 | 821 | 2,520 | 3,341 | 2,436 | 905 | 5,788 | 6,693 | 3,437 | 3,256 |
| 2 குற்றவியல் வழக்கு மேல் முறையீடுகள். | 3,139 | 5,795 | 4,046 | 1,749 | 3,192 | 4,941 | 3,021 | 1,920 | 3,398 | 5,318 | 2,918 | 2,400 |
| 3 குற்றவியல் மறு விசாரணை மனுக்கள். | 966 | 1,570 | 1,010 | 560 | 1,139 | 1,699 | 978 | 721 | 1,014 | 1,735 | 999 | 736 |
| **பெருநகர மாஜிஸ்டிரேட்டுகள் நீதிமன்றம்:** | | | | | | | | | | | | |
| முறையான வழக்கு விசாரணைகள். | 2,22,879 | 2,46,522 | 2,17,531 | 28,991 | 2,04,532 | 2,33,523 | 1,98,248 | 35,275 | 2,74,816 | 3,10,091 | 2,77,560 | 30,531 |
| **நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள் நீதிமன்றங்கள்:** | | | | | | | | | | | | |
| 1 மேல் முறையீடுகள் | 875 | 1,202 | 948 | 254 | 794 | 1,048 | 819 | 229 | 596 | 825 | 678 | 147 |
| 2 ஏனைய சட்ட வழக்குகள். | 5,21,655 | 6,08,546 | 4,98,638 | 1,09,908 | 5,49,118 | 6,59,026 | 5,32,693 | 1,26,333 | 4,86,098 | 6,12,431 | 4,69,7[illegible] | [illegible] |
| 3 இந்திய தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் வரும் வழக்குகள். | 1,03,477 | 1,72,513 | 96,043 | 76,470 | 1,00,231 | 1,76,701 | 86,990 | 89,711 | 1,06,58 | 1,96,293 | 97,528 | 98,765 |
| 4 குற்றவியல் நடைமுறைக் கோவை வழக்குகள் மற்றும் பல்வகை வழக்குகள். | 21,383 | 24,098 | 21,030 | 3,068 | 41,667 | 44,735 | 41,145 | 3,590 | 43,629 | 47,219 | 43,434 | |

1989 ஏப்ரல் 12]

## இணைப்பு II.

## அத்தியாயம் 1.

## தமிழ்நாடு சிறைகள் நிருவாகம்.

## 'மானியக் கோரிக்கை எண் 14. சிறைச்சாலைகள்'' (குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.)

## 1989–90.

இம்மாநிலத்திலுள்ள எட்டு மத்திய சிறைகள், புதுக்கோட்டையில் உள்ள இளைஞர் சீர்திருத்தப் பள்ளி, சென்னை அருகே புழலில் உள்ள ஆடவர் பிற்காப்பு இல்லம், வேலூர் மற்றும் மதுரையில் பெண்களுக்கான இரு தனிச் சிறைகள், சேலம், திருச்சிராப்பள்ளி, கொக்கிரகுளம், செங்கற்பட்டு, கடலூர், கோயம்புத்தூர், ஆகிய ஆறு இடங்களில் உள்ள தனிச் கிளைச் சிறைகள், சிங்காநல்லூரில் உள்ள திறந்த வெளிச்சிறை, சேலம், மத்திய சிறையோடு இணைக்கப்பட்டுள்ள பண்ணைச் சிறை, இம்மாநிலத்திலுள்ள 114 கிளைச் சிறைகள் ஆகியவற்றின் அமைப்பு, கட்டுப்பாடு, நிருவாகம் முதலியவற்றைச் சிறைத் துறை கவனிக்கிறது. குற்றவாளிகள் நன்னடத்தைக் காண்காணிப்புப் பிரிவும் இத்துறையின் பொறுப்பில் இயங்குகிறது, குற்றவாளிகள் மீண்டும் குற்றம் செய்யும் நிலைக்குத் திரும்புவதைத் தடுத்து நிறுத்தவும், அவர்கள் விடுதலையான பின்னர். சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நன்மக்களாக வாழவும், மீண்டும் சமூகத்துடன் இணைந்து செயற்படவும், உரிய பயிற்சிகளை நல்கி, சீர்திருத்தி, அவர்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதே அரசின் தலையாய நோக்கமாகும். முன்னதாக மருத்துவப் பணிகள் குடும்ப நலத்துறை இயக்குநரின் கட்டுப்பாட்டிலிருந்த 10 அரசு மறுவாழ்வு இல்லங்களும் சமூகநலத்துறையின் கட்டுப்பாட்டில் இருந்த மேல்பாக்கத்திலுள்ள அரசு காப்பு முகாமும், மேம்பட்ட நிர்வாகம் மற்றும் கண்காணிப்பிற்காக சிறைத் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

### 1. சிறைகளின் வகைப்பாடு:

இம்மாநிலத்திலுள்ள சிறைகள் பின்வருமாறு ஐந்து வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.—

(1) மத்திய சிறைகள்;
(2) மகளிர் தனிச்சிறைகள்;
(3) திறந்தவெளிச் சிறைகள்;
(4) தனிக் கிளைச் சிறைகள்;
(5) கிளைச் சிறைகள்.

[1989 ஏப்ரல் 12

பொதுவாக, ஒரு திங்களுக்கு மேலாகத் தண்டனை அடைந்தவர்கள் மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். விசாரணைக் கைதிகளும், ஒரு திங்களுக்கும் குறைவாக தண்டனை பெற்றவர்களும், கிளைச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். வயது வந்த கைதிகள் இளங் குற்றவாளிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர். ஆண் கைதிகளும், பெண் கைதிகளும், தனித் தனிச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். குற்றம் செய்வதையே தொழிலாகக் கொண்டவர்கள் சேலம் மத்திய சிறையில் வைக்கப்படுகின்றனர். வழக்கமாகச் சிறைக் குற்றம் செய்யும் சிறைக் கைதிகள் இதர சிறைக் கைதிகளைக் கெடுத்து விடக்கூடாது என்பதற்காக, மற்றவர்களிடமிருந்து பிரிந்து வைக்கப்படுகின்றனர். இத்தகைய சிறைக் கைதிகள் கடலூர் மத்திய சிறையில் வைக்கப்படுகின்றனர். ஒரு திங்களுக்கும் மேலாகச் சிறைத் தண்டனை பெற்ற பெண் கைதிகள் வேலூர் மற்றும் மதுரையில் உள்ள பெண்கள் தனிச் சிறையில் வைக்கப்படுகின்றனர். இச்சிறைகள் பெண்களுக்கே உரிய சிறைகளாகும். பெண்களே இங்கு அதிகாரிகளாக இருந்து இச்சிறைகளை நிருவகிக்கின்றனர். இளஞ்சிறைக் கைதிகளைக் காவலில் வைத்திருப்பதற்காக புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளி இயங்குகிறது. மன நோய் வாய்ப்பட்ட கைதிகள், சென்னை அரசினர் மனநலக் காப்பகத்தில் சேர்க்கப்படுகின்றனர். தொழு நோய்க் கைதிகளுக்கு தனிப்பட்ட முறையில் சிகிச்சையளிக்க தனிச் சிறைக் கூடங்கள் வேலூர் மத்திய சிறையில் உள்ளன.

சிறைத்துறையின் பொறுப்பிலுளள பல்வேறு வகைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் வருமாறு.—

| | | |
|---|---|---|
| (1) | மத்திய சிறைகள் | 8 |
| (2) | மகளிர் தனிச்சிறைகள் | 2 |
| (3) | இளைஞர் சீர்திருத்தப்பள்ளி | 2 |
| (4) | தனிக் கிளைச் சிறைகள் | 6 |
| (5) | கிளைச் சிறைகள் | 114 |
| (6) | திறந்த வெளிச்சிறைகள் | 1 |
| (7) | பண்ணைச் சிறைகள் | 1 |
| (8) | ஆடவர் பிற்காப்பு இல்லம் | 1 |
| (9) | அரசு மறுவாழ்வு இல்லங்கள் | 10 |
| (10) | அரசு காப்பு முகாம் | 1 |

கிளைச் சிறைகள் மற்றும் மத்திய சிறைகளில் மொத்தம் 18,228 பேருக்கு இட வசதியளிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அரசு மறுவாழ்வு இல்லங்களில் 4,250 பேருக்கு (பெரியவர்கள்—4,000; சிறுவர்கள்—250) இட வசதியளிக்க அனுமதியளிக்கப்பட்டு இருக்கிறது, மேல்பாக்கத்திலுள்ள அரசு காப்பு முகாமில் 950 பேருக்கு (ஆண்கள்—770; பெண்கள்—180) இட வசதி அளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சிறைத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்கள் குறித்த பட்டியலொன்று இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.



1989 ஏப்ரல் 12]

## 2. நிருவாகம்:

சிறைத் துறையின் நிருவாக அமைப்பைக் காட்டும் விளக்கப் படம் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது. இத்துறையில் உள்ள பதவிகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை ஒன்று இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1978–79 முதல் 1987–88 வரையிலான ஆண்டுகளில் சிறைத் துறையின் செலவினங்கள், 1988–89 ஆம் ஆண்டுக்குரிய திருத்திய மதிப்பீடு, 1989–90 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, 1978–79 முதல் 1987–88 ஆம் ஆண்டு வரை சிறைத் துறையின் ''வரவினங்கள்'', 1988–89 ஆம் ஆண்டுக்குரிய திருத்திய மதிப்பீடு, 1989–90 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ஆகியவை குறித்த விவரங்கள் இணைப்பு 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.—

## 3. (1) திறந்தவெளிச் சிறைகள்:

இம்மாநிலத்திலுள்ள ஒரே ஒரு திறந்தவெளிச் சிறை தற்போது கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூரில் உள்ளது. இதில் 100 கைதிகள், தங்குவதற்கான இடவசதி உள்ளது. மேலும், சேலம் மத்திய சிறையுடன் பண்ணைச் சிறை ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

(2) திறந்தவெளிச் சிறைகளின் நோக்கங்கள் பின்வருமாறு:

(அ) சிறைகளில் நெருக்கடியைத் தவிர்த்தல்;

(ஆ) சிறைக் கைதிகளின் எதிர்காலப் புது வாழ்விற்காக, அவர்களுக்குச் சரியான முறையில் உழவுத் தொழிலில் பயிற்சியளித்தல்;

(இ) நன்முறையில் நடந்துகொள்ளும் கைதிகளுக்கு நம்பிக்கையின்பேரில் அவர்களுக்கு ஓரளவு உரிமை அளித்தல்;

(ஈ) கைதிகள் குறைந்த அளவு காவலிலுள்ள சிறைகளில் அடைத்து வைக்கப்பட வேண்டும்; சிறைகளில் அவர்களை நல்ல முறையில் நடத்த வேண்டும்; அவர்கள் மீதான கட்டுப்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பன போன்ற கோட்பாடுகளைச் செயலுக்குக் கொண்டு வருதல்.

சிங்காநல்லூரிலுள்ள திறந்தவெளிச் சிறையில் சிறைக்கைதிகளுக்கு நவீன வேளாண்மை முறைகளில் பயிற்சியளிப்பதற்காக, உதவி வேளாண்மை அலுவலர் ஒருவர் உள்ளார். ஏற்கெனவே இயங்கி வந்த திறந்த வெளிச்சிறை, நீலகிரி தெற்கு தோட்டம்

[1989 ஏப்ரல் 12

நிலங்கள், கட்டிடங்கள் முதலியவற்றைப் புதிய தமிழ்ப் பல்கலைக் கழகம் தொடங்க வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, திருமலை சமுத்திரத்தில் ஒரு புதிய திறந்தவெளிச் சிறை ஆரம்பிக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரப்படுகின்றன.

**4. கைதிகளின் வகைப்பாடும், சிறப்புரிமைகளும்:**

சிறைகளில் உள்ள கைதிகளுக்காக - எ', 'பி' என்ற இரு பிரிவுகள் மட்டுமே உள்ளன. காவலில் வைக்கப்படுவதற்கு விசாரணையிலுள்ள கைதிகளுக்குச் சிறப்பு வகுப்பு நீதிமன்றத்தால் அளிக்கப்படுகிறது. ஒரு கைதியின் சமூகத் தகுதி, கல்வி, வாழ்க்கைத் தரம், நடத்தை, முன் வரலாறு, சொந்தமாக வைத்துள்ள சொத்து விவரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, அக்கைதிக்கு 'எ' வகுப்பு அரசால் வழங்கப்படுகிறது. சமூகத் தகுதி, கல்வி பழக்க வழக்கம், ஆகியவற்றால் உயர்தர வாழ்க்கை முறையில் பழக்கப்பட்டிருக்கும் சிறைக் கைதிகள் 'எ' வகுப்புப் பெறத் தகுதியுடையவராவர். முற்றிலும் நாகரிகமற்ற முறையில் அல்லது, நன்னடத்தையற்ற முறையில் நடந்து கொண்டு குற்றத்தைச் செய்ததற்காகத் தண்டிக்கப்பட்ட எவருக்கும் 'எ' வகுப்பு அளிக்கப்பட மாட்டாது. சமுதாயத்திற்கு எதிராகக் குற்றங்கள் புரிந்த கைதிகளும், சிறையில் 'எ' வகுப்புப் பெறத் தகுதியுடையவரல்லர். 'எ' வகுப்பைச் சேராத இதர சிறைக் கைதிகள் 'பி' வகுப்பைச் சேர்ந்தவர்களாவர்.

**5. (அ) (1) உணவு—சாதாரண உணவு முறை:**

'எ' வகுப்புச் சிறைக் கைதிகளுக்கு அளிக்கப்படும் உணவு பின்வரும் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:—

(1) சைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள்;

(2) சைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதிகள்;

(3) அசைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள்;

(4) அசைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதிகள்;

'எ' வகுப்புக் கைதிகள் தங்களுடைய சொந்தச் செலவில் பழங்களையும், பிஸ்கட்டு, கோகோ, ஹார்லிக்ஸ் போன்ற உணவுப் பொருட்களையும் வாங்குவதற்கு அனுமதியளிக்கப்படுகிறார்கள் 'பி' வகுப்புச் சிறைக் கைதிகளுக்கு வரையறுத்த அளவிற்கு சைவ உணவு மட்டுமே வழங்கப்படுகிறது. மருத்துவ அலுவலர், கைதிகளுக்கு மருத்துவக் காரணங்களுக்காக, பால் இறைச்சி, முட்டை, ரொட்டி, வெண்ணெய் மற்றுபழங்கள், ஆகியவற்றைக் கொடுக்க அனுமதி வழங்கலாம்.



1989 ஏப்ரல் 12]

**(2) திருத்தியமைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட உணவு :**

தமிழ்நாடு சிறைச் சீர்திருத்தக் குழு பரிந்துரைத்ததின் பேரிலும், ஏழாவது நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரிலும், மத்திய அரசால் அளிக்கப்பட்ட பண உதவியைக் கொண்டும் 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் திருத்தப்பட்ட மேம்படுத்தப்பட்ட உணவு முறை, அனைத்து மத்திய சிறைகள், மகளிர் தனி சிறைகள், தனிக் கிளைச் சிறைகள் மற்றும் திறந்தவெளிச் சிறைகளில் அடைக்கப்படும் அனைத்து 'பி' வகுப்பு தண்டனை பெற்ற கைதிகளுக்காகவும் மற்றும் சாதாரண காவல் மற்றும் விசாரணையிலுள்ள கைதிகளுக்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்புதிய மேம்படுத்தப்பட்ட, திருத்தப்பட்ட உணவு முறையின் கீழ், புளிச் சாதம், தேங்காய் சாதம் மற்றும் தயிர் சாதம் போன்ற பல்வேறு உணவுகள் பொருத்தமான கூட்டுக்கறியுடன் வழங்கப்படுகின்றன. இவ்வுணவை மேலும் சத்துக் கொண்டதாக மாற்றவும், சிறைக் கைதிகள் விரும்பும் வகையில் செய்யவும், 1984 ஆம் ஆண்டு செப்டம்பரில் இவ்வுணவு வகையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. இப் புதிய திருத்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட உணவு முறைக்கு முன்பிருந்த உணவு முறையின் கீழ் வழங்கப்பட்டு வந்த சோளம் போன்ற தானியங்கள் முற்றிலுமாக நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக மில் அரிசி வழங்கப்பட்டு வருகிறது. கைக்குத்தல் அரிசியினால் தயாரிக்கப்பட்ட உணவை சிறைக் கைதிகள் விரும்பாததால், அரசு ஜூன் 1986-ல் இம்மாநில சிறைகளில் உள்ள சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படும் கைக்குத்தல் அரிசிக்குப் பதில் மில் அரிசி வழங்க ஆணை பிறப்பித்துள்ளது.

**(3) உணவுக்கான செலவு:**

(அ) பல்வேறு வகைச் சிறைக் கைதிகளுக்கு நாளொன்றுக்கு ஒருவருக்கு உணவுக்காக ஆகும் தோராயமான செலவு குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது,—

| (1) 'எ' வகுப்பு சிறைக் கைதிகள்: | நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு. ரூ. |
|---|---|
| சைவ உணவருந்தும் வேலை செய்யும் சிறைக் கைதி ஒருவருக்கு .. .. | 14.87 |
| சைவ உணவருந்தும் வேலை செய்யா சிறைக் கைதி ஒருவருக்கு .. .. | 13.85 |
| அசைவ உணவருந்தும் வேலை செய்யும் சிறைக் கைதி ஒருவருக்கு .. .. | 14.30 |
| அசைவ உணவருந்தும் வேலை செய்யா சிறைக் கைதி ஒருவருக்கு .. .. | 12.02 |

[1989 ஏப்ரல் 12

(2) 'பி' வகுப்புச் சிறைக் கைதிகள், சாதாரண காவலில் வைக்கப்பட்டவர்கள் விசாரணையிலுள்ள சிறைக் கைதிகள் ஆகியோருக்கு திருத்தியமைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட உணவு வகைகள் வழங்குவதற்கான செலவு வருமாறு.—

| | அரிசி உணவு. | கோதுமை உணவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. பை. | ரூ. பை. |
| [illegible] செய்வோர் மற்றும் [illegible]லை செய்யாதோர் | 7.34 | 7.28 |

### (4) சிறப்புணவு:

பொங்கல், சுதந்திர தினம் ஆகிய நாட்களில் சிறைக் கைதிகள் ஒவ்வொருவருக்கும் ரூ. 2 கூடுதல் செலவில் சிறப்புணவு வழங்கப் படுகிறது.

### (ஆ) உடையும், படுக்கையும்:

'ஏ' வகுப்புச் சிறைக் கைதிகள் சொந்தப் படுக்கையைப் பயன்படுத்தவும், வேலை நேரத்தைத் தவிர, மற்ற நேரங்களில் சொந்த உடையைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். வேலை நேரத்தில் அவர்கள் சிறைச்சாலை உடையில் இருக்க வேண்டும். 'ஏ' வகுப்புச் சிறைக் கைதிகள் அவர்களின் உறவினர் களைக் காணும்போது தங்கள் சொந்த உடைகளை அணிய லாம். 'பி' வகுப்புச் சிறைக் கைதிகள் எல்லா நேரங்களிலும் சிறைச்சாலை உடைகளையே அணிய வேண்டும்.

### (இ) சோப்பு முதலியன:

எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக சிறைக் கைதி ஒவ் வொருவருக்கும் திங்களுக்கொரு முறை 30 கிராம் எண்ணெய் வழங்கப்படுகிறது. மேலும், அவர்களுக்குச் சிகைக்காய்த் தூளும் சலவை சோப்பும் வழங்கப்படுகிறது. கோயம்புத்தூர் மத்திய சிறையிலுள்ள நூற்பாலையில் வேலை செய்யும் சிறைக் கைதி களுக்குக் கூடுதல் எண்ணெய் வழங்கப்படுகிறது. நன்னடத்தை உடைய அனைத்து வகுப்புச் சிறைக் கைதிகளும் தங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து இரு வாரங்களுக்குத் தேவையான சோப்பு, எண்ணெய், பற்பொடி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.



1989 ஏப்ரல் 12]

### (ஈ) நேர்காணலும், கடிதங்களும் :

'ஏ' வகுப்பு சிறைக் கைதிகள் வாரத்திற்கு ஒரு முறை கடிதம் எழுதுவதற்கும், பெறுவதற்கும், இரு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு சமயத்தில் மூவருடன் அரை மணி நேரம் கலந்துரையாட வும் அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்பு சிறைக் கைதிகள் மாதத்திற்கு இரு கடிதங்கள் எழுதுவதற்கும், பெறுவதற்கும், மேலும் இரு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு சமயத்தில் மூவருடன் அரை மணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

### (உ) செய்தித் தாள்களும், குறித்த கால வெளியீடுகளும் :

அரசுச் செலவில் ''பி'' வகுப்புச் சிறைக் கைதிகளுக்குக் கீழ்க் கண்ட நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன:—

(1) தினமணி.
(2) முரசொலி.
(3) தினத்தந்தி.
(4) தினமலர்.
(5) இந்து.
(6) தினகரன்.

'ஏ' வகுப்புச் சிறைக் கைதிகள் தங்கள் சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த செய்தித் தாள்களை வாங்கிக்கொள்வதற்கு அனு மதிக்கப்படுகின்றனர். அனைத்து வகுப்புச் சிறைக் கைதிகளும் தங்கள் சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த பத்திரிகைகளை வாங்கிக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றனர். இது தவிர, சிறைக் கைதிகளின் பயனுக்காக நல்ல தரமான புத்தகங்கள் சிறை நூலகத்தில் வைக்கப்படுகின்றன. உள்ளூர் நூலக ஆணைக்குழுவிடமிருந்தும், புத்தகங்கள் பெறப்பட்டு சிறைக்கைதி களுக்கு வழங்கப்படுகின்றன. சிறைக் கண்காணிப்பாளர்கள் தேவையெனக் கருதினால் மாவட்டக் கல்வி அதிகாரி மற்றும் அவர்களது உதவியாளர்களைக் கலந்தாலோசித்துத் தயாரிக்கப் பட்ட பயனுள்ள புத்தகங்களின் பட்டியலிலுள்ள புத்தகங்களை வாங்குவதற்கு இயலும் வகையில் அப்பட்டியல் தயாரிக்கப் படுகிறது.

### (ஊ) இதர சலுகைகள் :

'ஏ' வகுப்புச் சிறைக் கைதிகள் மரச்சாமான்கள், கொசு வலை ஆகியவற்றைப் பயன்படுத்தவும், சமையலுக்கும், அருந்து வதற்கும், தேவைப்படும் அவர்களது சொந்த பாத்திரங்கள், புகையிலை ஆகியவை போன்ற பிற வசதிகளை பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். தண்டனைச் சிறைக் கைதிகள் அவர் களுடைய நன்னடத்தையைப் பொறுத்தும், அவர்கள் அனுபவிக்க

துள்ள தண்டனைக் காலத்தைக் கணக்கிட்டும், இரவுக் காவற்காரர்கள் மேற்பார்வையாளர்கள் மற்றும் காவலர்கள் என நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆவர். சிறை கைதிகளின் தேவையை நிறைவு செய்வதற்காக அனைத்து மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டையில் உள்ள பார்ஸ்டல் பள்ளியிலும் முடிவெட்டுபவர்கள் உள்ளனர். சிறை சீர்திருத்தம் குறித்த அனைத்திந்திய குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் நவீன காலத்திற்கேற்ப இரு துண்டுகளும், இரு ஜோடி உடைகளும், வழங்கப்படுவதற்குப் பதிலாக இரு துண்டுகளும், மூன்று ஜோடி உடைகளும், மூன்று ஜோடி உள்ளாடைகளும் (பாவாடை, சோளி, கச்சை) பெண் கைதிகளுக்கு அளிக்கப்பட வேண்டுமென அரசு கட்டளையிட்டுள்ளது.

பாலூட்டும் பெண் கைதிகளுக்கு 1½ லிட்டர் பால் அளிக்கப்படவேண்டுமென்றும், பெண் கைதிகளுடன் இருக்கும் ஓராண்டுக்கும் குறைவான குழந்தைகளுக்கு மருத்துவ அதிகாரியின் பரிந்துரையின் பேரில் ''கிளாஸ்கோ'' அல்லது ''அமுல்'' போன்ற குழந்தை உணவு அளிக்கப்பட வேண்டுமென்றும் அரசு கட்டளையிட்டுள்ளது. அரசு தற்போது ''பி'' வகுப்பு சிறைவாசிகள் தங்களது துணிகளைச் சிறையில் உள்ள சலவையகத்தில் அவர்களது செலவில் சலவை செய்துகொள்ள அனுமதி வழங்கியுள்ளது.

## (எ) பொழுது போக்கு வசதிகள் :

ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் சிறை விடுமுறை நாட்களில் மத்தியச் சிறையிலுள்ள எல்லாச் சிறைக் கைதிகளும், கைப்பந்து கபடி, பூப்பந்து ஆகிய விளையாட்டுக்களை விளையாடவும், வேலூரிலுள்ள பெண்கள் தனிச்சிறையில் பெண் சிறைக் கைதிகள் வளைபந்து விளையாடவும் அனுமதிக்கப்படுகின்றனர். ஆழ்நிலை தியான முறை, அனைத்து மத்திய சிறைச் சாலைகளிலும் வேலூர் பெண்கள் தனிச் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், மகரிஷீ நிறுவனம் மூலம் விரும்பும் சிறைக் கைதிகளுக்கு கற்பிக்கப்படுகின்றது. சென்னையிலுள்ள மத்திய சிறைக் கைதிகளுக்கு, சென்னை யோகாசன ஆலயம் மூலம், யோகாசன வகுப்புகள் நடத்த அரசு அனுமதித்துள்ளது. தற்போது மத்திய சிறை, சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் பொது மக்கள் சேவை செய்பவர்களால் தொலைக்காட்சிப்பெட்டி சிறைவாசிகளின் உபயோகத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

## 6. சிறைக் கைதிகளுக்கான செய் தொழிலும், சிறைகளில் தொழிற்சாலைகளும் :

கடுங்காவல் தண்டனை பெற்ற சிறைக் கைதிகள் சிறையில் பலவித வேலைகளில் அமர்த்தப்படுகிறார்கள். சிறைக் கைதிகள் விடுதலையடைந்த பின்பு அவர்களுக்குப் புது வாழ்வு கிடைக்க



வகை செய்வதே அதன் நோக்கமாகும். எனவே, பயனில்லாத வேலை மற்றும் உற்பத்தியை நோக்கமாகக் கொண்டிராத வேலைகள் தவிர்க்கப்படுகின்றன. சிறை வேலை, கடின உழைப்பு, நடுத்தர உழைப்பு, எளிய உழைப்பு என்று மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மருத்துவ அலுவலரின் ஆலோசனையின்படி சிறைக் கைதிக்கு உரிய வேலை கொடுக்கப்படுகிறது. சிறைக் கைதிகள் விடுதலைக்குப்பின் அவர்களுக்கு உதவிடும் வகையில் தச்சு வேலை, தையல் வேலை, நெசவு வேலை, சாயம் தோய்த்தல், கருமார் வேலை, தோல் பொருட்கள் செய்யும் பணி, புத்தகம் கட்டுதல், காகிதம் செய்தல், சோப்பு செய்தல் மற்றும் பினாயில் செய்தல் ஆகிய தொழில்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. சிறைக் கைதிகள் தங்கள் விடுதலைக்குப் பின் தங்களைச் சொந்தத் தொழிலில் ஈடுபடுத்திக்கொள்ளும் வகையில், நவீன வேளாண்மை முறைகள், பால் பண்ணை ஆகிய தொழில்களிலும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். கோவை, மத்திய சிறையில் நெசவுப் பிரிவு மற்றும் சாயப் பிரிவு அடங்கிய துணி ஆலை ஒன்றுள்ளது. மத்திய சிறைகள், வேலூரிலுள்ள பெண்கள் தனிச்சிறை, புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளி, புழலிலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம் ஆகியவை ஒவ்வொன்றிலுமுள்ள தொழில்களின் வாழ்க்கைத் தொழில்களின் பட்டியல் இணைப்பு 5-இல் குறிக்கப்பட்டுள்ளது.

## 7. எளிய சிறு தொழில்கள் :

தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் எட்டு மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப்பள்ளியிலும் உள்ள கைதிகளுக்குப்பயிற்சி அளிப்பதற்காக அரசு கீழ்காணும் எளிய சிறு தொழில்களைத் தொடங்கியுள்ளது.

(1) செங்கல் கட்டுமானத் தொழில்.

(2) குழாய்களைப் பழுது பார்த்து இணைத்தல்.

(3) எளிய மின் இணைப்புப் பயிற்சி.

(4) வண்ணம் பூசுதல் (பெயர் பலகை எழுதுதல் உட்பட) சிறைகளில் தொடங்கப்பட்டுள்ள எளிய சிறு தொழில்களைக் காட்டும் பட்டியல் இணைப்பு 6-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தொழில்களில், பயிற்சி பெற்ற சிறைக் கைதிகள் குறைந்த முதலீட்டில் சொந்தமாகத் தொழில் நடத்தி தங்கள் பிழைப்புக்கேற்ற வருமானம் தேடிக் கொள்ளலாம். மேலும், வேலூர் பெண்கள் தனிச் சிறையிலுள்ள 20 பெண் கைதிகளுக்கு ஒவ்வோராண்டும், வேலூர் நேரு யுவக் ''கேந்திரா'' பயிற்சியாசிரியர்கள் மூலம் தையல் தொழிலில் பயிற்சியளிக்கப்பட வேண்டும் என்றும் தையல் தொழிலில் தேர்ச்சிப்பெற்றவர்களை அரசினர் தொழில் நுட்ப நிறுவனத் தேர்வுக்கு அனுப்பப்பட வேண்டுமென்றும் அரசு கட்டளையிட்டுள்ளது.

## 8. சிறைக் கைதி அலுவலர்கள் :

சிறைக் கைதிகள், கீழ்க்காணும் வீதங்களில் பணிக்கொடை பெறத் தகுதியுள்ளவர்களாவார்கள்.—

| | | பணிக் கொடையின் வீதம். (ஒரு திங்களுக்கு.) ரூ. |
|---|---|---|
| (1) சிறைக் கைதி இரவுக் காவலர்கள் | .. | 0.50 |
| (2) சிறைக் கைதி மேற்பார்வையாளர்கள் | .. | 1.00 |
| (3) சிறைக் கைதி காவலர்கள் | . | 2.00 |

## 9. சிறைக்கைதிகளுக்கான ஊதியம் ஈட்டும் திட்டம் :

அனைத்து மத்திய சிறைகளிலும், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் பெண்கள் தனிச்சிறை, வேலூரிலும் சிறைக் கைதிகள் ஊதியம் ஈட்டும் திட்டம் தற்போது செயலிலுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிறைக் கைதி ஒருவருக்கு நாளொன்றுக்கு வழங்கப்படக்கூடிய ஊதிய வீதங்கள் பின்வருமாறு :—

| | | ரூ. |
|---|---|---|
| (1) தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் | .. | 1.00 |
| (2) ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் | | 0.50 |
| (3) தேர்ச்சி பெறாத தொழிலாளர்கள் | . | 0.25 |

## 10. மருந்து, துப்புரவு வசதிகள் :

சிறைகளில் போதுமான மருத்துவ, துப்புரவு வசதிகள் உள்ளன. ஒவ்வொரு மத்திய சிறையிலும், வேலூர் பெண்கள் தனிச்சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் மருத்துவமனை உள்ளது. அதில் பகுதி நேர மருத்துவ அலுவலர் ஒருவரும் (அம்மாவட்டத்தில் மாவட்ட மருத்துவ அதிகாரி அல்லது மாவட்ட மருத்துவ அலுவலர் வேறு ஊரில் இருந்ததால் உள்ளூரிலுள்ள அரசு மருத்துவமனை அல்லது மருத்துவக் கல்லூரியிலுள்ள சிவில் மருத்துவரின் பதவி நிலையிலுள்ள மருத்துவ அலுவலர்) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி மருத்துவரும், ஒரு செவிலியரும் ஒன்று அல்லது இரண்டு மருந்தாக்குநரும், 2 அல்லது 3 செவிலியர் உதவியாளர்களும் உள்ளனர். கண் மருத்துவர் மற்றும் மருத்துவ அதிகாரியின் பரிந்துரையின் பேரில் அரசு செலவில், தேவைப்படுகின்ற கைதிகளுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படுகிறது. மேலும், சிறையைப் பார்வையிடும் பல் மருத்துவரால் கைதிகளுக்குப் பல்நோய் சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. வேலூர் மத்திய சிறையில் தொழுநோய் கைதிகள் தனியாகப் பிரிக்கப்பட்டு, தனிக் கூடங்களில் வைக்கப்படுகின்றனர். இவர்களைக் கவனித்துக் கொள்வதற்காக இயற்கை முறை மருத்துவர் அமர்த்தப்பட்டுள்ளார்.



மனநிலை சரியில்லாத கைதிகள், மனநோய்க் குற்றவாளிகள் ஆகியோர் அரசினர் தலைமையிட மருத்துவமனை உளநோய் மருத்துவர்கள் பரிந்துரையின் பேரில் சென்னை அரசு மனநலக் காப்பகத்திற்கு அனுப்பப்படுகின்றனர். அரசு தற்போது மத்திய சிறை, சென்னை மற்றும் வேலூர் ஆகிய இரு இடங்களில் நோயுற்ற சிறைவாசிகளை மருத்துவ மனைக்கு எடுத்துச்செல்ல ஒரு நோயாளி ஊர்தி வழங்கியுள்ளது. அகில இந்தியச் சிறைச் சீர்திருத்தக் குழுப் பரிந்துரையின் அடிப்படையில், கைதியின் உடல் நலம் மிகவும் கடுமையாகப் பாதிக்கும் போதும், ஆபத்தான நிலையில் இருக்கும் போதும் மருத்துவமனையில் அவருடைய நண்பர்களும் உறவினர்களும் கைதியைத் தினந்தோறும் பார்க்க அனுமதித்து அரசு உத்திரவிட்டுள்ளது.

அனைத்து மத்திய சிறைகளிலும், வேலூர் பெண்கள் தனிச் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், தனிக் கிளைச் சிறைகளிலும் மற்றும் அனைத்து கிளைச் சிறைகளிலும் தண்ணீர் வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

## 11. கைதிகளுக்குக் கல்வி வசதி :

கைதிகளுக்குச் சிறையில் கல்வி வசதி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மத்திய சிறையிலும் தகுதி பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப்பள்ளி உள்ளது. மூதியோர் கல்வி கற்பிக்க சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு சிறைகளில் புதிய முறையில் கைதிகளுக்குக் கல்வி புகட்டப்படுகின்றது. சிறைக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, சிறைக் கண்காணிப்பாளர்கள், சிறந்த கல்வி நிறுவனங்களிலிருந்து ஆசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் வரவழைத்து சிறை விடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் விரிவுரையாற்ற ஏற்பாடு செய்கிறார்கள். அஞ்சல் வழிக் கல்வி மூலம் முதுகலைப் பட்டப்படிப்புத் தேர்வும், பி.ஜி.எல்., பி.எல்., பி.எட்., எம்.எட்., போன்ற கல்வித் தேர்வுகளையும் எழுத கைதிகள் அனுமதிக்கப்படுகிறார்கள். இது தொடர்பாகப் புத்தகங்களை வாங்கும் செலவு, தேர்வுக் கட்டணம் குறித்த செலவு இதர இடை நிகழ் செலவு ஆகிய செலவுகள் முழுவதையும் அரசு எற்றுக்கொள்கிறது. கைதிகள் தேர்வில் தேர்ச்சி பெறாவிட்டால், மறுமுறையும், அரசு செலவில் தேர்வு எழுதலாம். இது போன்று மொத்தம் மூன்று தடவை தேர்வுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். கைதிகள் தேர்வு எழுதச்செல்லும் போது அவர்கள் சொந்த உடையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். அதே போன்று அவர்களைக் காவல் காத்து அழைத்துச் செல்லும் வழித்துணைத் காவலர்களும், சாதாரண உடை அணிந்து செல்கின்றனர்.

நீதி அல்லது மதம் சம்பந்தமாக போதனைகள் என்ற பெயரால் மத மாற்றம் செய்தல் கூடாது என்ற நிபந்தனையுடன் சிறையில், மதம் நீதிநெறி வகையான போதனைகளும் விரும்பும் கைதிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன.

## 12. இளைஞர் சீர்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை :

இப்பள்ளியில் 18 வயதிலிருந்து 23 வயது வரை உள்ள
இளங்குற்றவாளிகள் சேர்க்கப்படுகின்றனர். இப்பள்ளி மாணவர்
களுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள தொழில்களில் அல்லது
வாழ்க்கைத் தொழில் கல்வியில் பயிற்சி அளிக்கப்படுகிறது :—

(1) தச்சு வேலை.

(2) கருமார் வேலை.

(3) புத்தகம் கட்டுதல்.

(4) தையல் வேலை.

(5) வேளாண்மை.

(6) கட்டுமான வேலை.

(7) சலவைத் தொழில்.

(8) பாண்டு இசைக் கருவி பயிற்சி.

(7) சமையல் வேலை போன்ற வீட்டு வேலைகள்.

இப்பள்ளியில் உள்ளவர்கள் அங்கிருந்து விடுதலை செய்யப்
பட்ட பின்னர் வேலை தேடிக்கொள்ள இயலும் பொருட்டு
அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இங்குள்ள
துயிற் கூடம் ஒன்று இளங்குற்றவாளிகளுக்கான இடமாக மாற்
றப்பட்டு அங்கு 24-25 வயதுத் தொகுதியைச் சேர்ந்த இளங்
குற்றவாளிகள் வைக்கப்படுகின்றனர். இவர்கள் இங்கு 25 வயது
வரை வைக்கப்படுகின்றனர். புதுக்கோட்டை இளைஞர் சீர்
திருத்தப்பள்ளியிலுள்ள துயிற்கூடம், 1894 ஆம் ஆண்டு சிறை
யின் சட்டத்தின்கீழ் "சிறையாக" அறிவிக்கப்பட்டுள்ளது.
சீர்திருத்த பள்ளியிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்களின் புது
வாழ்வுக்காக, இயந்திரங்கள், பசு அல்லது எருமை வாங்க நிதி
உதவி வழங்கப்படுகிறது. இவ்வகையாக அவர்களுக்கு அளிக்கப்
படும் நிதி உதவி அவர்களிடமிருந்து எளிய தவணையில் வசூ
லிக்கப்படுகிறது.

தமிழ்நாடு சிறைச் சீர்திருத்தக் கமிஷன் பரிந்துரையின் அடிப்
படையில் கைதிகள், பணியாளர் ஒருவரின் பொறுப்பில் 15,
நாட்களுக்கு திறந்த வெளியில் ஒரு கூடாரத்திற்கு கீழ்த் தங்கி
யிருக்க இயலும் வகையில், இளைஞர் சீர்திருத்தப்பள்ளியைச்
சேர்ந்த 25 பேர்களுக்கு ஆண்டு முகாமிற்கு ஏற்பாடு செய்யும்
திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. இதுவரை மத்திய
சிறைகளில் இருந்த சிறைவாசிகளின் ஊதிய கூட்டுத் திட்டம்
பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டைக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்
ளது. பார்ஸ்டல் இல்லவாசிகளுக்கு இதர சிறைவாசிகள்போன்று
ஊதியம் வழங்கப்படுகிறது.

## 13. ஆடவர் பிற்காப்பு இல்லம், புழல் :

சீர்திருத்தப் பள்ளிகளிலிருந்தும், சீர்திருத்தப் பள்ளி சாராத
பிற நிறுவன ' களிலிருந்தும் வெளிவரும் அத்தகையோர், ஆதாயம்



தரத்தக்க சொந்தத் தொழில் புரிந்து, நல்ல முறையில் வாழ்வை
அமைத்துக்கொள்ள இயலும் வகையில், இரண்டு ஆண்டுகளுக்
குத் தச்சு வேலை, உலோக வேலை, தையல் வேலை ஆகிய
வற்றில் பயிற்சி அளிப்பதே இந்த ஆடவர் பிற்காப்பு இல்லத்தின்
நோக்கமாகும். பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு இலவசமாக
உணவு, உடை, இருப்பிடம் அளிக்கப்படுவதோடு, முதலாண்டில்
நாள் ஒன்றுக்கு ரூ. 1.50 வீதமும், இரண்டாம் ஆண்டில் நாள்
ஒன்றுக்கு ரூ. 2.00 வீதமும் பயிற்சி உதவித் தொகை வழங்கப்
படுகிறது. மத்திய சிறைகளில் உள்ள "பி" வகுப்புக் கைதிகள்,
சாதாரண காவல் கைதிகள், விசாரணைக்கைதிகள் ஆகியோருக்கு
வழங்கப்படும் திருத்தியமைக்கப்பட்ட மேம்பட்ட உணவு இப்
பிற்காப்பு இல்லத்தில் உள்ளவர்களுக்கும் வழங்கப்படுகிறது. பிற்
காப்பு இல்லத்திற்குச் செல்பவர்கள் இல்லாமையால் இவ்வில்லம்
செயல்படவில்லை.

## 14. சிறைப் பார்வையாளர்கள் :

மாஜிஸ்ட்ரேட்டுகளையும், நீதிபதிகளையும் மற்றும் மருத்து
வம், நல்வாழ்வு, தொழில்கள், தீயணைப்புப்பணிகள், ஏனைய
துறைகளிலிருந்து நியமிக்கப்படும் அரசு சார்புள்ள பார்வையாளர்
களைத் தவிர, இத்துறையில் நாட்டமுள்ள பொது மக்கள்,
முக்கியமாக சமூகப் பணியாளர்கள், உளநோய் மருத்துவ வல்லு
நர்கள், உளநூல் வல்லுநர்கள் மற்றும் சமூகவியலாளர்கள்
ஆகியோர் ஒவ்வொரு சிறையிலும் அலுவல் சார்பற்ற சிறைப்
பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். கைதிகளை
நடத்தும் விதம், சிறைகளை நிருவகிப்பது தொடர்பான சட்
டங்கள், விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியன சிறைகளில்
உரியவாறு செயற்படுத்தப்படுகின்றனவா என்று தெரிந்து
கொள்ளவும், சிறைகளில் பல பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள
கைதிகளைப் பார்வையிடுவதும், கைதிகள் எவரேனும் அவர்களி
டம் புகார் செய்தால் அதனைக் கேட்டு விசாரணை செய்வதும்,
பார்வையாளர்களின் கடமையாகும். சிறைப் பார்வையாளரின்
பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும்.

## 15. சிறைவாசிகளை விடுப்பில் விடுவித்தல் :

கைதிகள் தங்களது குடும்பத் தேவைகளைக் கவனிப்பதற்காக,
சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் நன்னடத்தை கண்காணிப்பு அலு
வலரின் அறிக்கையைப் பெற்ற பிறகு அவர்களுக்கு இதுவரை
அரசால் விடுப்பு அளிக்கப்பட்டு வந்தது. அரசு இந்த அதிகா
ரத்தைத் தற்போது சிறைத் துறைத் தலைவருக்கு வழங்கியுள்ளது.
ஐந்து ஆண்டு சிறைத் தண்டனை அனுபவித்துள்ளவரும், இது
வரையில் விடுப்பில் செல்லாதவருமான கைதிகளுக்கு முதலில்
ஒரு மாத விடுப்பு அளிக்கப்படுகிறது. அதன் பிறகு, கடைசியாக
விடுப்பில் சென்று திரும்பிய நாளிலிருந்து இரண்டாண்டுகள்
சிறைத் தண்டனை அனுபவித்த பிறகு மீண்டும் விடுப்பு அளிக்கப்
படுகிறது. இன்னும் 3 ஆண்டுக்காலம் மட்டுமே சிறைத் தண்
டனை அனுபவிக்க வேண்டிய கைதிகளுக்கு அவர்கள் சிறையி

லிருந்து விடுவிக்கப்பட்ட பின் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு இயலும் வண்ணம், ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு மாதம் என்ற வீதத்தில் அவர்களுக்கு விடுப்பு அளிக்கப்படுகிறது.

இவற்றோடு, கைதிகள் தங்களுடைய நெருங்கிய உறவினர்களான தந்தை/தாய்/கணவன்/மனைவி/சொந்த மகன்/சொந்த மகள்/சொந்த சகோதரி/சொந்த சகோதரன் மிகவும் ஆபத்தான நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்தாலோ அல்லது இறந்து போனாலோ அவர்களைச் சென்று பார்க்கவும், சிறைவாசிகள் அல்லது அவர்களது நெருங்கிய உறவினர்களான சொந்த மகன்/சொந்த மகள்/சொந்த சகோதரர்/சொந்த சகோதரி ஆகியோரின் திருமணத்தில் கலந்துகொள்வதற்காகவும், அவசர கால விடுப்பு அனுமதிக்கப்படுகிறது. இத்தகைய அவசர கால விடுப்பு ஓர் ஆண்டிற்கு 15 நாட்களுக்கு மேற்படக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு, 4 முறைகளில் (6+3+3+3) அளிக்கப்படுகிறது. இத்தகைய விடுப்புகள், ஒரு கைதிக்கு சிறையில் அக்கைதியின் நடத்தை நன்முறையில் இருந்தால் மட்டுமே வழங்கப்படுகிறது.

## 16. தண்டனைக் குறைப்பு :

கைதிகளின் நன்னடத்தை, வேலை செய்யும் ஆர்வம் ஆகியவற்றை வளர்க்கவும், ஊக்கமளிக்கவும் பலவிதமான தண்டனைக் குறைப்புகள் கைதிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன. கைதிகளின் நன்னடத்தைக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும், அவர்கள் செய்யும் சிறந்த பணிக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக்குறைப்பும் சாதாரண வகை தணடனைக் குறைப்புகளாக அளிக்கப்படுகின்றன. சிறைப் பணிகளுக்காக ஞாயிறு அன்றும், ஏனைய சிறை விடுமுறை நாட்களிலும் சமையற்காரர்களாகவும் துப்புரவு செய்பவாராகவும் பணி புரிய வேண்டி கைதிகளுக்கு இவ்விதிகளின் கீழ் அவர்கள் ஈட்டிய ஏனைய தண்டனைக் குறைப்போடு மூன்று மாதத்திற்கு மூன்று நாட்கள் தண்டனைக் குறைப்பும் வழங்கப்படுகிறது. தண்டனைக் கைதிகளாக இருந்து பின்னர் கைதிக் காவலர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு மாதத்திற்கு எட்டு நாட்கள் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. சிறைகளில் ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டைப் பேணிவரும் கைதிகளுக்கு சிறைக் கண்காணிப்பாளரால் சிறப்புத் தண்டனை குறைப்பாக ஓர் ஆண்டிற்கு 30 நாட்களும், சிறந்த நற்பணிக்காக சிறப்புத் தண்டனைக் குறைப்பாக சிறைத்துறைத் தலைவரால் ஓர் ஆண்டிற்கு 60 நாட்களும் அளிக்கப்படுகிறது. கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் கைதிகளுக்கு உயரளவு ஓராண்டுக் காலச் சிறப்புத் தண்டனைக் குறைப்பும், இரத்ததானம் செய்யும் கைதிகளுக்கு ஒரு சமயத்தில் 15 நாட்கள் தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுகின்றன. மேற்கண்ட தண்டனைக் குறைப்புகளைத் தவிர, ஆயுள் தண்டனை அடைந்த மற்றும் மூன்றாண்டுகளுக்கு மேல் தண்டனையடைந்த கைதிகளை முன்னதாக விடுதலை செய்வது குறித்து ஆலோசனைக்குழு பரிசீலைன செய்கிறது.



அந்த கைதியின் கடந்த கால நன்னடத்தை பற்றிய குறிப்புரையும், உள்ளூர் அதிகாரிகளின், அதாவது மாவட்ட ஆட்சித் தலைவர், நன்னடத்தை அலுவலர், சிறைக் கண்காணிப்பாளர் ஆகியோர் அளித்த அறிக்கையையும் பரிசீலித்து, அச்சிறைக்கைதியை அவருக்கு அளிக்கப்பட்ட சிறைத்தண்டனைக் கால அளவு முடிவடைவதற்கு முன்னரே விடுவிக்க அரசின் பரிசீலனைக்காக இக்குழு தனது பரிந்துரையை அரசுக்கு அனுப்பி வைக்கிறது.

சென்னை, உயர்நீதிமன்றம், டபிள்யூ. பி. எண். 3430/82, நாள் 21–1–1783-இல் அயுள் தண்டனையடைந்த கைதிகளை முன்விடுதலை செய்வது குறித்து பரிசீலனை செய்வதற்காகப் பின்பற்றத்தக்கதான சில வழிமுறைகளைத் தனது தீர்ப்பில், வெளியிட்டுள்ளது. மேற்காணும் கருத்துக்களின் அடிப்படையில் அரசு ஆயுள் தண்டனையடைந்த கைதிகளை முன்விடுதலை செய்வது குறித்து பரிசீலனை செய்வதற்காக பின்பற்றத்தக்கதான வழி முறைகளை நிர்ணயித்து ஆணை பிறப்பித்துள்ளது. இந்த ஆணையின்படி, ஒரு ஆயுள் தண்டனை அடைந்த கைதி $10\frac{1}{4}$ ஆண்டுகள் தண்டனை அனுபவிக்க வேண்டும். $10\frac{1}{2}$ ஆண்டுகள் தண்டனை அனுபவித்த ஆயுள் தண்டனையடைந்த கைதிகளின் நேர்வு மட்டுமே முன்விடுதலைக்காக ஆலோசனைக் குழுவால் பரிசீலனை செய்யப்படுகின்றன.

குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 433-ஏ பிரிவின்படி ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள் (அதாவது 18–12–1978 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தண்டனையடைந்தவர்கள்) 14 ஆண்டுக் காலம் தண்டனை அனுபவித்த பின்பே ஆலோசனைக் குழுவால் முன்விடுதலைக்காக பரிசீலனை செய்யப்படுகிறார்கள். இவ்வகையான நேர்வுகள் 18–12–1992 க்குப் பின்னர்தான் பரிசீலனைக்கு வரும்.

வியாதியுள்ள ஆயுள் தண்டனை சிறைவாசிகளை முன்விடுதலை செய்வது தொடர்பாக சிறை மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில் மாநில சிறைச்சாலை நடைமுறை நூலில் உள்ள விதிகளின்படி பரிசீலனை செய்யப்படுகிறது.

புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலுள்ளோரைப் பொறுத்த வரையில் தண்டனைக் காலம் முடியுமுன் விடுதலை செய்யும் முறை செயலில் உள்ளது. ஆனால், இது குறித்து பின்பற்றப் படுகிற நடைமுறை வேறாகும். இம்முறை ''நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்தல் அல்லது விடுவித்தல்'' என்று அழைக்கப்படுகிறது. 1925 ஆம் ஆண்டு சீர்திருத்தப்பள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1926) 15ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி, நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்யக் கருதப்பட்டுள்ளோரின் பெயர்களையும், அவர்கள் பெற்ற வாழ்க்கைத் தொழில் பயிற்சி குறித்த விவரங்களையும், உரிய விசாரணைகளைச் செய்து அவற்றின் மூலம் பெற்ற தகவலை பார்வையிடும் குழுவிடம் தாக்கல் செய்ய இயலும் வகையில் அக்குழு கூடுவதற்கு 6 வாரங்களுக்கு முன்னர் வெளியூர்களாயிருந்தால் அந்தந்த மாவட்டங்களிலுள்ள நன்னடத்தை அலுவலர்களுக்கும்

சென்னை மாநகரைப் பொறுத்த மட்டில் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளருக்கும், சீர்திருத்தப்பள்ளி கண்காணிப்பாளர் அனுப்பிவைக்க வேண்டும். நன்னடக்கத்தின் பேரில் விடுதலை செய்வதற்காகப் பார்வையிடும் குழு பரிந்துரைத்துள்ள கைதிகள் பற்றி பரிசீலித்து பின்னர் சிறைத்துறைத் தலைவர் ஆணை பிறப்பிக்கிறார்.

அனைத்திந்திய சிறை சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், அரசு ஆணை எண். 1762, உள்துறை (சிறை. 6) நாள் 20—[illegible]—1987-இல் கீழ்க்காணும் வகையைச் சார்ந்த சிறைவாசிகளின் நேர்வுகள் முன்விடுதலைக்காக பரிசீலிக்கப்படக்கூடாது என ஆணை பிறப்பித்துள்ளது.

(1) கற்பழிப்பு, பொய் கையெழுத்து, கொள்ளை ஆகிய குற்றங்களுக்காக தண்டனை பெற்ற சிறைவாசிகள், பயங்கரவாதக் குற்றவாளிகள், மற்றும் மாநிலத்திற்கெதிரான குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள் மற்றும் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 224, 376, 396 முதல் 400 வரை, 402, 467, 471, 472, 474, 489ஏ, 489பி மற்றும் 489டி ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டனை அடைந்த சிறைவாசிகள்.

(2) பொருளாதாரக் குற்றங்களுக்காக தண்டிக்கபபட்ட சிறைவாசிகள், பொருட்களை பதுக்கிவைத்தல், கடத்தல், மற்றும் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதற்காகத் தண் பெற்ற சிறைவாசிகள்

(3) லஞ்ச ஒழிப்பு தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்ற சிறைவாசிகள். பெண்கள் மகளிர் விபச்சாரத் தடைச் சட்டம். மருத்துவச் சட்டம் மற்றும் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள்.

டாக்டர் பேரறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்களின் 10 வது ஆண்டு நினைவு நாளை ஒட்டி புதிதாக தேர்ந்தெடுக்கப் பட்ட அரசின் ஆணை எண். 180. நாள் 28-1-1989-ன் படி ஒரு சில கைதிகளுக்கு கீழ்க்காணும் தண்டனைக் குறைப்பு வழங் கப்பட்டுள்ளது.—

(அ) கொலை, கள்ளக் கடத்தல் போன்ற குற்றங்களுக்கான தண்டனை தவிர, ஏனைய குற்றங்கள் புரிந்த அனைத்து மகளிர் கைதிகளுக்கு முழு தண்டனைக் குறைப்பு.

(ஆ) இதர கைதிகளுக்கு வழங்கப்படும் தண்டனைக்குறைப்பு கீழேவிவரப்பட்டியல் குறிப்பிடப்பட்டுள்ளது.

விவரப் பட்டியல்.

| தண்டனை வழங்கப்பட்ட நபர்களின் பிரிவு. (1) | தண்டனை குறைப்பின் அளவு. (2) |
|---|---|
| ஆயுள் கைதிகள் | ஒரு வருடம். |
| இதர கைதிகள் | ஆறு மாதம் |



மேற்கண்ட அரசாணைப்படி, 772 ஆண்களும், 71 பெண்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

## 17. கைதிகளின் நலன் :

தற்போது கைதிகள் நல அலுவலர் பதவிகள் மொத்தம் 10 உள்ளன. அதாவது மத்திய சிறைகள் ஒவ்வொன்றிலும் ஒரு பதவி வீதம் எட்டு மத்திய சிறைகளில் எட்டு பதவிகளும், வேலூரில் பெண்கள் தனிச் சிறையில் ஒரு பதவியும், புதுக் கோட்டை சீர்திருத்தப்பள்ளியில் ஒரு பதவியும் உள்ளன. இந்த நல அலுவலர், சிறையின் விதிமுறைக்கேற்ப, கைதிகளுக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளை அளித்தும், அவர்கள் உறவினர்களுடன் கடிதத் தொடர்பு கொள்ள உதவி செய்தும் வருகிறார். மேலும், தனிப்பட்ட முறையில் மேல் முறையீடு செய்ய வசதி இல்லாத கைதிகளுக்கு மேல் முறையீடு செய்யவும் உதவி செய்கிறார்.

பெண் கைதிகளின் குழந்தைகள் 6 வயதுக்குள் இருந்தால் அக்குழந்தைகள் தாயோடு, சிறையில் வைக்கப்படுகின்றனர். அக்குழந்தைகளுக்காக ஒரு குழந்தைகள் காப்பகமும், வேலூர் மாநில மகளிர் சிறையில் செயல்பட்டு வருகிறது. அவர்களைச் சரியான முறையில் வைத்துப் பராமரிக்க ஒருவரும் முன்வரா விட்டால், அக்குழந்தைகள் 6 வயது அடைந்தவுடன் சென்னை மாநகரை சேர்ந்தவர்களாயிருந்தால், சென்னையிலுள்ள பால மந்திர் மருத்துவ மனைக்கும், மாநிலத்திலுள்ள இதர பாகங் களைச் சேர்ந்தவர்களாயிருந்தால் மதுரை காந்தி கிராமத்தி லுள்ள குழந்தை இல்லத்திற்கும் அனுப்பப்படுகின்றனர்.

ஒவ்வொரு மத்திய சிறையிலும், கைதிகளின் பயனுக்காக பண்பாட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பண் பாட்டுக்குழு சிறைக் கைதிகளின் நன்மைக்காக சிறைக்குள் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை திரைப்படம் காட்டுகிறது. மேலும் வெளியில் உள்ளவர்களைக் கொண்டு, பலவகை கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்கிறது.

மத்திய சிறைகள் அனைத்திலும், கைதிகளுக்காகச் சிற்றுண்டி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. தங்கள் கணக்கில் பணம் வைத்திருக்கும் கைதிகளும், பணிக்கொடை ஈட்டும் கைதிகளும் இந்த சிற்றுண்டி விடுதி வசதியைப் பயன்படுத்த அனுமதிக்கப் படுகின்றனர். இந்தியக் குடியரசுத் தலைவரால், கருணை மனு நிராகரிக்கப்பட்டு, மரண தண்டனை நிறைவேற்றப்பட இருக் கும் கைதிகளின் நெருங்கிய உறவினர்களான தந்தை/தாய்/ மனைவி/கணவன்/மகன்-மகள்/சொந்த சகோதரன்/சொந்த சகோதரி ஆகிய நெருங்கிய உறவினர்கள் 5 நபர்களுக்கு மேற் படாமல், அக்கைதி தூக்கிலிடப்படுவதற்கு முன் வந்து பார்த்து

திரும்புவதற்கு வசதியாக, தமிழ் நாட்டிலுள்ள எவ்விடத்திலிருந்தும் குறைந்த வழித்தடம் மூலம், குறைந்த பட்ச வகுப்பில் புகை வண்டி அல்லது சாலை வழிப் பயண போக்குவரத்துச் செலவுகளை அனுமதிக்க எல்லா மத்திய சிறைகள், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப்பள்ளி மற்றும் வேலூர் மாநில மகளிர் சிறை, ஆகியவற்றின், கண்காணிப்பாளர்களுக்கு அரசு அதிகாரம் அளித்துள்ளது.

## 18. கைதிகளுக்கு இலவச சட்ட உதவி :

விசாரணைக் கைதிகளுக்கும், தண்டனை அடைந்த கைதிகளுக்கும், தமிழ்நாடு, மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு இலவச சட்ட உதவி அளித்து வருகிறது. கைதிகளுக்கு சட்ட உதவி அளிப்பதற்காக இக்குழு பணி வழக்குரைஞர்களை அனைத்து நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கிறது.

## 19. சிறைகளில் புகார் பெட்டிகள் வைத்தல் :

அரசு பிறப்பித்துள்ள ஆணைகளின்படி எல்லா மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப்பள்ளியிலும், வேலூர் தனி மகளிர் சிறையிலும்கைதிகள் தங்கள்குறைகளைத் தெரிவிக்க இயலும் வகையில், புகார் மனுக்களைத் தாக்கல் செய்ய முத்திரையிடப்பட்ட புகார்ப் பெட்டிகள் கைதிகளுக்கு எளிதில் எட்டும் இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. கைதிகளுக்கு எழுது பொருட்கள் கொடுக்கப்படுகின்றன. புகார் குறை மனுக்கள் போடப்பட்டுள்ள பெட்டிகள், ஒவ்வொரு மாதத்தின் முதல் பணி நாளில், சிறை அதிகாரிகளால் மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகளின் முன்னிலையில் கொண்டுவரப்படுகின்றன. அவை ஒவ்வொன்றையும் அவர்கள் திறந்து, அம்மனுக்களை ஆய்வு செய்து, சிறை அதிகாரிகள் அல்லது அரசு அல்லது சிறைத் துறைத் தலைவர், நடவடிக்கை எடுக்க வேண்டியவற்றின் பகுதி நகல்களை, சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்புவர். கைதிகள் கொடுக்கும் புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேற்காணும் நிறுவனங்களில் முறைகேடு செய்ய இயலா வண்ணம் இரும்பினால் தயாரிக்கப்பட்ட புகார்ப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு சிறையில் இருக்கும் புகார்ப் பெட்டிகளின் எண்ணிக்கை வருமாறு :—

| தொடர் எண். (1) | சிறையின் பெயர். (2) | பெட்டிகளின் எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 1 | சென்னை-மத்திய சிறை .. .. | 3 |
| 2 | வேலூர், மத்திய சிறை .. .. | 3 |



| தொடர் எண். (1) | சிறையின் பெயர் (2) | பெட்டிகளின் எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 3 | கடலூர், மத்திய சிறை .. .. | 3 |
| 4 | திருச்சிராப்பள்ளி, மத்திய சிறை .. | 3 |
| 5 | சேலம், மத்திய சிறை .. .. | 3 |
| 6 | கோயம்புத்தூர், மத்திய சிறை .. | 3 |
| 7 | மதுரை, மத்திய சிறை .. .. | 3 |
| 8 | பாளையங்கோட்டை, மத்தியசிறை .. | 3 |
| 9 | புதுக்கோட்டை, மத்திய சிறை .. | 3 |
| 10 | மகளிர் தனிச் சிறை, வேலூர் .. | |

## 20. பயிற்சி :

### (அ) சிறைக் காவலர்களின் பயிற்சிப் பள்ளி:

சிறைக் காவலர்கள் பயிற்சிப் பள்ளி ஒன்று வேலூரில் உள்ளது. இதில் பல்வேறு சிறைகளிலுள்ள 100 இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு உடற்பயிற்சி, ஒழுங்கு, சிறை நிருவாக கோட்பாடுகள் மற்றும் சீர்திருத்த முறைகளை கடைப்பிடித்தல் போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி கால அளவு 6 திங்களாகும். மேலும் 25 முதல் நிலை சிறைக் காவலர்களுக்கும், 4 முதன்மைத் தலைமை காவலர்களுக்கும் முறையே 30, 15 நாட்களுக்கு நினைவூட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், பயிற்சிக் காலத்தில் சீர்திருத்த முறைப்படி கைதிகளை அணுகும் முறை குறித்துப் பயிற்சி அளிக்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

### (ஆ) மண்டல சிறை சீர்திருத்த பயிற்சி நிறுவனம் :

தென் மாநிலங்களைச் சேர்ந்த (ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு) குற்றவாளிகள் சீர்திருத்த அலுவலர்களுக்கான மண்டல சிறை சீர்திருத்த பயிற்சி நிறுவனம் ஒன்று வேலூரில் 1—10—1979 முதல் செயல்பட்டு வரு

கிறது. சிறைகள், நன்னடத்தை கண்காணிப்பு பிரிவு, சான்
றளிக்கப்பட்ட பள்ளிகள், சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் சீர்
திருத்தப்பணியிலும், அது தொடர்பான பணிகளிலும் ஈடு
பட்டிருக்கிற இதுபோன்ற பிற நிறுவனங்கள் ஆகியவற்றிலுள்ள
அலுவலர்களுக்கு குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளி
களைச் சீர்திருத்தவும், குற்றவாளிகளுக்கு மறு பணி நோக்குப்
பயிற்சி அளிக்கும் பொருட்டு, தொழில் வகையில் நுட்ப அறிவு,
பயிற்சித் திறன் ஆகியவற்றில் பயிற்சி அளித்து, சமூக தொழில்
மறு வாழ்வுக்கு அவர்களைத் தயார் செய்வது பயிற்சிப் பள்ளி
யின் நோக்கமாகும். மத்திய சிறைகளில் உதவி சிறை அலுவலர்
முதற்கொண்டு கூடுதல் சிறைக் கண்காணிப்பாளர் வரை
யுள்ளவர்களுக்கும், ஏனைய சீர்திருத்த நிறுவனங்களில் உள்ள
அதற்கு நிகரான பதவித்தர அலுவலர்களுக்கும் இப்பயிற்சி
அளிக்கப்படுகிறது. குற்றவியல், உளவியல், சமூகவாழ்வியல்,
சிறை நிருவாகம், இளம் குற்றவாளிகள் நன்னடத்தை சமூக
நலப்பணி, சட்டம், நிறுவன மேலாண்மை ஆகியவற்றில்
பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒரே சமயத்தில் இம்மாநிலத்தைச்
சேர்ந்த 12 அலுவலர்களுக்கு இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்
கப்படுகிறது. இதுவரை, இம்மாநிலத்தைச் சார்ந்த 149
அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். இந்நிறுவனத்தின்
தொடர் மற்றும் தொடரா இனச் செலவுகள் நான்கு தென்
மாநிலங்களாலும் சமமாகப் பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

(இ) நற்பணிக்கான முதலமைச்சரின் சிறைப் பதக்கம் வழங்குதல்:

சிறைக்காவலர்கள் நேர்மையுடனும், விசுவாசத்துடனும்,
கடமையுணர்வுடனும், திறமையுடனும், உயர்வர ஒழுங்குடனும்
மற்றும் தியாக மனப்பான்மையுடனும் பணியாற்ற அவர்களை
ஊக்குவிப்பதற்காக, நவம்பர் 1985-ல் ''தமிழ்நாடு முதலமைச்
சர் சிறைத்துறை நற்பணிப் பதக்கம்'' என்றொரு பதக்கம்
வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக
முதல்வரால் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் தினத்தன்று 20
சிறைக் காவலர்களுக்கு இப்பதக்கம் வழங்கப்படுகிறது. இப்
பதக்கங்களைப் பெறும் சிறைக் காவலர்கள் நிலை 1 மாதமொன்
றுக்கு ரூபாய் 25 என்ற வீதத்திலும், சிறைக் காவலர்கள் நிலை 2
மாதமொன்றுக்கு ரூபாய் 20 என்ற வீதத்திலும் மாதாந்
திரப்படி பெறுவதற்கு தகுதியானவர்களாவர்.

21. குற்றவாளிகள் நன்னடத்தை கண்காணிப்புப் பணிகள் :

குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புப் பணியானது
குற்றவாளிகளின் சுற்றுப்புற சூழ்நிலையையும், அவர்கள் நடந்து
கொள்ளும் விதம் பற்றியும், பிணையப் பத்திரத்தின் பேரில் உரிய
காலத்திற்கு முன் கூட்டியே நன்னடத்தை ஜாமீன் அளிப்பதன்
பேரில் விடுதலையான குற்றவாளிகள், பார்ஸ்டல் பள்ளியிலிருந்
தும், சீர்திருத்தப்பள்ளியிலிருந்தும், ஒழுக்கக் கண்காணிப்பு
இல்லத்திலிருந்தும் விடுதலை செய்யப்பட்டவர்கள் ஆகியோர்
குறித்தும் விசாரிப்பது, கண்காணிப்பது, அவர்களைப் பற்றி



நீதிமன்றங்களுக்குத் தகவல் கொடுப்பது முதலியன ஆகும்.
சிறைத்துறைத் தலைவரின் முழுக்கட்டுப்பாட்டிற்கும் கண்
காணிப்பிற்கும் உட்பட்ட நன்னடத்தைக் கண்காணிப்புப்
பிரிவு, தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் நேரடி
பொறுப்பில் உள்ளது. மண்டல நன்னடத்தை அலுவலர் ஒரு
வரைக் கொண்ட நன்னடத்தை ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றும் இப்
பிரிவில் உள்ளது.

22. தமிழ்நாடு விடுதலையடைந்த கைதிகளின் உதவிச் சங்கம்.

தமிழ்நாடு விடுதலைபெற்ற கைதிகள் உதவிச் சங்கம் 1921-ல்
அமைக்கப்பட்டது. தற்செயலாக குற்றம் புரிபவர்களும், இளங்
குற்றவாளிகளும் கைதேர்ந்த குற்றம் புரிகிறவர்களாக மாறு
வதைத் தடுக்கும், நோக்குடன், கைதிகளுக்கு புதுவாழ்வு அமைத்
துக் கொடுத்தல் அவர்களுக்குத் தேவைப்படும் பலவித
உதவிகள்செய்து கொடுத்தல், அவர்களின் நலனுக்காகச்
சட்டங்களை இயற்றுதல், ஏற்கெனவே இருக்கும் சட்டங்
களை நல்ல முறையில் பயன்படுத்தி புதிய சட்டங்களை
இயற்றுதல் ஆகியவை இச்சங்கத்தின் நோக்கங்களாகும்.
விடுதலை செய்யப்பட்ட கைதிகள் சிறு தொழில்களை
மேற்கொண்டு நடத்தவும் கருவிகள், தேநீர்க்கெட்டில்,
தையல் இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கும்
இச்சங்கம் உதவித்தொகை கொடுக்கிறது. மேலும், புகைவண்டி
அல்லது பேருந்து கட்டணத்திற்கான உதவித் தொகையையும்,
தொழில்களில் பயிற்சி பெறுவதற்கும், வேலைவாய்ப்பைத் தேடிக்
கொள்ளவும், வழிகாட்ட சட்ட உதவி பெறுவதற்கும் முதியோர்
உதவிப்பணம் பெறுவதற்கும், உதவித் தொகை அளிப்பதோடு,
ஆடைகள், மூக்குக் கண்ணாடி முதலியவற்றையும் வழங்குகிறது.

அரசால் இச்சங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 18,000
உதவி மானியமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

23. சென்னை மாநகரிலும், செங்கை-அண்ணா மாவட்டத்திலும்
உள்ள தண்டனைக் கைதிகளை வைப்பதற்கென ஒரு புதிய
சிறையை புழலில் (செங்குன்றம்) கட்டுதல் :

தற்போது சென்னையில் உள்ள மத்திய சிறையினை நகருக்கு
வெளியே மாற்றும் பொருட்டு புழல் கிராமத்தில் தற்போது
சிறைத்துறைக்குச் சொந்தமான நிலத்தில் நவீன அடிப்படையில்
ஒரு புதிய சிறையைக் கட்டும் பணி முன்னேற்ற நிலையில் உள்ளது.
அரசு முதல் மற்றும் இரண்டாம் கட்ட பணிகளுக்காக இதுவரை
ரூபாய் 320.97 இலட்சத்திற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த
பணிகள் யாவும் நிறைவு பெற்று விட்டன. தற்போது ரூபாய்
294.07 இலட்சம் அளவில் மூன்றாம் கட்ட பணிகளுக்கான செயற்
குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. தற்போதுள்ள மத்திய
சிறை இப்புதிய வளாகத்திற்கு விரைவில் மாற்றப்படும்.

[1989 ஏப்ரல் 12

24. அனைத்திந்திய சிறை சீர்திருத்தக் குழுவின் அறிக்கை :

(நீதிபதி திரு. ஏ. என். முல்லா, இதன் தலைவர் ஆவார்.)

இந்தியாவிலுள்ள சிறைகளின் நிருவாகத்தில் செய்யப்பட வேண்டிய மேம்பாடுகள் குறித்து பரிசீலிப்பதற்கும், செயல் படுத்தப்பட வேண்டிய தக்க சீர்திருத்தங்களைத் தெரிவிக்கும் பொருட்டும், நீதிபதி திரு. ஏ. என். முல்லா, தலைமையில் குழு ஒன்றை மத்திய அரசு நியமித்தது. இந்த குழுவின் அறிக்கையில் 658 பரிந்துரைகள் உள்ளன. மொத்தமுள்ள 658 பரிந்துரை களில் 592 பரிந்துரைகளின் மீதான தமிழக அரசின் குறிப்புரைகள் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுவிட்டன. எஞ்சியுள்ள 28 பரிந் துரைகள் தமிழக அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன.

25. சிறை நிருவாகத்திற்கான அலுவலர் குழு பற்றிய அறிக்கை :

இந்திய அரசு, சிறைநிருவாகம் மற்றும் சிறைகளை நிருவகிக்கும் பணி தொடர்பான பல்வேறுபொருள்களை குறிப்பாக சிறைகளில் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான பொருட்களை ஆராய்ந்து, அவைகளை மேம்படுத்துவதற்கான வழிவகைகளைப் பரிந்துரை செய்வதற்காக திரு. ஆர். கே. கபூர், இ. கா.ப. (ஓய்வு) தலைமையில் அலுவலர்கள் அடங்கிய ஒரு சிறு குழுவை 1986 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நியமனம் செய்தது. இக் குழுவின் அறிக்கை இந்திய அரசிடமிருந்து 1987 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பெறப்பட்டது. இவ்வறிக்கையின்மீது அரசு விரைவான நடவடிக்கையை எடுப்பதற்கு வசதியாக, இவ்வறிக் கையினை ஆராய்ந்து அதன் பரிந்துரைகளின் மீது நடவடிக்கை எடுப்பதற்காக 1987 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மாநில அரசு கீழ்க்காணும் அலுவலர்கள் அடங்கிய ஒரு சிறு குழுவை நியமித்துள்ளது :—

1. சிறைத் துறைத் தலைவர் .. .. தலைவர்.
2. உள்துறையின் அரசு துணைச் செயலர் உறுப்பினர்
3. நிதித்துறையின் அரசு துணைச் செயலர் .. உறுப்பினர்.
4. பொதுப்பணித்துறை (கட்டிடங்கள்) தலைமை பொறியாளர். உறுப்பினர்
5. சிறைத்துறைத் துணைத் தலைவர், சென்னை. உறுப்பினர் செயலர்.

திகார், மத்திய சிறை மற்றும் காவல்துறை போன்ற இதர துறை கள் சம்பந்தப்பட்ட. கருத்துரைகளையும் பரிந்துரைகளையும் தவிர்த்து, மேற்காணும் அறிக்கை சிறை நிருவாகம் சம்பந்தப் பட்ட 366 பரிந்துரைகளை உள்ளடக்கியதாக உள்ளது. இக்



1989 ஏப்ரல் 12]

குழுவின் பெரும்பாலான பரிந்துரைகள் இம்மாநிலத்தில் நடை முறையில் உள்ள விதிகளின்படி செயல்பாட்டிலுள்ளதாகவும், சில இதர பரிந்துரைகள் தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழு, மற்றும் அனைத்திந்திய சிறை சீர்திருத்தக் குழு போன்ற குழுக் களின் பரிந்துரைகளின் அடிப்படையின்படி ஏற்கெனவே செயல் படுத்தப்பட்டதாகவும் உள்ளன. எனவே, எஞ்சியுள்ள 95 பரிந் துரைகளே ஆராயப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும

26. சிறை நிருவாகத்தை நவீனப்படுத்துதல் :

அனைத்திந்திய சிறை சீர்திருத்ததக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்திய அரசு சிறை நிருவாகத்தை நவீனப்படுத்து வதற்காக 1987—90 ஆம் ஆண்டுகளில் இணையான மானிய உதவி தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் ரூபாய் 432 இலட்சம் மத்திய உதவியாக அளிக்க இசைந்துள்ளது. இந்த மத்திய உதவித் தொகையைப் பயன்படுத்துவதற்காக, தமிழக அரசு 50 சதவீதம் இணையான மானிய உதவித் தொகை அளிக்க ஒப்புக்கொண்டு உள்ளது. எனவே, சிறைகளின் நிலைமையை மேம்படுத்துவதற் காக வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூபாய் 864 இலட்சங்க ளாகும். இதில் 1987–88-ல் ரூபாய் 234 இலட்சம் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டது. ஆனால் இதுவரை மத்திய அரசு ரூபாய் 43.99 இலட்சத்திற்கு மட்டுமே ஒப்புதல் வழங்கி நிதியினை விடுவித்துள்ளது. ஆகவே, தமிழ்நாடு அரசு ரூபாய் 87.98 இலட்சத்திற்கான திட்டங்களுக்கு மட்டும் அங்கீகாரம் வழங்கியுள் ளது. இத்திட்டங்களின் விவரம் இணைப்பு 7ல் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது மத்திய அரசு திட்டத்தின் நிதி ஒதுக்கீடு அளிக்கும் முறையினை மாற்றியமைத்து சிறைகள் பாதுகாப்பு, தொலைத் தொடர்பு மற்றும் வாகன வசதி ஆகியவற்றை நவீனப்படுத்தும் 100 சதவீத மானியமும் மாநில பயிற்சி நிறுவனம் பள்ளிக்கு 50 சதவீத மானியமும். இதர நேர்வுகளில் ஏற்கெனவே உள்ளபடி நிதி ஒதுக்கீடு செய்யவும் முடிவு செய்துள்ளது. ஆகவே, இப்புதிய திட்டத்தின்படி ரூபாய் 654.35 இலட்சத்திற்கான திட்டங்களை மத்திய அரசுக்கு அளித்து ஒப்புதல் பெறும்படியாக அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவை அரசின் பரிசீலனையில் உள்ளது.

## இணைப்பு-2.

(இனம் எண். 2-ஐ காண்க).

### சிறைத்துறையில் உள்ள பதவிகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண்ணும் பதவிகளின் பெயரும். (1) | பதவிகளின் எண்ணிக்கை, (2) |
|---|---|
| 1. சிறைத் துறைத் தலைவர் .. .. | |
| 2 சிறைத் துறைத் துணைத் தலைவர் .. | 1 |
| 3 கணக்கு அலுவலர் .. .. .. | 1 |
| 4 உதவி கணக்கு அலுவலர் .. .. .. | 1 |
| 5 சிறைத் துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர். | 1 |
| 6 சிறைக் கண்காணிப்பாளர்கள் .. .. | 1 |
| 7 பெண்கள் தனிச்சிறை கண்காணிப்பாளர் .. | 9 |
| 8 கண்காணிப்பாளர், ஆண்கள் பிற்காப்பில்லம், புழல். | 1 |
| | 1 |
| 9 சிறை கூடுதல் கண்காணிப்பாளர்கள் | (தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது). |
| 10 புதுக்கோட்டை, இளங்குற்றவாளிகள், சீர் திருத்தப்பள்ளி மற்றும் மதுரையிலுள்ள பெண்களுக்கான தனிச்சிறையின் துணைக் கண்காணிப்பாளர்கள். .. | 8<br>2 |
| 11 சிறை அலுவலர்கள் .. .. .. | |
| 12 உதவி மருத்துவர்கள் .. .. .. | 10 |
| 13 தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர். | 19 |
| 14 மண்டல நன்னடத்தை அலுவலர்கள் .. | 1 |
| | 12 |



### பணியாளர் அமைப்பு.

### பொதுவான வகையினர்.

| தொடர் எண்ணும் பதவிகளின் பெயர்களும். (1) | பதவிகளின் எண்ணிக்கை (2) |
|---|---|
| 15 அலுவலக கண்காணிப்பாளர்கள் . .. | 9 |
| 16 உதவியாளர்கள் .. .. .. .. | 102 |
| 17 இளநிலை உதவியாளர்கள் .. .. .. | 84 |
| 18 சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் ... .. | 3 |
| 19 தட்டச்சர்கள் .. .. .. .. | 46 |
| 20 பதிவுரு எழுத்தர்கள் .. .. .. | 38 |
| 21 டபேதார் .. .. .. .. .. | 1 |
| 22 அலுவலக உதவியாளர்கள் .. .. .. | 91 |

### 2. சிறப்பு வகையினர்.

| | |
|---|---|
| 23 மூதாய் .. .. .. .. .. | 4 |
| 24 துணைச் சிறை அலுவலர் .. .. | 17 |
| 25 உதவி கண்காணிப்பாளர் .. .. | 1 |
| 26 துணை உதவி கண்காணிப்பாளர் .. .. | 1 |
| 27 தனிக்கிளைச் சிறைகளின் கண்காணிப்பாளர்கள் | 5 |
| 28 உளவியல் வல்லுநர்கள் .. .. .. | 3 |
| 29 சமூக நலப் பணியாளர்கள் .. .. | 3 |
| 30 உதவிச் சிறை அலுவலர்கள் .. .. | 136 |
| 31 தொழிற்சாலை மேலாளர் .. .. .. | 1 |
| 32 செவிலியர் .. .. . .. | 10 |
| 33 மருந்தாக்குநர்கள் .. .. .. .. | 18 |

| தொடர் எண்ணும் பதவிகளின் பெயர்களும். (1) | பதவிகளின் எண்ணிக்கை (2) |
|---|---|
| 34 ஆண்/பெண் செவிலியர் உதவியாளர்கள் .. | 31 |
| 35 முதன்மைத் தலைமைக் காவலர்/வாயிற் காப்பாளர்கள். | 39 |
| 36 சிறைக் காவலர்கள்/சிற்றலுவலர் (நிலை-1) | 366 |
| 37 சிறைக் காவலர் சிற்றலுவலர் (நிலை-2) .. | 2,285 |
| 38 அலுவலக மேலாளர் (நிலை-1) .. .. | 10 |
| 39 சிப்ப எழுத்தர்கள் .. .. .. | 9 |
| 40 இடைநிலை ஆசிரியர்கள் .. .. .. | 32 |
| 41 தொடக்க நிலை ஆசிரியர் .. .. | 1 |
| 42 உடற்பயிற்சி ஆசிரியர் .. .. .. | 1 |
| 43 தச்சுப் பயிற்றுநர்-கம்மியர் .. .. | 17 |
| 44 நெசவுப் பயிற்றுநர் . . . | 5 |
| 45 உற்பத்தி உதவியாளர் . . . | 1 |
| 46 தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் . . | 5 |
| 47 புத்தகம் கட்டும் மேற்பார்வையாளர்கள் . | 1 |
| 48 தையற் பயிற்றுநர்கள் . . . | 11 |
| 49 கருமார் தொழில் பயிற்றுநர்கள் . . | 3 |
| 50 தச்சு முதலாள் . . .. .. | 3 |
| 51 மின் கம்பியாள் .. .. .. . | 13 |
| 52 நன்னடத்தை அலுவலர்கள் . . | 96 |
| 53 நல அலுவலர்கள் . . . | 10 |
| 54 லாரி ஓட்டுநர்கள் . . . | 6 |



| தொடர் எண்ணும் பதவியின் பெயர்களும். (1) | பதவிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 55 லாரி ஆள் . .. .. .. | 1 |
| 56 பூட் தயாரிப்புப் பணி மேற்பார்வையாளர். | 1 |
| 57 பூட் பணி கம்மியர் .. .. .. | 1 |
| 58 பூட் பணி மேஸ்திரிகள் . . . | 4 |
| 59 அலுமினிய பட்டரை முதலாள் . . | 1 |
| 60 வண்டிக்காரர்கள் . . . | 8 |
| 61 நெசவு ஆசிரியர் . . . | 1 |
| 62 சாய வேலை ஆசிரியர் . . . | 2 |
| 63 பாவு ஆசிரியர் . . . . | 1 |
| 64 இசைக்குழு ஆசிரியர் . . . | 1 |
| 65 கொட்டகைப் பணி உதவி மேற்பார்வையாளர். | 1 |
| 66 பாவு அமைத்துக் கஞ்சி போடும் உதவியாளர். | 1 |
| 67 கொதிகலன் பணியாள் . . . | 1 |
| 68 பொருத்துத் தச்சர் . . . | 2 |
| 69 நெசவுப் பணியாளர் . . . | 5 |
| 70 விசையேற்று நிலையத்திற்குப் பொறுப்பு வகிக்கும் பொருத்துநர். | 1 |
| 71 கட்டுக்கட்டும் பணியாளர் . .. .. | 1 |
| 72 குழாய் பொருத்துநர் . .. . | 1 |
| 73 கொதிகலன் எரியூட்டுபவர் .. .. | 1 |
| 74 மோட்டார் பணியாள் .. .. .. | 1 |
| 75 மின் மேற்பார்வைளார் .. .. | 1 |
| 76 தோட்டக்காரர்கள் .. .. .. | 2 |

| தொடர் எண்ணும் பதவியின் பெயர்களும். (1) | பதவிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 77 பினாயில் தயாரிப்பு உதவியாளர் | 1 |
| 78 கால்நடை உதவி ஆய்வாளர்கள் | 4 |
| 79 உலோகம் பற்றவைப்பவர்கள் | 1 |
| 80 தலைமை ஆயா | 1 |
| 81 ஆயாக்கள் | 8 |
| 82 மின் மோட்டார் பணியாட்கள் | 4 |
| 83 மேற்பார்வையாளர்கள் ஆசிரியர்கள் (கை முறை காகிதத் தொழில்). | 5 |
| 84 சவுக்கார வேதியல் பணியாளர் | 1 |
| 85 என்ஜின் ஓட்டுநர் | 1 |
| 86 மெருகிடும் உதவியாளர் | 1 |
| 87 காகித கூழ் செய்யும் உதவியாளர்கள் | 3 |
| 88 காவலாட்கள் | 14 |
| 89 இயல் மருத்துவத் தொழில் நுட்பப் பணியாளர் | 1 |
| 90 கால்நடை மேய்ப்பவர் | 1 |
| 91 டிராக்டர் ஓட்டுநர்கள் | 3 |
| 92 துப்புரவாளர்/பெருக்குபவர் | 54 |
| 93 சமையற்காரர்கள் | 18 |
| 94 டிராக்டர் சுத்தம் செய்பவர் | 1 |
| 95 துப்புரவுத் தொழிலாளர்கள் | 6 |
| 96 கைத்தொழில் பயிற்றுநர்கள் | 9 |
| 97 முடி திருத்துநர் | 9 |
| 98 உதவி வேளாண் அலுவலர் | 1 |



## இணைப்பு 3.

(இனம் 2-ஐ காண்க).

1978–79 முதல் 1987–88 ஆம் ஆண்டு வரை சிறைத்துறை தொடர்பான செலவு வருவாய் குறித்த விவரங்களையும், 1988–89 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டையும் 1989–90 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டையும் காட்டும் விவர அறிக்கை.

| | (ரூபாய் ஆயிரத்தில்). |
|---|---|
| **1. செலவு :** | |
| 1978–79 | 4,53,23 |
| 1979–80 | 5,32,94 |
| 1980–81 | 5,61,44 |
| 1981–82 | 6,30,72 |
| 1982–83 | 6,38,62 |
| 1983–84 | 6,87,96 |
| 1984–85 | 8,34,66 |
| 1985–86 | 10,44,87 |
| 1986–87 | 12,66,09 |
| 1987–88 | 12,40,68 |
| 1988–89 திருத்திய மதிப்பீடு | 13,57,50 |
| 1989–90 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 13,19,89 |
| **2. வருவாய் !** | |
| 1978–79 | 1,14,02 |
| 1979–80 | 80,43 |
| 1980–81 | 1,41,20 |
| 1981–82 | 1,60,13 |
| 1982–83 | 1,53,57 |
| 1983–84 | 1,34,06 |
| 1984–85 | 1,25,89 |
| 1985–86 | 1,48,14 |
| 1986–87 | 1,81,10 |
| 1987–88 | 2,33,37 |
| 1988–89 திருத்திய மதிப்பீடு | 2,59,14 |
| 1989–90 வரவு-செலவுத்திட்ட மதிப்பீடு | 2,57,14 |

## இணைப்பு 4.

(1.ஆம் இனத்தைக் காண்க).

**சிறைத்துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நிறுவனங்கள் :**

1. மத்திய சிறை, சென்னை.
2. மத்திய சிறை, வேலூர்.
3. மத்திய சிறை, கடலூர்.
4. மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி.
5. மத்திய சிறை, சேலம்.
6. மத்திய சிறை, கோயம்புத்தூர்.
7. மத்திய சிறை, மதுரை
8. மத்திய சிறை, பாளையங்கோட்டை
9. பெண்கள் தனிச் சிறை, வேலூர்.
10. பெண்கள் தனிச் சிறை, மதுரை.
11. சீர்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை.
12. தனிக் கிளைச் சிறை, சேலம்.
13. தனிக் கிளைச் சிறை, கொக்கிரகுளம்.
14. தனிக் கிளைச் சிறை, திருச்சிராப்பள்ளி.
15. தனிக் கிளைச் சிறை, செங்கல்பட்டு.
16. தனிக் கிளைச் சிறை, கடலூர்.
17. தனிக் கிளைச் சிறை, கோயம்புத்தூர்.
18. திறந்த வெளிச் சிறை, சிங்காநல்லூர்.
19. ஆண்கள் பிற்காப்பு இல்லம், புழல் (சென்னை).

### 1. செங்கை—அண்ணா மாவட்டம்.

20. கிளைச் சிறை, சைதாப்பேட்டை.
21. கிளைச் சிறை, மதுராந்தகம்.
22. கிளைச் சிறை, பூவிருந்தவல்லி.
23. கிளைச் சிறை, திருவள்ளூர்.
24. கிளைச் சிறை, திருத்தணி.
25. கிளைச் சிறை, பொன்னேரி.
26. கிளைச் சிறை, காஞ்சிபுரம்.



### 2. கோயம்புத்தூர் மாவட்டம்.

27. கிளைச் சிறை, அவினாசி.
28. கிளைச் சிறை, மேட்டுப்பாளையம்.
29. கிளைச் சிறை, திருப்பூர்.
30. கிளைச் சிறை, உடுமலைப் பேட்டை.
31. கிளைச் சிறை, பொள்ளாச்சி.
32. கிளைச் சிறை, பல்லடம்.

### 3. பெரியார் மாவட்டம்.

33. கிளைச் சிறை, தாராபுரம்.
34. கிளைச் சிறை, பவானி.
35. கிளைச் சிறை, ஈரோடு.
36. கிளைச் சிறை, கோபிச்செட்டிபாளையம்.
37. கிளைச் சிறை, காங்கேயம்.
38. கிளைச் சிறை, சத்தியமங்கலம்.
39. கிளைச் சிறை, பெருந்துறை.

### 4. நீலகிரி மாவட்டம்.

40. கிளைச் சிறை, உதக மண்டலம்.
41. கிளைச் சிறை, குன்னூர்.
42. கிளைச் சிறை, கூடலூர்.

### 5. வட ஆற்காடு மாவட்டம்.

43. கிளைச் சிறை, அரக்கோணம்.
44. கிளைச் சிறை, ஆம்பூர்.
45. கிளைச் சிறை, செய்யாறு.
46. கிளைச் சிறை, ஆரணி.
47. கிளைச் சிறை, செங்கம்.
48. கிளைச் சிறை, குடியாத்தம்.
49. கிளைச் சிறை, போளூர்.
50. கிளைச் சிறை, திருப்பத்தூர்.
51. கிளைச் சிறை, திருவண்ணாமலை.
52. கிளைச் சிறை, வாணியம்பாடி.
53. கிளைச் சிறை, வாலாஜாப்பேட்டை.
54. கிளைச் சிறை, வந்தவாசி.

[1989 ஏப்ரல் 12

6. தென் ஆற்காடு மாவட்டம்.

55. கிளைச் சிறை, கள்ளக்குறிச்சி.
56. கிளைச் சிறை, சிதம்பரம்.
57. கிளைச் சிறை, செஞ்சி.
58. கிளைச் சிறை, பரங்கிப்பேட்டை.
59. கிளைச் சிறை, திண்டிவனம்.
60. கிளைச் சிறை, திருக்கோயிலூர்.
61. கிளைச் சிறை. உளுந்தூர்பேட்டை.
62. கிளைச் சிறை, விழுப்புரம்.
63. கிளைச் சிறை, விருத்தாசலம்.
64. கிளைச் சிறை, பண்ருட்டி.

7. சேலம் மாவட்டம்.

65. கிளைச் சிறை, ஆத்தூர்.
66. கிளைச் சிறை, நாமக்கல்.
67. கிளைச் சிறை, ஓமலூர்.
68. கிளைச் சிறை, பரமத்தி.
69. கிளைச் சிறை, ராசிபுரம்.
70. கிளைச் சிறை, சங்ககிரி.
71. கிளைச் சிறை, திருச்செங்கோடு.

8. திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம்.

72. கிளைச் சிறை, திண்டுக்கல்.
73. கிளைச் சிறை, நிலக்கோட்டை.
74. கிளைச் சிறை, பழனி.
75. கிளைச் சிறை, வேடசந்தூர்.
76. கிளைச் சிறை, கொடைக்கானல்.

9. மதுரை மாவட்டம்.

77. கிளைச் சிறை, மேலூர்.
78. கிளைச் சிறை, உசிலம்பட்டி.
79. கிளைச் சிறை, திருமங்கலம்.
80. கிளைச் சிறை, பெரியகுளம்.
81. கிளைச் சிறை, உத்தமபாளையம்.



1989 ஏப்ரல் 12]

10. கன்னியாகுமரி மாவட்டம்.

82. கிளைச் சிறை, தக்கலை.
83. கிளைச் சிறை, குழித்துறை.
84. கிளைச் சிறை, நாகர் கோயில்.

11. இராமநாதபுரம் மாவட்டம்.

85. கிளைச் சிறை, திருவாடானை.
86. கிளைச் சிறை, பரமக்குடி.
87. கிளைச் சிறை, முதுகுளத்தூர்.
88. கிளைச் சிறை, இராமநாதபுரம்.

12. காமராசர் மாவட்டம்.

89. கிளைச் சிறை, ஸ்ரீவில்லிப்புத்தூர்.
90. கிளைச் சிறை, சாத்தூர்.
91. கிளைச் சிறை, அருப்புக்கோட்டை.
92. கிளைச் சிறை. விருதுநகர்.

13. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.

93. கிளைச் சிறை, சிவகங்கை.
94. கிளைச் சிறை, திருப்பத்தூர்.

14. திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

95. கிளைச் சிறை, அரியலூர்.
96. கிளைச் சிறை, ஜெயங்கொண்டான்.
97. கிளைச் சிறை, குளித்தலை.
98. கிளைச் சிறை, லால்குடி.
99. கிளைச் சிறை, மணப்பாறை.
100. கிளைச் சிறை, முசிறி.
101. கிளைச் சிறை, பெரம்பலூர்.
102. கிளைச் சிறை, துறையூர்.
103. கிளைச் சிறை, கரூர்.

15. புதுக்கோட்டை மாவட்டம்.

104. கிளைச் சிறை, புதுக்கோட்டை.
105. கிளைச் சிறை, அறந்தாங்கி.
106. கிளைச் சிறை, கீரனூர்.
107. கிளைச் சிறை, திருமயம்.

## 16. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.

108. கிளைச் சிறை, அம்பாசமுத்திரம்.
109. கிளைச் சிறை, சங்கரன்கோவில்.
110. கிளைச் சிறை, தென்காசி.
111. கிளைச் சிறை, நாங்குனேரி,

## 17. சிதம்பரனார் மாவட்டம்.

112 கிளைச் சிறை, கோவில்பட்டி.
113 கிளைச் சிறை, தூத்துக்குடி.
114. கிளைச் சிறை, ஸ்ரீவைகுண்டம்.
115 கிளைச் சிறை, திருச்செந்தூர்.

## 18. தஞ்சாவூர் மாவட்டம்.

116 கிளைச் சிறை, கும்பகோணம்.
117 கிளைச் சிறை, மயிலாடுதுறை.
118 கிளைச் சிறை, மன்னார்குடி.
119 கிளைச் சிறை, நாகப்பட்டினம்.
120 கிளைச் சிறை, நன்னிலம்.
121 கிளைச் சிறை, பட்டுக்கோட்டை.
122 கிளைச் சிறை, பாபநாசம்.
123 கிளைச் சிறை, சீர்காழி.
124 கிளைச் சிறை, திருத்துறைப்பூண்டி.
125 கிளைச் சிறை, திருவாரூர்.
126. கிளைச் சிறை, தரங்கம்பாடி.
127. கிளைச் சிறை, திருவிடைமருதூர்.
128. கிளைச் சிறை, தஞ்சாவூர்.

## 19. தருமபுரி மாவட்டம்.

129. கிளைச் சிறை, ஒசூர்.
130. கிளைச் சிறை, அரூர்.
131. கிளைச் சிறை, தருமபுரி.
132. கிளைச் சிறை, கிருஷ்ணகிரி.
133. கிளைச் சிறை, ஊத்தங்கரை.



## இணைப்பு 5.

(6 ஆம் இனத்தைக் காண்க.)

மத்திய சிறைகள், மகளிருக்கான தனி சிறை, வேலூர், புதுக் கோட்டை பார்ஸ்டல் பள்ளி, புழலிலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம் ஆகியவை ஒவ்வொன்றிலுள்ள தொழிற்சாலைகள்/ வாழ்க்கைதத் தொழில்/கைவினைப் பொருட்கள் தயாரிப்பு நிலையங்கள் குறித்த பட்டியல்.

| தொடர் எண் மற்றும் நிறுவனத்தின் பெயர். | தொழில்கள். |
|---|---|
| (1) | (2) |
| 1 மத்திய சிறை, சென்னை. | தச்சு வேலை, தையல், பினாயில் தயாரிப்பு, கூர்நாடா உற்பத்தி, புத்தகம் கட்டுதல், சோப்புத் தயாரித்தல், முத்திரை அரக்கு, காகித உற்பத்தி. |
| 2 மத்திய சிறை, வேலூர் .. | நெசவு, தையல், புத்தகம் கட்டுதல், தச்சு வேலை, காகிதம் தயாரித்தல், பலவகை. |
| 3. மத்திய சிறை, சேலம். | அலுமினியம், கருமார் பட்டறை, தச்சு வேலை, நெசவு, காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல், தையல். |
| 4. மத்திய சிறை, கோயம்புத்தூர். | நெசவு, சாயம் தோய்த்தல், தையல், கூடாரம் தயாரித்தல், கைமுறை காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல், தச்சு வேலை. |
| 5. மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி. | தச்சு வேலை, நெசவு, பாய் முடைதல், தையல், புத்தகம் கட்டுதல், சோப்பு தயாரித்தல். |
| 6. மத்திய சிறை, மதுரை .. | நெசவு, தையல், காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல், தச்சு வேலை. |

| தொடர் எண் மற்றும் நிறுவனத்தின் பெயர். | தொழில்கள். |
|---|---|
| (1) | (2) |
| 7 மத்திய சிறை, பாளையங்கோட்டை. | தச்சு வேலை, நெசவு, தையல், கைமுறை காகித உற்பத்தி, புத்தகம் கட்டுதல். |
| 8 மத்திய சிறை, கடலூர் .. | நெசவு, தையல், தச்சு வேலை. |
| 9 ஆண்கள் பிற்காப்பு இல்லம், புழல், சென்னை-66. | தச்சு வேலை, தையல், உலோக வேலை. |
| 10 பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை. | தச்சு வேலை, தையல், புத்தகம் கட்டுதல், கருமார் பட்டறை. |
| 11 மகளிர் தனி சிறை, வேலூர் | நாடா உற்பத்தி, முறுக்கு நூல் உற்பத்தி, தையல், நெசவு. |

## இணைப்பு 6.

(எளிய சிறு தொழில்கள்.)

(7 ஆம் எண் இனத்தைக் காண்க.)

சிறைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள எளிய சிறு தொழில்கள் குறித்த பட்டியல் :—

| சிறையின் பெயர். | தொழிலின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1. மத்திய சிறை, மதுரை . | குழாய் பொருத்து வேலை. |
| 2. மத்திய சிறை, சென்னை | சாதாரண மின் கம்பி இணைப்புப் பணி. |
| 3. மத்திய சிறை, பாளையங்கோட்டை. | குழாய் பொருத்து வேலை. |
| 4. மத்திய சிறை, வேலூர் . | செங்கல் வேலை. |
| 5. மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி. | குழாய் பொருத்து வேலை. |
| 6. மத்திய சிறை, சேலம் . | குழாய் பொருத்து வேலை. |
| 7. மத்திய சிறை, கடலூர் .. | சாதாரண மின் கம்பி இணைப்புப் பணி. |
| 8. மத்திய சிறை, கோயம்புத்தூர். | பெயர்ப்பலகை எழுதுதல் உட்பட வண்ணம் பூசும் பணி |
| 9. பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை. | சாதாரண மின் கம்பி இணைப்புப் பணி. |





## இணைப்பு 7.

சிறை நிர்வாகத்தினை நவீனப்படுத்தும் மத்திய திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பணிகளின் விபரம்,.

| வரிசை எண் மற்றும் திட்டத்தின் விபரம், | அரசு ஆணை எண் மற்றும் நாள். | அங்கீகரிக்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1. மத்திய சிறை, புழலில் ஒரு மின்னியக்கி நிறுவுதல். | 2988, உள் துறை, நாள் 18–12–87. | 10.00 |
| 2. மத்திய சிறை கோவையில் ஒரு மின்னியக்கி நிறுவுதல். | 2988, உள் துறை, நாள் 18–12–87. | 10.00 |
| 3. மத்திய சிறை, புழலுக்கு ஒரு நோயாளி ஊர்தி வழங்குதல். | 2988, உள் துறை, நாள் 18-12–87. | 1.25 |
| 4. மத்திய சிறை, வேலூருக்கு ஒரு நோயாளி ஊர்தி வழங்குதல். | 2988, உள் துறை, நாள் 18–12–87. | 1.25 |
| 5. மத்திய சிறை, புழல் பயங்கரவாதிகளுக்கென ஒரு தனித் தொகுதி கட்டுதல். | 1133, உள் துறை, நாள் 17–5–88. | 1.50 |
| 6. மத்திய சிறை, புழலில் உட்புறம் மின் வசதி அளித்தல். | 1133, உள் துறை, நாள் 17–5–88. | 30.84 |
| 7. ஒன்பது கிளைச் சிறைகளில் தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்தல். | 1133, உள்துறை, நாள் 17–5–88. | 4.01 |
| 8. நான்கு கிளைச் சிறைகளில் நீரடிக் கழிப்பிட வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் | 1133, உள் துறை நாள் 17–5–88. | 2.16 |
| 9. பத்து கிளைச் சிறைகளில் காவல் அறை, அலுவலக அறை, நேர்காணல் அறை மருந்தகம், முதலியன கட்டுதல். | 1133, உள்துறை நாள் 14–5–88. | 16.84 |
| 10. ஏழு கிளைச் சிறைகளில் பாதுகாப்பு சுவர் கட்டுதல். | 1133, உள்துறை நாள் 17–5–88. | 10.13 |
| | மொத்தம் .. | 87.98 |

அத்தியாயம் II

## தமிழ்நாட்டில் அரசினர் மறுவாழ்வு இல்லங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1989-90.

தொழு நோயால் அவதியுறும் பிச்சைக்காரர்கள் நோயைக் குணப்படுத்தவும் அவர்கட்கு மறுவாழ்வு அளிக்கவும் தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் 10 இடங்களில் தொழுநோய்ப் பிச்சைக் காரர்களுக்கென மறுவாழ்வு இல்லங்களை அமைத்துள்ளது:—

1. பரனூர், செங்கை அண்ணா மாவட்டம்.
2. உளுந்தூர்ப்பேட்டை, தென்னாற்காடு மாவட்டம்.
3. பர்கூர், தருமபுரி மாவட்டம்.
4. புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.
5. விண்ணப்பள்ளி, பெரியார் மாவட்டம்.
6. மனையேரிப்பட்டி. தஞ்சாவூர் மாவட்டம்.
7. யா. புதுப்பட்டி, மதுரை மாவட்டம்.
8. மல்லவாடி, வட ஆற்காடு மாவட்டம்.
9. செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம்.
10. தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம்.

மருத்துவப் பணி மற்றும் குடும்ப நல இயக்குநரின் கீழ் இயங்கி வந்த அரசு மறுவாழ்வு இல்லங்கள், 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1ஆம் நாள் முதல் சிறைத் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு இயங்கி வருகின்றன.

### அனுமதி மற்றும் நீக்கம் :

ஒவ்வொரு இல்லத்திலும் 400 பெரியவர்களும் (ஆண் பெண் உட்பட), 25 சிறுவர்களும் தங்குவதற்கு வசதியுள்ளது, தொழு நோயால் பாதிக்கப்பட்டுள்ள பிச்சைக்காரர்களும் பிச்சை எடுத்ததற்காக தண்டனை வழங்கப்பட்டவர்களும் இவ்வில்லங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். மணமானவர்களில் கணவனோ அல்லது மனைவியோ தொழுநோயால் பாதிக்கப் பட்டு பிச்சை எடுப்பவராக இருந்தால். மற்றவரையும், இவ்வில்லத்தில் சேர்க்க அனுமதி உள்ளது. அவர்களுக்கு குழந்தைகள் இருப்பின் அவர்களும் இவ்வில்லங்களில் சேர்க்கப் படுகின்றனர்.



இல்லவாசிகள், தொழுநோய் இல்லாதவர்கள் என்று மருத்துவ அதிகாரிகளால் சான்று அளிக்கப்பட்டால், அவர்கள் சொந்த முயற்சியில் வாழ்க்கை நடத்த இயலுமாயின் அவர்கள் வெளியில் அனுப்பப்படுகிறார்கள். மேலும் திரும்பத் திரும்ப ஒழுங்கற்ற முறையில் நடந்து கொள்வோர் மற்றும் இல்லம் சீரிய முறையில் நடைபெற தடையாய் இருப்போர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வெளியே அனுப்பப்படுகிறார்கள்.

### இல்லவாசிகளுக்கு அளிக்கப்படும் வசதிகள் :

இவ்வில்லங்களில் இருப்போருக்கு இலவசமாகத் தங்க வசதியும், உணவு, உடை, மருத்துவ வசதி மற்றும் பல தொழில்களில் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. அவர்கள் விளையாடுவதற்கான வசதியும், திரைப்படம் காண்பிக்க வசதியும், நூலகம் போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

### உணவு :

இல்லங்களிலிருப்பவர்களுக்குக் காலைச் சிற்றுண்டியும், தேநீரும், மதிய உணவும், மாலை தேநீரும் மற்றும் இரவு உணவும் அளிக்கப்படுகின்றன. நாள்தோறும் மோர் வழங்கப் படுகிறது. வாரம் ஒரு முறை இறைச்சியும் வழங்கப்படுகிறது. இதற்காக வயது வந்த இல்லவாசி ஒவ்வொருவருக்கும் தின மும் ரூ. 4.50ம் அவர்களைச் சார்ந்த உறவினர் மற்றும் சிறுவருக்கு தினமும் ரூ. 3.00ம் செலவிடப்படுகிறது. சுதந்திர தினம், காந்தியடிகள் பிறந்த நாள் மற்றும் முக்கியமான நாட்களிலும் ஒவ்வொரு இல்லவாசிக்கும் கூடுதல் ரூபாய் ஒன்றுக்கு சிறப்பு உணவு வழங்கப்படுகிறது.

### இருப்பிடம் :

உளுந்தூர்ப்பேட்டை, பர்கூர் இல்லங்களைத் தவிர மற்ற எல்லா இல்லங்களும் குடும்பத்தினர்கள் தங்கக் கூடிய அறைகள் கொண்ட 4 தொகுதிகளாக (பிளாக்) கீழ் தளத்தில் கட்டப் பட்டுள்ளன. மேலும், முதல் மாடியில் தனியாள் தங்கு வதற்குத் துயில் கூடங்கள் (Dormitories) கட்டப் பட்டுள்ளன. உளுந்தூர்ப்பேட்டை, பர்கூர் இல்லங்கள், ஒற்றைக் கட்டிடமாகவும் நிரந்தரக் கொட்டகையாகவும் கட்டப்பட்டுள்ளன.

### உடை :

பொங்கல் நாள், சுதந்திர நாள் ஆகிய தினங்களில் இல்ல வாசிகளுக்கு உடைகள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு ஆண்டுதோறும் நுண்துளையுள்ள இரப்பர் காலணிகளும் வழங்கப்படுகின்றன.

## இதர வசதிகள் :

பாய், தட்டு, கரண்டி, எண்ணெய், சோப்பு, பற்பொடி, பல்துலக்கும் பிரஷ் (விரல்கள் செம்மையாக இல்லாதவர் களுக்கு மட்டும்) ஆகிய பொருட்கள் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படுகின்றன. பார்வைக் குறைவால் அவதியுற்றவர் களுக்கு, பரிசோதனைக்குப்பின் மூக்குக் கண்ணாடிகளும், மற்றும் கறுப்பு மூக்குக் கண்ணாடிகளும் இலவசமாக அளிக் கப்படுகின்றன. மாவட்ட காசநோய் மருத்துவ நிபுணர்களும், மற்றும் கண் மருத்துவ நிபுணர்களும் இவ்வில்லவாசிகளின் மற்ற நோய்களையும் கண்டு அறிய இவ்வில்லங்களைப் பார் வையிடுகின்றனர். இல்லவாசிகளுக்காக இரு தினசரி செய்தித் தாள்கள் வாங்கப்படுகின்றன. அவர்களின் இலக்கியம் மற் றும், பொதுக் கல்வி மேம்பாட்டிற்காக இலக்கிய நூல்கள் வழங்கப்படுகின்றன.

## இல்லவாசிகளின் குழந்தைகளுக்கு வழங்கப்படும் வசதிகள் :

தொழு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ஏத்தாப்பூர் என்னும் இடத்தில் நடத்தப்படும் சிறப்புப் பள்ளியில் அனுமதிக்கப்படுகின்றனர். மேற்படி நோயினால் பாதிக்கப்படாத குழந்தைகள் கூடுமான வரையில் தனியாகப் பிரிக்கப்பட்டு, இவ்வில்லங்களின் அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர்.

முதன்மை செலவினங்களுக்காகவும், சீருடை, புத்தகங்கள், பெட்டி, முதலியவைகளுக்காகவும் ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ. 75 அரசு வழங்குகிறது.

மறுவாழ்வு இல்லங்களிலிருந்து பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் மேற்கொண்டும் படிப்பதற்காக, வகுப்பு வாரி யாக ஆண்டு தோறும் கீழ்க்கண்டவாறு செலவு செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது :—

இரண்டாம் வகுப்பு முதல் ஏழாம் வ்குப்பு வரை ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்) ரூ. 120 (ஆறு ஆண்டுகளுக்கு).

எட்டாம் வகுப்பு மற்றும் ஒன்பதாம் வகுப்புகளுக்கு,— ரூ. 30 (ரூபாய் முப்பது மட்டும்). ரூ. 60 (ரூபாய் அறுபது மட்டும்) (இரண்டு ஆண்டுகளுக்கு).

பத்தாம் வகுப்பிற்கு.—ரூ. 50 (ரூபாய் ஐம்பது மட்டும்).

பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளுக்கு.— ரூ. 75 (ரூபாய் எழுபத்தைந்து மட்டும்), ரூ. 150 (இரண்டு ஆண்டுகளுக்கு).



## விளையாட்டும், பொழுதுபோக்கும் :

ஒவ்வொரு இல்லத்திலும் விளையாட்டுப் பொருட்கள் வாங்குவதற்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ. 200 அரசு அனு மதித்துள்ளது. ஒவ்வொரு இல்லத்திலும் இல்லவாசிகள் இன்புற்று இருக்க இசைக்கருவிகளும் அளிக்கப்பட்டிருக் கின்றன.

## மருத்துவ வசதிகள் :

இல்லவாசிகளுக்கு மருத்துவ சிகிச்சை இலவசமாக அளிக், கப்படுகிறது. இரு மருத்துவ அதிகாரிகள், இரு செவிலியர்கள் ஒரு ஆய்வுக் கூட தொழில் நுட்பப் பணியாளர், ஒரு மருந் தாளுநர், ஒரு உடற்கூறு பயிற்சியாளர், ஒரு தாய்மை மருத் துவத் துணைச் செவிலியர், ஒரு உதவி ஆண் செவிலியர், ஒரு உதவி பெண் செவிலியர் முதலானவர்கள் ஒவ்வொரு இல்லத்திலும் இல்லவாசிகளின் மருத்துவத் தேவைகளைக் கவனிக்கின்றனர். அங்குள்ளவர்களுக்குத் தொழுநோய் சிகிச்சை அளிப்பதோடுமட்டுமின்றி மற்ற நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தீவிர சிகிச்சை பெறவேண்டிய நோயாளிகள். 10 பேர் தங்கக் கூடிய தனி வார்டுகளில் அனு மதிக்கப்பட்டு அவர்களுக்குச் சிறப்பு உணவு மற்றும் மருந் துகள் அளிக்கப்படுகின்றன. எல்லாவித வசதிகளும் கொண்ட அறுவை சிகிச்சைக் கூடங்கள், பர்கூர், உளுந்தூர்ப்பேட்டை, இல்லங்களைத் தவிர மற்ற இல்லங்களில் உள்ளன. கை விரல் முடமானவர்கள், கால் விளங்காதவர்கள் மற்றும் உடற்கூறு சரியில்லாத நிலையில் உள்ளவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. இல்லவாசிகளாலேயே செய்யப் படும் தனிச் சிறப்பு வாய்ந்த காலணிகள் மற்றும் செயற்கை உறுப்புக்கள் (கை, கால்) முதலியவைகள் வழங்க இல்லம் ஒன்றுக்கு, ஆண்டு ஒன்றுக்கு, ரூ, 300 செலவிட அரசு அனு மதி வழங்கியுள்ளது.

## உடற்பயிற்சியும் தொழில் பயிற்சியும் :

ஒவ்வொரு இல்லத்திலும் ஓர் உடற் கூறு பயிற்சியாளர், உள்ளார். இவர் மின் கருவி (Electrical Stimulator) மெழுகுத் தொட்டி (wax bath) ஆகியவற்றின் உதவியைக் கொண்டு ஊனமுற்ற உறுப்புகளுக்கும், உடற்கூறு பயிற்சி தேவையுள்ள இல்லவாசிகள் அனைவருக்கும் பயிற்சி அளிக்கின்றனர். குடற் புண் மற்றும் உருச் சிதைந்த நோயாளிகளை உடற்கூறு பயிற்சி யாளர்களும் மற்றும் மருத்துவ அதிகாரிகளும் அறுவை சிகிச்சைக் காக தெரிந்தெடுக்கின்றனர்.

[1989 ஏப்ரல் 12

## இல்லவாசிகளுக்கு நுண்ணிய துளையுடன் கூடிய ரப்பர் காலணிகள் அளிக்கப்படுகின்றன.

தலைமை தொழில் ஈடுபாட்டு பயிற்சியாளர் கடமைகளும் பணிகளும் :

தலைமை அலுவலகத்தில் உள்ள தலைமைத் தொழில் ஈடுபாட்டு பயிற்சியாளர் அனைத்து இல்லங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் பட்டியலை ஆய்வு செய்வதிலும், உடற்கூறு பயிற்சியாளர்கள், மற்றும் ஆய்வுக் கூட தொழில் நுட்பப் பணியாளர்களின் குறிப்புகளைக் கவனிப்பதிலும் ஈடுபட்டுள்ளார். இவர் மறுவாழ்வு இல்லங்களைப் பார்வையிடும்போது, அங்குள்ள உற்பத்திப் பிரிவுகள் சரியாக இயங்குகின்றனவா என்பதையும், உடற்கூறு பயிற்சியாளர்கள் நடவடிக்கைகள் மற்றும் ஆபத்தான தொழில் நுட்ப விஷயங்களை நோயாளிகளுக்கு விளக்குவதுடன், நோயாளிகளின் சக்திக்கேற்ப வெவ்வேறு தொழில் பயிற்சிக்கு இல்லவாசிகளைத் தேர்ந்தெடுக்கின்றார். உணர்வு இல்லாதவர்களுக்கு சிறு பொறியமைப்பு மற்றும் முறிந்த எலும்பு கட்ட உதவும் வரிச்சில்கள், நுண்ணிய துளையுடன் கூடிய ரப்பர் பாதுகாப்புள்ள கருவிகளையும், பாதுகாப்பு மற்றும் தற்காப்பு சாதனங்களையும் கொடுக்கும்படியும், மறு வாழ்வு திட்டங்களுக்கு நோயாளிகளைத் தயார் செய்யும்படியும் உடற் சிகிச்சைத் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு அவர் ஆலோசனை வழங்குகிறார்.

## இல்லவாசிகளின் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள் :

இவ்வில்லங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள தொழு நோயாளிகளில் உடல் நலத்துடன் இருப்போருக்கு கீழ்க்கண்ட துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

1. துணி நெய்தல் (கைத்தறி, விசைத்தறி).
2. பாய் பின்னுதல்.
3. செருப்பு செய்தல் மற்றும் பழுது பார்த்தல்.
4. தையல்.
5. தச்சு வேலை.
6. விவசாயம்.
7. கிராமப்புற நூற்பு கேந்திரம் (கைராட்டை).
8. பட்டுப் புழு வளர்ப்பு.
7. காகித உறை செய்தல் (புதுக்கோட்டை இல்லத்தில்).



1989 ஏப்ரல் 12]

## நவீன தொழிற்சாலையுடன் அமைந்த தொழிற்கூடம் :

பரனூர் மறுவாழ்வு இல்லத்தில், காட்பாடியிலுள்ள ஸ்வீடன் நாட்டு செஞ்சிலுவைச் சங்க மறுவாழ்வு தொழிற்சாலையினரால் அமைக்கப்பட்டுள்ள நவீன தொழிற்சாலையுடன் அமைந்த தொழிற்கூடத்தில், பயிற்சி அளிக்கப்பட்டவர்கள், திருச்சி, காட்பாடி ஆகிய இடங்களில் உள்ள மேற்படி சங்கத் தொழிற்சாலைகளிலும், தனியார் நிறுவனங்களிலும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் இல்லவாசிகளுக்கு பட்டறைகளில் (லேத்) தேவையான பயிற்சி அளிக்கப்படுகிறது. முக்கியமாக இத் தொழிற்சாலைகளில் கட்டுப்பாடான ஒழுங்கு முறையில் இல்லவாசிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் அவர்களின் சுதந்திரம் மற்றும் தன்னம்பிக்கையை வளர்க்க உதவுகின்றன.

## கைத்தறிகள் மற்றும் விசைத் தறிகள்.

தற்பொழுது 135 கைத்தறிகளும், 77 பாய் தறிகளும் எல்லா இல்லங்களிலும் உள்ளன. இல்லவாசிகளால் தயாரிக்கப்படும் பொருட்கள் அவர்களின் தேவைகள் போக, மீதமுள்ளவை அருகிலுள்ள மாவட்ட மருத்துவ மனைகளுக்கு விற்கப்படுகின்றன. கிராமப்புற நூற்பு கேந்திரம், யா. புதுப்பட்டி மற்றும் உளுந்தூர்பேட்டை இல்லங்களில் நிறுவப்பட்டுள்ளன. இவைகளில் பிரதிமாதம் 10,000 சிட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. 34 தையல் மிஷின்கள் இவ்வில்லங்களில் உள்ளன. இல்லவாசிகளுக்கு வழங்கப்படும் உடைகள், தையல் கலையில் தேர்ச்சி பெற்ற இல்லவாசிகளாலேயே தைக்கப்பட்டு அளிக்கப்படுகின்றன.

## காகித உறை தயாரிப்புப் பிரிவு :

புதுக்கோட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் காகித உறை தயாரிப்புப் பிரிவு 1-2-1978 முதல் இயங்கி வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களிலுள்ள இல்லவாசிகளின் எண்ணிக்கை, இல்லங்களின் உற்பத்தித் திறன், உற்பத்திப் பொருட்கள் விற்பனை விவரம், இல்லவாசிகள் வேலைக்கு அமர்த்தப்பட்ட எண்ணிக்கை, அலுவலர்களைப் பற்றிய விவரங்கள் மற்றும் இல்லங்களில் தயாரித்த பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த ஆதாய, நட்ட விவரங்கள் முறையே அட்டவணைகள் 1, 2(அ) 2(இ), 3, 4, 5 மற்றும் 6 இல் உள்ளன.

அட்டவணை 1.

அரசு மறுவாழ்வு இல்லங்களில் டிசம்பர் 1988 நிலவரப்படி தங்கியுள்ள உள்ளிருப்போர் விவரம் :

| வரிசை எண்ணும் மறுவாழ்வு இல்லத்தின் பெயரும். | பெரியோர்கள். | | சிறியோர்கள். | | சிறார். | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ஆண்கள். | பெண்கள். | ஆண்கள். | பெண்கள். | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. பரனூர் .. .. .. | 232 | 155 | 25 | 20 | 1 | 423 |
| 2. உளுந்தூர்பேட்டை .. | 130 | 77 | 4 | 19 | 1 | 231 |
| 3. பர்கூர் .. .. . | 181 | 130 | 9 | 10 | 3 | 333 |
| 4. புதுக்கோட்டை . | 240 | 122 | 16 | 5 | .. | 383 |
| 5. மனையேரிப்பட்டி .. | 265 | 90 | 10 | 6 | .. | 371 |
| 6. யா. புதுப்பட்டி .. .. | 254 | 124 | 46 | .. | .. | 424 |
| 7. மல்லவாடி .. .. | 164 | 83 | 7 | 15 | 3 | 282 |
| 8. தேவியாகுறிச்சி .. .. | 194 | 118 | 10 | 10 | .. | 332 |
| 7. விண்ணப்பள்ளி .. .. | 100 | 49 | 5 | 4 | 3 | 161 |
| 10. செல்லியம்பட்டி . .. | 152 | 82 | 7 | 5 | 2 | 250 |
| மொத்தம் .. | 1,902 | 1,040 | 141 | 94 | 12 | 3,190 |



அட்டவணை 2(அ)

மறுவாழ்வு இல்லங்களின் உற்பத்தி பொருள்களின் விவரம் (அக்டோபர் 1987 முதல் செப்டம்பர் 1988 வரை).

| மறுவாழ்வு இல்லத்தின் பெயர். | காய்கறி. | தானியம். | இலவம் பஞ்சு காய்கள். | எலுமிச்சை. | தேங்காய். | விறகு. | துண்டம். | பாய். | காலணி. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | (கிலோ.) | (கிலோ.) | (எண்ணிக்கை.) | (எண்ணிக்கை.) | (எண்ணிக்கை). | (கிலோ.) | (எண்ணிக்கை). | (எண்ணிக்கை) | (ஜதை.) |
| 1. பரனூர் .. .. .. | .. | .. | .. | .. | .. | 128 | .. | 537 | 380 |
| 2. உளுந்தூர்பேட்டை .. | 146.0 | .. | .. | .. | .. | 75 | .. | 594 | 180 |
| 3. பர்கூர் .. .. .. | 306.5 | .. | .. | .. | 425 | 1,100 | .. | 443 | 215 |
| 4. புதுக்கோட்டை .. | 810.7 | 1,120 | .. | .. | 199 | .. | .. | 484 | 200 |
| 5. மனையேரிப்பட்டி .. | 224.5 | 30 | .. | .. | 271 | 917 | .. | 555 | 389 |
| 6. யா. புதுப்பட்டி .. .. | 626 | 4,885 | .. | .. | 71 | 395 | .. | 454 | 620 |
| 7. மல்லவாடி .. .. | 1,472.8 | . | .. | .. | 114 | 3,760 | .. | 1,247 | .. |
| 8. தேவியாக்குறிச்சி .. | 4,125.5 | .. | .. | 2,870 | 228 | 290 | .. | 440 | 402 |
| 9. விண்ணப்பள்ளி .. | .. | .. | 161 | .. | .. | .. | .. | 352 | 100 |
| 10. செல்லியம்பட்டி .. .. | [illegible] | .. | .. | .. | 715 | 270 | 135 | 942 | 160 |
| மொத்தம் .. | 9,370.1 | 6,035 | 161 | 2,870 | 2,023 | 6,935 | 135 | 6,548 | 2,686 |

அட்டவணை 2(இ).

மறுவாழ்வு இல்லங்களில் உற்பத்திப் பொருட்களின் விவரம்.

(1987 அக்டோபர் முதல் செப்டம்பர் 1988 வரை).

| மறுவாழ்வு இல்லத்தின் பெயர். | தையல் மையம். | | | | கட்டு கட்டும் துணி. | சல்லாத் துணி. |
|---|---|---|---|---|---|---|
| | சட்டை. (எண்கள்). | ரவிக்கை. (எண்கள்.) | பாவாடை. (எண்கள்). | சிறுபிள்ளைகள் ஆடை. (எண்கள்). | (மீட்டர்). | (மீட்டர்). |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. பரனூர் .. | 507 | 302 | 304 | 244 | 33,199 | .. |
| 2. உளுந்தூர்பேட்டை | 183 | 83 | 119 | 92 | 1,184 | .. |
| 3. பர்கூர் .. | 279 | 204 | 72 | 22 | 484 | 440 |
| 4. புதுக்கோட்டை | 432 | 188 | 531 | 121 | 2,450 | — |
| 5. மனையேரிப்பட்டி | 440 | 199 | 71 | 72 | 1,875 | 300 |
| 6. யா. புதுப்பட்டி | 214 | 183 | 200 | 95 | 1640 | .. |
| 7. மல்லவாடி .. | 223 | 278 | 205 | 65 | 6,150 | — |
| 8. தேவியாக்குறிச்சி | 398 | 205 | 190 | 157 | 3,960 | — |
| 9. விண்ணப்பள்ளி | 76 | — | 23 | 9 | 7,952.25 | .. |
| 10. செல்லியம்பட்டி | 190 | 138 | 197 | 42 | 3,789 | .. |
| மொத்தம் .. | 2,942 | 1,775 | 2,012 | 919 | 62,692.25 | 740 |



அட்டவணை 2(இ)—தொடர்ச்சி.

| மறுவாழ்வு இல்லத்தின் பெயர். | காடா துணி. (மீட்டர்). | சேலை (எண்கள்). | வேட்டி. (எண்கள்). | துண்டுகள். (எண்கள்). | சட்டைத் துணி மற்றும் ரவிக்கை. (மீட்டரில்). | அம்பா சர்க்கா மையம் (எண்கள்.) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 1. பரனூர் .. | 1,500.15 | 323 | .. | 523 | 548 | .. |
| 2. உளுந்தூர்பேட்டை | 304 | .. | 216 | 420 | .. | 37,265 |
| 3. பர்கூர் .. | 836 | 152 | 512 | 1,006 | .. | .. |
| 4. புதுக்கோட்டை | .. | 184 | .. | 210 | 180 | .. |
| 5. மனையேரிப்பட்டி | .. | 168 | .. | .. | 180 | .. |
| 6. யா. புதுப்பட்டி | 720 | 93 | .. | 664 | 520 | 91,420 |
| 7. மல்லவாடி .. | 300 | 180 | 489 | 527 | 164 | .. |
| 8. தேவியாகுறிச்சி | 413 | 152 | 330 | 391 | 692 | .. |
| 9. விண்ணப்பள்ளி | 540 | .. | .. | .. | 87 | .. |
| 10. செல்லியம்பட்டி | 506 | 116 | 231 | 435 | 88 | .. |
| மொத்தம் .. | 5,119.15 | 1,368 | 1,778 | 4,176 | 2,459 | 1,28,685 |

## அட்டவணை 3.

### அரசு மறுவாழ்வு இல்ல உற்பத்திப் பொருட்களின் விற்பனை விபரம்.

(அக்டோபர் 1987 முதல் செப்டம்பர் 1998 வரை.)

| மறு வாழ்வு இல்லத்தின் பெயர். | பாய்கள். | கட்டு கட்டும் துணி. |
|---|---|---|
| (1) | (2) (எண்ணிக்கை.) | (3) (மீட்டரில்). |
| பரனூர் . . . | 40 | 17,164 |
| உளுந்தூர்பேட்டை . . | . | . |
| பர்கூர் . . . . | 120 | .. |
| புதுக்கோட்டை . .. | . | .. |
| மனையேரிப்பட்டி . . | 51 | .. |
| யா. புதுப்பட்டி . . | .. | 1,000 |
| மல்லவாடி . . . | 502 | 5,921 |
| தேவியாக்குறிச்சி . .. | 100 | 550 |
| விண்ணப்பள்ளி . . | 444 | 3,231 |
| செல்லியம்பட்டி . . | 810 | 1,704 |
| மொத்தம் . | 2,067 | 29,570 |



## அட்டவணை 4.

### அக்டோபர் 1987 முதல் செப்டம்பர் 1988 வரை பணியில் அமர்த்தப்பட்ட இல்லவாசிகளின் எண்ணிக்கை.

| மாதமும் வருடமும். | பரனூர். | உளுந்தூர் பேட்டை. | பர்கூர். | புதுக் கோட்டை. | மனை யேரிப்பட்டி |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| அக்டோபர் 1987 .. .. .. | 92 | 79 | 98 | 123 | 61 |
| நவம்பர் 1987 .. .. .. | 97 | 76 | 107 | 125 | 61 |
| டிசம்பர் 1987 .. .. .. | 103 | 76 | 96 | 120 | 66 |
| ஜனவரி 1988 .. .. .. | 94 | 73 | 91 | 122 | 63 |
| பிப்ரவரி 1988 .. .. .. | 93 | 75 | 92 | 122 | 58 |
| மார்ச் 1988 .. .. .. | 90 | 85 | 108 | 121 | 64 |
| ஏப்ரல் 1988 .. .. .. | 95 | 83 | 88 | 118 | 65 |
| மே 1988 .. .. .. | 94 | 75 | 88 | 114 | 71 |
| ஜூன் 1988 .. .. .. | 94 | 91 | 142 | 115 | 69 |
| ஜூலை 1988 .. .. .. | 95 | 90 | 142 | 116 | 62 |
| ஆகஸ்ட் 1988 .. .. .. | 94 | 93 | 91 | 113 | 148 |
| செப்டம்பர் 1988 .. .. | 92 | 93 | 78 | 117 | 74 |
| மொத்தம் .. | 1,133 | 989 | 1.241 | 1,426 | 87170 |

| மாதமும் வருடமும். (1) —தொடர்ச்சி. | யா. புதுப்பட்டி. (7) | மல்லவாடி. (8) | தேவியாக் குறிச்சி. (9) | விண்ணப் பள்ளி. (10) | செல்லியம் பட்டி. (11) |
|---|---|---|---|---|---|
| அக்டோபர் 1987 .. .. | 113 | 113 | 118 | 80 | 84 |
| நவம்பர் 1987 .. .. | 129 | 134 | 130 | 58 | 83 |
| டிசம்பர் 1987 .. .. | 137 | 133 | 150 | 78 | 85 |
| ஜனவரி 1988 .. .. | 125 | 127 | 99 | 74 | 86 |
| பிப்ரவரி 1988 .. .. | 126 | 129 | 94 | 74 | 79 |
| மார்ச் 1988 .. .. | 126 | 127 | 84 | 74 | 79 |
| ஏப்ரல் 1988 .. .. | 125 | 127 | 90 | 71 | 80 |
| மே 1988 .. .. | 132 | 116 | 92 | 76 | 84 |
| ஜூன் 1988 .. .. | 140 | 124 | 85 | 75 | 76 |
| ஜூலை 1988 .. .. | 140 | 128 | 84 | 68 | 86 |
| ஆகஸ்ட் 1988 .. .. | 132 | 117 | 89 | 79 | 79 |
| செப்டம்பர் 1988 .. .. | 137 | 120 | 94 | 79 | 86 |
| மொத்தம் .. | 1,567 | 1,515 | 1,189 | 886 | 987 |



## அட்டவணை 5.

### அரசு மறுவாழ்வு இல்லங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் பற்றிய விவரப் பட்டியல்.

சென்னை சிறைத் துறைத் தலைமை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் (மறு வாழ்வு இல்லங்கள் மற்றும் இரவலர் இல்லங்கள்) நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள்.

| வரிசை எண்ணும் பதவியின் பெயரும். (1) | பதவியின் எண்ணிக்கை (2) |
|---|---|
| 1 தலைமை கண்காணிப்பாளர் (மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் இரவலர் இல்லங்கள்.) | 1 |
| 2 உதவி சிறப்பு அலுவலர் (மருத்துவம்) .. | 1 |
| 3 உதவி கணக்கு அலுவலர் .. .. .. | 1 |
| 4 தலைமை தொழில் ஈடுபாட்டு பயிற்சியாளர் | 1 |
| 5 அலுவலகக் கண்காணிப்பாளர்கள் .. | 5 |
| 6 உதவியாளர்கள் .. .. .. .. | 1 |
| 7 இளநிலை உதவியாளர் .. .. .. | 1 |
| 8 தட்டச்சர் .. .. .. .. | 1 |
| 9 சுருக்கெழுத்து தட்டச்சர் (தலைமை கண்காணிப்பாளருக்காக.) | |
| 10 அலுவலக உதவியாளர் (தலைமை கண்காணிப்பாளருக்காக). .. .. | 1 |
| 11 அலுவலக உதவியாளர் (இல்லம்) .. | 1 |
| 12 ஓட்டுநர் மற்றும் சுத்தம் செய்பவர் .. | 1 |
| 13 உதவி சிறப்பு அலுவலர்களுக்காக (மருத்துவம்) நியமிக்கப்பட்டுள்ள அலுவலக உதவியாளர். | 1 |
| 14 அலுவலக உதவியாளர் (அலுவலகம்) .. | 1 |

[1989 ஏப்ரல் 12

பத்து (10) மறுவாழ்வு இல்லங்களில் நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள்.

| | | |
|---|---|---|
| 1 | திருவாக அலுவலர்கள் .. .. .. | 10 |
| 2 | உதவி மருத்துவர்கள் .. .. .. | 20 |
| 3 | செவிலியர்கள் .. .. .. .. | 20 |
| 4 | தாய்மை மருத்துவ துணை செவிலியர்கள் | 10 |
| 5 | தொழுநோய் உடற்கூறு பயிற்சியாளர்கள் | 10 |
| 6 | ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர், நிலை 1. | 10 |
| 7 | மருந்தாளுநர்கள் .. .. .. | 10 |
| 8 | ஆண் செவிலி உதவியாளர்கள், நிலை-2 .. | 10 |
| 9 | பெண் செவிலி உதவியாளர்கள், நிலை-2 .. | 10 |
| 10 | துப்புரவுப் பணியாளர்கள் .. .. | 20 |
| 11 | சமையலாளரின் உதவியாளர்கள் .. .. | 20 |
| 12 | அலுவலக உதவியாளர்கள் .. .. | 20 |
| 13 | சமையலாளர்கள் .. .. .. .. | 10 |
| 14 | அலுவலகக் கண்காணிப்பாளர்கள் .. .. | 10 |
| 15 | பண்டகக் காப்பாளர் மற்றும் கணக்கர்கள் | 10 |
| 16 | இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் | 10 |
| 17 | ஓட்டுநர்கள் மற்றும் சுத்தம் செய்பவர்கள் | 10 |
| 18 | தொழில் பயிற்சிப் பணியாளர்கள் .. .. | 10 |
| 19 | தலைமைக் காப்பாளர்கள் .. .. | 3 |
| 20 | காப்பாளர்கள் .. .. .. .. | 20 |
| 21 | மின்னாள், நிலை-2 .. .. .. | 80 |
| 22 | மின்விசைத்தறி விரிவுரையாளர் .. | 10 |
| 23 | இளநிலை முதலாள் .. .. .. | 1 |
| 24 | இளநிலை புத்தகம் கட்டுபவர்கள் .. | 1 |
| | .. | * |

* ஆண்—60
பெண்—20

1989 ஏப்ரல் 12]



அட்டவணை 6.

மறுவாழ்வு இல்லங்களில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த ஆதாய நட்ட விவரம்.

(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1982–83 | 1983–84 | 1984–85 | 1985–86 | 1986–87 | 1987–88 |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| மூலப் பொருட்கள் மற்றும் கூலிக்கான செலவு. | 2.53 | 3.69 | 4.00 | 4.04 | 4.68 | 5.63 |
| தயாரிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு. | 3.53 | 356 | 3.95 | 3.98 | 5.62 | 6.76 |
| ஆதாய நட்டம் .. | (+) 1.00 | (—) 0.13 | (—) 0.05 | (—) 0.06 | (+) 0.94 | (+) 1.13 |

[1989 ஏப்ரல் 12

## அத்தியாயம் III

### அரசினர் காப்பு முகாம், மேல்பாக்கம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1989—90.

காவல் துறையின் மேற்பார்வையில் 1—3—1954 முதல் நடத்தப்பட்டு வந்த மேல்பாக்கம் அரசினர் காப்பு முகாம் இத்தகைய முகாம்களில் முதன்மையானதாகும். சென்னை நகரில் பிச்சைக்காரர்கள் பிச்சை எடுப்பதைத் தடுத்து அவர்களுக்கு மறுவாழ்வு மற்றும் தொழிற் பயிற்சி கொடுத்து சிறந்த ஒரு நபராக ஆக்குவதே இவ்விடுதியின் நோக்கமாகும்.

இவ்வில்ல நிர்வாகம் 1—10—1973 முதல் சென்னை, காவல்துறை தலைவர் பொறுப்பிலிருந்து, சமூகநல இயக்குநர் தலைமைப் பொறுப்பிற்கு மாற்றப்பட்டு, மீண்டும் 1—12—1984 முதல் சிறைத் துறைத் தலைவர் தலைமையின் கீழ் மாற்றப்பட்டுள்ளது.

**அனுமதி மற்றும் நீக்கம் :**

இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்ட இல்லவாசிகளின் எண்ணிக்கை 950 பிச்சைக்காரர்கள் (770 ஆண்கள், 180 பெண்கள்) ஆகும். அரசாணை நிலை எண் 891, சமூக நலத் துறை, நாள் 30—9—1972-ல் வெளியிடப்பட்ட விதிமுறைகளுக் கிணங்க இவ்வில்லம் நடத்தப்பட்டு வருகிறது. 1945 ஆம் ஆண்டு தமிழ் நாடு பிச்சை எடுப்புத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். தண்டனைக்காலம் ஒரு வருடத்திலிருந்து மூன்று வருடங்களாகும். இங்கு சேர்க்கப்படும் இல்லவாசிகள் அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை காலம் முடிவடைகிற தேதியில் விடுதியிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். எந்த ஒரு இல்லவாசியும் குற்றத் தீர்ப்பு ஆணையில் குறிப்பிடப்பட்ட தண்டனைக் காலம் முடிந்த பின் விடுதியில் இருக்க அனுமதிக்கப்படுவதில்லை.

**இல்லவாசிகளுக்கு அளிக்கப்படும் வசதிகள் :**

இம்முகாமில் இருப்போருக்கு இலவசமாக சாப்பாடு; தங்கும் வசதி, ஆடைகள், மருத்துவ வசதிகள் வழங்கப்படுவதுடன் பல்வேறு துறைகளில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

**உணவு :**

இல்ல வாசிகளுக்கு உணவுக்காக நாளொன்றுக்கு உரிய வயதடைந்த ஒரு நபருக்கு ரூ. 4.50 வீதமும், குழந்தைகளுக்கு ரூ. 3.00 வீதமும் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகைகளுக்குள் இவர்களுக்கு சைவ உணவு வழங்கப்பட்டு வருகிறது.



1989 ஏப்ரல் 12]

காலை கேழ்வரகு கஞ்சி மற்றும் வெங்காயம், பகல் உணவு, இரவு உணவு வழங்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் மோர் வழங்கப்படுகிறது. முக்கியமான நாட்களான புதுவருடப் பிறப்பு, சுதந்திரதினம் போன்ற குறிப்பிட்ட நாட்களிலும், தீபாவளி, கிறிஸ்துமஸ், ரம்சான் போன்ற சில பண்டிகை நாட்களிலும் ஒரு இல்லவாசிக்கு கூடுதலாக ரூ. 1 வீதம் சிறப்புணவு வழங்கப்பட்டு வருகிறது.

**இருப்பிடம் :**

இவ்விடம் ஏறக்குறைய 9 ஏக்கர் மொத்தம் பரப்பளவில் அமைந்துள்ளது. ஒரே தளமுள்ள படுக்கைக் கூடங்களில் இல்லவாசிகள் தங்க வைக்கப்படுகின்றனர். ஒரு கூடத்தில் 100 பேர் வீதம் தங்குவதற்குரிய நான்கு படுக்கை கூடங்கள் உள்ளன. இந்த நான்கில் ஒன்று பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**உடை :**

இரண்டு துண்டுகள், இரண்டு சட்டை மற்றும் இரண்டு கால் சட்டைகள் ஆண்களுக்கும், பெண்களுக்கு இரண்டு சேலை மற்றும் இரண்டு ஜாக்கெட்டுகள் ஆண்டுக்கு ஒரு முறை இலவசமாக வழங்கப்படுகிறது. விடுதியில் சேர்க்கப்படும் நாளன்று ஒரு துண்டு, ஒரு சட்டை, ஒரு கால் சட்டை வீதம் வழங்கப்படுகிறது.

**இதர வசதிகள் :**

1. ஒவ்வொரு இல்லவாசிக்கும் பாய், படுக்கை விரிப்பு, தட்டு மற்றும் நல்லெண்ணெய் வழங்கப்படுகிறது.

2. இல்லத்தில் அனுமதிக்கப்படும்போது ஒவ்வொரு இல்லவாசிக்கும் ஒரு அஞ்சல் அட்டையும், மேலும் அவர்களின் தேவைக்கு ஏற்ப கூடுதல் அஞ்சல் அட்டையும் வழங்கப்படுகிறது.

3. தண்டனைக் காலம் முடிந்து வெளியேறும் இல்லவாசிகளுக்கு அவர்களின் சொந்த ஊர் செல்ல வசதியாக ரெயில்வே வாரண்ட் அல்லது பேருந்து கட்டணம் அளிக்கப்படுகிறது.

4. இல்லவாசிகளுக்காக இரண்டு தினசரி செய்தித் தாள்கள் வாங்கப்படுகின்றன.

5. இல்லவாசிகள் விளையாடுவதற்கான வசதியும், தொலைக்காட்சி பார்க்க வசதியும், வானொலி போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

[1989 ஏப்ரல் 12

## மருத்துவ வசதிகள் :

இவ்விடுதிக்கென ஒரு மருத்துவ மனை ஏற்படுத்தப்பட்
டுள்ளது. இம்மருத்துவ மனையில் ஒரு மருத்துவ அலுவலரும்,
இரு செவிலியரும், இரண்டு ஆண் உதவி செவிலியர்களும், இரு
பெண் உதவி செவிலியரும் மற்றும் இரு மருந்தாளுநரும், பணி
யாற்றுகின்றனர். சாதாரண பிணிகளை நீக்கும் மருந்து
களும் மற்றும மாத்திரைகளும் போதிய அளவில் உள்ளன.
சிறப்புத் தன்மை உடைய வைத்திய வசதிக்காக, நோய்களுக்
கேற்ப சென்னையில் உள்ள பல்வேறு மருத்துவ மனைகளுக்கு
பிணியாளர்கள் பரிசோதனைக்கு அனுப்பப்படுகிறார்கள். உடல்
ஊனமுற்றவர்கள காலமுறைப்படி தயாசதனுக்கு மாற்றம்
செய்யப்படுகிறார்கள், மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்ட
வர்கள், இம்மாநிலத்தில் அருகாமையிலுள்ள தொழுநோய் மறு
வாழ்வு இல்லங்களுக்கு மாற்றம் செய்யப்படுகின்றனர். சென்னை
மனநல மருத்துவமனையிலிருந்து மனநல மருத்துவர் வாரத்
திற்கு ஒரு முறை விடுதிக்கு வந்து மனநலம் குன்றியவர்களுக்கு
சிகிச்சை அளித்து வருகிறார்.

## இல்லவாசிகளுக்கான மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள் :

இவ்வில்லத்தில் உடல் வலிமையுள்ள பிச்சைக்காரர்கள்
ஏதாவதொரு சிறு தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவ்
வில்லவாசிகளுக்கு கைத்தறி, தச்சு, மண்பாண்டம் செய்தல்,
தையல் மேலும் புத்தகம் கட்டுதல் போன்ற சிறு தொழில்
களில், பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வாறு பலதரப்பட்ட
தொழில்களில் ஈடுபடும் இல்லவாசிகளுக்கு ஒரு ஆளுக்கு
நாளொன்றுக்கு 10 காசு ஊக்கத் தொகையாக அளிக்கப்படுகிறது.

## நெசவு :

கைத்தறிப் பிரிவில் 10 பெடல் தறிகளும், 9 மேசைத் தறி
களும் உள்ளன. சுமார் 15 இல்லவாசிகள் இதில் பயிற்சி
பெறுகிறார்கள் இத்தறிகளில் தயாரிக்கப்படும் துணிகள் இவ்
வில்லவாசிகளின் ஆடைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

## தையற் பிரிவு :

தையல் இயந்திரங்கள் ஆறு இப்பிரிவில் உள்ளன. பெண்
இல்லவாசிகள் இப் பிரிவில் பயிற்சி பெறுகிறார்கள்.

## புத்தகக் கட்டுமானம் :

பல்வேறு அரசுத் துறைகளிலிருந்து பெறபபடும் பத்திரிகை
கள், அரசுப் பதிப்புகள், பதிவேடுகள் மற்ற பிற புத்தகங்கள்,
இங்கு கட்டுமானம் செய்யப்படுகிறது. எழுது பலகைகள் மற்
றும் கோப்பு அட்டைகள், இங்கு தயாரிக்கப்படுகின்றன. சுமார்
பத்து இல்லவாசிகள் இப்பிரிவில் வேலை செய்கிறார்கள்.